
காஞ்சியின்
கவின்மிகு கோயில்கள்



"குரு கைங்கர்ய சிரோமணி"
"பன்மொழிச் செல்வர்"

T.V.R. சாரி, M.A., I.B. (P)S.,

திருக்கோவில்களில் தெய்வ வழிபாடுகள்,
நாம் செய்யும் தீபாராதனைகளால் முழுமை பெறுகின்றன.

தீபாராதனைகளில் மிகசிறந்ததும் மிக உன்னதமுமான
நயமான கற்பூரத்தை ஏற்றி குரு அருளும், திருவருளும் பெறுவோம்.
புண்ணியம் பெறுவோம்



காஞ்சியின்
கவின்மிகு கோயில்கள்

–: ஸஹஸ்ர ஸ்வர்ண கலசாபிஷேக சிறப்பு மலர் 2001 :–

ஆசிரியர் :
"குரு கைங்கர்ய சிரோமணி"
"பன்மொழிச் செல்வர்"

T.V.R. சாரி, M.A., I.B. (P) S.,

துணை இயக்குனர் தொலைக்காட்சி நிலையம் (ஓய்வு)
துணைத்தலைவர், கம்பன் கழகம், காஞ்சிபுரம்.
துணைத்தலைவர், காஞ்சி ஸ்ரீமடம் ஸ்ரீமஹா ஸ்வாமிகள் அதிஷ்டான குருவார வழிபாட்டு மன்றம்.

வெளியீடு :

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்
சாரத நவராத்திரி கலை நிகழ்ச்சிகள் டிரஸ்ட்,

15-A, காலாண்டார் வீதி, காஞ்சிபுரம் – 631 502.

முதற்பதிப்பு : அக்டோபர், 1980
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர், 1982
மூன்றாம் பதிப்பு : அக்டோபர், 1984
நான்காம் பதிப்பு : அக்டோபர், 1986
ஐந்தாம் பதிப்பு : அக்டோபர், 1988
ஆறாம் பதிப்பு : அக்டோபர், 2001

விலை ரூ. 50.00

அச்சிட்டோர் :

ஸ்ரீ வாசவி DTP & ஆப்செட்,

8, கொல்லாச்சத்திரம் தெரு, காஞ்சிபுரம் – 631 502.

☎ : 31845 (04112)

37-1

Sri Chandramouleeswaraya Namaha
SRI SANKARA BHAGAVADPADACHARYA PARAMPARAGATHA
His Holiness
Sri Kanchi Kamakoti Peetadhipathi

Jagadguru Sri Sankaracharya Swamigal

Srimatam Samsthanam,
KACHIPURAM - 631 502.

முகாம் : காஞ்சிபுரம் தேதி : 12-9-2001

காமாரி காமாம் கமலாஸனஸ்தாம்; காம்யப்ரதாம் கங்கண சூடஹஸ்தாம்
காஞ்சி நிவாஸாம் கனகப்ரபாஸாம்; காமாக்ஷி தேவீம் கலயாமிசித்தே!

நமது ஸ்ரீமடத்தின் அத்யந்தபக்தரான பன்மொழிச் செல்வர் T.V.R. சாரியார் ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம் சாரதா நவராத்ரி கலை நிகழ்ச்சிகள் ட்ரஸ்ட் என்னும் பெயரில் ஓர் ட்ரஸ்ட் ஏற்படுத்தி அதன்மூலம் சுமார் 22 ஆண்டுகளாக ஸ்ரீ சாரதா நவராத்ரி மஹோத்ஸ்வமஹாபுண்யகாலத்தில் மிகச்சிறந்த ஸங்கீத வித்வான்களைக் கொண்டு அம்பாளுக்கு ஸங்கீத விருந்து உபசாரம் அளித்து வருவதுடன் விஜயதசமியன்று ஸ்ரீ அம்பாளை தங்கரதத்தில் பவனிவரச் செய்து, விஜயதசமி அடுத்த துவாதசியன்று ஸ்ரீ காமாக்ஷி தேவிக்கு ஸ்வர்ணகலசாபிஷேகம் செய்வித்து ஸ்ரீ காமாக்ஷி தேவியையும், மக்களையும் மகிழ்விக்கச் செய்து வருகிறார்.

மேலும் ஸப்தமோக்ஷபுரிகளில் நாபீஸ்தானமாக விளங்கும் காஞ்சி மாநகரத்தின் பெருமைகளை விளக்கும் காஞ்சியின் கவின்மிகு கோயில்கள் என்னும் நூலினை எழுதி 1980 ம் ஆண்டில் முதல் பதிப்பைதமிழில் வெளியிட்டு, 1981-ல் தெலுங்குமொழியிலும் 1982-ம் ஆண்டில் ஆங்கிலத்திலும் வெளியிட்டு இப்பொழுது சாரியார் எழுதிய காஞ்சியின் கவின்மிகு கோயில்கள் என்ற இந்நூலின் ஆறாம் பதிப்பு இவ்வருடம் நவராத்திரி உத்ஸவ சமயத்தில் வெளியிட இருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.


ஆஸ்திகபக்த பெருமக்கள் அனைவரும் இந்நூலின் உதவியால் காஞ்சி ஷேத்ரத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் அன்னை காமாக்ஷிதேவீ, ஸ்ரீ ஏகாம்பரநாதர், ஸ்ரீ வரதராஜர், கைலாஸநாதர், கச்சபேஸ்வரர், உலகளந்தப்பெருமாள், பாண்டவ தூதப்பெருமாள், குமரகோட்டம் முதலிய அனேக திருக்கோயில்களின் பெருமைகளை உணர்ந்து துதித்து, பூஜித்து ஸகல தேவதைகளின் அருளால் ஐஹிக ஆமுஷ்மிக ஸகலச்ரேயசுகளையும் அடைந்து பரமஷேமமாக வாழவேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்.

நாராயண ஸ்ம்ருதி:

ஓம் ஸ்ரீ குருப்யோ நம :
ஸ்ரீ சந்த்ர மௌளீஸ்வராய நம :

ஸ்வஸ்தி வாசக வந்தனம்

ஸ்வஸ்தி – ஸ்ரீமத் அகில பூமண்டலாலங்கார,
த்ரயத்ரிம் சத்கோடி – தேவதா ஸேவித,
ஸ்ரீ காமாக்ஷி தேவீஸநாத – ஸ்ரீமத் ஏகாம்ரநாத –
ஸ்ரீ மஹாதேவீ ஸநாத – ஸ்ரீ ஹஸ்தி கிரிநாத –
ஸாக்ஷாத்கார – பரமாதிஷ்டான
ஸத்யவ்ரத நாமாங்கித – காஞ்சி திவ்யக்ஷேத்ரே –
சாரதா மட ஸுஸ்தினாம் – அதுலித ஸுதாரஸ
மாதுர்ய – கமலாஸன – காமினீ தம்மில்ல
ஸம்புல்ல – மல்லிகா – மாலிகா – நிஷ்யந்த
மகரந்த – ஜரிஸௌவஸ்திக – வாங்நிக்ரும்ப
விஜ்ரும்பணானந்த – துந்திலித மநீஷிமண்டலானாம் –
அனவரத அத்வைத, வித்யாவிநோத ரஸிகானாம் –
நிரந்தராலங்க்ருதீ க்ருத –
சாந்தி தாந்தி பூம்னாம் – ஸகல புவனசக்ர
ப்ரதிஷ்டாபக – ஸ்ரீ சக்ர ப்ரதிஷ்டா விக்யாத
யசோலங்க்ருதானாம் – நிகில பாஷண்ட
ஷண்டகண்ட கோத் காடனேன –
விசதீக்ருக வேத வேதாந்த மார்க
ஷண்மத ப்ரதிஷ்டாபகா சார்யாணாம் –
ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய –
ஜகத்குர ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத் பாதாசார்யாணாம் –
அதிஷ்டானே ஸிம்ஹாஸநாபிஷிக்தானாம் –
ஸ்ரீமத் சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீஸம்யமீந்தராணாம்
அந்தேவாஸி வர்ய –
ஸ்ரீமத் ஜயேந்த்ர ஸரஸ்வதீஸம்யமீந்தராணாம்
ததந்தேவாஸி வர்ய –
ஸ்ரீமத் சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதீஸ்ரீபாதானாம்ச
சரணார விந்தேஷு – ஸவிநயம் –
ஸப்ரச்ரயம் – ஸாஞ்சலி பந்தம் ச
அனந்த கோடி ப்ரணாமானி ஸமர்ப்பயாம :







With Humble Pranamams :
Mumbai Kamakshi Raman
K.N.Viswanathan, K.N.Visveswaran, K.N.Padmavathy
Chennai

Sri Chandramouleeswaraya Namaha
SRI SANKARA BHAGAVADPADACHARYA PARAMPARAGATHA
His Holiness
Sri Kanchi Kamakoti Peetadhipathi

Jagadguru Sri Sankaracharya Swamigal

Srimatam Samsthanam,
KACHIPURAM - 631 502.

புனித பாரதபூமியின் ஆந்திரமாநிலம் நெல்லூர் மாவட்டம் புச்சிரெட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திருமலை பரவஸ்து ஸ்ரீராம ஐய்யங்கார் ருக்மிணி அம்மாள் தம்பதிகளுக்கு ஸுபுத்திரனாய் ஜனித்தவரும் ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தில் வஸிப்பவரும் நமது ஸ்ரீமடத்தின் அத்யந்தப்பிரிய பக்தருமான பன்மொழிச்செல்வர் விஜயராகவாசாரியார் (T.V.R. சாரியார்) சென்னை திருச்சி, கோவை, புதுவை முதலிய பல வானொலி நிலையங்களிலும் ஹைதராபாத் போபால் முதலிய தொலைக்காக்ஷி நிலையங்களிலும் நிகழ்ச்சி அமைப்பு அலுவலராகவும் துணை இயக்குநராகவும் பணிபுரிந்து இயல் இசை நாடகத் துறைகளில் ஸமுதாய மேம்பாட்டிற்கான நிகழ்ச்சிகளை தயார்செய்தும், பல கலைஞர்களை ஊக்குவித்தும் கலைத்துறையில் பெரும் தொண்டாற்றியவர்.


நமது பூஜ்யஸ்ரீ குருநாதர் மஹாஸ்வாமிகளின் ஆக்ஞானுஸாரம் சுமார் 30 ஆண்டுகளாக காஞ்சி மாநகரத்தில் அருள்பாலிக்கும் அன்னை ஸ்ரீகாமாக்ஷி தேவ்யாலயத்திலும் நமது ஸ்ரீமடத்திலும் நவராத்திரி உத்ஸவம் மற்றும் இதர விசேஷ உத்ஸவங்களிலும் சிறந்த ஸங்கீத வித்வான்களைக் கொண்டு நிகழ்சிகள் நடத்திவருவதையும் ஸமயச் சொற்பொழிவுகள் செய்து வருவதையும் கண்டு ஸந்தோஷித்து இவருக்கு

"குருகைங்கர்ய சிரோமணி"

என்னும் விருதினை வழங்கி கௌரவித்து மேலும் தொடர்ந்து அம்பாளுக்கும், ஸ்ரீமடத்திற்கும், கலைத்துறைக்கும் கைங்கர்யம் செய்துகொண்டு அன்னை ஸ்ரீ காமாக்ஷி தேவியின் அருளால் ஐஹிக ஆமுஷ்மிக ஸகலச்ரேயஸ்களையும் அடைந்து பரமக்ஷேமமாக வாழவேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்.

யாத்ராஸ்தானம் : காஞ்சிபுரம்
விருஷ, துலா, சுக்ல தவாதசீ
28–10–2001

நாராயண ஸ்ம்ருதி:



அன்பு மலர்ந்திட வேண்டும் – நல்ல
எண்ணம் உதித்திடல் வேண்டும்!
பண்பு வளர்ந்திட வேண்டும் – உலகில்
கண்ணியம் பெருகிட வேண்டும்!
வளமும் நிறைந்திட வேண்டும் – நம்
வாழ்வும் சிறந்திட வேண்டும்!
இறையருள் நிலவிட வேண்டும் – நாம்
இனிதே வாழ்ந்திட வேண்டும்!
பெருந்தேவித் தாயுடன் உறையும்
பெருமாள் கோயில் பேரருளாளன்
கருணைத் திறமும் களிப்புடன் சேர
வருடம் முழுதும் வளமுடன் வாழ்க!
பணிபவர் தம்மை பாங்குடன் உயர்த்தும்
தனிப்பெரும் அருளைத் தன்னகம் கொண்ட
கனிவுடை காமாக்ஷி கருணை யதனால்
இன்பம் எய்தி இனிதே வாழ்வோம்!
நல்லவை நினைப்போம்! நன்மையே செய்வோம்!!
நானிலம் நலம்பெற நற்பணி புரிவோம்!!!

இதயம் கனிந்த புத்தாண்டு, பொங்கல்,
நவராத்திரி, தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

– டி. வி. ஆர். சாரியார்.

Heartiest Greetings for

Happy New Year, Sankaranthi, Pongal, Navarathri and Deepavali

S.K.K.A.D.S.N.K.N. Trust, Kanchi.



நூலாசிரியரின் முன்னுரை

ஸ்ரீய: பதியான சர்வேஸ்வரன் பக்தர்கள் இடத்தே கொண்ட பரமகாருண்யத்தினால் அடியார்களை ஆட்கொள்ளும் பொருட்டு அர்ச்சாவதாரரூபியாக எழுந்தளியிருக்கும் நம் புண்ணியபாரதத்தின் திவ்ய க்ஷேத்ரங்களுள் காஞ்சி க்ஷேத்ரம் மிகப்பிரசித்தி பெற்றது. எங்கு நோக்கினும் உயர்ந்த கோபுரங்களும் நெடிதுயர்ந்த மதில்களும் இறையன்பை வளர்த்து நம்மை பக்திப் பரவசத்தில் ஆழ்த்துகின்றன. காஞ்சியில் அமைந்த திருக்கோயில்களின் தல வரலாறுகளைத் தொகுத்து எழுதும்படி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர மஹா ஸ்வாமிகள் அவர்களின் அருளாணையைப்பெறும் பாக்யத்தை அடியேன் பெற்றேன். இதற்காக ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்ய ப்ரபந்தம், காஞ்சிப் புராணம், ஸ்ரீ காஞ்சி மகிமை, ஸ்ரீ தேவி பாகவதம் போன்ற பல நூல்களைப் படிக்கும் வாய்ப்பினைப்பெற்று அவற்றுடன் திருக்கோவிலூர் ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் மடத்தின் முந்தைய மடாதிபதிகள் ஸ்ரீ திருவேங்கட ராமனுஜாசாரியார் ஸ்வாமிகள், காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்ரகாச தேசிக பரமாசார்ய ஸ்வாமிகள், புதுக்கோட்டை அதிஷ்டானம் ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள், காஞ்சிபுரம் மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமிகள், புதுவை நதற்றமிழ்க் கவிஞர் நடாதூர் நம்பி போன்ற பல அறிஞர்களிடமிருந்து கேட்டறிந்ததையும் தொகுத்து எழுத முற்பட்டதின் திருவினையே "காஞ்சியின் கவின்மிகு கோயில்கள்" என்னும் இந்நூல் வடிவமாகும். இப்பெரியோர்கள் அனைவருக்கும் மற்றும் இந்நூல் எழுதுவதில் பல்லாற்றாலும் உதவிய அன்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன். இந்நூல் 1980–ல் ஸ்ரீ பச்சைவண்ணர் ஸ்ரீ பவளவண்ணர் பக்தஜன சபையினரால் வெளியிடப்பட்டது. 1981–ல் இதன் தெலுங்கு வடிவமும், 1982–ல் ஆங்கில வடிவமும் வெளியிடப்பட்டன. பகவத் கிருபையினாலும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் அருளாசியினாலும், தற்பொழுது இந்நூலின் ஆறாவது பதிப்பு இவ்வாண்டு வெளியிடப்பெறுவது அடியேன் செய்த பெரும் பாக்கியமாகும்.

அடியேனது இவ் வெளியீடுகளை பரிவோடு பார்வையிட்டு மனமுவந்து அனுக்ரஹித்தருளிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள், ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிகளுக்கு அடியேனது பணிவான ப்ரணாமங்கள்.

இந்நூல் வெளிவர பல்லாற்றானும் உதவிய பெரியோர்கள் அனைவருக்கும், விளம்பரங்களை தந்துதவிய அன்பர்களுக்கும் மற்றும் ஊக்கமளித்த காஞ்சி கம்பன் கழகத்தின் அன்பர்களுக்கும், ஸ்ரீ நாராயண சேவாஸ்ரமத் தலைவர் ஸ்வாமி திரு. சித்ரூபானந்தா அவர்களுக்கும், ஸ்ரீமடத்து வித்வான் பிரம்மஸ்ரீ. ஏ. ராமக்கிருஷ்ணதீக்ஷிதர் அவர்கள், திரு. ஆர். சேக்ஷாத்ரி அவர்கள், கோவை வழக்கறிஞர் திரு. எஸ். வைத்தியநாதகிருஷ்ணன் அவர்கள், திரு. கே. விஸ்வநாதன், Vice-President, S.B.I., Caps, Chennai அவர்கள், கடலூர் வானவில் டைஸ் நிறுவணத்தின் முன்னாள் செயல் இயக்குநர் Dr. எஸ். கல்யாணராமன், சென்னை. Wg. Cdr. K. பார்த்தசாரதி அவர்கள், சென்னை. திரு. கே. விஸ்வநாதன், சென்னை. திரு. கே. விஸ்வேஸ்வரன் சகோதரர்கள் மற்றும் பல்லாற்றானும் உதவிய நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலின் ஆறாவது பதிப்பினை வெளியிட முன்வந்து உதவிய ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம் சாரத நவராத்திரி கலைநிசழ்ச்சிகள் டிரஸ்டின் மேனேஜிங் டிரஸ்டி திரு. ஜி. சீனிவாசன் அவர்களுக்கும் மற்ற டிரஸ்டிகளுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

நூலின் அச்சுப் படிவங்களை சரிப்பார்த்து உதவிய அன்பர்கள் திரு. கே.எஸ். கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. அ. கல்யாணராமன், காஞ்சிபுரம். நியாய வேதாந்த வித்வான் வானமாமலை ஸ்ரீ.உ.வே. கே. ரங்கநாதாச்சாரியார் ஸ்வாமி, காஞ்சிபுரம் திருமதி. ரமாராமகிருஷ்ணன் ஆகியோர்க்கு எனது மனமார்ந்த நன்றி. இந்நூலினை அழகுற அச்சடித்துக் கொடுத்த காஞ்சி ஸ்ரீ வாசவி கணிப்பொறி அச்சகத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாசக அன்பர்கள் அடியேனின் இச்சிறுநூலினை அன்போடு படித்து குற்றம் தள்ளி குணம் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

காஞ்சிபுரம்,
28–10–2001

திருமலை பரவஸ்து விஜயராகவ தாஸன்
(T.V.R. சாரி, M.A.,)

உ

காஞ்சியின் கவின்மிகு திருக்கோயில்கள்

ஸ்ரீ தேவியும், வாக்தேவியும், ஸௌபாக்ய தேவதையும் நித்திய வாசம் செய்யும் மங்களகரமான திவ்ய தேசம் என்று பதினெட்டு புராணங்களிலும் போற்றப்பட்டிருக்கும் புண்ணியத் தலம் காஞ்சிபுரம். அவனியில் ஜீவராசிகள் அனைத்தையும் ஆட்கொள்ளும் பொருட்டு அளவிலா அன்பினால் அகிலத்தையும் ஆக்கிய ஆண்டவன் அர்ச்சாவதார ரூபத்தில் தோன்றி, பல அற்புதங்களை நிகழ்த்திப் பின்னர் பலரும் போற்றிப் பணிந்து வழிபடும்வண்ணம், வேண்டுவன வழங்கும் கருணாமூர்த்தியாய் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களே, திருக்கோயில்கள். "கோயில்" என்பது தலைவனின் வீடு, இறைவனின் இருப்பிடம் என்பதாம். பதியாகிய ஸர்வேச்வரனை வழிபட்டுப் பசுவாகிய ஜீவன் பரிசுத்தியடைந்து முக்தியைப் பெறுவதற்கு மூலாதாரமாய் மண்ணுலகில் மாயையைப் போக்குமிடம் ஆணவமலம் அடங்குவதற்குரிய ஆலயம். ஆலயத்தில் ஆ என்பது ஜீவனை குறிக்கும். அந்த ஜீவன் ஆழ்வார்களைப்போல் ஆழ்ந்திருக்கவேண்டிய – லயித்திருக்க கூடிய – இடமும் துயர்களைத் துடைத்துத் துன்பங்களைத் தீர்த்து பக்தர்களைப் பரிவோடு தீமையிலிருந்து தடுத்தாட்கொள்ளும் தகைமை வாய்ந்த தூயவன் தங்குவதற்குகந்த இடமுமாகத் திகழ்வதே திருக்கோயில்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்றே" என்றும், "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்றும் வழங்கும் பழமொழிகள் திருக்கோயில்களுக்குச் சென்று கடவுளை ஸேவிப்பதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. மனத் தூய்மையை வளர்த்து நிம்மதியை நல்கி, மனிதனைத் தூயமனத்தவனாக்கித் தூயவனை அடையத் துணை புரிபவைத் திருக்கோயில்கள். திருக்கோயில்கள் நிறைந்த தொண்டை நாட்டுத் திருத்தலங்களில் காஞ்சிமாநகரம் முதன்மையானது. "நகரேஷு காஞ்சி" என்ற செய்யுளடியும் இதை உணர்த்துவதாயிருக்கிறது.

2

அயோத்யா மதுரா மாயா காசீ காஞ்சி அவந்திகா!
பூரி துவாரவதீச்சைவ ஸப்தைதே முக்திதாயகா.

சில ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஆசார்ய புருஷர்களும் இத்திருத்தலத்தில் வசித்து இறைவனை வழிபட்டு முக்தி அடைந்திருக்கிறார்கள். ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர்களால் நிறுவப்பட்ட ஸ்ரீ காமகோடி பீடம் உள்ளதும் அவர் வழிவந்த ஸ்ரீ சங்கர மடத்தின் பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் நம்மெல்லோரையும் பக்தி நந்நெறியில் அழைத்துச் செல்லும் பேற்றினைப் பெற்றதும் காஞ்சிமா நகரமாகும். எத்திசை நோக்கினும் உயர்ந்த கோபுரங்களும் நெடிதுயர்ந்த மதில்களும் அனைவரையும் பக்திப் பரவஸத்தில் ஆழ்த்துகின்றன. அதனால் காசியிலும் விஞ்சியது காஞ்சி என்பதுண்டு.

காஞ்சியிலுள்ள கோயில்களின் கோபுரங்களிலும், பிராகாரங்களிலும், மண்டபங்களிலும் சிறந்த சிற்பங்கள் நிறைந்து பண்டைக்காலத்துச் சிற்பசாஸ்திர நுட்பங்களை வெளிப்படுத்துகின்றன. காஞ்சியின் கவின்மிகு கோயில்களைக்கண்டு தரிசித்து வழிபடுவதே உய்யும் வழிகளுள் உயர்ந்த வழி.

சங்க காப்பியமான ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றானதும் மதுரை சீத்தலைசாத்தனார் எழுதியதுமான மணிமேகலை நூல் புகழ்பெற்றதும், மணிமேகலை அறக்கோட்டம் அமைந்ததும் இங்கேதான்.

வையம் கண்ட வைசாகிப்பெருவிழாவும், ஜகம் புகழும் காஞ்சிபுரம் கருடோத்ஸவமும் நடப்பது இங்குதான்.

கோயில்கள் நிறைந்து கலைக் களஞ்சியமாகத் திகழும் காஞ்சி மாநகரம் பல சமயங்களில், பல சமயங்களும் செழித்தோங்கப் பல அறிஞர்களையும், அருள்நெறியில் பல அடியார்களையும் அவனிக்கு ஈந்த பெருமை விரித்துரைக்க இயலாதது.

ஆழ்வார்களில் முதல்வரான பொய்கை ஆழ்வார், கூரத் தாழ்வான் அவதரித்ததும், சாக்கிய நாயனார், திருக்குறிப்புத் தொண்ட நாயனார், ஐயடிகள் காடவர்கோன் போன்ற நாயன்மார்களும், ஆதிசங்கரர், மூகசங்கரர்,

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடம் 68வது பீடாதிபதிகளாக திகழ்ந்து நூறாண்டுகாலம் நம்மிடையே எழுந்தருளி இருந்து நடமாடும் தெய்வமென அனைவராலும் போற்றப்பெற்ற ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா ஸ்வாமிகள், ஸ்ரீமத் ராமானுஜர், போன்ற சமயாசார்யர்களும் ஸ்ரீ திருக்கச்சிநம்பிகள் போன்ற இறையருள் பெற்ற பெரியோர்களும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகர், ஸ்ரீ மணவாள மாமுனிகள் போன்ற ஸ்ரீவைஷ்ணவ ஆசார்ய புருஷர்களும், திருக்குறள் உரை ஆசிரியர் பரிமேலழகரும் எழுந்தருளி இறை அன்பை அனைவரும் எளிதில் பெற்றுய்யும் வழிக்கு வழிகாட்டிய பெருமை பெற்ற புண்யநகரம் காஞ்சிபுரம். நளந்தாப் பல்கலைக்கழகத்தில் சிறந்த பேராசிரியராக திகழ்ந்த தர்மபாலர் காஞ்சிபுரத்தினர். பதஞ்சலிமுனிவர் தமது மாபாடியத்தில் காஞ்சியை குறிப்பிட்டுள்ளார். கி.மு. முதல் நூற்றாண்டில் கரிகாலன் காஞ்சியை அழகுசெய்தார். ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில் மதில்களை எழுப்பியவன் கரிகால சோழன் என கூறுவர். இந்த அரசனின் காலத்தில் தான் தொண்டைநாடு வட வேங்கடம் வரை விரிவடைந்தது. சங்க காலத்தில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மணிமேகலை இங்கு வந்ததாகவும், காஞ்சியை ஆண்ட அரசகுடும்பத்தை சேர்ந்த போதி தருமர் கி.பி. 52–ம் ஆண்டில் சீனா சென்று புத்த சமயத்தை பரப்பினார் எனவும், கி.பி. ஆறாம் நூற்றாண்டில் குந்தகுந்தாச் சாரியார், இங்கு மூலசங்கத்தைத் தோற்றுவித்தார் எனவும் பிரசித்தி. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் சமணக் காஞ்சித் திருப்பருத்திகுன்றில்வாழ்ந்த வஜ்ரநந்திபற்றி பள்ளன் கோயில் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. இந்த பகுதி ஜைனகாஞ்சி என பிரசித்தி பெற்றது. சமண சமயநூல்களில் மேருமந்தரபுராணம் என்ற புராண நூலினை இயற்றிய வாமனா சாரியார் காஞ்சியில் வசித்தவர். இங்கிருந்த கடியையில் சமஸ்கிருத பல்கலைகழகத்தில் மயூரசிம்மன் கல்வி பயின்றது குறிப்பிடத்தக்கது. இந்த இடம் தற்போது ஏனாதூர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வமஹாவித்யாலத்திற்க்கு சமீபமுள்ள கடிகாஸ்தானம் எனவிளங்கும் ஸ்தலமாகும். தண்டியலங்காரத்தில் குறிப்பிட்டுள்ள கடிகை இதயே குறிக்கும். ஸ்ரீ ஆதிசங்கரர் இங்கு ஸ்ரீ சக்கரப்ரதிஷ்டைசெய்து அத்வைதசித்தாந்ததினை நிலைநாட்டி சர்வக்ஞபீடாரோஹணம் செய்து ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தினை

ஸ்தாபித்தது உலகப்ரசித்தி. ஒருகாலத்தில் உயர்கல்வி நிலையங்களும், சமயகல்வி விவாத அரங்குகளும் விளங்கிய பெருமைக்குறியது காஞ்சி மாநகரம்.


காஞ்சிபுரத்தில் வசித்த அருட்செல்வர்களின் வேண்டுதலுக்கு இறங்கி, லோகக்ஷேமத்திற்காகவும், அவனியில் இறையன்பு வளர்ந்து நம்பிக்கையும், நலமும் நிலவிடவும் இறைவனால் பல அற்புதங்கள் இத்திருத்தலத்தில் நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. அவற்றுள் அன்னையின் அருட்கடாக்ஷத்தினால் காஞ்சியில் கனகவர்ஷம் பொழிந்த ஸம்பவங்கள், தெய்வத்தின் இணையற்ற அற்புதச் சக்தியையும் அடியார்களிடத்தில் கடவுள் கொண்டுள்ள கருணையையும் அவனிக்கு எடுத்துரைக்கின்றன. ஒரு பிரம்மாசாரிக்காக ஸ்ரீ தேசிகன் அருளிய ஸ்ரீ ஸ்துதியால் பெருந்தேவித் தாயார் – ஸுவர்ண விருஷ்டி செய்த திருத்தலம் இதுவே. மற்றும் இத்திருத்தலம் அன்னை பராசக்தி ஸ்ரீ காமாக்ஷி ஸ்ரீசக்ரபீடத்தில் அமர்ந்து காட்சி தரும் சிறந்த சக்தி பீடமாகும்.

காஞ்சியில் பராசக்தி திருவுருவமாய் பிலாகாசரூபத்தில் காயத்ரீ மண்டபத்தின் காமகோடி பீடத்தில் கொலு வீற்றிருக்கும் ஸ்ரீ காமாக்ஷியின் கருணா விலாஸத்தினால் “கனகவர்ஷம்” அதாவது “பொன்மழை” பெய்ததும், அது போன்று ஸ்ரீ வரதராஜ வல்லபையாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியான – பெரிய பிராட்டி ஸ்ரீ பெருந்த தேவித் தாயாரின் பெருங்கருணையினால், ‘பொன்மாரி’ பெய்ததும், பக்தர்களின் இறைவழிபாட்டுப் பெருமையையும் கடவுட்கருணையையும் பலரும் உணர்ந்து போற்றும் வகையில் நிகழ்ந்த உன்னத ஸம்பவங்களாகும். இந்தப் பொன்விருஷ்டி பற்றிய ஸ்ரீ ஸ்துதி என்ற துதி இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்துக்கு அருகாமையிலுள்ள விளக்கொளிப்பெருமாள் எழுந்தருளியுள்ள தூப்புல் என்னும் திருத்தலத்தில் திருவவதாரம் செய்த ஆசார்யன் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன். பேரருளாளனை நினைப்பது தவிர, வேறு உலகப் பொருட்களில் இச்சையற்றவராகத் திகழ்ந்த அறிஞரென்று பலராலும் போற்றப்பட்டவர். ஸ்வாமி தேசிகனின் புகழைக் கண்டு பொறுக்கமாட்டாமல்,

அவரை நிந்தனை செய்ய எண்ணிய ஒருசிலர், அசட்டுப் பிரம்மசாரி ஒருவரை அன்னாரிடத்தில் திருமணத்திற்கென்று பொருளுதவி கேட்கும்படி அனுப்பிவைத்தனவர். "ஸ்ரீய: பதியே ஸர்வம்" என்று எண்ணும் ஸ்வாமி தேசிகன், தன்னை ஆச்ரயித்த அந்தண இளைஞனுக்குக் கடாக்ஷித்து அருளும்படி காஞ்சியில் கோயில் கொண்ட ஸ்ரீதேவியை வேண்டினாராம். ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸ்துதியால் துதிக்கப்பட்ட, ஸ்ரீ பெருந்தேவித் தாயார் பெருங்கருணையுடன் "பொன்மாரி" பெய்வித்த அற்புத ஸம்பவம் எல்லோரையும் மெய்சிலிர்க்கச் செய்தது. இக் காட்சியை விளக்கும் சித்திரத்தை நாச்சியார் சந்நிதியில் இன்றும் காணலாம். இக்கருத்தை ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் தமது ஸ்ரீஸ்துதி என்ற லக்ஷமி துதியில் 16வது செய்யுளான "யோகாரம்ப" என்ற செய்யுளில் குறிப்பாகக் காட்டியுள்ளார்.

"கனகவர்ஷம்" பொழிந்த காஞ்சியில் கோயில் கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ காமாக்ஷிதேவியையும், ஸ்ரீ பெருந்தேவித் தாயாரையும், பேரருளாளப் பெருமான் ஸ்ரீ வரதராஜனையும், போற்றி மகிழ்வதோடு கருணைமழை பொழிந்து அடியார்களை ஆட்கொண்டருளிய கடவுள் அர்ச்சாவதார ரூபத்தில் எழுந்தருளியிருக்கும் காஞ்சியின் கவின்மிகு கோயில்களைத் தரிசித்து, துதித்து, ஸேவிப்பதே உய்யும் வழிக்கு உகந்த வழியாகும்.





ஸ்ரீ பெருந்தேவித் தாயார் - உத்ஸவர்

ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம்.



Sri Perundevi Thayar Sri Varadaraja Perumal

Hema Vijaya Kumar & A.S.Vijaya Kumar
Flat No.24, Rams Apartments, 3-A, Prakasam Road, T.Nagar, Chennai - 17.

ஸ்ரீ :



"ஸ்ரீஸ்துதி"

இது ஒரு துதி நூல். திருமகளைப்பற்றியது. இதற்கு **ஸுவர்ண வ்ருஷ்டிஸ்தவம்** எனவும் பெயர். இந்தத் துதி ஸ்ரீ தூப்புல் (ஸ்ரீ காஞ்சி) நிகமாந்த மஹா தேசிகனால் அருளப்பட்டது. மிகவும் வரப்பிரசாதமான நூல். இதனைப் பாராயணம் செய்து விரும்பிய பலனை பலர் அடைந்துள்ளனர்.

இந்த ஸ்துதி பலச்ருதியுடன் 25 செய்யுள்கள் கொண்டது.

-: தனியன் :-

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய; கவிதார்க்கிக கேஸரீ
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

-: ஸ்ரீஸ்துதி :-

மாநாதீத ப்ரதித விபவாம் மங்களம் மங்களாநாம்
வக்ஷ: பீடீம் மதுவிஜயிநோ பூஷயந்தீம் ஸ்வகாந்த்யா;
ப்ரத்யக்ஷாநுச்ரவிக மஹிம ப்ரார்த்திநீநாம் ப்ரஜாநாம்
ஸ்ரேயோ மூர்த்திம் ச்ரிய மசரணஸ் த்வாம் சரண்யாம் ப்ரபத்யே. (1)

ஆவிர்ப்பாவ: கலச ஜலதாவத்வரே வாபி யஸ்யா:
ஸ்த்தாநம் யஸ்யா: ஸரஸிஜவநம் விஷ்ணுவக்ஷ: ஸ்தலம் வா;
பூமா யஸ்யா புவந மகிலம் தேவி திவ்யம் பதம் வா
ஸ்தோகப்ரஞ்ஞை ரநவதிகுணா ஸ்தூயஸே ஸா கதம் த்வம். (2)

ஸ்தோதவ்யத்வம் திசதி பவதீ தேஹபி: ஸதூயமாநா
தாமேவ த்வாமநிதர கதி: ஸ்தோது மாசம்ஸமாந;
ஸித்தாரம்ப: ஸகல புவந ச்லாகநீயோ பவேயம்
ஸேவாபேக்ஷா தவ சரணயோ: ச்ரேயஸே கஸ்ய ந ஸ்யாத். (3)

யத்ஸங்கல்பாத் பவதி கமலே யத்ர தேஹிந்யமீ ஷாம்
ஜந்ம ஸ்த்தேம ப்ரளய ரசநா ஜங்கமாஜங்கமாநாம்;
தத் கல்யாணம் கிமபி யமிநாமேக லக்ஷ்யம் ஸமாதௌ
பூர்ணம் தேஜ: ஸ்ப்புரதி பவதீ பாதலாக்ஷா ரஸாங்கம். (4)

நிஷ்ப்ரத்யூஹ ப்ரணய கடிதம் தேவி நித்யாநபாயம்
விஷ்ணுஸ் த்வம் சேத்யநவதி குணம் த்வந்த்வ மந்யோந்ய லக்ஷ்யம்;
சேஷச்சித்தம் விமல மநஸாம் மௌளயச்ச ச்ருதீநாம்
ஸம்பத்யந்தே விஹரண விதௌ யஸ்ய சய்யா விசேஷா:. (5)

உத்தேச்யத்வம் ஜநநி பஜதோருஜ்ஜிதோபாதி கந்தம்
ப்ரத்யக்ரூபே ஹவிஷி யுவயோ ரேக சேஷித்வ யோகாத்;
பத்மேபத்யுஸ் தவச நிகமைர் நித்ய மந்விஷ்யாணோ
நாவச்சேதம் பஜதி மஹிமா நர்த்தயந் மாநஸம் ந:. (6)

பச்யந்தீஷு ச்ருதிஷு பரித: ஸூரிப்ருந்தேந ஸார்த்தம்
மத்யேக்ருத்ய த்ரிகுண பலகம் நிர்மித ஸ்த்தாந பேதம்;
விச்வாதீச ப்ரணயிநி ஸதா விப்ரம த்யூத வ்ருத்தௌ
ப்ரஹ்மேசாத்யா த்ததி யுவயோரக்ஷசார ப்ரசாரம். (7)

இது லக்ஷ்மி சக்ரம் - மந்திரங்கள் அமைந்த செய்யுள் என்பர்.

அஸ்யேசாநா த்வமஸி ஜகத: ஸம்ச்ரயந்தீ முகுந்தம்
லக்ஷ்மீ: பத்மா ஜலதி தநயா விஷ்ணு பத்நீந்திரேதி;
யந்நாமாநி ச்ருதி பரிபணாந்யேவ மாவர்த்தயந்தோ
நாவர்த்தந்தே துரித பவந ப்ரேரிதே ஜந்ம சக்ரே. (8)

த்வாமேவாஹு: கதிசிதபரே த்வத்ப்ரியம் லோகநாதம்
கிம் தைரந்த: கலஹ மலிநை: கிஞ்சிதுத்தீர்யமக்நை:
த்வத்ஸம்ப்ரீத்யை விஹரதி ஹரௌ ஸம்முகீநாம் ச்ருதீநாம்
பாவாரூடௌ பகவதி யுவாம் தம்பதீ தைவதம் ந:. (9)

ஆபந்நார்த்தி ப்ரசமந விதௌ பத்த தீக்ஷஸ்ய விஷ்ணோ:
ஆசக்தியுஸ் த்வாம் ப்ரிய ஸஹசரீ மைகமத்யோபபந்தாம்
ப்ராதுர்பாவைரபி ஸம தநு: ப்ராத்வமந்வீயஸே த்வம்
தூரோத்க்ஷிப்தைரிவ மதுரதா துக்தராசேஸ்தரங்கை:. (10)

தத்தே சோபாம் ஹரிமரகதே தாவகீ மூர்த்திராத்யா
தந்வீ துங்கஸ்தநபரநதா தப்த ஜாம்பூநதாபா
யஸ்யாம் கச்சந்யுதய விலயைர் நித்யமாநந்தஸிந்தௌ
இச்சா வேகோல்லஸித லஹரீ விப்ரமம் வ்யக்தயஸ்தே. (11)

ஆஸம்ஸாரம் விததமகிலம் வாங்மயம் யத்விபூதி:
யத்ப்ரூபங்காத் குஸும தநுஷ: கிங்கரோ மேருதந்வா
யஸ்யாம் நித்யம் நயந சதகை: ஏகலக்ஷ்யோ மஹேந்த்ர:
பத்மே தாஸாம் பரிணதிரஸௌ பாவ லேசைஸ் திவதீயை:. (12)

அக்ரே பர்த்து: ஸரஸிஜமயே பத்ர பீடே நிஷண்ணாம்
அம்போ ராசேரதிகத ஸுதா ஸமப்லவாதுத்திதாம் த்வாம்
புஷபாஸார ஸ்த்தகித புவநை: புஷ்கலாவர்த்தகாத்யை:
க்லுப்தாரம்பா: கநககலசை: அப்யஷிஞ்சந் கஜேந்த்ரா:. (13)

ஆலோக்ய த்வாமம்ருத ஸஹஜே விஷ்ணு வக்ஷ:ஸ்தலஸ்த்தாம்
சாபாக்ராந்தா: சரணமகமந் ஸாவரோதா: ஸுரேந்த்ரா:
லப்த்வா பூயஸ் த்ரிபுவநமிதம் லக்ஷிதம் த்வத் கடாக்ஷை;
ஸர்வாகார ஸ்த்திர ஸமுதயாம் ஸம்பதம் நிர்விசந்தி. (14)

ஆர்த்த த்ராண வ்ரதிபி ரம்ருதாஸார நீலாம்புவாஹை:
அம்போ ஜாநா முஷஸி மிஷதா மந்தரங்கை ரபாங்கை:

யஸ்யாம் யஸ்யாம் திசி விஹரதே தேவி த்ருஷ்டிஸ் த்வதீயா
தஸ்யாம் தஸ்யாமஹமஹமிகாம் தந்வதே ஸம்பதோகா:. (15)

யோகாரம்ப த்வரித மநஸோ யுஷ்மதைகாந்த்ய யுக்தம்
தர்மம் ப்ராப்தும் ப்ரதமமிஹயே தாரயந்தே தநாயாம்
தேஷாம் பூமேர் தநபதி க்ருஹா தம்பராதம்புதேர்வா
தாரா நிர்யாந்த்யதிக மதிகம் வாஞ்சிதாநாம் வஸூநாம். (16)

(இச்செய்யுள் வரப்ரஸாதமானது)

ச்ரேயஸ்காமா: கமலநிலயே சித்ரமாம்நாய வாசாம்
சூடாபீடம் தவ பத யுகம் சேதஸா தாரயந்த:
சத்ரச்சாயா ஸுபக சிரஸ: சாமர ஸ்மேர பார்ச்வா:
ச்லாகா சப்த ச்ரவண முதிதா: ஸ்ரக்விண: ஸஞ்சரந்தி (17)

ஊரீகரத்தும் குசல மகிலம் ஜேதுமாதீநராதீந்
தூரிகர்த்தும் துரித நிவஹம் த்யக்துமாத்யா மவித்யாம்
அம்ப ஸ்தம்பாவதிக ஜநந க்ராம ஸீமாந்த ரேகாம்
ஆலம்பந்தே விமலமநஸோ விஷ்ணுகாந்தே தயாம் தே (18)

ஜாதாகாங்க்ஷா ஜநநி யுவயோ ரேக ஸேவாதிகாரே
மாயாலீடம் விபவமகிலம் மந்யமாநாஸ் த்ருணாய
ப்ரீத்யை விஷ்ணோஸ் தவ ச க்ருதிந: ப்ரீதிமந்தோ பஜந்தே
வேலாபங்க ப்ரசமந பலம் வைதிகம் தர்மஸேதும் (19)

ஸேவே தேவி த்ரிதச மஹிளா மௌளி மாலார்ச்சிதம் தே
ஸித்தி க்ஷேத்ரம் சமித விபதாம் ஸம்பதாம் பாத பத்மம்
யஸ்மிந்நீஷந்நமித சிரஸோ யாபயித்வ சரீரம்
வர்த்திஷ்யந்தே விதமஸி பதே வாஸுதேவஸ்ய தந்யா; (20)

ஸாநுப்ராஸ ப்ரகடித தயை: ஸாந்த்ர வாத்ஸல்யதிக்தை:
அம்ப ஸ்நிக்தைரம்ருத லஹரீ லப்த ஸப்ரஹ்மசர்யை:
கர்மே தாபத்ரய விரசிதே காட தப்தம் க்ஷணம் மாம்
ஆகிஞ்சந்யக்லபித மநகை : ஆர்த்ரயேதா: கடாக்ஷை:. (21)

ஸம்பத்யந்தே பவ பய தமீ பாநவஸ்த்வத் ப்ரஸாதாத்
பாவா: ஸர்வே பகவதி ஹரெள பத்திமுத்வேலயந்த:
யாசே கிம் த்வாமஹமிஹ யத: சீதளோதாரசீலா
பூயோ பூயோ திசஸி மஹதாம் மங்களாநாம் ப்ரபந்தாந். (22)

மாதா தேவி த்வமஸி, பகவாந் வாஸுதேவ: பிதாமே
ஜாத: ஸோஹம் ஜநநி யுவயோ ரேகலக்ஷ்யம் தயாயா:
தத்தோ யுஷ்மத் பரிஜநதயா தேசிகைரப்யதஸ் த்வம்
கிம் தே பூய: ப்ரியமிதி கில ஸ்மேர வக்த்ரா விபாஸி. (23)

கல்யாணாநாமவிகலநிதி: காபி காருண்யஸீமா
நித்யாமோதா நிகமவசஸாம் மெளளி மந்தார மாலா
ஸம்பத் திவ்யா மதுவிஜயிந: ஸந்நிதத்தாம் ஸதாமே
ஸைஷா தேவீ ஸகல புவந ப்ரார்தநா காமதேநு:. (24)

-: பலச்ருதி :-

உபசித குரு பக்தேருத்திதம் வேங்கடேசாத்
கலிகலுஷ நிவ்ருத்த்யை கல்பமாநம் ப்ரஜாநாம்
ஸரஸிஜ நிலயாயா: ஸ்தோத்ர மேதத் படந்த:
ஸகல குசல ஸீமா: ஸார்வபெளமா பவந்தி (25)

கவி தார்க்கிக ஸிம்ஹாய கல்யாணகுணசாலிநே
ஸ்ரீமதே வேங்கடேசாய சேதாந்த குரவே நம:

குறிப்பு : வேதம் ஓதிய ஸ்ரீ சூக்தத்தில் மகாலக்ஷ்மியை யோக லக்ஷ்மி, மோக்ஷ லக்ஷ்மி என இருவகையாக வருணிக்கப்பட்டது போல், ஸ்ரீதேசிகனும் இந்த ஸ்ரீஸ்துதியில் 16 செய்யுள் முடிய யோகலக்ஷ்மி யாகவும் 17 முதல் 24 முடிய மோக்ஷலக்ஷ்மியாகவும் மகாலக்ஷ்மியை போற்றியுள்ளார்.



பிரமன் போற்றிய பேரருளாளன்

[ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயில்]

ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட நூற்றெட்டு திவ்ய தேசங்களுள் சிறப்பு மிக்க தொண்டை மண்டலத்துத் திவ்ய தேசமாய்த் திகழ்வது, காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருக்கோயில். பகவான் ஒரு சிறு மலைமேல் எழுந்தருளி உள்ளார். அதனால் இதனை அத்திகிரி எனவும் அழைப்பர். இது காஞ்சி மாநகரத்தின் கீழ்க்கோடியில் சிறப்புற அமைந்துள்ளது. உயர்ந்த கோபுரங்களும் நெடிதுயர்ந்த மதில்களும், அவற்றின் நடுவே விளங்கும் புண்யகோடி விமானமும் அநந்தஸரஸும் வெகுதூரத்திலிருந்தே நமக்குக் காட்சி தருகின்றன. இவ்விமானத்தின் கீழ் ஹஸ்தகிரி எனப்படும் சிறுமலையின்மேல் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். ஹஸ்தகிரிநாதன், திரு அத்திவூரான், தேவராஜன், தேவாதிராஜன், வரதராஜன், ப்ரணதார்த்திஹரன், பேரருளாளன், தேவப்பெருமாள் என்றெல்லாம் ஆழ்வார்களாலும், அடியார்களாலும் போற்றப்பட்ட பரமதயாளனாகிய வரதராஜன் எழுந்தருளி இருக்கும் பெறும்பேறு பெற்ற காஞ்சி நகரின் சிறப்பினைப் பல பெரியோர்களின் அமுதவாக்குகளின் மூலம் அறியமுடிகிறது. பேரருளாளப் பெருமாளின் பெருமையைப் போற்றிப் பாடித் துதித்து, ஸேவித்து, அகம் மகிழ்ந்து அருளிச் செய்த ஆழ்வார்களின் பாசுரங்களில் இருந்தும் வைணவாசாரியர்கள் அருளிய அரும்பெரும் நூல்களிலிருந்தும், எம்பெருமான் அத்திகிரி நாதனின் அவதார விசேஷ வைபவம் தெரிந்துகொள்ளக் கிடக்கிறது. மூலவருக்கு ப்ரணதார்த்திஹரன் எனத் திருநாமம்.

ஆழ்வார்களால் பாடப்பெற்ற 108 ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசங்கள் அல்லது திருப்பதிகளில் கோயில், திருமலை, பெருமாள்கோயில் என்று மூன்றாம் இடமாக போற்றப்படுகின்ற பெருமையுடையது ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயில். ஸ்ரீ காஞ்சி வரதனின் ஸ்தலபுராணம் மிகவும் பழமையானது, ப்ரசித்தமானது.

பிரம்மதேவன் பகவான் பரந்தாமனைத் தரிசிக்க வேண்டுமென்ற ஸங்கல்பத்துடன், "புஷ்கரம்" என்ற புண்ய ஸ்தலத்தில் வெகுநாட்கள் தவம் செய்தார். பகவான் ப்ரஸன்னமாகித் தீர்த்த ரூபியாகக் காட்சி தந்தார். அந்தத் தீர்த்த ரூபத்தினால் திருப்தி ஏற்படாததால் பிரமன் மீண்டும் பகவானை எண்ணித் தவம் செய்யவே, பகவான் மறுபடியும் ப்ரஸன்னமாகி "நைமிசாரண்யம்" என்ற ஆரண்ய ரூபமாகக் காட்சி தந்தார். எங்கும் நிறைந்து, எல்லாமுமாகிய எம் பெருமான் நீரராய், நிலனாய் காட்சி தந்த போதிலும், பிரம்ம தேவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. சங்கு, சக்கரத்தோடு, திவ்ய மங்கள ஸ்வரூபத்தில் அர்ச்சாரூபத்தில் பெருமாளின் திருமேனியை ஸேவிக்கவேண்டுமென்ற ஆசையுடன் அத்தகு காட்சி தந்தருளும்படி பெருமானை மீண்டும் வேண்டிநிற்க, நூறு அஸ்வமேத யாகங்கள் செய்தால், தான் அவிர்பாவம் அடைந்து காட்சி தருவதாகச்சொல்லவே, நூறு அஸ்வமேத யாகங்கள் செய்வதற்குக் காலதாமதம் ஆகுமென்பதனால் விரைவில் சுலபமாக அருளைப் பெறும் வழியைச் சொல்லும்படி பிரமதேவன் வேண்டினார். பாற்கடலில் பாம்பணைமேல் பள்ளிக்கொண்டு அகிலத்தையும் ஆட்கொள்ளும் கருணைக்கடல், கார்முகில் வண்ணன், கண்ணன் தன் பக்த வாத்ஸல்யத்தினால் பிரமதேவனை "ஸத்யவிரத க்ஷேத்திரம்" என்றழைக்கப்படும் காஞ்சிபுரத்திற்குச் சென்று ஒரேயொரு அஸ்வமேத யாகம் செய்யும்படி பணித்தார். இக்கருத்தை ஸ்ரீ தேசிகன் தமது வரதராஜ பஞ்ச சதியில் துரகஸவன வேத்யாம் ச்யாமளோ ஹவ்யவாஹ: என்றார்.

காஞ்சியில் செய்யும் புண்யம் எதுவாயினும், நூறுமடங்கு அதிகப் பலனைத் தரவல்லது என்று எடுத்துரைத்துத் தவம் புரிய நியமித்ததின் பேரில் பிரம்மதேவன் அத்திகிரியில் உத்திர வேதியில் யாகம் செய்தார். அந்த யாகத்தில் எம்பெருமான் அத்திகிரி நாதன் அர்ச்சாவதார மூர்த்தியாய்க் காட்சி தந்தருளினார். அக்னியிலிருந்து தோன்றிய வெப்பத்தால் உத்ஸவ மூர்த்தியின் திருமுகத்தில்

ஏற்பட்ட வெப்ப வடுக்களை இன்னமும் காணலாம். பிரஹ்மாவினால் ஆராதிக்கப்பட்டு, ஆவிர்பாவம் அடைந்தபடியினால் இந்த "ஸத்யவ்ரத" க்ஷேத்திரத்திற்கு "காஞ்சி" என்ற பெயர் ஏற்பட்டது.

ஒரு ஸமயம் ஸரஸ்வதியின் சாபத்துக்கு ஆளாகி, யானையாக உருவெடுத்த இந்திரன், இவ்விடத்தில் தவம்புரிந்து சாபவிமோசனம் பெற்றபடியால், இத்தலத்திற்கு "ஹஸ்திகிரி" என்ற பெயர் வந்ததாகப் புராணங்கள் புகலுகின்றன. ஹஸ்திகிரி அல்லது அத்திகிரி என்று போற்றப்பெற்ற இத்திருத்தலத்தில் எம்பெருமான் அர்ச்சாவதார மூர்த்தியாய்த் தோன்றியபடியால் இவ்விடத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாளுக்கு, "ஹஸ்திகிரிநாதன்" அத்திவரதன் என்றெல்லாம் பெயர் உண்டாயிற்று. மேலும் இப்பெருமான் தேவேந்திரனால் போற்றி வணங்கப்பட்ட காரணத்தால் "தேவராஜன்" என்றும் "தேவாதிராஜன்" என்றும் அழைக்கப்படலானார். பாற்கடலில் பள்ளிகொண்ட பரந்தாமன், தம் பரம காருண்யத்தினால் உலகம் உய்ய ப்ரஹ்மாவின் யாககுண்டத்தில் அர்ச்சாவதார ரூபியாய் எழுந்தருளி அனைவரையும் ஆட்கொண்டு அருள்பாலித்து வருவதனால் "பேரருளாளன்" என்றும், தன்னை அண்டியவர்களின் துயர்தீர்த்து ஆட்கொள்ளும் கருணைபடைத்தவன் என்பதனால் "ப்ரணதார்த்திஹரன்" என்றும், பாகவதோத் தமர்களின் யோகக்ஷேமங்களை தம் அருட்கடாக்ஷத்தினால் நிலவச் செய்து, வேண்டுவன வழங்கும் வரதனாய் திகழ்வதால் "வரதராஜன்" என்றும் ஆசார்யார்களாலும், ஆழ்வார்களாலும், ஆன்றோர்களாலும் ஆராதிக்கப்பட்டு வருபவர் அத்திகிரியில் தோன்றிய தேவப்பெருமாள் ஸ்ரீவரதராஜப் பெருமாள். இங்குள்ள மூலவர்க்குப் ப்ரணதார்த்திஹரன் எனவும், வீதிவலம் வரும் உத்ஸவருக்கு வரதன் எனவும் பெயர் பெற்றமையால் இது உபயப்பிரதான க்ஷேத்திரமாகும். பேரருளாளன் என்ற திருப்பெயர் திருமங்கை ஆழ்வார் அருளியது.

இப்பெருமானிடத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதருக்கு மிகவும் ஈடுபாடு. வரதராஜ ஸ்தவம் என்ற நூலை அவர் எழுதியுள்ளார்.

"புண்யகோடிவிமானாங்கம் தத்வ சோபானபூஷிதம்

ந்ருஸிம்ஹாதிஷ்டிதகுஹம் ஹஸ்திசைலம் நமாம்யஹம்

ப்ரஹ்ம யக்ஞ ஸமுத்பூதம், திவ்ய மாணிக்ய சுந்தரம்

ஜகதாதி குரும் தேவம் வரதம் தமஹம் பஜே"

என்ற த்யான ஸ்லோகங்கள் இந்த ஹஸ்திகிரி வரதனின் அவதார வைபவத்தை விவரிக்கின்றன.

யாக குண்டத்தில் தோன்றிய உத்ஸவ மூர்த்திக்கு ஒரு திருக்கோயில் அமைத்து, அவர் எழுந்தருளியிருக்கும் மலைக்கு இருபத்திநான்கு படிக்கட்டுகளையும், புண்யகோடி விமானத்தையும் அமைத்து, விச்வகர்மாவைக் கொண்டு தாருமரத்தினால் மூல விக்ரஹத்தைச் செய்விக்கச் செய்து ப்ரதிஷ்டை செய்து உத்ஸவ மூர்த்தியை ஸர்வாபரண ஸம்பன்னனாய், திவ்ய மங்கள விக்ரஹத்துடன் பலருக்கும் காட்சித் தந்து அருள் புரியும்வண்ணம் உத்ஸவம் நடப்பித்து அகமகிழ்ந்தான் ப்ரஹ்மதேவன். அன்று ப்ரஹ்மாவினால் முதன்முதலில் செய்விக்கப்பட்ட உத்ஸவமாதலால் அதற்கு ப்ரஹ்மோத்ஸவம் என்ற பெயர் விளங்கலாயிற்று. வரதராஜப்பெருமாள் ஸந்நிதியிலிருந்து புறப்பட்டுக் கங்கைக்கொண்டான் மண்டபத்தில் எழுந்தருளி ஸ்ரீ காமாக்ஷி அம்மன் ஸந்நிதியை ப்ரதக்ஷிணமாக ஒரு முறை வந்தடைய சுமார் ஏழுமைல் அல்லது பன்னிரண்டு கிலோமீட்டர் தூரமாகும். ப்ரம்மோத்ஸவத்தில் மூன்றாம் திருநாள் நடந்தேறும் கருட ஸேவை வையம் கண்ட பெருமையுடையது.

ப்ரஹ்மாவினால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட மரத்தினாலான இந்த ஆதி அத்திகிரி வரதனைப் பின்னர் புஷ்கரணியில் பெருமாள் உத்தரவின் பேரில் எழுந்தருளப்பண்ணி அவ்விடத்தில் சிலா விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்தனர். பக்தர்கள் தம் ஆயுட்கால்த்தில் ஒரு முறையாகிலும் தரிசிப் பதற்கென்று, முதலில் அறுபது வருடங்களுக்கொரு முறையும் பின்னர் நாற்பதாண்டுகளுக்கு ஒரு முறையும் அனந்தஸரஸ் புஷ்கரணியிலிருந்து ஆதி அத்தி வரதரை வெளியே எழுந்தருளப்பண்ணி வஸந்த மண்டபத்தில் வைத்திருந்து ஒரு மண்டல காலத்துக்குப் பிறகு, மீண்டும் அனந்தசரஸ் புஷ்கரணியில் எழுந்தருளப் பண்ணுவதும் வழக்கத்திலிருந்து வருகிறது.

இவரையே "அத்திவரதர்" என்கிறோம். "அத்திவரதர்" என்றால் அத்தி மரத்தினால் செய்யப்பட்ட பெருமாள் என்பது அல்ல. "ஹஸ்திகிரி" என்பது தமிழில் அத்திகிரி என்று மருவியமையே அப்பெயர்க்காரணம். இந்த அத்திகிரி க்ஷேத்ரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாள் என்பதை "அத்திகிரி வரதர்" எனுஞ்சொல் குறிக்கிறது. நாளடைவில் இதுவும் மருவி அத்திவரதர் என்று ஆயிற்று. இந்த அத்திகிரிவரதரைத்தான், 1979—ஆம் ஆண்டு அனந்தஸரஸ் புஷ்கரணியிலிருந்து வெளியே கொணர்ந்து வசந்த மண்டபத்தில் எழுந்தருளப்பண்ணி, ஒரு மண்டலகாலம் பக்தர்களுக்குச் சேவை சாதித்தருளிய வைபவம் நிகழ்ந்தது.

வரதராஜப்பெருமாள் சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் பிராட்டியின் பெயர் பெருந்தேவித் தாயார் என்பதாகும். எங்கும் காணக்கிடைக்காத வகையில் ஸ்ரீ வரதனுக்கு எதிரில் தாயார் செந்தாமரைமேல் பத்ரபீடத்தில் வீற்றிருக்கிறாள். வேதங்களில் சொல்லியிருக்கும் மஹாலக்ஷ்மியின் திரு நாமத்தைக் கொண்டவளே ஸ்ரீ பெருந்ததேவித் தாயார்.

"ஓம் மஹாதேவ்யைச வித்மஹே

விஷ்ணு பத்ந்யைச தீமஹி

தன்னோ லக்ஷ்மீ ப்ரசோதயாத்"

என்பது ஸ்ரீலக்ஷ்மீ காயத்திரியாகும். "மஹாதேவி" அதாவது "பெருந்தேவி" என்ற திருநாமம் கொண்ட பிராட்டியார், ப்ருகு மஹரிஷியின் புத்ரகாமேஷ்டி யாகப்பயனாய், பொற்றாமரைக் குளத்தில் அவதாரம் செய்ததாக ஐதிஹ்யம். தாயாரைப் "படிதாண்டாப் பத்தினி" என்றும் அழைப்பதுண்டு. அதனால் தாயாருக்குத் திருவீதி புறப்பாடு கிடையாது. கோயில் ப்ராகாரத்தினுள்ளேயே (திருக்கோயிலினுள்) திருமஞ்சனக்கேணி அமைந்திருப்பதால், இங்கு நடைபெறும் தெப்போற்சவத்தில் தாயாரையும் எழுந்தருளப் பண்ணுவதால் இந்த தெப்போத்சவத்திற்குப் "பெருந்தேவித் தாயார் தெப்பம்" என்ற பெயர் வழங்கி வருகிறது.

ப்ரஹ்மாவின் யாககுண்டத்தில் தோன்றிய தேவப் பெருமாள் தேவாதிராஜன், வரதராஜன் பல அடியார்களுக்கு மனமிரங்கி அருள்புரிந்த

சம்பவங்கள் பலப்பல! தமது அர்ச்சாவதார நிலையினையுங் கடந்து தமக்குத் திரு ஆலவட்டக் கைங்கர்யம் (சாமரம் வீசுதல்) செய்துவந்த ஸ்ரீ காஞ்சீபூரணர் என்ற பெயர் கொண்ட திருக்கச்சிநம்பிகளிடம் மனமுவந்து உரையாடிய கருணையை "ஸ்ரீ தேவராஜ மங்களா சாஸனம்" எனும் ஸ்தோத்திரத்தில்

"ஸ்ரீ காஞ்சி பூர்ண மிச்ரேண ப்ரீத்யா

ஸர்வாபி பாஷிணே

அதீதார்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம்

என்று யதீந்த்ரப்ரவணர் ஸ்வாமி, ஸ்ரீமத் மணவாள மாமுனிகள் போற்றியிருக்கிறார். காஞ்சிபுரத்திற்கும் சென்னைக்கும் இடையேயுள்ள பூவிருந்தவல்லி எனும் திவ்ய தேசத்தில் திருவவதாரம் செய்த திருக்கச்சிநம்பிகள் பூவிருந்தவல்லியில் பூந்தோட்டம் வளர்த்து, மலர்மாலைகளை நடந்தே காஞ்சிபுரத்திற்கு எடுத்துவந்து ஸ்ரீவரதராஜப் பெருமாளுக்குச் சமர்ப்பித்து புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். பின்னர், காஞ்சிபுரத்தில் தங்கியிருந்து, யாக குண்டத்தில் தோன்றியதால் வெப்பம் தணியப் பெருமாளுக்கு ஹிதமாய் இருக்கும் வண்ணம் விசிறி வீசி திருஆலவட்டம் திருக்கச்சிநம்பி என்ற பெயரும் ஏற்பட்டது. திருக்கச்சிநம்பிகளை ஆசார்யகோஷ்டியிலும் பேசுவது உண்டானபடியால் இவருக்கு ஸ்ரீ காஞ்சி பூரணர் (பூரணர் = நம்பி) என்ற திருநாமமும் ஏற்பட்டது.

யாதவப்பிரகாசரிடம் சீடராக ஸ்ரீ ராமனுஜர் இருந்து வந்த சமயம், யாதவப்பிரகாசர் சொல்லி வந்த உபநிஷத் வாக்யங்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை எடுத்துரைத்துத் தெளிவுபடுத்தி வந்ததால் யாதவப்பிரகாசருடன் கருத்து வேற்றுமை ஏற்பட நேரிட்டது. அதன் விளைவாக ராமானுஜரிடம் தீராப்பகையால் தீய எண்ணமும் யாதவப் பிரகாசருக்கு ஏற்பட்டது. காசி யாத்திரை என்ற வ்யாஜத்தை உருவாக்கி, வழியில் ராமானுஜரை மாய்த்துவிட வேண்டும் என்ற திட்டத்துடன் புறப்பட்ட யாதவப் பிரகாசரின் கோஷ்டியிலிருந்து ராமானுஜரை எம்பார் மூலமாகத் தப்பிக்கச் செய்து, விந்தியக் காட்டில் வேடன், வேடுவச்சி தம்பதிகள் ரூபத்தில் காட்சித் தந்து அவரை ஆட்கொண்டு அருளினார் ஸ்ரீவரதராஜப்பெருமாள். தம்மை ஆட்கொண்டு அருள்புரிந்த ஆண்டவனின் திருவடி

பணிந்து அவன் சந்நிதியில் ஏதேனுமொரு கைங்கர்யத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள எண்ணிய ராமானுஜரைத் தீர்த்த கைங்கர்யத்தில் ஈடுபடச் செய்த பெருமை வாய்ந்தவர் திருக்கச்சிநம்பிகள். ஸ்ரீ வைணவம் செழித்தோங்க ராமானுஜரை ஆளவந்தாருக்கு அறிமுகம் செய்வித்து ஆளவந்தாருக்குப்பின் ஸ்ரீ வைஷ்ணவ தரிசனத்தை நிலைநாட்ட வல்லவர் அவரே என்பதனை ஆளவந்தார் உணருவதற்கு உதவியாக இருந்தவரும் திருக்கச்சிநம்பிகளே. ஸ்ரீவரதராஜப்பெருமாள் சந்நிதிக்கு சமீபத்தில் இவர் பெயரிலேயே திருக்கச்சிநம்பி தெரு, டி.கே. நம்பித் தெரு என்ற திருவீதியும், விந்திய மலைக் காட்டில் வேடன், வேடுச்சியுமாக வந்துதவிய வரதன் பெருந்தேவித் தாயாருக்கு தாஹசாந்திக்காக அதிகாலையில் இராமானுஜர் தண்ணீர் கொணர அவர்கள் மறையவும் பிறகு அவர்கள் நீர் கேட்ட இடமாகிய சாலைக் கிணற்றிலிருந்து நீர் கொணரும் பணியை இராமானுஜர் செய்தார். அச்சாலைக் கிணற்றை இன்றும் பெருமாள் சந்நிதிக்கு அருகில் காணலாம்.

ராமானுஜரை திருக்கச்சிநம்பியின் உதவியால் முதன் முதலாக ஆளவந்தார் கண்டதும், அவரே தமக்குப் பின்னர் ஸ்ரீ வைஷ்ணவ விருக்ஷத்தைக் காத்து வளர்க்கக்கூடியவர் என்கின்ற எண்ணம் தோன்றியதும் ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் திருச் சன்னதியிலேயே,

ஸ்ரீ ஆளவந்தாரை ஆசார்யராக ஆச்ரயிக்கத் திருவரங்கம் சென்ற ராமானுஜர் அவர் திருநாட்டுக்கு எழுந்தருளியதைக் கண்டு வருந்திக் காஞ்சிபுரம் திரும்பிவந்து திருக்கச்சிநம்பிகளிடம் நடந்ததைச் சொல்லித் தமக்கேற்பட்ட சில எண்ணங்கள் சரியானவையா என்று ஸ்ரீ வரதாராஜப் பெருமாளிடம் கேட்டறிந்து சொல்லும்படித் திருக்கச்சிநம்பிகளைப் பிரார்த்தித்தார். திருக்கச்சிநம்பிகள் மூலம் ஸ்ரீராமானுஜரின் குறிப்பை அறிந்து, ஸ்ரீ வைணவம் தழைக்க ஸ்ரீ காஞ்சி வரதனே ஆறு வார்த்தைகளை அருளிச் செய்தார். இந்நிகழ்ச்சி ஏற்பட்ட மண்டபத்தை இன்றும் வரதன் கருவறைக்கு எதிரில் காணலாம்.

வரதராஜப் பெருமாள் அருளிச் செய்த ஆறு வார்த்தைகளிலிருந்து, 1. அவரே "நாராயணனே" பரம்பொருள் என்பதும், 2. அந்திமகாலத்தில் பகவத்ஸ்ம்ருதி அவசியம் என்ற நியதியில்லை என்பதையும், 3. மரணத்திற்குப்பின் மோட்சம்

நிச்சயம் என்பதையும், 4. பரமாத்மா, ஜீவாத்மா என்ற பேதம் உணடு என்றும், 5. தானே பரதத்துவம். 6. பெரிய நம்பிகளை ஆசார்யராக வரிக்கவும் என்பதையும் திருக்கச்சி நம்பிகள் மூலம் ராமானுஜருக்கும் அவர் மூலமாக உலகிற்கும் எடுத்துரைத்த வரதராஜப் பெருமாளின் பெருங்கருணையைப் பல ஆசார்ய புருஷர்கள் போற்றியுள்ளார்கள். ஸ்ரீவரதராஜப் பெருமாளின் வைபவத்தை அனுபவித்து, உலகிற்குணர்த்திய மஹான்களுள் ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகனும் ஸ்ரீ மணவாள மாமுனிகளும், ஸ்ரீகூரத்தாழ்வானும், ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரும் குறிப்பிடத்தக்கவர்கள். ஸ்ரீ வரதராஜனின் வைபவத்தோடு, ஸ்ரீ பெருந்தேவித் தாயாரின் தனிப்பெருங் கருணையைத் தரணியெல்லாம் உணரும் வண்ணம் தமது ஸ்ரீஸ்துதியில் எடுத்துரைத்துத் தங்க மழைப் பெய்வித்தப் பெருமையைப் பெற்றவர் ஸ்வாமி தேசிகன் ஆவார்.

காஞ்சி வரதரின் ப்ரஹ்மோத்ஸவம் மிகப் ப்ரஸித்தி பெற்றது. வைகாசி மாதத்தில் வரும் இந்த ப்ரஹ்மோத்ஸவத்தில் மூன்றாம் திருநாளாகத் திகழ்வதும், விசாக நக்ஷத்ரம் கூடிய பௌர்ணமியின் முழு நிலவு நாளன்று வருவதும் புகழ் பெற்ற "கருடசேவை" ஆகும். ஸ்ரீ நம்மாழ்வார் திருவவதாரம் செய்த விசாக நன்னாளில், காஞ்சி வரதரின் கருடஸேவையும வருவது சிறப்புமிக்க அம்சமாகும்.

காஞ்சிபுரத்திற்கு அருகாமையிலுள்ள சோளங்கிபுரம் என்றழைக்கப்படும் "கடிகாசலம்" எனும் க்ஷேத்ரத்தில் தொட்டாச்சாரியார் என்ற சிறந்த விஷ்ணுபக்தர் ஒருவர் வசித்து வந்தார். இவர் வருடந்தோறும் தவறாமல் காஞ்சிபுரத்திற்கு வந்திருந்து வரதராஜப் பெருமாளின் ப்ரஹ்மோத்ஸவத்தைக் கண்டு களிப்புறுவார். ஒரு வருடம் முதுமையின் காரணமாக உடல் நலக் குறைவுண்டாகிக் காஞ்சிபுரத்திற்கு வர இயலவில்லை. கருட வாஹனத்தில் வரதராஜப் பெருமாள் எழுந்தருளும் திருக்காட்சியை நேரில் தரிசிக்க முடியாமற்போகவே மனம் நொந்து, பெரும் ஏக்கத்தினால் சில ச்லோகங்கள் பாடினார். உள்ளம் குளிரும் உஷக்காலத்தில் அர்ச்சகர்கள் வெண்சாமரம் வீசப், பக்த கோடிகள் "வரதா, வரதா" என்று கைகூப்பி வேண்டி நிற்கப் பெரிய வெண்குடைகளுடன் கருடனின் மேல், மலர்ந்த முகத்துடன் ப்ரசன்னனாகக் காட்சித் தந்த எம்பெருமான், தன்னை

நினைந்துருகும் தொட்டாச்சாரியாருக்கு அருள்புரிய திருவுளங் கொண்டு, அர்ச்சகர்களின் மனதில் தோன்றி குடையைச் சற்று சாய்த்து மறைக்கும்படி செய்து சோளங்கிபுரத்தில் தக்காங் குளக்கரையில் துதித்து நின்ற தொட்டாச்சாரியருக்குக் காட்சி தந்தருளிய அற்புதத்தை நினைவுபடுத்தும் வகையில் இன்றும் கோபுர வாசலில் குடையைச் சாய்த்து, உத்ஸவ மூர்த்தியை மறைப்பது மரபாக உள்ளது. இது தொட்டாசாரியார் ஸேவை என்றழக்கப்படுகிறது. ஸ்ரீகாஞ்சி வரதனின் கருடஸேவை வைபவம் :

ப்ரத்யூஷே வரத: ப்ரஸந்நவதன:
ப்ராப்தாபி முக்யான் ஜனான்
ஆபத்தாஞ்ஜலி மஸ்தகான் அவிரளான்
ஆபாலமானந்தயன்
மந்தோத்தாமர சாமரோ மணிமய
ச்வேதாதபத்ரச்சனை: அந்தர்கோபுர
மாவிராச பகவான் ஆரூட பக்ஷீஸ்வர:

என்ற ச்லோகத்தில் அழகுறச் சித்தரித்திருப்பதைக் காணலாம். காஞ்சி வரதராஜனின் கருடோத்ஸவ வைபவம் த்யாகராஜரின் "விநதா ஸூதவாஹனுடை வெடலெனு காஞ்சி வரதுடு" என்ற கீர்த்தனையிலும், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் "வரதராஜ முபாஸ்மஹே" என்ற க்ருதியிலும் வெகு அழகாக போற்றிப் பாடப்பட்டிருப்பதை அறியலாம்.

காஞ்சி வரதனின் கருடஸேவை வைபவத்தைக் கண்டுகளித்த ராபர்ட் கிளைவ் வியந்து, மகிழ்ச்சிப் பெருக்கினால் தன் பத்தினியின் கழுத்திலிருந்த மணிமாலையை எடுத்துப் பெருமாளுக்குக் காணிக்கையாக சமர்ப்பித்த சம்பவம் குறிப்பிடத்தக்கது. இந்த திருவாபரணத்தை இன்றும் "கிளைவ் மகரகண்டி" என்ற பெயரோடு, கருடஸேவையன்று பெருமாளுக்குச் சாற்றி வருகிறார்கள். ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் கருடஸேவை வைபவத்தை வருடத்தில் மூன்று முறை பக்தர்கள் சேவித்துய்கின்றனர். ஒன்று வைகாசியில் வரும் ப்ரஹ்மோத்சவத்தில் நிகழ்வது; இரண்டாவது ஆனி மாதம் ஸ்வாதி நக்ஷத்திரம் கூடிய பெரியாழ்வாரின்

சாற்று முறை அன்று நடைபெறுவது; மூன்றாவதாக ஆடி மாதத்தில் பௌர்ணமி அன்று நடைபெறும் கஜேந்த்ரமோக்ஷ கருடசேவை. ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ப்ரஹ்மோத்ஸவத்தின் ஐந்தாம் திருநாள் நாச்சியார் திருக்கோல அலங்கார உத்ஸவம். பெருமாள் பல்லக்கில் எழுந்தருளி பிள்ளையார்பாளையம், கங்கைகொண்டான் மண்டபம் வழியாக காலாண்டார் தெரு ப்ரவாளவர்ணப் பெருமாள் கோயில் தோட்டத்தில் மண்டகப்படிகண்டருளி ஸ்ரீ பவழவண்ணப் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளுவது விசேஷம். பிரம்மோத்ஸவத்தில் ஸ்ரீவரதராஜப்பெருமாள் காலையும், மாலையும் கங்கை கொண்டான் மண்டபத்திற்கு எழுந்தருளி மண்டகபடி கண்டருளுவது வழக்கத்தில் உள்ளது. இந்த கங்கை கொண்டான் மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஆஞ்சநேயர் மிகவும் கம்பீரமாக சேவை ஸாதித்து வரப்பிராசாதியாக போற்றப்படுகிறார். உத்ஸவ சமயங்களில் நூற்றுக்கணக்கான வேதவிற்பன்னர்கள், திவ்யப்ரபந்த கோஷ்டியுடன் பெருமாள் நகர்வலம் வருவது கண் கொள்ளாக்காட்சியாகும். ஏழாம் நாள் திருத்தேர் உத்ஸவம் மிகவும் ப்ரசித்திப்பெற்றது, பழமைவாய்ந்த இந்த திருத்தேர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் 69வது பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளால் 2000–ம் ஆண்டில் சீரமைக்கப்பெற்று அழகாக காட்சியளித்து வருகிறது. இத்திருத்தேர் மண்டபத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீஆஞ்சநேயர் வரப்ப்ரஸாதி–மிகவும் ப்ரஸித்தமானவர். ஸ்ரீமந்நிகமாந்த மகாதேசிகனின் திரு நக்ஷத்திரமான ஸ்ரவணத்தன்று தீர்த்தவாரியாக ப்ரம்மோத்ஸவம் நிறைவு பெறுகிறது. இத்திருக்கோயிலில் நடைபெறும் உத்ஸவங்களுள் தை மாதத்தில் நடைபெறும் சீவரம் பார்வேட்டை உத்ஸவமும், சித்ரா பௌர்ணமியன்று தூசி, மாமண்டூர் வழியாக பாலாற்றங்கரைக்கு எழுந்தருளும் நடபாவி உத்ஸவமும் மிக ப்ரசித்தி பெற்றவை.

ஸ்ரீ வரதராஜப் பெருமாள் சந்நிதியில், ஹஸ்திகிரியினுள் குஹா நரஸிம்ஹமூர்த்தி சந்நிதி இருக்கிறது. குஹாநரஸிம்ஹ மூர்த்தியைத் தரிசித்து வரும் சமயம் இந்திரனுக்குச் சாப விமோசனம் ஏற்பட்டதற்குச் சாக்ஷியாக இரண்டு பல்லிகள் இருந்து வந்தன. இவை வரதனின் கிருபையால் தாமும் சாப விமோசனம் பெற்றன. இந்தப் பல்லிகளின் நினைவாக இந்திரன் பொன்னாலும், வெள்ளியாலும் இரண்டு பல்லி உருவங்களை அமைத்து வரதனின் சந்நிதி உட்பிரகாரத்தில்

ப்ரதிஷ்டை செய்து, இவ்விடத்திலிருக்கும் இந்த இரு பல்லிகளையும் தொடுபர்களுக்குப் பலலி விழும் தோஷங்கள் நிவர்த்தியாகுமென வரமளித்ததாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீ ரங்கத்திலுள்ள பெரிய பெருமாள் ஸ்ரீரங்கநாதனின் சந்நிதி, சப்த, அதாவது ஏழு ப்ரகாரங்களுக்கிடையே அமைந்து இருப்பதுபோல், காஞ்சிபுரத்து வரதராஜப் பெருமாள் சந்நிதி, பஞ்சப்ரகாரங்கள், அதாவது ஐந்து ப்ராகாரங்களுக்கிடையே ஹஸ்திகிரியின் மேல் அமைந்துள்ளது. இந்திருக் கோயில் 378 மீட்டர் நீளமும், 212 மீட்டர் அகலமும் உடையது.

ஹஸ்திகிரி எனப்படும் மலைமேல் அமைந்துள்ள பெருமாள் சன்னிதியைச் சுற்றியுள்ள பிரதக்ஷிணம் வையமாளிகை எனப்படும் முதல் பிராகாரம். திருமலை ப்ரதக்ஷிணம் அல்லது சேனையர்கோன் திருமுற்றம் எனப்படுவது இரண்டாவது பிராகாரம். மூன்றாவது பிராகாரம் ஆளவந்தார் பிரதக்ஷணம் எனவும், நான்காவது பிராகாரம் ஆழ்வார் திருவீதி எனவும் வழங்கப்படுகின்றன. ஐந்தாவது பிராகாரம் மாடவீதியாகும். முதல் பிராகாரம் வையமாளிகையில் முன்பு ஸ்ரீநடாதூர் அம்மான் காலக்ஷேபம் சாதித்தார்.

96 அடி உயரமுள்ள ராஜகோபுரத்தின் உள்ளே ப்ரவேசித்தவுடன் அனந்தசரஸ் புஷ்கரணியும் அதன் கரையில் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த நூற்றுக்கால் மண்டபமும் உள்ளன. இந்த நூற்றுக்கால் மண்டபம் பதினாறாவது நூற்றாண்டில் விஜயநகர மன்னர்களால் கட்டப்பட்டது.

சிறந்த சிற்பக் கூடமாகத் திகழும் இந்த நூற்றுக்கால் மண்டபத்தின் கற்றூண்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களில் கையில் முகம் பார்க்கும் கண்ணாடியுடன் ஒப்பனையழகைப் பார்த்துக்கொள்கின்ற பெண்ணின் சிற்பம், விஸ்வாமித்ர யாக சம்ரக்ஷணம், சீதாக் கல்யாண காட்சிகள், வாலி வதம், இராமபிரானின் அடையாள மோதிரத்தை அன்னை சீதாபிராட்டியிடம் அனுமன் கொடுக்கின்ற அங்குளீய ப்ரதான காட்சியைச் சித்தரிக்கும் சிற்பம், கிளி வாகனத்தின் மேல் அமர்ந்திருக்கும் ரதியும், அன்ன வாகனத்தின்மேல் கரும்பும் வில்லும் மலர் அம்புகளுடன் மன்மதனும், சஞ்ஜீவி பர்வதத்தை எடுத்துவரும்

ஆஞ்சநேயர், தசாவதாரக் காட்சிகள் போன்ற பல சிற்பங்கள் காண்போரின் உள்ளம் கவரும் அழகுஓவியங்கள். குளக்கரையைச் சுற்றி ஸ்ரீரங்கநாதர் சந்நிதி, ஸ்ரீராமபிரான் சந்நிதி, ஸ்ரீசக்கரத்தாழ்வான் சந்நிதி ஆகியவை அமைந்துள்ளன.

ஸ்ரீ ஸுதர்சனச் சக்கரத்தை வழிபட்டுத் துன்பங்களிலிருந்து விடுபட்டுப் பக்தர்கள் பல நன்மைகளைப் பெறுகின்றனர். சக்கரத்தாழ்வானைச் சேவித்துப் ப்ராகார ப்ரதக்ஷிணம் வரும்போது நம்மாழ்வார் சந்நிதி, மதுரகவிகள், நாதமுனிகள், ஸ்ரீமந் மணவாள மாமுனிகள், உடையவர் ஸ்ரீமத் ராமானுஜர் ஆகியோரின் சந்நிதிகளையும் பக்தர்கள் தரிசிக்கின்றனர். அடுத்து இத்திருக்கோவிலின் கைங்கர்யத்தில் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட ஸ்ரீ தாதாச்சாரியார் சந்நிதியும், வாஹன மண்டபமும் அமைந்துள்ளன.

ஆளவந்தார் ப்ராகாரத்தில், திருவனந்தாழ்வான், கரியமாணிக்கவரதர் சந்நதிகள் உள்ளன. இப்பராகாரத்தின் வடகிழக்கு மூலையில் ஆயிரங்கால் மண்டபம் உள்ளது.

கீழைகோபுரம் 60 மீட்டர் உயரம் உடையது. மேலை கோபுரம் ஏழு நிலைகளை கொண்டது. கீழைகோபுரம் ஒன்பது நிலைகளையுடையது. மேலைகோபுரத்தில் 1134-ல் ஆண்டில் கம்பண்ண உடையாரின்கல்வெட்டு உள்ளது. விஜய நகர அரசர்களால் கட்டபெற்றது. இந்த கோபுரம் பிற்காலக் சோழர் பாண்டியர்களில் கலைபாணியில் அமைந்துள்ளது. கீழை கோபுரம் ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் காலத்தில் கி.பி. 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுப்பப்பட்டது. ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயிலின் இரண்டு கோபுரங்களில் மேலைகோபுரம் 53 மீட்டர் உயர முடையது. இதுதான் இவ்வாலயத்தின் நுழைவாயில் ராஜகோபுரம். இந்த ராஜகோபுரம் எதிரில் அமைந்துள்ள சந்நிதித் தெருவில் வானமாமலை ஜீயர் மடம், அஹோபிலமடம், முதலியாண்டான் திருமாளிகை, ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா திருமாளிகை, நம்பிள்ளைமடம் போன்ற பல ஸ்ரீவைஷ்ணவ முக்யத்துவம் பெற்ற மடங்கள் உள்ளன. சந்நிதி தெரு கோடியில் எழுந்தருளி இருக்கும் ஹனுமார் சிறியத்திருவடிக் கோயில் சந்நிதி மிகவும் ப்ரசித்திபெற்றது.

ஸ்ரீமத்ராமானுஜர், ஸ்ரீகூரத்தாழ்வார், நடாதூர் அம்மான், ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகர், ஸ்ரீமந்மணவாள மாமுனிகள் முதலிய புகழ்பெற்ற வைஷ்னவ ஆசாரியர்கள் வரம் தரும் பெருமாள் ஸ்ரீ காஞ்சி வரதராஜப் பெருமாளை போற்றிப் பாடியுள்ளனர். ஸ்ரீவரதர்பற்றி ஸ்ரீகூரத்தாழ்வார் அருளிச்செய்த வரதராஜஸ்தவம், ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகர் அளிச்செய்த ஹஸ்திகிரிமாஹாத்மியம், வரத ராஜ பஞ்சாசத், ஸ்ரீ மந்மணவாள மாமுனிகள் அருளிச்செய்த வேராஜ மங்களம் எனும் நூல்கள் காஞ்சி நகரத்து திருவத்தியூர் காஞ்சி ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் வைபவத்தினை விவரிக்கின்றன. ஸ்ரீ தாத்தாசாரியார் வம்சத்தினரை அறங்காவலர்களாகக் கொண்டு தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலைத்துறையின் நிர்வாகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் பாஞ்சராத்திர முறைப்படி திருவாராதனம் நடைப்பெற்று வருகிறது.

இந்த ஆயிரக்கால் மண்டபத்தினை காகதீய மன்னர் ப்ரதாபருத்ர தேவரால் கட்டப்பட்டதாக கருதப்படுகிறது. இப்ராகார்தின் மையப்பகுதியில் அழகிய திருமஞ்சன மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் உத்ஸவமூர்த்திகளுக்கு திருமஞ்சனம் நடைபெறும். இந்த திருமஞ்சனமண்டபத்தின் முகமண்டப்பகுதி கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அழகிய மணவாள ஜீயர் ஸ்வாமிகளால் அமைக்கப்பெற்றது. இம்மண்டபத்தில் அமைக்கப்பெற்றுள்ள கண்ணாடி அறை மிகவும் அழகானது. இதன் வடக்கு பகுதியில் உள்ள உயர்ந்த மண்டபம் கிளிமண்டபம் எனப்படும். இதற்கு வடக்கு பகுதியில் ஸ்ரீராமபிரான் சந்நிதி உள்ளது. மூன்றாம் பிராகாரத்தின் மேற்கு பகுதியில் தாயார் சந்நிதிஉள்ளது. தாயாரை முதலில் சேவித்த பின்னரே பெருமாளை சேவிக்கவேண்டும் என்பது இங்குள்ள மரபாகும். பெருமாள் மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்க தாயார் கிழக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்தில் எழுந்தருளி இருக்கிறார். முகவரைக்கு முன் முகமண்டபம், அதற்க்கு முன்னர் மகாமண்டபம் உள்ளன. தாயார் சந்நிதிவிமானம் கல்யாணகோடி விமானம் என அழைக்கப்படுகிறது. இது எட்டூர் குமார தாதாச்சாரியரால் கி.பி. 1614 ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்றது. தாயார் சந்நிதிக்கு கிழக்கில் உள்ள பங்குனிஉத்திரமகா மண்டபம் விஜயநகர

அரசரால் நிர்மாணிக்கப்பெற்றது. வருடத்திற்கு ஒருமுறை தாயார் பெருமாள்சேர்த்தி கண்கொள்ளாகாக்ஷியாகும். தாயார் சந்நிதிக்கு அடுத்தற்போல் அழகிய ஊஞ்சல் மண்டபமும், தொண்டரடிப்பொடிவாசல் வழியே தோடர்மல்ப்ராகாரம் எனப்படும் நான்காம் பராகாரத்தை அடையலாம். இங்கு ராஜா தோடர்மல் பிம்பமும் உள்ளது. நான்காம் ப்ராகாரம் ஆழ்வார் திருவீதி. ஆழ்வார் ப்ரதக்ஷிணம் என்றழைக்கப்படுகிறது. இப்பராகாரத்தில் பலசந்நிதிகளும், வடகிழக்கு பகுதியில் நம்மாழ்வார்சந்நிதி, தென்கிழக்கு மூலையில் திருமங்கையாழ்வார், ஸ்ரீமந்மணவாளமாமுனிகள் சந்நிதிகள் உள்ளன. மாமுனிகள் சந்நிதிவிஜயநகர அரசர்காலத்தில் கட்டடப்பட்டது. ஐப்பசியில் வரும் மூல நக்ஷத்திர நன்னாளில் ஸ்ரீ மணவாள மாமுனிகளின் அவதார உத்ஸவம் வெகுவிமரிசனயாக, கொண்டாடப்பட்டு வருகிறது. இதற்கான 1555 ஆம் ஆண்டின் ஒரு கல்வெட்டும் இங்கு காணப்படுகிறது.

அடுத்து ப்ராகாரத்தை ப்ரதக்ஷிணம் வரும்போது ஸ்ரீ ஆண்டாள் சந்நிதி, ஸ்ரீ ராமர் சந்நிதி, விஷ்வக்சேனர் சந்நிதி, (ஸேனை முதல்வர்), மலையாள நாச்சியார் சந்நிதி, பெருந்தேவித் தாயார் சந்நிதி, குஹாநரசிம்மர் என்று அழைக்கப்படும் அழகியசிங்கர் சந்நிதி, தன்வந்தரி சந்நிதி, வலம்புரி விநாயகர் கோவில்களைத் தரிசித்த பிறகு, ஹஸ்திகிரி மலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வரதராஜப்பெருமாளைப் பக்தர்கள் ஸேவித்து உள்பிரகாரத்தை ப்ரதக்ஷிணமாக வரும்போது, பெருமாள் சந்நிதிக்குப் பின்புறம் தங்கப்பல்லி, வெள்ளிப்பல்லி, ஸூர்ய சந்திரர்களைப் பக்தர்கள் தரிசிக்கின்றனர், இந்த சந்நிதியிலிருக்கும் தங்க வெள்ளிப் பல்லிகளைத் தொடுபவர்கள், பல்லி விழுதலான தோஷங்களிலிருந்து விடுபடுவதாகக் கூறப்படுகின்றது. காஞ்சியில் வசிப்பவர்களுக்குப் பல்லி விழும் தோஷங்கள் ஏற்படுவதில்லையென்று சொல்லப்படுகிறது. இந்த ஹஸ்தகிரிமலை 24 படிகளைக் கொண்டது. காயத்ரிமந்திரத்தின் 24 தத்துவங்கள் இந்த இருபத்து நான்கு படிகளாக கருதப்படுகிறது.

ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேசங்கள் நூற்றெட்டில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருப்பது “பெருமாள் கோவில்” என்று அழைக்கப்படும் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில். காஞ்சிபுரம் புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கிலோமீட்டர் தூரத்திலும்

யதோக்தகாரி ஸந்நிதிக்கு கிழக்கே 1 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது வரதர் கோயில். பழம்பெரும் கோயிலான இத்திருக்கோயிலுக்கு ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் முன்பு பல்லவர்களும் பின்னர் சோழர்களும், திருமலை நாயகர் போன்ற அரசர்களும் பல திருப்பணிகள் செய்து பெருமாளுக்கு பல திருவாபரணங்கள் சமர்ப்பித்திருக்கின்றனர். திருமங்கை மன்னர், திருமால் அடியார்கள் ததியாராதனத்திற்காக அரசாங்கத்தின் பொன்னையும் பொருளையும் செலவிட்டுவிட்டு பேரரசனுக்கு கப்பம் செலுத்த முடியாது போகவே சிறையிலிடப்பட்டபோது காஞ்சி வரதன் திருமங்கை ஆழ்வாரின் கனவில் தோன்றி காஞ்சிபுரத்தில் வேகவதி ஆற்றங்கரையில் புதையலிருப்பதைக் காட்டி சிறையில் இருந்து விடுவித்த அற்புதம் பேரருளாளனின் பெருங்கருணைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

கீழைராஜ் கோபுரம் சீரமைக்கப்படவேண்டிய நிலையில் உள்ளது. இந்த கீழைகோபுர ஜீர்ணோத்தாரண திருப்பணியை மேற்கொண்டு அதற்கான முயற்சிகளை ஸ்ரீ வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் ஸ்வாமிகள் மேற்கொண்டுள்ளார்.

ஸ்ரீ வைஷ்ணவ பரிபாஷையில் கோயில் என்றால் திருவரங்கத்தையும், பெருமாள் கோயில் என்றால் காஞ்சிபுரத்தையும் குறிக்கும். இந்த திவ்யதேசத்தை பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களா சாஸனம் செய்துள்ளனர். திருமங்கையாழ்வார் பரமேஸ்வர விண்ணகர பதிகத்தில் மூன்றாம் பாசுரத்தில்

“வரம் தரும் மாமணிவண்ணன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்தொடர் ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலயக் கல்வெட்டுகளிலும் இடம்பெற்றுள்ளது.

சக்கரத்தாழ்வார் சந்நிதிக்கு கிழக்கில் உள்ள துரைதோட்டத்தில் வெள்ளிமண்டபத்தில் சித்திரைமாதம் வருட தவனோத்ஸவம் தோட்டஉத்ஸவம் என்று ப்ரசித்திபெற்றது.

ஸ்ரீமந் மணவாள மாமுனிகளின் திருநக்ஷத்திரமான ஐப்பசித் திருமூல

மஹோத்ஸவம் பற்றிய 1555ம் ஆண்டின் கல்வெட்டும், 1710-ம் ஆண்டில் ராஜாதோடர்மல் உதவியுடன் ஆத்தான் ஜீயர் ஸ்வாமிகள் செய்வித்த கைங்கர்யங்களின் விஷயமான கல்வெட்டும் காஞ்சி வரதரின் கோயிலில் காணப்படுகின்றன. முஸ்லீம்களின் படையெடுப்பிலிருந்து கி.பி. 1688ல் இப்பெருமாள் பத்திரமாகச் திருச்சி உடையார் பாளையத்திற்கு எழுந்தருளச் செய்யப்பட்டு பிறகு கி.பி. 1710-ல் ஸ்ரீ ஆத்தான் ஜீயர் ஸ்வாமிகளின் முயற்சியால் காஞ்சிபுரத்திற்கு எழுந்தருளப் பண்ணப்பட்டதை தாயார் சன்னிதி முகப்பில் உள்ள கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. வரதராஜப்பெருமாள் கோயிலில் பங்குனி மாதத்தில் உத்திரட்டாதியன்று நடை பெறும் உடையார்பாளைய உத்ஸவம் இதை எடுத்துக் காட்டுகிறது.

ஸ்ரீமணவாள மாமுனிகள் சந்நிதிக்கு மேற்கில் திருமழிசை ஆழ்வார், ஸ்ரீமத் ராமானுஜர் சந்நிதியும் அடுத்து முதலாழ்வார்கள் சந்நிதிகளும் உள்ளன. தென் கிழக்கு மூலையில் கல்யாண மண்டபமும், தென் மேற்க்கு மூலையில் ஸ்ரீவேதாந்ததேசிகர், ஸ்ரீ லக்ஷிமிகுமாரதாதாச்சாரியார் சந்நிதிகள் உள்ளன. கொடி மரத்திற்க்கு மேற்கில் இருசிறிய நான்கு தூண்களுடைய துலாபார மண்டபங்கள் உள்ளன. இவை விஜயநகர அரசர் அச்சுதராயரால் கட்டப்பெற்று. கி.பி.1532-ல் நன்முத்துக்களை துலாபாரமாக தானம்செய்த குறிப்பு அவரதுகல்வெட்டில் காணகிடைக்கிறது. இங்குள்ள ஆனந்தசரஸ் என்னும் திருக்குளம் 78 மீட்டர் நீளமும் 60 மீட்டர் அகலமும் கொண்டது. இதன் நடுவில் 16 தூண்கள் கொண்ட மண்டபமும், இதன் கரையில் வரப்ரசாதியென ப்ரசித்திபெற்ற சக்கரத்தாழ்வார் ஸ்ரீ சுதர்சனர் சந்நிதியும் உள்ளன. ஆதியில் ப்ரஹ்மாவிற்கு ஸாக்ஷாத்காரம் செய்தருளிப் பின்னர் இந்திரனுக்கும், கஜேந்திரனுக்கும், பிருகஸ்பதிக்கும் அருள்புரிந்த அத்திகிரி வரதனின் திருவருளால் பெரும் பேற்றினைப் பெற்ற பெரியோர்கள் பலர். ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீமத் ராமானுஜரை முதன்முதலில் கண்குளிரக் கண்டு "ஆம் முதல்வனிவன்" என்று கடாக்ஷித்தருளியது காஞ்சி வரதனின் கோயிலில்தான். ஸ்ரீமத் ராமானுஜரை யாதவ ப்ரகாசரிடமிருந்து காத்தருளியதும் இப்பெருமானின் திருவருளே.

துறவறம் பூண்டு ஸ்ரீராமானுஜர் வரதராஜப் பெருமாளுக்கு தீர்த்த கைங்கர்யம் செய்து கொண்டிருந்தபோது திருவரங்கம் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஸ்ரீமத் ராமானுஜரை திருவரங்கத்திற்கு அனுப்பி வைத்ததினாலன்றோ அத்திகிரியில் யதியாக இருந்து வந்த இராமானுஜர் திருவரங்கம் சென்று யதிராசராக திகழ்ந்தது! இதுபோன்று காஞ்சிவரதன் தன்னை ஆச்ரயித்தவர்களின் நிலையினை உயர்த்தி தயவுடன் ஆட்கொண்டருளிய சம்பவங்கள் அநேகம்.

இப்படி ஸ்தலப் பெருமையுடன் ஆழ்வார் மங்களா சாஸனமும் பெற்ற தேவப்பெருமாள் விஷயமாக ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச் செய்த மங்களாசாஸனமும் உண்டு. அந்த மங்களாசாஸன ஸ்துதி பன்னிரண்டு ஸ்லோகங்கள் கொண்டது.

-: தனியன் :-

யச் சக்ரே தேவரா ஜஸ்ய மங்களாசாஸநம் முதா
தம்வந்தேரம் யஜாமாத்ரு முநிம் விசதவாக் வரம்

சந்தோஷத்துடன் தேவராஜனுக்கு மங்களாசாஸநத்தை எவர் செய்தாரோ அந்த விசதவாக் சிகாமணியான மணவாள மாமுனியை வணங்குகிறேன்.

மங்களம் வேதஸோ வேதிமேதிநீக்ருஹமேதிநே!
வரதாய தயாதாம்நே தீரோ தாராய மங்களம் 1

பிரம்மாவின் யாகவேதியில் தோன்றி தயைக்கு இருப்பிடமான வரதனுக்கு மங்களாசாஸநம்.

வாஜி மேதே வபாஹோமே தாது ருத்தர வேதித:
உதிதாய ஹுதாதச்நே; உதாராங்காய மங்களம் 2

பிரம்மா செய்த அச்வமேத ஹோமத்தில் ஹோமம் செய்யப்பட்ட அக்நியிலிருந்து தோன்றிய தயைக்கு இருப்பிடமான வரதனுக்கு மங்களாசாஸநம்.

யஜமாநம் விதிம் வீக்ஷ்ய ஸ்மயமாந முகச்ரியே
தயமாநத்ருசே தஸ்மை தேவராஜாய மங்களம். 3

அச்வமேத யாகத்தின் யஜமானனான பிரமனைப் பார்த்து புன்சிரிப்பு விளங்கிய முகத்துடன் தயைநிறைந்த திருக்கண்களையும் கொண்ட தேவராஜனுக்கு மங்களாசாஸநம்.

வாரி தச்யாமவபுஷே விராஜத் பீதவாஸஸே
வாரணா சலவாஸாய வாரிஜாக்ஷாய மங்களம். 4

மேகம் போன்று கறுத்த மேனியும் பிரகாசிக்கின்ற பீதாம்பரத்தையுடையவரும், ஹஸ்திகிரியில் வாழ்ந்துவரும் தாமரைக் கண்ணனுக்கு மங்களம் உண்டாகுக.

அத்யாபி ஸர்வபூதாநாம் அபீஷ்டபல தாயிநே
ப்ரணதார்த்தி ஹராயாஸ்து ப்ரபவேமம மங்களம். 5

எல்லா பிராணிகளுக்கும் இஷ்ட பலத்தைக் கொடுப்பவரும், தன்னை ஆச்ரயித்தவர்களுடைய கஷ்டத்தை போக்குபவருமான எனது பிரபுவுக்கு மங்களாசாஸநம்.

திவ்யாவயவ ஸௌந்தர்ய திவ்யாபரணஹேதயே
தந்தாவள கிரீசாய தேவராஜாய மங்களம். 6

ஒளிமிக்க அவயவங்களின் அழகும் திருவாபரண்களின் ஒளியும் நிறைந்த அத்திகிரி அதிபனுக்கு மங்களாசாஸநம்.

புருஷாய புராணாய புண்யகோடி நிவாஸிநே
புஷ்பிதோதாரகல்பத்ரு கமநீயாய மங்களம். 7

புராண புருஷனும், புண்யகோடி விமானத்தில் விளங்குபவரும் மலர்ந்த கல்ப விருக்ஷம்போன்று அழகாயிருப்பவருக்கு மங்களம்.

காஞ்சநாசல ச்ருங்காக்ர காளமேகா நிஸாரிணே
ஸுபர்ணாம் ஸாவதம்ஸாய ஸுராஜாய மங்களம். 8

பொன்மலை சிகரத்தின் நுனியில் உள்ள காளமேகத்தை ஒத்தவரும் திருவடி (கருடாழ்வான்) தோள்களுக்கு அலங்காரமான தேவராஜனுக்கு மங்களாசாஸநம்.

போகாபவர்கயோரேகம் வாஞ்சத்ப்யோததேவயம்.
ஸ்ரீமத் வரதராஜாய மஹோதாராய மங்களம். 9

போக மோட்சங்களில் ஒன்றை விரும்பியவருக்கும், இரண்டையும் கொடுத்துவிடுகிற மஹோதரனான வரதராஜனுக்கு மங்களம்.

மதங்கஜாத்ரி துங்காக்ர ச்ருங்கச்ருங்கார வர்ஷ்மணே
மஹாக்ருபாயமத்ரக்ஷா தீக்ஷிதாயஸ்து மங்களம். 10

ஹஸ்திகிரியின் உன்னத நுனியில் அழகான திருமேனியை உடையவரும் நிறைந்த கிருபையுள்ளவரும், என்னை ரக்ஷிப்பதில் உறுதி பூண்டவருமான தேவராஜனுக்கு மங்களாசாஸநம்.

ஸ்ரீகாஞ்சி பூர்ணமீச்ரேணப்ரீத்யா ஸர்வாபி பாஷிணே
அதீதார்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்தத்ரீசாய மங்களம். 11

ஸ்ரீ திருக்கச்சி நம்பிகளுடன் அன்போடு எல்லாவற்றையும் பேசி, அர்ச்சாவதார வ்யவஸ்தையை கடந்த ஹஸ்திகிரி நாதனுக்கு மங்களாசாஸநம்.

அஸ்து ஸ்ரீஸ்தந கஸ்தூரீ வாஸநாவாஸி தோரஸே
ஸ்ரீ ஹஸ்திகிரிநாதாய தேவராஜாய மங்களம். 12

பெரியபிராட்டியார் திருமுலைத்தடங்களில் உள்ள கஸ்தூரி வாஸனையால் மணம் பொருந்திய திருமார்பையுடைய ஸ்ரீ ஹஸ்திகிரி நாதனான தேவராஜனுக்கு மங்களாசாஸநம்.

மங்களா சாஸநபரை: மதாசார்ய புரோகமை :
ஸர்வைச்ச பூர்வைராசார்யை :
ஸத்க்ருதாயாஸ்து மங்களம். 13

மங்களாசாஸநத்திலேயே நோக்கமுள்ள என்னுடைய ஆச்சார்யரை முதலாகக்கொண்டு பூர்வாசார்யர்கள் எல்லோராலும் மங்களாசாஸநம் செய்யப்பட்டவருக்கு மங்களம் உண்டாகுக!!

ஸ்ரீ வரதராஜ வைபவத்தை வாயார அருளிச் செய்த ஆழ்வார்கள், ஆசார்யர்கள், அருளாளர்களின் பெருமையை போற்றுவதும், நம்மாழ்வார் திருஅவதாரம் செய்த வைகாசி விசாகத்தன்று நடைபெறும் ஸ்ரீ காஞ்சி வரதராஜப்பெருமாளின் கருடோத்ஸவத்தினை ஸேவிப்பதும் தம் வாழ்வின்

பெரும்பயனாகவே ஸ்ரீ வைஷ்ணவர்கள் கருதுகின்றனர். ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கருடசேவை உலக பிரசித்திப் பெற்றது. வைகாசி மாதம் விசாகத்தில் இந்த கருடோத்ஸவ வைபவம் நிகழ்கிறது. பேரருளாளப் பெருமாளின் பெருங்கருணையைப் போற்றித் துதித்து வணங்கி வழிபடுவதே உய்யும் வழிக்கு உயர்வழி.



ஸ்ரீ பேரருளாளப் பெருமாள்
பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்!!!



32

சொன்னவண்ணம் செய்தப் பெருமாள்

ஸ்ரீதேவியும், வாக்தேவியும் ஒருசமயம் தம்முள் சிறந்தவர் யாரென்று விவாதம் செய்து அது விஷயமாக இந்திரனை அபிப்ராயம் கேட்க தேவேந்திரன் திருமகளின் திருகடாக்ஷம் மற்ற எல்லா வைபவங்களையும் உண்டுபண்ணக்கூடியதென்று எண்ணி ஸ்ரீ லக்ஷிமியை ஏற்றமாகச் சொல்லவும், ஸரஸ்வதி ஆத்திரமடைந்து இந்திரனை சபித்து பின்னர் பிரம்மதேவரிடமே இது விஷயமாகக் கேட்க அவரும் அதேபோல் அபிப்ராயத்தை வெளியிடவும் ஸரஸ்வதி சினம் கொண்டு அவ்விடத்தில் இல்லாமல் சென்றாள். பிரம்மாவும் ஸர்வ சக்தனான ஸ்ரீமந் நாராயணனை சாக்ஷாத்காரம் செய்து கொள்ள எண்ணி ஸத்யவ்ரத க்ஷேத்ரமென்றழைக்கப்படும் காஞ்சிபுரத்தில் தவம் செய்யலானார்.

பத்தினி ஸஹிதமாக செய்ய வேண்டிய யாகத்தை, தான் இல்லாமலே செய்யத் துணிந்ததை அறிந்த ஸரஸ்வதி அடங்காத க்ரோதம் கொண்டு ப்ரம்மாவின் யாகத்திற்கு இடையூறுகள் செய்ய சங்கல்பித்து தனது மாயையினால் ப்ரளயாக்னி போன்ற மாயா அநலனை உண்டாக்கி பிரமனின் யாகசாலைக்கு ஏவினாள். பக்தவத்ஸலனாகிய பரந்தாமன் பிரமன் செய்யும் யாகசாலையை நோக்கிவந்த அநலனை தன் கையில் தீபம்போல் ஏந்திக்கொண்டு தடுத்து நிறுத்தினார். அதனால் அந்தப் பெருமாளுக்கு "தீபப்ரகாசர்" எனும் திருநாமம் ஏற்பட்டது. இவர் விளக்கொளிப் பெருமாள் என்று விளங்குகிறார்.

திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகத்திலும் நம்வாழ்வாரின் திருவிருத்தத்திலும் தீபப்ரகாசர் திருக்கோயில் "திருத்தண்கா" என்று மங்களாஸாஸனம் செய்யப்பட்டுள்ளது. இங்கு பெருமாள் ஸ்ரீகர விமானத்தின்கீழ்

மேற்கே திருமுக மண்டலம் பூண்டு நின்ற கோலத்தில் காட்சி நல்குகிறார். சின்ன காஞ்சிபுரம் சொன்னவண்ணம் செய்தபெருமாள் எனும் யதோத்காரி கோயிலுக்கு மேற்கில் 1/2 கி.மீ. தூரத்தில் உள்ள இத்திருக்கோயில் தாயார் திருநாமம் மரகதவல்லித் தாயார்.

இச்சந்நிதியை ஒட்டினாற்போல் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் சந்நிதியும் அமைந்துள்ளது. இத்தலத்தில் முன் காலத்தில் புல் அடர்ந்து வளர்ந்து இருந்தமையால் இதற்கு தூப்புல் திருத்தலம் என்ற பெயர் விளங்கிற்று.

விளக்கொளிப் பெருமாள் கோயிலுக்குச் சமீபத்தில் உள்ளது "வேளுக்கை" எனும் திருப்பதி. புராணத்தின்படி ப்ருகு மகரிஷிக்கு நின்ற திருக்கோலத்துடன், கிழக்கே திருமுக மண்டலத்துடன் கனக விமானத்தின்கீழ் ப்ரத்யக்ஷமானதாக அறிகிறோம். ஆயினும் தற்போது மேற்கே திருமுக மண்டலத்துடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் நரஸிம்ம மூர்த்தியாகஸேவை ஸாதிக்கிறார். சரஸ்வதியால் ஏவப்பட்ட அநலனை ஹரி அடக்கிவிடவே அவள் ஆத்திரம் அடைந்து காபாலிகா அஸ்திரத்தை ப்ரயோகம் செய்யவே ஹரி நரஹரி ரூபத்தில் அதனை அழித்து அயனின் வேள்வியை காத்தருளியதாகவும், பின்னர் ப்ரம்மாவின் ப்ரார்த்தனைக்கிணங்க இத்திருத்தலத்தில் ஆள் ஹரியாக நரஸிங்கனாக, நரஸிம்ஹமூர்த்தியாய் அர்ச்சாவதார ரூபத்தில் எழுந்தருளி ஸேவை சாதித்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. பொதுவாக நரஸிம்ஹமூர்த்தி ஆலயங்கள் மலைமீதும், குகவரைகளிலும், காடுகளிலுமே காணப்படும். அதுபோல் வேளுக்கை எனப்படும் இத்திருத்தலம் தூப்புல் எனப்படும் தும்பவனத்தில் அமைந்துள்ளது. ஆள் என்றால் நரன், மனிதன். ஹரி என்றால் ஸிம்ஹம், சிங்கம்–நரஹரி நரசிங்கன் நரஸிம்ஹன் வேள்–இருக்கை–வேளுக்கை–ஆசையுடன் இருக்கும் இடம் நரசிம்மன் விருப்புடன் வீற்றிருக்கும் இடம் என்பதனால் வேளிருக்கை என வழங்கப்பட்டு பின்னர் வேளுக்கை என மருவிவிட்டதாம். இந்த வேளுக்கை பெருமானே பின்னர் ப்ருகு மஹரிஷிக்கு முகுந்தநாயகனாக ஸேவை சாதித்த பெருமாள். திருவேளுக்கை பேயாழ்வாராலும், திருமங்கை ஆழ்வாராலும்

மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்ய தேசமாகும். திருவேளுக்கை அழகியசிங்கப் பெருமாளை "கச்சியத்புதகேசரி" என்று ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் தமது காமாசிகாஷ்டகத்தில் போற்றியுள்ளார்.

"தனக்குரிய னாயமைந்த தானவர்கோன் கெட்டான்
உனக்குரிய னாயமைந்தன் உய்ந்தான்—நினைக்குங்கால்
வேளுக்கை யாளரியே! வேறுதவி யுண்டோவுன்
தாளுக்காளாகாதவற்கு"

என்று வேளுக்கை அழகியசிங்கரை பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் தமது அஷ்டப்ரபந்தத்தில் ஒன்றாகிய "நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி" யில் போற்றிப் பாடியுள்ளார்.

இங்குள்ள தனிக்கோயில் நாச்சியார் திருநாமம் அம்ருதவல்லி என்பது.

தன்னால் உருவாக்கப்பட்ட ப்ரளயாக்னியை தீபப்ரகாசர் தடுத்து நிறுத்தியதைக் கண்டு ஆத்திரமடைந்த ஸரஸ்வதி பல அசுரர்களை ஏவ, அவர்களனைவரையும் பெருமாள் பல ரூபங்களெடுத்துப் பாழ்படுத்தவே பாரதி நதி ரூபத்தில் பிரளயத்தோடும் அதிக வேகமாய் யாகசாலையை நோக்கி வந்தாள். நிலைமையை நன்கறிந்த நாராயணன் நதி வடிவில் வந்து கொண்டிருந்த சரஸ்வதியை யுக்தியுடன் தடுத்து நிறுத்த எண்ணி வெள்ளம் வரும் வழியில் குறுக்கே சயனித்துக் கொண்டார். இது கண்ட ஸரஸ்வதி பெண்மைக்கியல்பான நாணத்தால் அவ்வழி செல்லாது அந்தர்வாஹினியாய் பிலத்தையடைந்தாள். பாம்பணைமேல் வலது திருக்கை கீழ்ப்பட கண் வளர்ந்தருளியபடியால் "புஜங்கசயனன்" திருவணைப்பள்ளிக் கொண்டான் பெருமாள் என்ற திருநாமத்தோடு திகழ்ந்தார். ப்ரம்மாவின் யாக ஸம்ரக்ஷணார்த்தம் தோன்றிய புஜங்கசயனப் பெருமாள் இத்திருத்தலத்தில் எழுந்தருளி தன் கல்யாண குண விசேஷத்தை உலகிற்கு உணர்த்த முதல் ஆழ்வாராகிய பொய்கை ஆழ்வாரைப் பொற்றாமரைக் குளத்தில் தோற்றுவித்துப் பின்னர் பக்திஸாரரென்று பரமசிவனாலே பாராட்டப்பட்ட திருமழிசை ஆழ்வாரின் பெருமையை உலகறியச் செய்வதற்கு இப்பெருமாள் புரிந்த லீலை அற்புதம், அற்புதம்.

மஹீஸார க்ஷேத்ரமென்று அழைக்கப்படும் திருமழிசையெனும் திருத்தலத்தில் தவம் புரிந்துவந்த பார்கவ முனிக்கும் கநகாங்கி என்னும் தேவமாதிற்கும் திருவாழியின் திருஅம்சமாக தோன்றிய குமாரன் முழு வளர்ச்சி பெற்றிராததால் அத்தேவமாது அக்குழந்தையை பிரப்பம் புதிரொன்றில் விட்டு விட்டுத் தன்னுலகம் சென்றாள், அந்தத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஜகந்நாதப் பெருமாள் பிராட்டியுடன் அவ்விடத்தில் எழுந்தருளி குழந்தையைக் கடாக்ஷித்து மறைந்தார். பிராட்டி பெருமாளின் அருட்கடாக்ஷத்தினால் அக்குழந்தை அழகான திருமேனியை அடைந்தது. பெருமாள் மறைந்ததும் பிரிவைத்தாளாது அக்குழந்தை அழத்தொடங்கியது. குழந்தையின் அழுகுரலைக்கேட்டு அங்கு வந்த திருவாளனெனும் வேளாளன் குழந்தையை எடுத்து வந்து வளர்க்கலானான். அந்தக் குழந்தை ஸ்தன்யபாநாதிகளில் விருப்பற்று பசி, தாகம் கொள்ளாத அற்புதத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர். அதுசமயம் அங்கு பல காலம் மகப்பேறு இல்லாதிருந்த அவ்வூர் வேளாண்தம்பதிகள் அக்குழந்தையயைப் பார்க்க வந்தபோது அவர்கள் அன்புடன் ஊட்டிய பசுவின் பாலை அவர்களின் அன்பின் மிகுதிக்கு அகமகிழ்ந்து பார்கவ குமாரன் அமுது செய்தார். பார்கவ குமாரன் அமுது செய்து சேஷித்த பாலைப் பருகிய அளவிலேயே அவ்வேளாண் மகள் கர்ப்பமுற்று ஓர் ஆண் குழந்தையயைப் பெற்றெடுத்து அக்குழந்தைக்கு கனிகண்ணன் என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தனர்.

திருமழிசையில் தவம் புரிந்து பலகாலம் பல மதங்களையும் பரிசோதித்துத் தெளிவு பெறாமல் இருந்த சிவவாக்கியரென்ற பெயருடன் திகழ்ந்த பார்கவ குமாரனுக்கும் பேயாழ்வாருக்கும் ஸமயஸம்வாதம் நடந்தது. வாதப்போரில் வென்ற பேயாழ்வாரை ஆசார்யனாகத் ஏற்றார் திருமழிசைபிரான். சிறந்த விஷ்ணுபக்தனாகத் திகழ்ந்து திருமழிசையில் யோகநிலையில் பகவத்யானம் செய்துவந்த திருமழிசை பிரானின் விஷ்ணு பக்தியைக்கண்டு வியந்த பரமசிவன் இவர்முன் தோன்றி இவரது பக்திக்கு மெச்சி "பக்திஸாரன்" என்ற திருநாமம் சாற்றி அருளினார்.

பக்திஸாரரும் தம் ஆசார்யராகிய பேயாழ்வாரின் அவதார ஸ்தலமாகிய மைலாப்பூர் என்று இன்று அழைக்கப்படும் மயூரபுரிக்குச் சென்று சிலகாலம்

யோகத்தில் இருந்து தமது ஜன்மஸ்தலமாகிய மஹீசாரபுரமெனும் திருமழிசைக்கு திரும்பி வந்து தாம் வழக்கம்போல் சாற்றிக் கொள்வதற்காக திருமண் வேண்டிச் சோதித்த இடத்தில் காணப்படாமையால் மனம் கலங்கவே அன்றிரவு அவர் கனவில் திருவேங்கட முடையான் ஸேவை சாதித்து அருளிச் செய்தவண்ணம் காஞ்சிபுரத்தில் திருவெஃகாவையடுத்துள்ள பொற்றாமரைக் குளத்தில் திருமண் கண்டு அகமகிழ்ந்து பொய்கையாழ்வார் அவதாரம் செய்த பொற்றாமைரைக் குளக்கரையில் எழுந்தருளியிருக்கும் புஜங்கசயனப் பெருமாளை சேவித்து வந்தார்.

பக்திஸாரரின் வைபவத்தை அறிந்த "கனிகண்ணனும் காஞ்சிபுரத்தில் வந்து பக்திஸாரரை ஆசார்யராகக் கொண்டு திருவெஃகாவில் எழுந்தருளியிருக்கும் புஜங்கசயனனைப் பக்தியுடன் ஸேவித்து வந்தான். பக்திஸாரரின் அருட்கடாக்ஷத்தினால் முதுமை நீங்கி இளமைபெற்ற பெண்ணைப் பல்லவராயனெனும் காஞ்சி மன்னன் மணம் புரிந்துக் கொண்டு அவளது இளமை ஆழ்வாரின் வரப்ரஸாதம் என்பதறிந்து அதுபோல் தானும் யௌவனம் பெற வேண்டி ஆழ்வாரைத் தம்இடத்திற்கு அழைத்து வரும்படி நாடோறும் தமது அரண்மனைக்குப் பிக்ஷார்தம் வரும் கனிகண்ணனைக் கேட்டுக் கொண்டான். அதற்குத் தம் ஆசார்யர் எங்கும் வருவதில்லை என்று உரைத்தான். கனிகண்ணன் வரகவி என்று கேள்வியுற்ற கோமானும் அவரைத் தன் பெயரில் ஒரு கவிபாடும்படி கேட்கவும் கனிகண்ணனும் அனந்தசயனனையன்றி அந்நியரைத் தான் பாடுவதில்லை என்று சொல்லிக் காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களை வரிசைப்படுத்திப் பாடினான். ஏமாற்றத்தை அடைந்த அரசன் ஆத்திரம் கொண்டு கனிகண்ணனைக் காஞ்சியைவிட்டு வெளியேறும்படி கட்டளை இட்டான். கனிகண்ணனும் ஆழ்வாரிடம் நடந்ததை எடுத்துச் சொல்லி அரச கட்டளைப்படி, தான் காஞ்சியை விட்டுச் செல்வதற்கு அனுமதி வேண்டினான்.

ஆணவ மிகுதியால் அரசனிட்ட ஆணையை அறிந்த ஆழ்வார் ஆழ்ந்த வருத்தத்தோடு தாமும் கனிகண்ணனுடன் வருவதாகக் கூறி பாகவதபசாரம் நடக்கும் இடத்தில் பகவானும் இருக்கலாகாதென்பதால் திருவரணைப்பள்ளியில் கண்வளரா கிடந்த பெருமானைச் சேவித்து "கனிகண்ணன் போகிறான் காமருபூங்

கச்சி மணிவண்ணா நீ கிடக்கவேண்டா, துணிவுடைய செந்தாப்புலவனும் போகின்றேன்; நீயு முன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" என்று பிரார்த்திக்கவே பக்தவத்ஸலனும் பக்த பராதீனனுமாகிய புஜங்கசயனப் பெருமாள் திருமழிசையாழ்வாரின் திருவுளப்படி தம் யோக நித்திரையை விட்டு எழுந்து கணிகண்ணனுடன் சென்ற ஆழ்வாரைப் பின்தொடர்ந்து சென்றான். பெருமாள் ஆழ்வாருடன் புறப்பட்டுச் சென்றதும் பெருமாளின் சங்கல்பப்படி காஞ்சி மாநகரம் காரிருளால் சூழப்படவே அரசனும் தன் தப்பிதத்தை உணர்ந்து ஆழ்வாரிடம் வந்து சரணடைந்து தன்னை க்ஷமித்து மீண்டும் நகருக்குள் எழுந்தருளும்படி வேண்டினான். ஆழ்வாரும் மனமுவந்து பெருமாளை "கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி மணிவண்ணா! நீ கிடக்க வேண்டும். துணிவுடைய செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன். நீயுமுன்றன் பைந்நாகப்பாய் விரித்துக்கொள்," என்று பாடிப் ப்ரார்த்திக்கவே செந்நாப் புலமை பெற்ற பரம பக்தராகிய பக்திசாரரின் வேண்டுகோளின்படி மீண்டும் திருவெஃகாவை வந்தடைந்து சேஷசாயியாய் எழுந்தருளினார். ஆழ்வாரிடத்தே கொண்ட அன்பினாலேயே, தான், அவர் சொல்படி நடந்ததாக அனைவரும் அறியும்விதம் தான் முன்பு போல் வலத்திருக்கை கீழாகவன்றி இடத்திருக்கை கீழ்ப்பட க்ண்வளர்ந்தருளினார்.


பக்தரின் வேண்டுகோளுக்கிணங்க அவர் சொன்னபடி செய்தருளியபடியால் இப்பெருமானுக்கு "யதோக்தகாரி" என்றும், "சொன்னவண்ணம் செய்த பெருமாள்" என்றும் திருநாமங்கள் ஏற்பட்டன. இப்பெருமான் ஆழ்வாருடன் சென்று ஓரிரவு தங்கியிருந்த இடம் "ஓரிருக்கை" என்ற பெயருடன் விளங்குகிறது.

பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர் மங்களா சாஸனம் செய்த சொன்னவண்ணம் செய்த பெருமாளின் திருக்கோயில் விஷ்ணு காஞ்சியில் வரதராஜப் பெருமாள் சந்நிதிக்கு மேற்கே 1 கி.மீ. தூரத்தில் ஆடிசன்பேட்டை தேரடி ரங்கசாமிக்குளத்திற்கு சமீபம் அமைந்துள்ளது.

யதோக்தகாரி சந்நிதியின் வட பக்கம் பொய்கை புஷ்கரணி அமைந்துள்ளது. இந்த பொற்றாமரைப் பொய்கையிலே பூத்த நற்றாமரைப் பூவில் ஐப்பசி மாதத்து திருவோணத்தில் பொய்கை ஆழ்வார் திருவவதாரம் செய்தார். வேதசார விமானம் என்றழைக்கப்படும் விமானத்தின் கீழ் மேற்கே திருமுக மண்டலத்துடன் புஜங்கசயனனாகச் சொன்னவண்ணம் செய்த பெருமாள் சேவை சாதிக்கிறார். தாயாரின் திருநாமம் கோமளவல்லித் தாயார். இந்த சந்நிதியில் பங்குனி மாதம் ரேவதி நட்சத்திரத்தில் தீர்த்த வாரியாக பிரம்மோற்சவமும். ஐப்பசி திருவோணத்தில் பொய்கையாழ்வார் அவதார உற்சவமும் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. திருமழிசை ஆழ்வாருடன் பெருமாள் ஊருக்கு வெளியே எழுந்தருளிய நிகழ்ச்சி தைமாத மகத்தன்று உத்ஸவமாக நடைபெறுகின்றது. அன்று பெருமாளும் ஆழ்வாரும் வேகவதி ஆற்றங்கரைக்கு எழுந்தருளி மீள்வர்.

ஆழ்வாரின் சொல்வண்ணமே நடந்து சொன்னவண்ணமே செய்த பெருமாளாக விளங்கி ஆழ்வாரின் பெருமையை உலகறியச் செய்ததுபோல் தம்மை ஆச்ரயித்த பக்தர்களுக்கு அவரவர் அபீஷ்டத்தை அவரவர் தகைமைக்கேற்ப அனுக்ரஹித்தருளும் சொன்னவண்ணம் செய்தப் பெருமாள் திருவடிகளில் சரணடைத்து வாழ்வின் பயனைப் பெறுவோமாக!





39

எண்கரத்து எம்பெருமான்

[அஷ்டபுயம் திருக்கோயில்]

ஸ்ரீய: பதியாகிய ஸ்ரீமந் நாராயணனின் திவ்யமங்கள ஸ்வரூபத்தை அர்ச்சாவதார ரூபத்தில் ஸேவிக்க விரும்பிய பிரமன் ஸத்யலோகத்திலிருந்து ஸத்யவ்ரத க்ஷேத்திரமாகிய காஞ்சிபுரத்திற்கு எழுந்தருளி எம்பெருமானை எண்ணி அச்வமேதயாகம் செய்த சமயம் ஸரஸ்வதி தன்னை உடன் வைத்துக்கொள்ளாமல் பிரம்மா யாகம் செய்வது அறிந்து சினம் கொண்டு யாகத்திற்கு இடையூறுகள் ஏற்படுத்த எண்ணி அநேக அசுரர்களை ஏவ அவர்கள் அனைவரையும் ஸ்ரீ ஹரி ஸம்ஹாரம் செய்தார். தான் தோற்றுவித்த அசுரர்களை திருமால் அழிக்கவே சரஸ்வதி ஆத்திரம் கொண்டு பயங்கர ரூபத்துடன் சரபமொன்றை ஏவ எம்பெருமானும் எட்டு திருக்கரங்களுடன் தோன்றி அதனை அழித்து பின்னர் எதிர்த்து வந்த காளியை அடக்கி அஷ்டபுஜத்தோடு அயனின் யக்ஞத்தை காத்து ரக்ஷித்தார். தான் துவங்கிய வேள்வி நன்கு நிறைவேறுவதற்க்கு உறுதுணையாக இருந்த பகவானை எட்டுத் திருக்கரங்களுடன் ஸேவை ஸாதித்து அருளும்படி பிரம்மா பிரார்த்திக்கவே காஞ்சியில் அஷ்டபுஜனாக எழுந்தருளி பின்னர் கஜேந்திரர்க்கு கடாக்ஷித்தருளினார்.

விஷ்ணு காஞ்சியில் வரதராஜப் பெருமாள் ஸந்நிதிக்கு சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் திருக்கச்சிநம்பித் தெருவில் ஆடிசன்பேட்டைக்குச் சமீபத்திலுள்ள ரங்கசாமிக் குளத்தருகில் எண்கரத்தனாய் எழுந்தருளியிருக்கும் அஷ்டபுஜப் பெருமாளை திருமங்கையாழ்வார் "அட்டபுயகரத்தம்மான்" என்று மங்களாசாஸனம் செய்துள்ளார். எம்பெருமானின் திருமேனி அழகு அனைவரையும் ஆகர்ஷிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. பெருமாள் தன் எண்கரங்களிலும் எண்வகை ஆயுதங்கள் தாங்கியபடி சேவை ஸாதிக்கிறார்.

வலதுபுறமுள்ள நான்கு திருக்கரங்களில் சக்கரம், கட்கம், கமலம், அம்பு ஆகியவையும், இடதுபுறமுள்ள நான்கு திருக்கரங்களில் திருச்சங்கு, வில், கேடயம், கதை ஆகியவையும் தரித்து உள்ளான். மூலவருக்கு முன் உத்ஸவர் ஸ்ரீதேவி பூதேவியருடன் எழுந்தருளியிருக்கிறார். இந்த உற்சவ மூர்த்திக்கு பக்கத்தில் கஜேந்திரவரத உத்ஸவமூர்த்தியும் எழுந்தருளியிருக்கிறார். திருக்கோயில் முன் இடதுபுறம் கஜேந்திர புஷ்கரணி அமைந்துள்ளது. காஞ்சியில் அமைந்திருக்கும் வைஷ்ணவாலயங்களில் இந்த திவ்ய தேசத்தில் மட்டுமே பரமபதவாசல் உள்ளது குறிப்பிடத்தக்கது. வெள்ளிக்கிழமை மண்டபம் என்றழைக்கப்ப்டும் நாலுகால் மண்டபத்தின் பின்புறம் ப்ரதக்ஷணத்திலுள்ளத் தாயார் திருநாமம் புஷ்பகவல்லித் தாயார். தாயார் ஸந்நிதி தனியாக இருப்பினும் ப்ரதான சந்நிதிக்குள்ளேயே அமைந்தது. முதலில் தாயாரை ஸேவிப்பது என்பது சம்ப்ரதாயமானதால் பக்தர்கள் தாயாரை சேவித்துவிட்டு மறுபடியும் ப்ரதக்ஷிணமாக பெருமாள் சந்நிதிக்குச் செல்வது வழக்கம். சந்நிதிக்குள் முதலில் வடக்கு நோக்கி வராஹமூர்த்தி சந்நிதியும் வலதுபுறம் ஆழ்வார் ஆசார்யர்கள் சக்கரவர்த்தி திருமகனோடு சேவை தருகின்றனர். சக்ரகோஷ விமானத்தின்கீழ் மேற்கே திருமுகமண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் எண்கரத்தானாக அஷ்டபுஜப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். இத்திருக்கோயிலில் பூவராகப் பெருமாளுக்கு தனிச் சந்நதி உள்ளது குறிப்பிடத்தக்கது. இச்சந்நதியில் வராஹமூர்த்தி வலது திருவடிபூமியைத் தொட, இடது திருவடியை இரண்டு சர்ப்பங்களின் சிரஸின்மேல் வைத்து பிராட்டியை, தமது இடது தொடைமீது அமர்த்திக்கொண்டு வெகு அற்புதமாக சேவை சாதிக்கிறார். பல்லவ மன்னர்களால் பல திருப்பணிகள் செய்யப்படட இத்திருக்கோயிலின் வெளியே நேரே கிழக்கு நோக்கி ஆண்டாள் சந்நிதியும், தெற்கு நோக்கி ஆஞ்சநேயர் சந்நிதியும் உள்ளன. இந்த எம்பெருமானுக்குச் சித்திரை மாதம் ப்ரம்மோத்ஸவம் நடைபெறும். ஆடி மாதம் ஹஸ்த நக்ஷத்திரத்தன்று கஜேந்திர மோக்ஷ உத்ஸவம் சிறப்பாக நடைபெறுகிறது. அடியார்களின் அச்சத்தை அகற்றி, ஆனந்தத்தை அளிக்கும் வரப்ரஸாதியாய் காஞ்சியில் எழுந்தருளியிருக்கும் அஷ்டபுஜத்தானை ஆஸ்ரயித்து கார்யஸித்தியைப் பெறுவோமாக.

41



திருக்குறிப்புத் தொண்டருக்குத் திருவருள்புரிந்த த்ரியம்பகன்

[முக்தீஸ்வரர் திருக்கோயில்]

அடியார்தம் அன்பிற்கிணங்கி ஆட்கொள்வதோடு அவர்களது அரிய பண்பினை உலகறியச் செய்ய ஆண்டவன் அவ்வப்போது திருவிளையாடல்களைப் புரிகின்றான். அன்பினால் அனைவரையும் ஆட்கொண்டு அருள் புரிவதனால் ஈச்வரன் ஆண்டவன் என்று அழைக்கப்படுகிறான். ஈடிணையற்ற வல்லமை வாய்ந்த ஆண்டவன் அடியாரிடத்தில் கொண்ட அன்பினால் தன் உயர்வையும் கருதாமல் அவ்வப்போது அவனியில் தோன்றி அடியார்களை சோதனைக்கு உள்ளாக்குவது போல் சம்பங்களைத் தோற்றுவித்து அவர்களது அருங்குணங்களை அனைவரும் அறிந்துகொள்ளும்படி செய்து அடியார்களின் பெருமையைப் பலரும் போற்றும் வகையில் உலகுக்கு வெளிப்படுத்திப் பெருமைப்படுத்தப் பரமன் புரிந்த திருவிளையாடல்களுள் கச்சியம்பதியில் வசித்த ஏகாலி ஒருவரை சிவபெருமான் ஆட்கொண்ட அற்புதமும் ஒன்றாகும். சிவநேயச் செல்வர்கள் எவராயினும் அந்த அடியார்களின் குறிப்பறிந்து தொண்டாற்றிய தகைமையினால் அந்த ஏகாலி "திருக்குறிப்பு தொண்டர்" என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். சிவநெறி நிறைந்து சீலம் மிகுந்து அவநெறி அறியா அருங்குணச் செம்மல் திருக்குறிப்புத் தொண்டர்.

இவர், திருத்தொண்டர்களுக்கு ஆடைகளைக் குறிப்பு உணர்ந்து அழுக்கொழித்து வெளுத்துத் தருவதைத் திருப்பணியாகக் கொண்டவர். பனிக்காலத்தில் ஒருநாள் கச்சியம்பதியில் வயது முதிர்ந்த சிவனடியாரொருவர் வெண்ணீறு பூசிய திருமேனியில் கருமேகம் போன்ற அழுக்குக் கந்தலை உடுத்தியிருப்பதைக் கண்ணுற்ற திருக்குறிப்புத் தொண்டர் மனம்மிக நெகிழ்ந்து அவரை வணங்கிச் சிவப்பழம் என விளங்கும் அவரது ஆடையை வெளுத்துத் தரும் பாக்யத்தைத் தனக்கு அருளும்படி வேண்டி நின்றார். காற்று குளிர்ந்திருந்ததனால், அந்த மறையவர் மாலை நேரம் வருவதற்குள் தருவதாக

இருந்தால், வெளுப்பதற்கு தமது ஆடையைத் தருவதாகவும் வாடைப் பனியின் வாட்டத்திற்கு தம்மை ஆட்படுத்தாமல் காலத்தே தந்துதவும்படியும் கேட்டு, தயக்கத்தோடு தம் கந்தையைத் தந்து சென்றார்.

அடியாரிடமிருந்து கந்தையைப் பெற்ற திருக்குறிப்புத் தொண்டர் திருக்குளம் சென்று அடியவரின் ஆடை மேலும் சிதைவு படாமல் இருக்க, தகுந்த முன்னெச்சரிக்கையும், கவனமும் எடுத்துக்கொண்டு மென்மையான உவர்மண்ணைப் புங்கன் கொட்டை நுரையுடன் சேர்த்து வெளுத்துப் பிறகு வெள்ளாவியில் புழுங்கவைத்து அழுக்ககன்ற ஆடையாக அடியவரின் கந்தையைத் தூய்மைபடுத்தி ஈரமகலக் காயவைத்தார். உலர்த்திவிட்டு வந்த ஒருசில மணித்துளிகளில் திடீரென வானம் கறுத்து இடியுடன் பெருமழை தொடங்கியது.

காலமல்லாத காலத்தில் கடுமழைப் பெய்வதைக் கண்டு செய்வதறியாது திகைத்து மலைத்து வருத்தமுற்று வானம் பார்த்து நின்றார். மழையும் விடவில்லை. பெருமழையில் சிக்கியதால் வீடு திரும்பவும் இயலவில்லை. மாலையும் வந்து மழையதும் வலுத்தது. ஈரக்கந்தலும் தெப்பமாக நனைந்து கொண்டிருந்தது. அளித்த வாக்கை நிறைவேற்ற முடியாத அவலநிலை ஏற்பட்டதை எண்ணி அலமலந்துபோனார் திருக்குறிப்புத் தொண்டர்.

உள்ளம் நடுங்க, உடல் நடுங்க, திகைப்பூண்டை மிதித்த தீனன் போல், கந்தை தந்த முதியவர் வரும் நேரமாயிற்றே, கடுங்குளிரில் அவர் உடலுக்கு இடர் நேரிடுமே, அந்தப் பாவத்துக்குத் தாம் ஆளாகி விட்டோமே என்று மனமிக நொந்துசொன்ன சொல் காப்பாற்ற முடியாத தான், அவரை எவ்வாறு நோக்குவது என்று வேதனைப்பட்டு திருந்தொண்டின் நியதிக்கு பங்கம் வந்தபின் நல்லோர் உயிர் வாழ விரும்பார் என்ற லட்சியத்திற்கு ஏற்ப முதியவர் வருவதற்குமுன் பயனற்ற தன் ப்ராணனைப் போக்கிக்கொள்ள முடிவு செய்து படிக்கல்லில் மோதி ப்ராணத்யாகம் செய்ய முனைந்தார். அப்போது பாரையில் தம் திருக்கரம் தோற்றித் தொண்டரின் தலையைத் தாங்கித் தடுத்தாட்கொள்கிறார் தயாபரனாகிய பரமேஸ்வரன். அடியவர்க்கு ஆற்றும் தொண்டினை உயிர் மூச்சாகக் கருதிய

திருக்குறிப்புத் தொண்டர் முன் பிறைசூடியபெம்மான் ப்ரத்யக்ஷமாகி முதியவர் வடிவில் வந்தவர் தாமே என்பதனை உணர்த்தி திருக்குறிப்புத் தொண்டரின் திருத்தொண்டிற்கு மெச்சித் தம்மை வழிபட்டுத் தரணியோர் போற்றத் தொண்டிற் சிறந்து விளங்கி பின்னர் கயிலை சேரும்பெற்றினை அருளினார் இறைவன். தொண்டிற்சிறந்தமையால் இவ்வடியார் திருக்குறிப்புத் தொண்டர் என நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்பெற்றார். திருக்குறிப்புத் தொண்ட நாயனாரை தடுத்தாட்கொண்டு முக்தியை அருளியதால் இத்தலத்தில் எழுந்தருளியிக்கும் சிவபெருமான் முக்தீஸ்வரர் என்று போற்றப்பெறுகிறார்.

இத்திருக்கோயிலில் அமைந்துள்ள "ஸ்ரீ கருடேஸ்வரர்" சந்நிதியும் புராணப் பிரசித்திபெற்றது. காஞ்சியம்பதியில் ஆடிசன்பேட்டை என்றழைக்கப்பெறும் காந்தி சாலையில் ஜவுளிக்கடைச் சத்திரத்துக்கு அருகாமையில் அமைந்திருக்கும் முக்தீஸ்வரரை வழிபட்டு திருக்குறிப்புத் தொண்ட நாயனார் செய்த திருத்தொண்டின் மேன்மையை உள்ளத்திருத்தி அறத்தின் வழியே நடந்து உய்வோமாக.

இத்திருக்கோவிலுக்கு கிழக்கே, அரசினர் மருத்துவமனைக்கு எதிரில், திருக்காலிமேடு என்றழைக்கப்படும் இடத்தில் "கச்சித் திருநெறிக்காரைக்காடு" என்ற திருக்கோயில் உள்ளது. இந்திரன், புதன் ஆகியோர் இவ்விறைவனை பூசித்து பேறு பெற்றனர். திருஞானசம்பந்தரும் இத்தலத்து ஈசனான "சத்யநாதேஸ்வரரை" போற்றிப் பாடி, பரவியுள்ளார்.

"சித்தமாக ஒரீஇவிளங்கும் ஏகாலியார் திருக்குறிப்புத்தொண்டர்
அத்தலத்தினில்வீடுபேறு எய்தினர் மற்றும் ஆயிடைப்போற்றி
முத்தி சேர்ந்தவர் எண்ணிலர் மதிமுடி முழுமுதல் அடிப்போதின்
வைத்தசிந்தையின் முக்குறும் பெறிந்துயர் மாதவத்தலைவீர்கள்"

(காஞ்சிப் புராணம்)



ஸ்ரீ கச்சபேஸ்வரர்

"அடக்கம் அமரருள் உய்க்கும்" என்ற வார்த்தை எவ்வளவு ஆழமான பொருள் பொதிந்ததோ, அதேபோல "ஆணவம் அழிவில் உய்க்கும்" என்ற மொழியும் உண்மையானது. அதற்கு எடுத்துக்காட்டாக அமராதிபனான தேவேந்திரனையே கூடக் கூறலாம். ஒருசமயம், ஜம்பாஸுரன் எனும் கொடிய அரக்கனைக் கொன்று வெற்றி வாகை சூடிய இந்திரன், அந்த வெற்றிக்களிப்பின் மிதப்பிலே ஆணவத்தோடு தன் ஐராவதத்தில் அமர்ந்து வெற்றிஊர்வலம் வருங்கால், முனிஸ்ரேஷ்டரான துர்வாஸர் வாடா நறுமலர் மாலையோடு எதிர்வந்து லக்ஷ்மி ப்ரஸாதமாக அதை ஆசீர்வதித்து அமரர் கோனிடம் அளிக்க, அலக்ஷிய பாவத்தோடு அதைப் பெற்ற இந்திரன் தன் ஸ்வேத கஜத்தின் மத்தகத்து மேல் சாத்தினான். அந்த நறுமண மலர் மாலையின் நறுந்தேனுக்கு மொய்த்துக் கொண்டிருக்கும் வண்டுகள் ஐராவதத்திற்கு தொல்லையாக இருக்க, அந்த அமராதிபனின் யானை மாலையைக் காலின் கீழேபோட்டு மிதித்தது. அதைக் கண்டு கடுஞ்சினம்கொண்டு வெற்றி பெற்ற ஆணவத்தினால் தன்னை அவமதித்த இந்திரனை விட்டு அஷ்டலக்ஷ்மியும் நீங்குமாறு துர்வாசமாமுனிவர் சபித்தார். அதனால் அனைத்துச் செல்வங்களும் அவனை விட்டு நீங்கி திருப்பாற்கடலுள் மூழ்கி மறைந்தன. இல்லானை இல்லாளும் வேண்டாள், என்றாற் போல இந்திரனின் மதிப்பு மங்கி, வேதனைத் துயர் அவனைச் சேர்ந்தது. எல்லாமும் இழந்த இந்திரன் எல்லாம்வல்ல இறைவனைத் தன்னை ஆதரித்தருளுமாறு தஞ்சம் புகுந்தான். பரமாத்மா தன் பரம காருண்யத்தினால் பிழை செய்த ஆத்மாக்களும் தன் பிழையெண்ணி வருந்தித் திருந்தித் தஞ்சமடையும்போது அன்பினால் அவற்றையும்

ஆட்கொண்டு அவைகளின் நிலையினையும் உயர்த்தி உய்விக்கிறான் என்பதற்கிணங்க பச்சாதாபத்தோடு அணுகிய ஆணவம் அழிந்த தேவேந்திரன் தான் இழந்த செல்வங்களை மீட்க பாற்கடலைக் கடையுமாறு பரிந்துரை செய்தார், மேரு பர்வதத்தை மத்தாகவும், வாசுகியை கயிறாகவும் கொண்டு தேவ தானவர்கள் திருப்பாற்கடலைக் கடையத் தொடங்கினர். மேருமலை கடலுள் ஆழ்ந்துவிடாமல் தடுக்கத் திருமால் கூர்மாவதாரம் எடுத்து ஆமை வடிவத்துடன் தம் முதுகில் மலையைத் தாங்கினார். இதனால் கடலைக் கடைதலான காரியம் இலகுவாகியது. ஆயினும் மலையுடன் உராயும்போது உண்டான தாபத்தினால் வாசுகி ஆலகால விஷத்தைக் கக்கிட நேரிட்டது. அனல் வீசும் ஆலகால விஷ ஜ்வாலையினால் தாளாவெப்பத்திற்கு ஆளாகி திருமால் மேனி வெந்து, கறுத்து வேதனைக்குள்ளாகியது. கச்சபமும், கடலைக் கலங்கச் செய்யவே கடலினுள் வாழ் ஜீவராசிகளுக்கு துன்பம் நேரிட ஏதுவாகியது. ஹரன் ஆலகால விஷத்தை உண்டு அமைதியை நிலவச்செய்தபின் பாற்கடலில் இருந்து அமுதமும் மற்றும் இந்திரன் இழந்த பொருட்கள் அனைத்தும் கிடைக்கப் பெற்றன. அதுசமயம் திருப்பாற்கடலில் தோன்றியவனே சீதளக்கிரணனாகிய சந்திரனும், சந்திர சகோதரியான லக்ஷ்மியும்.

தன் திருமேனியையும் வருத்திக்கொண்டு தேவகார்யத்திற்காக கடலில் கச்சபரூபியாய் இருந்த திருமாலுக்கு திருமகளையும் கௌஸ்துப மணியையும் வழங்கி வானவர் கௌரவித்தனர். ஆயினும் தாம் வேதனை தாளாமல் கடலைக் கலக்கியபோது பிராணிகளுக்குத் துன்பம் ஏற்பட்டதை எண்ணி வருந்திய திருமால் பிராயச்சித்தம் செய்துகொள்ள திருவுளம் கொண்டு பரிகாரம் வேண்டவே சிவபெருமானும் மனமுவந்து தம்மை காஞ்சியம்பதியில் வழிபட்டுத் தெளிவு பெறும்படி அருளிச் செய்தார். திருமாலால் காஞ்சியில் வழிபடப்பட்டவர் திருக்கச்சபேஸ்வரர். கச்சபம்—ஆமையை, ஈசர்—ஆண்டவர் என்பதனால் இப்பெருமான் கச்சபேஸ்வரர் என்று போற்றப்படலானார். திருமால் அம்சம் பொருந்திய கச்சபம் வழிபடுவதைக் காட்டிடும் செப்பேடு சிற்பம் இக்கோயிலில் அமைந்திருக்கிறது. இப்பெருமானை வழிபட்டு மாதவன் மன்மதனை மகனாகப் பெறும் பேற்றினைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

பெரிய காஞ்சிபுரம் மேற்குராஜவீதியின் தென்கோடியில் சாலையோரத்தில் ஸ்ரீகச்சபேசர் ஆலயம் அமைந்துள்ளது. மூன்று பிரகாரங்களையும், வடக்கு நோக்கிய கோபுரத்தையும் கொண்டு விளங்கும் திருக்கச்சபேஸ்வரரின் திருக்கோயிலில் நுழைந்தவுடன் மகாமகிமை வாய்ந்த இஷ்டசித்தி தீர்த்தம் அமைந்திருக்கிறது. இத்திருக்குளத்தில் நான்கு கரைகள் நான்கு வித பலன்களை தரக்கூடியவை என்றும் அதிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் இத்திருக்குளத்தில் நீராடுவதால் நோய் நீங்கப் பெற்று நீண்டநாள் வாழ்வதற்கு ஐயன் அருள்புரிகிறான் என்பதும் ஐதிகம் சிறந்த சிற்ப வேலைகள் நிறைந்த இத்திருக்கோயிலில் ஜம்புகேஸ்வரர், அருணாசலேசர், காளத்தீசர், சிதம்பரேசர், திருமுறை கண்ட பொல்லாப் பிள்ளையார், முருகன், பிரமன், அஷ்டபுஜங்களோடு கூடிய சரஸ்வதி, திருமால், சதுர்முகேசர், சத்யவசன விநாயகர், துர்க்கை சன்னதிகள் அமைந்திருக்கின்றன. கச்சபேசருக்கு மேற்கில் கோயில்கொண்டுள்ள ஸத்யவசன விநாயகர் பொய்யா மொழிப் பிள்ளையாரை வணங்குபவர்கள் இடையூறுகள் தீர்ந்து விரும்பியவற்றை அடைந்து கார்யசித்தியை பெறுகின்றனர். கச்சபேசத்துள் நுழைந்ததும் வலது பக்கமாக குளக்கரையில் உள்ள தனிக்கோயில் இஷ்டசித்தீசம். இக்கோயிலின் முன்பு நாகப்ரதிஷ்டைகள் நிரம்ப உள்ளன. கச்சபேசர் ஆலயத்தினுள் நடராஜசபைக்கு பக்கத்தில் அமைந்துள்ள சந்நிதி வேதசித்தீசம். வெளிப்ராகாரத்தில் ஸ்தலவிருக்ஷம் முருக்கை மரமும், அதன் பக்கத்தில் யுகசித்தீசம், லிங்கபேசம் கோயில்கள் உள்ளன. உத்ஸவர் மண்டபத்திற்க்கு செல்லும் போது தருமசித்தீசம், யோகசித்தீசம், ஞானசித்தீசம் சந்நிதிகளை சேவிக்கலாம். திருக்கச்சபேசர் திருக்கோயிலுக்கு பல்லவ மன்னர்களும் விஜயநகர மன்னர்களும் பல திருப்பணிகளைச் செய்ததற்கான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கார்த்திகை மாதத்தின் ஞாயிற்றுக்கிழமைகளில் இத்திருக்கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் திரளாகத் திரண்டு வந்து வாழ்வு வளம்பெற வழிபட்டு வருகின்றனர்.

காஞ்சியில் கோயில்கொண்டு அடியார்களுக்குவேண்டுவன தந்தருளும் திரு கச்சபேஸ்வரரின் திருவருளால் எண்ணிய காரியங்கள் எண்ணியவாறு ஈடேறப்பெற்று இன்பம் எய்தி இனிதே வாழ்வோமாக!

அரசர் பணிந்த அடியவர்

[ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில்]

தொண்டை நாட்டை ஆண்ட மன்னவருள் காடவர் கோமான் என்ற பல்லவ மன்னன் சிறந்த சிவபக்தன். அல்லும் பகலும் அரனைத் துதித்து அறநெறிப் பேணிய அரசன் காடவர் கோமான். கயிலைநாதனுக்கு கவினுறும் கோயிலைக் காஞ்சியில் அமைக்க உளம்கொண்டு, தலைசிறந்த சிற்பிகளைத் தருவித்து கலைமணம் கமழும்கைலாசநாதர் திருக்கோயிலை நிரமாணித்து அஷ்டபந்தன ஸவர்ணபந்தன மஹா கும்பாபிஷேகம் மஹத்தான முறையில் நடைபெற நாளும் குறித்தான்.

அனைத்து ஏற்பாடுகளும் அமோகமாக நடந்து கொண்டு இருந்தன. இதே சமயம் தொண்டை நாட்டின் இன்னொரு திருத்தலமாகிய தின்னனூர் என்னும் திருநின்றவூரில் வசித்த "பூஸலார்" எனும் சிவபக்தரும் ஈசனாருக்கு ஒரு கோயிலெழுப்ப எண்ணம் நிறைந்தவராய் திருப்பணிக்குரிய கருப்பொருள் நாடி எங்கெல்லாமோ அலைந்து திரிந்து ஒடித்தேடியும் திரவிய மேதும் கிடைக்காத நிலையில் அடியவர் மனத்துறையும் ஆண்டவனாகிய அந்த நெடியவனுக்கு மனக் கோயிலை எழுப்ப மனம் கொண்டு மானசீகமாக இதயகோயிலொன்றை எழுப்பி அதன் குடமுழுக்குக்கு ஒரு நன்னாளைக் குறிப்பிட்டு வைத்துக் கொண்டார். அந்த நாளும், அரசன் குறித்திருந்த கும்பாபிஷேகநன்னாளும் ஒரே நாளாகவே, காடவர்கோமான் கனவில் கயிலைநாதர் தோன்றி தாம் பூசலாரின் கோயிலில் குடிகொள்ள திருவுளங் கொண்டிருப்பதைக் கூறிக் காடவர் கோமானின் காஞ்சி கைலாஸநாதர் கோயில் கும்பாபிஷேக நாளை மாற்றி வைத்துக்கொள்ளச் சொல்லிப் பணித்தார்.

அடியவர் அமைத்த கோயிலுக்கு ஆண்டவன் அளித்த முக்யத்வம் எண்ணி வியந்த அரசர் காடவர்கோமான் அந்தத் திருக்கோயிலின் கும்பாபிஷேகத் திருவிழாவைக் காணத் திருநின்றவூர் சென்றபோது விழாக்கால ஆரவாரம் ஏதும் இல்லாது வெறுமை நிலை நிலவியதைக் கண்டு திகைப்புற்று அடியவர் அமைத்த

ஆலய இருப்பிடம் பற்றி வினவ, ஊர் மக்கள் பூசலாரைக் காண்பித்து அவர் ஒரு பித்துப் பிடித்தவர் என்று கூறியும் கட்டாத கோயிலுக்குக் கும்பாபிஷேகம் வைத்திருப்பதாகப் பிதற்றும் அவரின் நிலைமைக்கு இரங்கியும் எள்ளி நகையாடினர்.

அறிவுடைய அரசன் அடியவர் பெருமையை உணர்ந்தவன் ஆதலால், பக்திப் பரவசத்தில் தம்மை மறந்த நிலையில் இருந்த பூசலாரிடம் சென்று, தம் கனவில் ஈசனார் தோன்றி உரைத்ததைக் கூற மனமொழி மெய்சிலிர்க்க மறையவர் பூசலார் மாதேவன் அருள் மாட்சியில் மனம் நெகிழ்ந்து மாமன்னன் வருகைக்கு மகிழ்ச்சி தெரிவித்து மாதனம் கிடைக்காத காரணத்தால் மனக்கோயில் எழுப்பி மகேசனை வந்தித்த நிலையை த் தெளிவுபடுத்தி அன்புக்கு அடியவரான ஆண்டவன் அரசனையே தம்மிடம் அனுப்பி அன்பு காட்டிய அளப்பரிய கருணையை எண்ணிஎண்ணி அகமிக மகிழ்ந்து அவன் திருவிளையாடலைப் போற்றி பரவினார். அரசனும் ஆண்டவன் கட்டளையை புரிந்து கொண்டவனாய் அடியவரின் பெருமையை உணர்ந்தவனாய் பூசலார் வசித்த புண்ணியத் திருத்தலமாகிய திருநின்றவூரிலும் ஒரு நிகரற்ற கோயிலை நிர்மாணிக்கச் செய்து கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்தித் தந்து பின் காஞ்சியை அடைந்து கயிலாசநாதர் திருக்கோயில் குடமுழுக்கையும் முறையே நடத்தினான்.


காஞ்சி மாநகரத்தின் மேற்புறத்தே கைலாசநாதர் கோயில் அமைந்திருக்கிறது. இத் திருக்கோயில் மிகவும் தொன்மையானது. மணல் கற்களினால் அமைக்கப்பட்ட இத் திருக்கோயிலில் அமைந்திருக்கும் மூலஸ்தான சிவலிங்கம் 16 பட்டை லிங்கமாகும். இக்கோயிலில் நாரதர் பூஜித்த லிங்கமும் அமைந்துள்ளது. இங்குள்ள கருவறையையும் முக மண்டபத்தையும் சுற்றியுள்ளதிருச்சுற்றுகளிலும் வெளிச்சுவர் அறைகளிலும் பிக்ஷாடனர், கங்காதரர், திரிபுராந்தகர், சோமாஸ்கந்தர், திருமால், துர்கை முதலிய திருமேனிகள் அழகான சிற்ப வடிவங்களாகக் காக்ஷி அளிக்கின்றன. க்ஷீரஸாகரமதனம், கால ஸம்ஹார மூர்த்தி, தக்ஷிணாமூர்த்தி உருவங்கள் பராசக்தியின் பல்வகை உருவங்கள் போன்ற சிற்பங்கள் கண்கவரும் வண்ணம் அமைந்திருக்கின்றன.

கருவறைச் சுவர்களில் சிவ தாண்டவக் காக்ஷிகள் வெகு அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் கருவறையைச் சுற்றி அமைந்துள்ள

ப்ரதக்ஷிணமார்க்கத்தின்உள், வெளிவாயில்கள் மிகவும் குறுகி இருந்து தரையில் படுத்தவாறு ஊர்ந்து சென்று மீளும்போது புனர்ஜென்மம் எடுத்துவந்தது போல் தோன்றுகிறது. சொர்க்கப் ப்ரதக்ஷிணம் என்று சொல்லப்படுகிற இந்தவாயில் வழியாக பிரதக்ஷிணமாக வெளிவருவதனால் புனர்ஜென்மம் ஏற்படாது பிறப்பறுத்து முக்திகிடைக்கும் என்பது ஐதிகமாகும். இங்கு சிவராத்ரி விழா மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்படும் பெருவிழா. இத்திருக்கோயில் மத்திய அரசின் தொல்பொருள் துறையின் பராமரிப்பில் இருக்கிறது. அடியவர் உய்யவேண்டும் என்ற கருணையினால் பக்தவாத்ஸல்யம் என்கின்ற பித்துப் பிடித்து பக்தனைத் தேடிக் கொண்டு வலியவந்து ஆட்கொள்கிறான் ஆண்டவன் என்பதுபோல் அரசனையும் அடியாரிடம் பணிய வைத்து அடியாரின் பெருமையை வெளிப்படுத்தி திருவிளையாடல் புரிந்து கருணாமூர்த்தியாய் காஞ்சியில் எழுந்தருளியிருக்கும் கைலாசநாதரைக் கண்டு சேவித்து பூசலார் போல் பக்குவநிலையை பெறுவதே உய்யும் வழியாகும்.

இத்திருக்கோயிலுக்குச் செல்லும் வழியில் சாலைக்கு இடது புறமாக ஸ்ரீ விநாயகப் பெருமானால் பூசிக்கப்பட்ட "அநேகதங்காவதம்" எனும் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்தலத்து இறைவன் மீது, சமயக்குரவர் நால்வருள் சுந்தரர் ஒரு பதிகம் பாடிப் பரவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்திருக்கோயிலுக்கு தென்புறமாக, பிள்ளையார் பாளையம் என்னுமிடத்தில் திருமாலுக்கு அருள்புரிந்த "திருமேற்றளிநாதர்" திருக்கோயில் உள்ளது. சமயக்குரவர் மூவர் பாடல் பெற்ற பெருமை இத்திருக்கோயிலுக்கு உண்டு.



50



கந்தனைப் போற்றிப் பாடிடு

-: பல்லவி :-

கந்தனைப் போற்றிப் பாடிட என்றும்
கவலைகள் தீர்ந்தே களிப்பதும் பெருகும்!

-: அனுபல்லவி :-

வந்தனை செய்திட வந்தருள் புரிவான்!
சிந்தையில் உறைந்தே சந்ததம் காப்பான்!

-: சரணம் :-

அமரர்கள் இடரினை அன்புடன் அகற்றிய
குமரகோட்டம்வளர் குமரனை நினைந்துமே
குவலயம் தனிலே குணமுடன் வணங்கிடில்
அவனியில் பெற அருளினைப் பொழிந்திடும்

(கந்தனை)

- டி.வி.ஆர். சாரி



திருப்பாடல் பிறந்த

திருக் குமரகோட்டம்

அவனியில்வாழ் அனைத்து ஜீவராசிகளும் தாம் பரம் பொருளின் ப்ரதிபிம்பங்களே என்பதனை உணரும்பொழுதே உண்மையறிவு புலப்படத் தொடங்குகிறது. அப்பொழுது தான் பிறவிப்பயனைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்வதற்கான அடிப்படை நிலை உருவாகிறது. இதனையே பற்றற்ற நிலை அல்லது ஜீவன் முக்தர்களின் நிலை என்று கூறுவர். தான் தனது என்ற பற்றுடைய மமகார மாயையை அறுத்து ஆணவமலத்தை அகற்றி பாசப் பிணிப்பிலிருந்து விடுவித்து அறியாமை எனும் இருளை நீக்கி மெய்யறிவைப் புகட்டி தன்னிடத்தே அன்பைத் தோற்றுவித்து, பக்தியினால் தூய்மையான பக்குவ நிலையை அடையும்படிச் செய்து மெய்ப்பொருளாகிய தம்மை அறியும்படியான தகைமையினைத் தமது தன்னோரில்லாத தனிப்பெருங் கருணையினால் தந்து தடுத்தாட்கொள்வதனால் இறைவனை ஆண்டவன் என்றார்கள். எதிலும் உறைபவன் அவனே, அதனால் அவன் எங்கும் நிறைந்தவனாகிறான். எங்கும் நிறைந்து எல்லாமுமாய் எல்லா வற்றையும் தன் சங்கல்பத்தினால் தோற்றுவித்து, காத்து, தம்மைத்தாம் உணரும்படி செய்து, பற்றற்ற நிலையைத் தோற்றுவித்து அந்த நிலையில் மாயப் பிறப்பறுத்து தன்னுடன் இரண்டறக் கலக்கும்படி செய்து ஆட்கொள்வதை ஆன்றோர்கள் ஆண்டவனின் லீலாவிநோதம் என்பர். "ஸுகதுக்கஸமேத்ருஷ்ட்வா" என்கிற கீதாச்சார்யனின் மறைமொழிப்படியும், "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று

நிலையாமை காணப்படும்" என்ற வள்ளுவர் வாய் மொழிப்படியும், "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்ற திருவாய்மொழிப்படியும், இருட்பாடு நீக்கி ஒளி ஈந்தருளும் தெய்வம் என்ற திருவருட்ப்ரகாச வள்ளலாரின் திருவாக்கிற் கேற்பவும், தன்னை அறிய தனக்கொரு கேடில்லை தன்னை அறியாமல் தானே கெடுகின்றான் என்ற திருமூலரின் திருமந்திர மொழியின்படியும் பற்றற்ற நிலையினை அடைவதே ஜீவன் முக்தியை அடைவதற்கான பக்குவநிலை.

பதியாகிய பரமாத்மா பசுவாகிய ஜீவாத்மாவைப் பாசம் எனும் மாயையிலிருந்து விடுவிப்பதற்காக இணையில்லாக் கருணையினால் குரு ரூபமாகத் தோன்றித் தன்னைத்தான் அறிவித்துக்கொள்கிறான் என்று சிவஞான போதம் செப்புகிறது. மெய்ப்பொருளை அறிவதற்கு குருவருளின் துணை அதி அவசியம் என்பதனை உணர்த்தும் வகையில் அமைந்த ஆதி குருவின் திருவுருவமே சிதானந்த மூர்த்தியாகிய தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபம். தெளிவு—குருவின் திருஉரு காண்டல், தெளிவு—குருவின் திருநாமம் செப்பல், தெளிவு—குருவின் திருவார்த்தை கேட்டல், தெளிவு—குருஉரு சிந்தித்தல்தாமே! தெளிவின் விளக்கத்தை இவ்வாறு தெளிவுபடுத்துகிறார் திருமூலர். பக்குவம் முதிரும் காலம் பார்த்து, சில நேரங்களில் மாயை தன் சக்தி முழுவதையும் செலுத்தித் தெளிவைக் குழப்பிவிடச் செய்கிறது என்பதற்கும், அஞ்ஞானத்தின் வசப்பட்டுவிட்ட ஆத்மாவை அதன் வழியே சென்று இறுதியில் இறைவன் ஆட்கொள்கிறான் என்பதற்கும் தாரகாஸுர வ்ருத்தாந்தம் ஒரு எடுத்துகாட்டு. சூரபன்மனின் தவத்திற்கு மகிழ்ந்து பரம்பொருளாகிய பரமேச்வரன் தோன்றியதும், பிறவா வரத்தைப் பெறுதற்கு பதிலாக இறைவா வரத்தினை வேண்டும்படியான ஒரு நிலையை உண்டாக்கியது மாயை.

"ஜாதஸ்ய மரணம் த்ருவம்" தோன்றுவதனைத்தும் மறைந்தே ஆகவேண்டும் என்ற அறத்தின் நியதிப்படி இறைவா வரத்தினை ஈந்திடல் தகாது என்பதனால் விரும்பும் வகையில் இறப்பைக்கொள்ள பரமனைப் பார்க்கிலும் சிறந்தவனாலேயே தனக்கு முடிவு இருக்கவேண்டும் என்று தருக்கித் திரிந்த சூரன் வரம் பெற்றான் என்பது புராணம். எல்லாம் சிவமயம் என்பதனால் சிவனுக்கும் சிறந்தவன் எவனும் இருக்க இடமில்லை என்றெண்ணியே சூரன்

இவ்வாறு வரம் பெற்றான். ஆணவத்தால் விளையும் அநீதியை நிலைநாட்டுவதில் நாட்டங்கொண்ட இறைவன் தம்மினும் சிறந்ததொரு உருவத்தைத் தோற்றுவிக்கத் திருவுளங்கொண்டான். தன்னினும் சிறந்தவர் உலகில் யார் இருப்பார் என்பதனால் தம்மையே தாம் தம்மினும் சிறந்த தத்துவத்தின் மறுவடிவாய் திருமுருகனாகத் தோன்றச் செய்தார். பஞ்ச முகனான பரமேச்வரன் பார்வதியின் பார்வையினால் பரவசமடைந்து யோகநிலைக் கலைந்து அதற்குக் காரணமான காமனை நெற்றிக்கண்ணால் சுட்டெரித்துப் பின்னர் யோகித்யேயமான அதோமுகமுடன் ஆறுமுகம் கொண்டு நெற்றிக் கண்களிலிருந்து தோற்றுவித்த ஆறு நெருப்புப் பொறிகள் சரவணப் பொய்கையில் ஆறு கமலமலர்களில் ஆறு சிசுக்களாக தோன்றன. பின்னர் அம்பிகையின் அருளால் ஆறு உருவங்களும் ஆறு முகங்களைக் கொண்ட ஒருருவமாகி பின்னர் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு அழகே உருவான ஆறுமுகன் முருகன் என்றும், கார்த்திகேயன் என்றும் அழைக்கப்படலானார். இதுவே குமாரசம்பவம் வரலாறு. குமரக்கடவுளின் தோற்றம்.

ஆயினும் முருகன் மகேசனின் மகன்தானே, சிவனாரைவிடச் சிறந்தவனென்று கருதுவதெப்படி என்ற ஐயமும் நீங்கிட ஆதிகுருவாகிய தக்ஷிணாமூர்த்தி ஆறுமுகனிடம் இருந்து உபதேசம் பெற்று தனக்கே குருவாக்கிக்கொண்டு குரு ரூபத்தில் முருகனின் நிலையை உயர்த்தி தன்னினும் சிறந்த தன்மையினை தாமே மனமுவந்து தந்து சூரபத்மனை வதம் செய்யும் தகுதியினை அடையும்படிச் செய்ய நினைத்த சிவபெருமான் சிறுவன் முருகனை உலகறிய சிவகுருவாக உயர்த்தத் திருவிளையாடல் புரிய திருவுளம் கொண்டான்.

கைலாயத்தில் கொலுவிருந்த சிவபெருமானைச் சேவிப்பதற்கு இந்த்ராதி தேவர்களுடன் பிரமன் செல்லும்போது அனைத்து தேவர்களும் தேவ ஸேனாதிபதியாகிய ஸுப்ரஹ்மண்யனை வணங்கிச் செல்ல ப்ரம்மன் மட்டும் சிறுவனாயிற்றே என்ற எண்ணத்துடன் மதியாமல் செல்வதைக் கண்ட செல்வன் சிவகுமாரன் ப்ரம்மனை அழைக்கச் செய்து ப்ரணவப் பொருளை விளக்கி உள்செல்லுமாறு வினவ பிரமன் கூறிய பதில் திருப்தி அளிக்காததால் அவரை

சிறைப்படுத்திப் படைப்புத் தொழிலையும் தாமே மேற்கொண்டார். நான்முகனைச் சிறைப்படுத்திய செய்தியை நாரணன் உருக்கமாகக் கூறவே சிவபெருமான் ப்ரம்மதேவனை விடுவிக்கும்படி நந்திதேவனை அனுப்பியும் முருகப்பெருமான் உடன் விடுவிக்காமையால் தாமே முருகனிடம் எழுந்தருளினார். தந்தையே வரக்கண்ட தனயன் தாம் செய்ததற்கான காரணத்தைக் கூற அங்ஙனமாயின் அந்த ப்ரணவத்தின் உட்பொருளை நீயே கூறுக என்று கேட்க அதைச் சிவப்பெருமானின் திருச்செவியில் ப்ரணவத்தின் பொருளை உபதேசித்து சிவகுருநாதனாகவும் ஸ்வாமிநாதனாகவும், தகப்பன் ஸ்வாமியாகவும், ஞான தேசிகனாகவும் திகழ்ந்தார். இதனையே அருணகிரிநாதர்.

"சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரமிகு

செவிமீதிலும் பகர்செய் குருநாத"

என்று திருப்புகழில் போற்றியுள்ளார். உபதேசம் பெறுபவர் அதாவது ஞானத்தைப் பெற விரும்புவோர் குருவைத்தேடிச் செல்லவேண்டும் என்ற உலக நியதிக்கு இணங்கவே சிவனார் தாமே முருகனிடம் சென்று உபதேசம் பெற்று சிவகுருவாக உயர்த்தினார். அதன் பின்னர் சூரசம்ஹாரம் நடைபெறுகிறது. ஆயினும் ஈச்வரனாகிய தன் ஆணைப்படி பிரம்மாவை உடன் விடுவிக்காத தோஷத்திற்காக பூவுலகில் சென்று தம்மை வழிபட்டு ப்ராயசித்தம் செய்து கொள்ளும்படி பணித்தார்.

குமரக் கடவுளும் ப்ரளய காலத்திலும் தனித்து நின்ற "ப்ராளயஜித்" எனப்படும் ஸத்யவ்ரத க்ஷேத்ரமாகிய காஞ்சிபுரம் எழுந்தருளி ஆம்ரவிருக்ஷ ரூபத்தில் விளங்கும் ஜோதி ஸ்வரூபியாகிய பரமேச்வரனை வணங்கி "மாவடிக்கந்தன்" எனப் பெயர் பெற்று காஞ்சியில் தன் பெயரால் தேவசேனாப தீசம் என்னும் பெயரில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டதாக புராணம் கூறுகிறது. குமரக்கடவுள் காஞ்சியில் தேவசேனாபதீசனை வழிப்பட்ட திருத்தலமே திருக்குமரகோட்டம். அவனியில் அறியாமை, அகந்தை, அசுரத்தன்மை, அநீதி போன்ற அறத்துக்குப் புறம்பான அனைத்துச் செயல்களையும் அறுத்து அறிவும் அன்பும் வளர்ந்து தெளிவான சிந்தனையும், அமைதியும் அதனால் ஆனந்தமும்

அடைய அருள் புரியும் எளிதான, எழிலான குருமூர்த்தியாக குமரக்கடவுள் காஞ்சியில் கோயில் கொண்டிருக்கும் திருக்கோயில் திருக்குமரகோட்டம். அரனாருக்கு அன்று உபதேசம் செய்த ஆறுமுகன் தம் அடியார்களுக்கும் அதுபோலவே மெய்ப்பொருளை உணர்த்தி சிந்தை தெளியவைத்து மெய்ப்பொருள் பேசிய முருகனாக விளங்கிய சம்பவங்கள் எண்ணிலடங்கா. அத்தகைய பேற்றினைப் பெற்ற பெரியோர்களில் சிலரைப் பற்றியே நமக்குத் தெரிய வருகிறதென்றால் மிகையாகாது. ஆறுமுகனின் அளவிலா கருணையினால் அருள்பெற்று அவன் புகழைப்பாடிப் பரவசமடைந்த பெரியோர்கள் பலர். அவர்களுள் பிள்ளைத் தமிழ் பாடிய குமரகுருபரரும், ஸ்கந்தஷஷ்டி கவசமெனும் பாராயண நூலைப் படைத்த ஸ்ரீ தேவராய ஸ்வாமிகளும், ஷண்முக கவசமெனும் தோத்திரப் பாமாலையை அருளிச்செய்த பாம்பன் ஸ்வாமிகளும் குறிப்பிடத்தக்கவர்கள்.

அருணகிரிநாதரை தடுத்தாட்கொண்டு தம் திருப்புகழைப் பாடுவதற்கு அடி எடுத்துத் தந்து அருளியது போல் குமரக்கடவுள் தம் புகழைப் புராணமாக வடிவமைத்து கொடுக்க அடி எடுத்துக் கொடுத்து கச்சியப்ப சிவாச்சாரியாரை கந்தபுராணம் எழுதச்செய்து அரங்கேறும் சமயம் புலவர் வடிவில் நேரில்வந்து முதற்பாடலில் இலக்கணரீதியாக எழுப்பப்பட்ட ஐயத்தை தீர்த்த காஞ்சி குமரகோட்டத்துக் குமரனின் கருணையே கருணை. காஞ்சியில் வசித்து வந்த காளத்தியப்ப சிவாச்சாரியார் குமரகோட்டத்தில் அர்ச்சகராக இருந்து குமரக்கடவுளை ஆராதித்து சிறந்த பண்டிதராகவும் திகழ்ந்தார். நெடுங்காலம் மகப்பேறு ஏற்படாததால் வருந்தி குமரக்கடவுளை வேண்டி விரதமிருந்தார். குமரக் கடவுளின் கருணாகடாக்ஷத்தினால் காளத்தியப்ப சிவாச்சாரியாருக்கு அவதரித்த அரும்புதல்வரே கச்சியப்ப சிவாச்சாரியார். இளமையிலேயே வளமான கல்விப்பயின்று வேதாகம சாஸ்திரங்களை கற்று நற்குணங்களுடன் திகழ்ந்து தீக்ஷை பெற்று குமரகோட்டத்தில் எழுந்தருளியுள்ள குமரக் கடவுளை மெய்யன்புடன் ஆராதித்து வந்தார்.

மெய்யன்பனாகிய கச்சியப்பனை கடாக்ஷிக்க திருவுள்ளம் கொண்ட குமரன் கச்சியப்பரின் கனவில் தோன்றி தம் சரித்திரத்தை தமிழில் விரித்து

பெருங்காவியமாகப் பாடி கந்தபுராணமெனும் பெயரில் காவியமாகப் படைக்கும்படி பணித்தார். கவிபாடி அறியாத கச்சியப்பர் திகைத்து நிற்பதைக் கண்டு குமரக்கடவுள் “திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்” என்று அடியெடுத்துக் கொடுத்து கவிபாடும் வன்மையும் தன்மையும் தந்தருளினார். குமரகோட்டத்தில் அமர்ந்து குமரனின் கருணையால் கந்தபுராணத்தை எழுதி குமரகோட்டத்தில் அரங்கேற்றும் சமயத்தில் பெரும்புலவர் ஒருவர் குமரனால் அடியெடுத்து கொடுக்கப்பட்ட திகடசக்கர என்ற தொடருக்கு இலக்கணவிதி எடுத்துக்காட்டும்படி கேட்க கச்சியப்பசிவாசாரியாரும் அப்பாடலின் முதலடி தமக்கு குமரக்கடவுள் அருளிச் செய்ததாக எடுத்துரைத்தும் “முருகன் மொழியாயினும் அதற்கு இலக்கணமில்லையாயின் ஒப்புக் கொள்ள இயலாது” என்பதால் கந்தபுராணம் அரங்கேறுவது அன்று நடைபெற முடியாமல் போய்விட்டது. கந்தபுராண அரங்கேற்றம் தடைப்பட்டதனால் வேதனையடைந்த கச்சியப்பசிவாச்சாரியார் குமரகோட்டத்து குமரனை எண்ணி கண்ணீர் வடித்து கரம்கூப்பி வணங்கி மறுநாள் அரங்கேற்றத்தை குமரனே வந்து நடத்தித் தந்து தம்மைக் காத்தருளும்படி வேண்டினார்.

மறுநாள் குமரகோட்டத் திருக்கோயில் முன் அமைத்து இருந்த பந்தலில் ஏற்படுத்தப்பட்ட சபையில் ஒரு புலவர் வடிவில் குமரன் வந்து தான் எடுத்துவந்த வீரசோழியம் எனப்படும் நூலில் சக்தி படலத்தின் 18-ம் செய்யுளில் திகடச் சக்கரம் எனப் புணருவதற்கு விதியிருப்பதை எடுத்துக் கூறி புலவர்களின் ஐயம் அகற்றி மறைந்தருளினார். வந்த புலவர் குமரக்கடவுளே என்பதையறிந்து புலவர் பெருமக்கள் கச்சியப்ப சிவாச்சாரியாருக்கு கிடைத்த பேற்றினை பெரிதும் போற்றினார். குமரக்கடவுளின் கருணையினால் கந்தபுராண அரங்கேற்றம் இனிது நிறைவேறியது. இத்தலம் இன்றும் திருப்பாடல் பிறந்த திருக்குமரகோட்டத்தில் கந்த புராண அரங்கேற்ற மண்டபம் என்று விளங்குகிறது.

ஷண்முக கவசத்தை அருளிச்செய்த பாம்பன் ஸ்வாமிகள் க்ஷேத்ராடனமாக காஞ்சிபுரம் வந்து ஆலயங்களைத் தரிசித்து அன்றைய நிலையில் கீரைப் பாத்திகளால் சூழப்பட்டுக் கிடந்த குமரகோட்டத்தை தரிசிக்காமல் புறப்படும்

சமயத்தில் குமரன் ஒரு பாலகனாகத் தோன்றி அவருக்கு குமரகோட்டத்தை காண்பித்து அவர் தம்மை தரிசிக்கும்படி செய்து அருளிய சம்பவம் குமரனின் கருணாவிலாசத்திற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு.

அளவிலாக்கருணைகொண்ட குமரன் அருள்வடிவானவன். மெய்ப்பொருளாகிய முருகன் குருதேசிகனாக விளங்கி அடியார்களுக்கு தம்மிடத்தே பக்திசெய்து அகத்தூய்மையைப் பெற்று உய்வதற்கு உகந்தபடி முருகன் திருப்பாடல் பிறந்த திருக்குமரகோட்டத்தில் கண்கண்ட தெய்வமாக எழுந்தருளியிருக்கிறான்.

காஞ்சியில் குமரகோட்டம் சோமாஸ்கந்த வடிவமைப்பு போல் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சிவபெருமானுக்கு இடப்புறத்தே உமாதேவியார் அமர்ந்திருக்க இடையில் குமரகடவுள் வீற்றிருப்பதே சோமாஸ்கந்த வடிவம். அந்த பாவனையில் திரு ஏகாம்ரேச்வரர் ஆலயத்திற்கு இடது பக்கமாக ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் சந்நிதி அமைந்திருக்க நடுவில் திருக் குமரகோட்டம் அமைந்துள்ளது.

ஆலயத்தின் உள்சென்றதும் உட்பிரகாரத்தை ப்ரதக்ஷிணமாக வரும்போது திரும்பியதும் கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கும் சந்தான கணபதியை வணங்கி அவருக்கு வடக்கே செய்குன்றின்மீது அமைந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் தண்டபாணியையும் தரிசிக்கின்றனர். அடுத்து குமரன் எழுந்தருளியிருக்கும் சந்நிதியின் அர்த்த மண்டபத்தில் குமரகோட்டத்து குமரனால் வழிபடப்பட்ட தேவசேனாபதீசப் பெருமானின் சந்நிதியும் அதன் திருச்சுற்றின் தென்பால் தெற்கு நோக்கிய விநாயகமூர்த்தியும் மேற்கு நோக்கிய கச்சியப்ப சிவாச்சாரியரின் விக்ரஹமும் உள்ளன. கச்சியப்பருக்கு எதிரில் தெற்கு நோக்கிய சந்நிதியில் ஆறுமுகப் பெருமான் உற்சவமூர்த்தியாக காக்ஷி அளிக்கிறார். அடுத்து வயிரவர் சந்நிதியும் அதன் அருகில் உருக்கமுள்ளப் பெருமாள் ஸந்நிதியும் உள்ளன. ஒரு பேரூழி காலத்தில் ஆலிலை மேல் துயில் கொண்டிருந்த திருமால் மார்க்கண்டேய முனிவரிடமிருந்து காஞ்சிபுரம் என்னும் க்ஷேத்திரம் ப்ரளய காலத்திலும் அழியாமல் இருப்பதையும், அங்கு தேஜோரூபியாக ஏகாம்ரேச்வரர் விளங்குவதையும் அறிந்து

அங்கு சென்று தரிசித்து குமரகோட்டத்தில் குமரனைக் கண்டும் மகிழ்ந்தார். ப்ரம்மதேவனின் நிலையைக் கண்டு உள்ளம் உருகி அவரை விடுவிக்கும்படி ஈசனிடத்தில் இறைஞ்சியபடியால் இப்பெருமாளுக்கு உருகுமுள்ளப் பெருமாள் என்ற பெயர் வந்தது என்று கூறப்படுகிறது. உருகுமுள்ளப் பெருமாள் ஸந்நிதியை அடுத்து ஸோமாஸ்கந்தர், நவவீரர்கள். முத்துக்குமாரஸ்வாமி, கஜவல்லி உற்சவமூர்த்திகள் அமைந்த ஸந்நிதிகளும் ப்ரகாரத்தின் கீழ்ப் பகுதியின் வடகோடியில் வள்ளியம்மையின் ஸந்நிதியும், தென்கோடியில் தெய்வயானையின் ஸந்நிதியும் இடையில் நவகிரஹ ஸந்நிதியும் அமைந்துள்ளன. அடுத்து வடக்கு நோக்கி அருணகிரிநாதர் ஸந்நிதியுள்ளது. மூலஸ்தானத்தில் முருகப் பெருமான் பிரமனை சிறையிட்டு தாமே படைப்புத் தொழிலையும் மேற்கொண்டிருந்த காலத்தில் இருந்த திருக்கோலத்தில் ஒரு திருமுகமும் 4 திருக்கரங்களும் கொண்ட அழகிய திருமேனியுடன் திகழ்கிறார். 4 கரங்களில் மேலிருக்கும் வலக்கரத்தில் ருத்ராக்ஷ மாலையும், இடது கரத்தில் கமண்டலமும் கீழிருக்கும் இரு கரங்களில் வலதுகரம் அபயஹஸ்த முத்திரையுடனும் இடது கரம் இடுப்பில் தொடையின்மேல் ஊன்றிய நிலையிலும் அமைந்திருக்கிறது. இப்பெருமானுக்கு தேனாபிஷேகம் மிகவும் பிரியமானது என்று தேனினால் விசேஷமாக அபிஷேகம் நடைபெற்று வருகிறது. தீபாவளி நன்னாளில் மட்டுமே தைலாபிஷேகம் நடைபெறுகிறது. முருகனைத் தரிசித்து, ப்ரதக்ஷிணமாக வெளிவரும்பொழுது உற்சவமூர்த்திகள் ஸந்நிதியைத் தரிசிக்கலாம். ஆலயத்திலிருந்து வெளிவரும்போது முகப்பில் கண்ணாடி அறையில் சலவைக் கல்லாலான இராமலிங்க அடிகளின் திருவுருவத்தைத் தரிசிக்கின்றனர்.

அமைதியை நல்கிடும் அன்பெனும் வழியினை அவனிக்குத் தந்து ஆண்டவனை அருட்ஜோதி தெய்வமாக வழிபட்டு ஒருமைப்பாட்டிலேயே ஒற்றுமையுடன் வாழ்வதற்கு உகந்த சமரச சுத்த சன்மார்க்க நெறியை நிலைநாட்டி ஜீவகாருண்யத்தை வலியுறுத்திய திருவருட்ப்ரகாச வள்ளலார் திருமுருகனின் திருவருளால் மெய்ப்பொருள் பேசிய முருகனின் ஸந்நிதியில் மெய்ப்பொருளை உணர்ந்து மெய்ப்பொருளை மக்களுக்கு உணர்த்திய மஹானின் திருவுருவத்தைக் கண்டு அடியார்கள் மட்டிலா மகிழ்ச்சியை அடைகின்றனர்.

ஆலயத்திலிருந்து வெளிவந்ததும் நுழைவாயிலுக்கு வெளியே இடப்பக்கத்தில் வரஸித்தி விநாயகர் மாபெரும் திருமேனியுடன் அமர்ந்து அடியார்களின் எண்ணங்களை ஈடேறச் செய்கிறார். பதினாறுகால் மண்டபத்தில் ஒருதூணில் எழுந்தருளியிருக்கும் ஆஞ்சநேயர் மிகவும் வரப்ரஸாதியென்று ப்ரஸித்தி பெற்றவர். இக்கோயிலின் திருக்குளம் கோயிலின் கிழக்கே அமைந்துள்ளது.

பெரிய காஞ்சிபுரம் மேற்கு ராஜவீதியில் அழகான ராஜகோபுரத்துடன் காக்ஷியளிக்கும் திருக்கோயில் திருக்குமரகோட்டம்.

குமரகோட்டத்துக் குமரனுக்கு நடைபெறும் உற்சவங்களில் வைகாசி விசாகத் திருவிழா பெரிதும் சிறப்புடையது. இதுவே இவ்வாலயத்தின் பிரம்மோத்ஸவமாகும். ஆடிக்கிருத்திகை, ஸ்கந்த ஷஷ்டி விழாக்களுடன் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், ஷஷ்டி, கிருத்திகை நாட்களிலும் ஏராளமான பக்தர்கள் குமரக் கடவுளின் கருணையை வேண்டி கோயிலுக்கு வந்து வழிபட்டு எண்ணங்கள் ஈடேறி இன்பத்தை அடைகின்றனர்.

பல்லவி

அழகுக்குப் பொருள்தேடி அலைந்தேன் – முடிவில்
தமிழான முருகனே மெய்யென்பதறிந்தேன் – (அழகு)

அனுபல்லவி

ஆதாரமில்லாத அல்லல் படும்நெஞ்சம்
நிம்மதி அடைந்தே நிறைவினைப் பற்றிட .... (அழகு)

சரணம்

எங்கும் நிறைந்திருந்த எல்லாமும் தானாகி
எண்ணிடும் அடியார்க்கு எளிதில் அருள்புரிந்து
அன்பர்கள் இதயத்தில் அகலாமல் இருந்து
அன்பினைப் பொழிந்திடும் அறுமுகன் இருக்கையில் (அழகு)

- டி.வி.ஆர். சாரி.



தூது சென்ற தூயவன்

(பாண்டவ தூதப் பெருமாள்)

பாண்டவதூதப் பெருமாள் திருக்கோயில் பெரியகாஞ்சிபுரத்தில் அமைந்துள்ள பாடகமெனும் தொண்டைநாட்டு திவ்யதேசம். அடியவர்களுக்கு எளிதில் அருள்பவன் தகமை, எளிமை, நீர்மை எனும்கல்யாண குணங்கள் பொருந்திய சரண்யன் பகவான்கண்ணன். அதனாலேயே கிருஷ்ணாவதார குணாநுபவத்தில் ஆழ்வார்களும், ஆசார்யர்களும், அருளாளர்களும் பெரிதும் லயித்து வெளிப்படுத்திய இப்பெருமாளின் வைபவம் மிகவும் அற்புதமானது.

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன் ஸ்ரீமந் நாராயணன் சேதனர்களிடத்தே கொண்ட ஸ்வாபாவிகமாள பரம காருண்யத்தினால் தம்மை ஆசரயிக்கச் செய்து பக்தியினால் தம் திருவடிகளைச் சரணடையச்செய்து சரணாகதிக்கான பலன்களை அநுக்ரஹித்து அடிமை கொள்பவன் என்பதனால் சரண்யனாகவும், ஆச்ரயித்தவர்களுக்கு அநுபாவ்யமான போகங்களைத் தம் ஸங்கல்பத்தினாலேயே நிறைவேறச் செய்யக்கூடிய ஆபூர்வ சக்தி உடையவனாதலால் ஸத்யஸங்கல்பனாகவும் போற்றப்படுகிறான். ஸத்ய ஸங்கல்பன் என்றமையினால் புருஷோத்தமனுக்கான ஸத்யவரதத்வம் நிலை பெற்றவனாக வாத்ஸல்யத்துடனும், ஒளதார்யத்துடனும், ஸௌஜன்யத்துடனும் திகழ்ந்து தன்னுடைய திருவடிகளைத் துணையெனக் கொண்டவர்கள், பரபக்தி பரக்ஞான பரமபக்தி உடையவர்களாகக் கடாக்ஷித்து உடலுக்கும் உடைக்கும் உள்ள சம்பந்தமே, உடலுக்கும் ஆத்மாவுக்கும்

உள்ளது என்ற உண்மை நிலையினை அவர்கள் உணரும்படிச் செய்வதால் ஸத்யகாமன், ஸத்யஸங்கல்பன், தூயவன் என்று மாதவன் போற்றப்படுகிறான். நினைத்த மாத்திரத்திலேயே நிர்வஹிக்கப்பட்ட ஸ்தாவர ஜங்கமாத்மகமான ஸமஸ்த வஸ்துக்களுடைய ச்ருஷ்டி, ஸ்திதி, விநாசம் என்ற ஆக்கல்—காத்தல்—அழித்தல் ஆகிய நியமங்களை தம் ஸங்கல்பத்தினாலேயே நிகழச் செய்யும் ஜகந்நாயகனாகிய ஸ்ரீமந் நாராயணன் தம்மைச் சரணடைந்தவர்களுக்கு க்ஷேமத்தைக் கடாக்ஷிக்க வேண்டும் என்ற திருவுள்ளத்தோடு இணையில்லாக் கீர்த்தியுடைய தன் நிலையைத் தாமே தளர்த்திக் கொண்டு பாகவத ரக்ஷணார்த்தம் இறங்கி வருவதற்கு அவதாரம் என்று சொல்லுவர். சாது ஸம்ரக்ஷணமும், தர்ம ஸ்தாபனமும் பகவானின் அவதாரத்திற்கு ஹேதுவாகின்றன என்றால் அவதார மஹிமையின் அநுபவத்தில ஆழ்பவர்களுக்கென ஆங்காங்கே அவ்வப்போது அர்ச்சாவதார மூர்த்தியாய் ஸாக்ஷாத்காரம் செய்து எழுந்தருளிய திவ்ய தேசங்களே திருப்பதிகள் எனத் திகழ்கின்றன. அதுபோல் ஸத்யஸங்கல்பனாய்த் திகழ்ந்த தூயவன் மாதவன் தூது சென்ற கோலத்தில் அர்ச்சாவதார மூர்த்தியாக எழுந்தருளிய ஸ்தலமே ஸத்யவரத க்ஷேத்ரமாகிய "காஞ்சிபுரத்தின் பாடகம்" என்ற பாடல் பெற்ற பாண்டவதூதப் பெருமாள் திருக்கோயிலாகும்.

எப்போதெல்லாம் தர்மத்திற்குச் சோதனை ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் அறத்தைக் காத்து நல்லவர்களை ரக்ஷிக்க பகவான் அவதரிப்பதாக அருளிச் செய்ததுபோல் த்வாபர யுகத்தில் துர்யோதனாதிகளின் துர்மார்க்கத்திலிருந்து தரும நெறி வழுவாப் பாண்டவர்களைப் பாதுகாக்க பரந்தாமன் கண்ணனாக அவதாரம் செய்து பல லீலைகளைப் புரிந்து அறத்திற்கும், அதர்மத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை உணர்த்தி இறுதியில் அநீதி அழிவதும் நீதி நிலைத் திருப்பதும் நியதி என்பதை நிலைநாட்டிய சம்பவங்கள் க்ருஷ்ணாவதார வைபவத்தை விவரிக்கின்றன. இவை ஆண்டவன் அன்புக்கு அடிமையாகும் தன்மை படைத்தவன் என்பதையே குறிக்கின்றன. பகவான் பரந்தாமனின் பக்தவாத்சல்யம் அன்புக்குக் கட்டுப்பட்டவன் அவன் என்பதை விளக்க க்ருஷ்ணாவதாரத்தில் எத்தனை எத்தனையோ சம்பவங்கள் காணக் கிடைக்கின்றன. அன்போடு விதுரன் அளித்த

வாழைப்பழத் தோலையும் கூட சிந்தை மகிழ்வோடு உண்ட பரம்பொருளை ஸஹாதேவன் தன் அன்பெனும் பிடியில் அழகுற காட்டியது அன்புக்கு அடிமையாகும் அளப்பரிய தனித்தகைமை படைத்தவன் அச்சுதன் என்பதை எடுத்துக் காட்டும். அனைத்துக்கும் மேலாக அடியார்களுக்காக அவர்தம் அன்புக்காக அந்த பரமதயாளன் தன் நிலையினின்றும் இறங்கி வருகின்றான் என்பதற்கு ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகப் பஞ்சபாண்டவர்களுக்காக ஸ்ரீ க்ருஷ்ணன் துரியோதனாதிகளிடம் தூது சென்றதைக் குறிப்பிடலாம்.

தூதுக்கும், தூதுவனுக்கும் ஒரு இலக்கணம் உண்டு. செல்லுகின்ற தூதன் எடுத்துச் செல்லும் தூதுச் செய்தியை மிகப் பக்குவமாக, நளினமாக ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில், சாமர்த்யத்துடன் கூறவேண்டும் என்பதோடு, "தூது" யார் அனுப்புகின்றார்களோ, அவர்தம் உள்ளத்தின் தன்மைக்குஇணங்க, அவர்கள் விரும்பும்வண்ணம் காரியத்தை முடித்தும் வரவேண்டும் என்பதே அவ்விலக்கணம். இந்த இலக்கணத்துக்கு ஒரு இலக்கியமாகவே விளங்கினான் அந்த "பாண்டவதூதப் பெருமாள்" என்பது வெள்ளிடைமலை. இந்தத் தூதுப் பணியை மிகச் சரியான முறையில் நிறைவேற்றிய முதல் தூதுவன் ஸ்ரீ கிருஷ்ணன் என்பதில் சந்தேகமே இல்லை. சமாதானத் தூதுக்குச் சென்ற பாண்டவதூதன் சண்டைக்கு நாள் குறித்தது சரியாகுமா? இது சரியான தூதுக்கு இலக்கணமா என்ற ஐயத்துக்கு இடமில்லாமல் பாண்டவர்களில் தருமனைத் தவிர அனைவருமே துரியோதனாதியருடன் போர் புரியவே விரும்பினர் என்பதற்கு சூதாட்ட சருக்க முடிவிலேயே விடை உள்ளது. துரியனைக் கொல்ல வேண்டும் என்று பீமனும், அந்தக் கொடியவன் குருதியைக் கூந்தலில் தடவியே கூந்தலை முடிப்பேன் என திரௌபதியும் இப்படி அனைவருடைய சபதங்களும் இனிதே முடியவே பாண்டவ தூதப் பெருமாள் அன்புக்குக் கட்டுப் பட்டவனாகத் தூது சென்றது மட்டுமல்லாது, பார்த்தனுக்கு சாரதியாகவும்கூட ஆனான். விதி வழியே மதி செல்லும் என்ற வாக்கிற்கேற்ப, தூது வரும் தூயவனைத் துன்மதி படைத்த துரியோதனாதியர் கூட்டம் தூளாக்க நினைத்து, பொம்மைத் திரை வரித்து அண்ணல் அமர இருக்கும் ஆசனத்தினடியில், கள்ள அறை அமைத்து, ஆங்கு உடல்வலியில் மிக்க

மல்லர்களை நிறுத்தி, கண்ணனைக் கவிழ்த்து அழிக்க நினைத்த அரக்க மனம் படைத்த அற்பர்களின் மன ஓட்டத்தை அறியாதவனா அந்த மாயகண்ணன். கம்ஸ, சாணூர, தந்தவக்ர–சிசுபாலன் போன்ற வக்ர மனம் படைத்த அக்கரமக்காரர்களை எல்லாம் விளையாட்டாகவே அழித்தொழித்த ஐயனுக்கு இவையெல்லாம் ஒரு பொருட்டா! தூதுக்கு வந்தவரை வாதுக்கு அழைத்து தீவினை ஈட்டிய இருட்டு மனம் படைத்த குருட்டு மதியாளர்களனைவரும் நடுங்கி ஒடுங்கி நாவரள மெய்சோர அமைத்திருந்த அந்த ஆழ்குழியை விடவும் அகன்று உயர்ந்து விண்முட்டும் நெடுமாலாய் வடிவெடுத்து நல்லவர் நாரணநாம ஜபத்தோடு வணங்கவும், அல்லவர் அனைவரும் அச்சத்தில் ஒடுங்கவும், கண்ணிலா திருதராஷ்டிரன் கண்ணனின் நெடிய திருமேனியைக் கண்டு தரிசிக்கும் பாக்யத்தையும் அடைந்த அந்தத் தூதுக் காட்சி ஸ்ரீ க்ருஷ்ணாவதார வைபத்தில் மிகச் சிறப்பான ஒன்று. மின்னொளி வந்தாற்போல் கண்ணொளி கிடைத்த திருதராஷ்டிரனை பகவான் ஸ்ரீ க்ருஷ்ணர் “யாதுவரம் வேண்டும்” என வினவ நித்யமங்களஸ்வரூப தரிசனத்திற்குப் பிறகு, அநித்யமான எந்த ஒன்றையும் பார்க்க விரும்பாததாலும் கண்படைத்த பயனை அது பெற்றுவிட்டதாலும் தந்த பார்வையைத் திரும்பவும் எடுத்துக்கொள்ளுமாறு பிரார்த்திக்க கண்ணிழந்தான் பெற்றிழந்தான் என்றாற்போல நடந்த நிகழ்ச்சி கூறும் தத்துவங்கள் எண்ணிறந்தவை. தூதுசென்ற அந்தத் தூயவனான மாயவன் அப்போது எடுத்த அந்தக் கரிய திருமேனியைக் கண்ணாரக் காணவேண்டுமென்று விரும்பிய பாண்டவ வம்சத்தில் உதித்த ஜனமேசயச் சக்ரவர்த்தியும், ஹாரித மஹாமுனியும் ஆற்றிய இடையறாத கடுந்தவத்திற்கு மனமிரங்கிய மாலவன் அவர்களின் அன்புக்கு இரங்கியவனாக ஸத்யவிரதக்ஷேத்ரமெனும் புண்ணியத் திருத்தலமாகிய காஞ்சிபுரத்தில் சேவை சாதித்த பாடகம் எனும் திருக்கோயிலே பாண்டவ தூதப் பெருமாள் கோயில். இந்தத் திருக்கோயிலில் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கும் அந்தக் கரியவனின் கண்கொள்ளாக் காக்ஷி மெய்சிலிர்க்க வைக்கும். பாடகம் ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற 108 வைஷ்ணவ திவ்ய க்ஷேத்ரங்களுள் தொண்டை நாட்டுத் திருப்பதிகளுள் முக்கியமானதாகும்.

"பாடகத்துள் இருந்தானை ஏத்துமென் நெஞ்சு" என்று பூதத்தாழ்வாரும் "மறைபாடக" "மனந்தன் வண்குழாய்க் கண்ணி இறை பாடியாய விவை" என்று பேயாழ்வாரும் "பாடகத்து மூரகத்தும் நின்றிருந்து வெஃகணைக்கிடந்தது என்ன நீர்மையே" என்று திருமழிசை ஆழ்வாரும் "கல்லார்மதில்சூழ் கச்சிநகருள் நச்சி பாடகத்து" என்று திருமங்கை ஆழ்வாரும் மங்களாசாஸனம் செய்த பெருமை பெற்றது பாடகமெனப்படும் பாண்டவதூதப் பெருமாள் திருச்சந்நிதி.

"உற்று வணங்கித் தொழுமின் உலகேழும்
முற்றும் விழுங்கும் முகில்வண்ணன் – பற்றிப்
பொருந்தாதான் மார்பிடந்து பூம் பாடகத்து(ள்)
இருந்தானை ஏத்தும் என் நெஞ்சு."


(பூதத்தாழ்வார்.)


ஆழ்வார்கள் அனுபவித்து மங்களாசாஸனம் செய்ததுபோல் பல வைணவ ஆசார்ய புருஷர்களாலும் சேவிக்கப்பட்ட பெருமை வாய்ந்தது பாண்டவ தூதப்பெருமாள் திருச்சந்நிதி. பேரருளாளப் பெருமானுக்கு தீர்த்த கைங்கர்யம் செய்து பின்னர் விசிஷ்டத்வைத ஸித்தாந்தத்தை நிலைநாட்ட ஸ்ரீ ரங்கத்திற்கு எழுந்தருளி எம்பெருமானார் என்று எல்லோராலும் போற்றப்பெற்று ஏற்றம்பெற்ற யதிராசர் ஸ்ரீமத்ராமானுஜரின் வைபவத்தைக் கேள்வியுற்ற யக்ஞமூர்த்தி என்ற ஏகதண்டி சன்யாசி ராமானுஜரை யதிராஜராக ஏற்றுக் கொள்ள மனது இடங்கொடாததால் காழ்ப்புணர்ச்சியோடு ராமானுஜருடன் வாதப்போர் புரிய வடக்கிருந்து தென்னகம் வந்தார். ஆந்திரப் பிரதேசத்து நெல்லூர் மாவட்டத்தில் புச்சிரெட்டி பாளையம் என்ற கிராமத்துக்கு அருகாமையிலுள்ள விஞ்சமூர் எனும் சிற்றூரில் தோன்றியவர் யக்ஞமூர்த்தி. வேதசாஸ்திர விற்பன்னராகவும் விளங்கிய அவருக்கும் ஸ்ரீமத் ராமானுஜருக்கும் விவாதம் தொடங்கியது. வாதத்தில் தோற்றால் தாம் ஸ்ரீபாஷ்ய கைங்கர்யத்தையே நிறுத்தி விடுவதாக ஸ்ரீமத் ராமானுஜரும், யக்ஞமூர்த்தி தோற்றல் அவர் ராமானுஜரை ஆசார்யராக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பாரதப்போர் போல பதினெட்டு நாள் வாதப் போர் கடுமையாக நடந்தது. பதினேழாம் நாள் யக்ஞமூர்த்தி எழுப்பிய வினா எதிராஜரை ஒருநாள் காலக்கெடு கேட்கும்படி செய்தது. எதிராஜர் வரதராஜனை வேண்ட பேரருளாளன் பெருங்கருணையோடு வினாவுக்கான விடை ஆளவந்தார் அருளிச்செய்த மாயாவாத கண்டனத்தில் இருப்பதை எடுத்துக்காட்டி உதவி அருளினார். பதினெட்டாம்நாள் பாஷ்யகாரரின் பதிலைக்கேட்டுப் பதைத்துப் பரவசமடைந்த யக்ஞமூர்த்தி ஸ்ரீமத் ராமானுஜரின் திருவடிகளில் தண்டனிட்டுத் தம்மை சிஷ்யனாக ஸ்வீகரித்தருளும்படி பிரார்த்தித்தார். யதிராஜரும் பரமகாருண்யத்தினால் யக்ஞ மூர்த்தியைக் கடாக்ஷித்து வரதராஜப்பெருமாளின் பெருங்கருணையை எடுத்துரைத்தருளினார். ஸ்ரீமத் ராமானுஜரால் ஸமாஸ்ரயணம் செய்விக்கப்பெற்ற யக்ஞமூர்த்தி பேரருளாளனாகிய வரதராஜப் பெருமாளின் பெயரையும் எம்பெருமானாரின் திருப்பெயரையும் இணைத்து "அருளாளப்பெருமான் எம்பெருமானார்" என்ற பட்டப்பெயருடன் விளங்கினார். பாரதப்போரில் பகவத்விஷயத்தை பார்த்தனுக்கு பரிந்துரை செய்த பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் பாண்டவதூதனாக எழுந்தருளியிருக்கும் சந்நிதியில் அருளாளப் பெருமான் எம் பெருமானார் பலகாலம் எழுந்தருளியிருந்து விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை வ்யாபகபடுத்துவதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு ஆசார்யச்ரேஷ்டராக விளங்கினார். அந்த ஆசார்யர் வம்ச வழியில் வந்தவர்களே தொடர்ந்து இன்றளவும் பாண்டவதூதப் பெருமாள் சந்நிதியில் திருவாராதன கைங்கர்யத்தில் ஈடுபட்டு இருக்கின்றனர். பெரிய காஞ்சிபுரம் கங்கைகொண்டான் மண்டபத்திற்கு அருகாமையில் அமைந்து இருக்கும் பாண்டவதூதப் பெருமாள் கோயிலின் விமானத்திற்கு வடபாகத்திலும் தென்பாகத்திலும் காணப்படும் கல் வெட்டுகளிலிருந்து இக்கோயில் குலோத்துங்க சோழனால் திருப்பணி செய்யப்பட்டிருக்கும் செய்தி தெரியவருகிறது. பெருமானின் மணிமகுடம் விதானத்தைவிட உயர்ந்திருப்பதால் தளம் கூம்பி குகைபோல் வரிசை இடாமல் குறுகி மேலே மறைந்துள்ளது. இத்தலத்தில் பத்ர விமானத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் பாண்டவ தூதன் பெரிய திருமேனியுடன் கம்பீரமாக அமர்ந்து

கிழக்கே திருமுகமண்டலத்தோடு அபயஹஸ்தத்துடன் சரணாகதி தத்துவத்தை உணர்த்தும் திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். சுமார் 25 அடி உயரம் கொண்ட பெரிய திருமேனியுடன் இங்கு பகவான் கிருஷ்ணன் பாண்டவதூதனாக ஸேவை ஸாதிக்கிறான். கோயிலுள் மச்சதீர்த்தம் புஷ்கரணியுள்ளது.

சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் இப்பெருமானுக்கு ஒவ்வொரு வருடமும் ஆவணிமாதம் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி முதற்கொண்டு பத்து நாட்களுக்கு ப்ரம்மோத்ஸவமும் கார்த்திகை மாதம் பரணி திருநக்ஷத்திரத்தில் இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அருளாளப்பெருமான் எம்பெருமானுக்கு சாற்றுமுறை உற்சவமும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தாயார் திருநாமம் ருக்மணிதேவித் தாயார். தன்னை சரணடைந்தோரை ரக்ஷிக்கும் பொறுப்பு தமதே என்ற சரமஸ்லோகப் பொருளை உணர்த்தும் ஸ்ரீ பாண்டவ தூதப் பெருமானை ஸேவித்து ஸகல சௌபாக்கியங்களையும் பெற்று நலமோடு வாழ்வோமாக.





மாவின்கீழ் மாதேவன்

[ஸ்ரீ ஏகாம்ரேஸ்வரர் திருக்கோயில்]

பஞ்சபூத க்ஷேத்ரங்களில் ப்ருத்வி க்ஷேத்ரமாக போற்றப்படுவது தென்னகத்தின் தொண்டைமண்டலத்துத் தலமான காஞ்சிமாநகரமாகும். இங்கு சைகதலிங்கம் – மணல்லிங்கம் ரூபத்தில் எழுந்தருளிஇருக்கும் ஈசன் ஏகாம்ரேஸ்வரர் என போற்றப்படுகிறார்.

எங்கும் நிறைந்திருந்து எல்லாவற்றிற்கும் காரணமாய், எல்லாவற்றையும் தன் ஸங்கல்பத்தினால் தோன்றச் செய்து, தம் பரமகாருண்யத்தினால் எல்லாவற்றையும் காத்து, ப்ரக்ருதியை புருஷனாகிய தன்னிடமிருந்து வேறாக எண்ணும்படிச்செய்யும் மாயையதனைத் தமது ஞானசக்தியினால் போக்கி அனைத்தையும் ஆட்கொண்டு, அனைத்தும் தாமே என்பதனை, அவை உணருமாறு செய்து, எல்லாமுமாய் இலங்கும் ஈஸ்வரனின் ஸர்வக்ஞத்வமும் சர்வ வ்யாபகத்வமும், சர்வ சக்தித்வமும், சர்வ ஸௌலப்யத்வமும், சர்வ ரக்ஷகத்வமும், ப்ரக்ருதியின் சகல அம்சங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பதை உலகுக்கு உணர்த்த, ப்ரக்ருதி ஸ்வபாவங்களாகிய பஞ்ச பூதங்களில் ஈஸ்வர சக்தி நிலைத்திருப்பதை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்த திவ்ய சிவஸ்தலங்கள் பஞ்சலிங்கேஸ்வர க்ஷேத்ரங்கள் என்று புராணங்களில் புகலப்படுகின்றன.

ப்ருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்பன பஞ்ச பூதங்களாகும்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐந்து ரூபங்களாகச் சிவபெருமான் ஐந்து சிவ க்ஷேத்ரங்களில் எழுந்தருளி அடியார்களை ஆட்கொள்கிறாரென்பதால் இந்தப் பஞ்சலிங்கேஸ்வர க்ஷேத்ரங்கள் பிரசித்தி பெற்று உள்ளன.

தமிழ் நாட்டில் தொண்டை மண்டலத்தில் ஸத்யவ்ரத க்ஷேத்ரம், ப்ரளயஜித் க்ஷேத்ரம், திருக்கச்சியேகம்பம் என்றெல்லாம் பெயர் பெற்று காஞ்சி மாவட்டத்தின் தலைநகராகத் திகழும் காஞ்சி மாநகரம் ப்ருத்வி க்ஷேத்ரமாகவும், திருச்சிராப்பள்ளி திரு ஆனைக்கா என்றழைக்கப்படும் ஜம்பு கேஸ்வரம் அப்புலிங்க க்ஷேத்ரமாகவும், திருவருணை என்றும் திருவண்ணாமலை என்றும் திகழ்கின்ற அருணாசலேஸ்வரம் ஜ்யோதிர்லிங்கத் தலம் எனவும் அக்னிக்ஷேத்ரமாகவும், ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் ஸ்ரீ காளஹஸ்தி வாயுலிங்கத் தலமாகவும், தமிழ் நாட்டின் தென் ஆற்காடு மாவட்டத்தில் சிறந்த சிவக்ஷேத்திரமாகத் திகழும் சிதம்பரத்தில் சிதாகாச ரூபியாய் சித்சபையில் திருநடனம் புரிகின்ற தில்லைத் திருத்தலம் ஆகாச க்ஷேத்ரமாகவும் விளங்கும் பஞ்சபூத க்ஷேத்ரங்களாகும். சிவ க்ஷேத்ரங்களில் ப்ருத்வி க்ஷேத்ரமாகத் திகழும் கச்சியம்பதியில் ப்ருத்வி லிங்கமாக விளங்குபவர் ஸ்ரீ ஏகாம்ரேஸ்வரர்.

ஒரு சமயம் கைலாசத்தில் போகமூர்த்தியாய் அம்பிகையோடு அர்த்தாஸனத்தில் வீற்றிருந்தபோது, லீலாவினோதமாக, இறைவனின் இரு கண்களையும் இறைவி விளையாட்டாக பொத்தியதும், இறைவனின் இருவிழிகளாக விளங்கிய ஸூர்ய, சந்திரர்களின் ப்ரகாசமும் மறைக்கப்பட்டு அகிலமே இருளில் ஆழ்ந்து, பிராணிகளுக்குத் துன்பம் நேரிடக் காரணமாகியது. அதுசமயம் பிராணிகளிடத்துப் பரம காருண்யத்தினால் முக்கண்ணனாகிய பெருமான் அக்னி நேத்ரமாகிய தம் மூன்றாவது கண்ணைத் திறந்து உலகுக்கு ஒளி தந்து ஆட்கொண்டதோடு, ஜீவராசிகளுக்குச் சிரமம் ஏற்படுத்தியதால் அம்பிகையைப் பிராயச்சித்தமாகப் பூவுலகில் தவம் செய்யவும் பணித்தார்.

அம்பிகையும் ஐயனின் தர்ம சிந்தனைக்குத் தலைவணங்கிப் பூமியின் நாபிஸ்தானமாக விளங்குவதும் ஸத்யவ்ரதமென்று புகழ் பெற்றதும் ஆகிய காஞ்சியில் தவம் கொள்ளவெண்ணிப் பதரிகாச்ரமத்தில் ஒரு குழந்தை வடிவங்

கொண்டு தோன்றினாள். புத்ரபாக்யம் வேண்டிப் பத்ரியில் தவமிருந்த காத்யாயன முனிவர் குழந்தை வடிவிலிருந்த அம்பிகையைக் கண்டு எடுத்துவந்து தம் ஆஸ்ரமத்தில் வளர்த்து வந்தார். இதனால் அம்பிகைக்குக் காத்யாயனி எனும் காரணப் பெயர் ஏற்பட்டது. காத்யாயனி பால்யத்தை அடைந்ததும், அம்பிகையின் அவதார காரணத்தை அறிந்த காத்யாயனர், அவளுக்கு யோகதண்டம், ஜபமாலை, தீபஸ்தம்பம், புலித்தோல், புத்தகம், வறுத்த பயறு, கங்கை மணல், கங்கா தீர்த்தம், குடை, விசிறி, இரண்டு சாமரம் ஆகியவற்றைத் தந்துத் தென் திசையில் சென்று ஸத்யவ்ரத க்ஷேத்திரத்தை அடைந்து, ஐயனைக் குறித்துத் தவமிருக்கச் சொல்லிக் காஞ்சியைக் கண்டறிய சில அடையாளங்களையும் தெரிவித்து மங்களநாயகி மங்களம் பெற வாழ்த்தி அனுப்பிவைத்தார்.

பதரிகாச்ரமத்திலிருந்து புறப்பட்ட காத்யாயனி காசிக்கு வந்து, அங்கு மழையின்மையினால் வறுமை ஏற்பட்டு மக்கள் வாடுவதைக் கண்டு மனமிரங்கித் தன் அருட்கடாக்ஷத்தினால் மழை பெய்வித்ததோடு பயிர்கள் நன்றாக வளர்ந்து தான்ய ஸம்ருத்தியோடு விளங்கும்படி அருள் புரிந்து அன்னதானம் செய்து ப்ரஜைகளைப் பட்டினிப் பிணியிலிருந்து விடுவித்து அன்னபூரணி எனப் பெயர்பெற்று காசியிலிருந்து காஞ்சியை வந்தடைந்தாள். காத்யாயன முனிவர் அடையாளமாகச் சொன்னதுபோல், புலித்தோல் சோமவிருத்தமாகவும், குடம் ஆதாரபீடமாகிய அதன் ஸூத்ரமாகவும், கங்கை மணல் லிங்க ரூபமாகவும், ருத்ராக்ஷ மாலிகை பில்வ மாலையாகவும், குடை நாகாபரணமாகவும், யோக தண்டம் திரிசூலமாகவும், விசிறி கிளியாகவும், சாமரங்கள் இரண்டும் இரு பெண்களாகவும், புத்தகம் காமதேனுவாகவும், வித்யாதாரம் ஊசியாகவும், வறுத்த பயறு முளையோடு கூடியதாயும் மாறிடவே, அத்திருத்தலமே ஸத்யவ்ரத க்ஷேத்திரமாகிய காஞ்சி க்ஷேத்திரம் என்பதனை உணர்ந்து அம்பிகை, நான்கு வேதங்களையே கிளைகளாகக் கொண்ட ஆம்ர விருக்ஷத்தின்கீழே, (மாமரத்தின் கீழ்) மணலால் லிங்கம் அமைத்து இரு பெண்களையும் காவலாக வைத்துப் பஞ்சாக்னியை வளர்த்து அதன் நடுவே ஊசியின் முனையில் நின்று பரமேஸ்வரனைத் தியானித்து தவமியற்றி வந்தாள்.

காஞ்சியில் மாவடியின்கீழ் தவம் புரிந்துவந்த அம்பிகையின் பக்தியின் உறுதியை விளங்கச் செய்யும் பொருட்டு அம்பிகையின் தபோநிஷ்டையைச் சோதிப்பது போல், திருவிளையாடல் புரியத் திருவுளங்கொண்ட இறைவன் தம் திருமுடியில் வசிக்கும் கங்கையை இறக்கிவிடவே, அது பெரும் வெள்ளமாகப் பெருக்கெடுத்து மஹாதேவி தவம் புரியும் இடத்தை நோக்கி வந்தது. ஜலப்ரளயம் போல் பயங்கரமாக வெள்ளம் வருவதைக்கண்டு அஞ்சிய காத்யாயனி கம்ப, கம்ப (பயம், பயம்) என நடுக்க முற்றாள். எனவே இதற்குக் கம்பாநதி எனும் பெயர் ஏற்பட்டது. அம்பிகையும் அப்பிரளயத்தை தடுக்கவெண்ணி தமது தோழியருள் ஒரு சக்தியை அந்த வெள்ளத்தை தடுக்கும்படி கட்டளையிட்டாள். அந்தச் சக்தி காளி ரூபமெடுத்து, அவ்வெள்ளத்துக்கெதிர் நின்று தன் கையிலிருந்த கபாலத்தில் அப்பெருவெள்ளத்தை உள்ளடக்கினாள். அதனால் அந்தச்சக்தி மஹா ப்ரளயபந்தினி, ப்ரளயம் காத்த மாதா எனும் பெயர் பெற்றாள்.

சிவபெருமானும் தன் திருவிளையாடலைத் தொடர்ந்தார். கபாலத்தில் அடங்கிய வெள்ளம் பெருவெள்ளமாகக் கபாலத்திலிருந்து வெளியே வரச் செய்தார். கபாலத்தில் அடங்கி இருந்த வெள்ளம் மீண்டும் பெருகி வருவதைக் கண்டு அம்பிகை ஆபத்பாந்தவனாகிய தனது சகோதரன் திருமாலைத் துணைபுரியும்படி வேண்டினாள். திருமாலும் விஸ்வரூபமெடுத்து பூமியில் பாதங்களும் ஆகாயத்தில் முடியுமாகக் தனது கண்டத்தில் சந்திரகிரணம் விளங்க பேருருவம் கொண்டு அவ் வெள்ளத்தைத் தடுப்பார் போன்று நின்று தஞ்சமடைந்த தங்கையை நோக்கி அவளது தவத்தைச் சோதிப்பதற்கு சிவபெருமானே வெள்ளத்தைத் தோற்றுவித்திருப்பதைத் தெளிவுபடுத்தி அவனைச் சரணடைந்து தவப்பயனைப் பெறும்படி அருளிச் செய்தார். சந்திரகண்டராய், நிலாத்துண்டப் பெருமானாகக் காட்சி தந்து நிலைமையை நாரணன் நன்கு தெளிவுபடுத்தவே அம்பிகையும் தாம் அமைத்த மணல் லிங்கம் நீரில் கரைந்து போகாமலிருக்கத் தம்மிரு கரத்தினாலும் அணைப்போல் தடுத்து ஆலிங்கனம் செய்து தழுவினள். எம்பெருமானும் பிராட்டியாரது மார்பும் வளைத் தழும்பும் தமது திருமேனியில் அழுத்தம் பெறவே அகமகிழ்ந்து காமேசராய்க் காத்யாயினியை ஆட்கொண்டருளினார்.

அம்பிகையினால் ஆராதிக்கப்பெற்ற மணலாலான லிங்கஸ்வரூபத்தில் ஸர்வேஸ்வரன் வேதஸ்வரூபமான மாவின்கீழ் மாதேவன், தழுவக் குழைந்த தலைவனாக, ஏகாம்ரேஸ்வரராக எழுந்தருளினார். ஏகாம்ரம் அதாவது ஒற்றை மாமரத்து ஈசன், சூதநாதர், ஏகாம்ரேஸ்வரர், ஏகாம்ரநாதர் எனவும், கச்சித்திருஏகம்பன் எனவும் இறைவன் போற்றப்படலானார். அம்மையையும் ஐயனையும் கல்யாணக் கோலத்தில் காண ரிஷிகளும், பூதகணங்களும் விருப்பப்படவே ஏலவார்குழலி என்ற பெயருடன் அம்பிகையைக் கரம்பற்றிக் கல்யாணகோலத்தில் காட்சி தந்த சம்பவம் பங்குனி உத்திர நன்னாளில் திருமணவைபவம், பிரம்மோற்சவத்தில் வெகு சிறப்பாக இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது. காமாக்ஷி அம்மையே காமேஸ்வரியாக, ஏலவார் குழலியாகக் காமேஸ்வரனாகிய ஏகாம்ரேஸ்வரனை அடைந்ததாக கருதப்படுவதால் இப்பெருமான் திருக்காமாக்ஷியம்மை இடங்கொண்ட திருவேகம்பநாதர் என்றே அழைக்கப்படுகின்றார்.

ப்ருத்வி லிங்கமாக் காஞ்சி க்ஷேத்ரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்ரநாதரின் மஹிமையைப் புராணங்கள் பெரிதும் புகலுகின்றன. சைவ சமய ஆசார்யர்களாகிய நால்வரும் இந்நாயகனைப் போற்றிப் பாடியுள்ளனர்.

"தூயானை தூயவா யம்மறை யோதிய
வாயானை வாளர க்கன்வலி வாட்டிய
தீயானைத் தீதில் கச்சித் திருவேகம்பம்
மேயானை மேவுவா ரென்றிலை மேலாரே"

என்று திருஞானசம்பந்தரும்,

"மூக்குவாய் செவி கண்ணுடலாகி வந்(து)
ஆக்கும் ஐவர்தம் ஆப்பை அவிழ்ந்தருள்
நோக்குவான் நமைநோய் வினைவாராமே
காக்கும் நாயகன் கச்சியே கம்பனே"

என்று அப்பர் ஸ்வாமிகளும்,

"ஆலந்தான் உகந்தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலம்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பா ரவர்தம் சிந்தையுளானை
ஏலவார் குழலாள் உமைநங்கை
என்றுமேத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பனெம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே"

என்று சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளும் "தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சி திருவேகம்பன்" என்று மணிவாசகப் பெருமானும் கச்சி ஏகம்பனின் புகழைப் போற்றிப் பாடியுள்ளார்.

"மணிமுலைக் குவட்டினோடு வளைக்கையால் நெருங்கிப் புல்லித்தணி வருங்காதல் விம்மக்காதலி தழுவலோடும், திணி அருள் அறுக்குஞ்சோதித் திருவுருக் குழைந்து காட்டி, அணிவளைத் தழும்பினொடு முலைச்சுவடணிந்தார் ஐயர்" என்று திருவேகம்பன், அன்னையைத் தழுவப் பரவசமடைந்து குழைந்த ஸம்பவம் காஞ்சிப் புராணத்தில் அழகுறச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

கச்சி ஏகம்பனின் கதையைப் படித்தறிய முடியாப் பாமரர்களும் பக்தி பரவசத்தோடு அறிந்து ஆனந்திக்கும் வகையில் நாட்டுப் பண்ணிசையில் நல்லதொரு கிராமிய நெடும்பாடல் தொகுப்பாகக் "கச்சியேகம்பன் கைச்சிலம்புப் பாட்டு" என்ற பெயரில் காஞ்சி கோட்டையப்ப நாயகர் எனும் கோட்டையப்ப புலவர் தம் பாடல்களில் அம்பிகை கைலையங்கிரியிலிருந்து காஞ்சியை வந்தடைந்து கம்பா நதிக்கரையில் மாவின்கீழ் மணலால் லிங்கம் அமைத்துப் பூஜித்து நற்பேறடைந்த வரலாற்றை வெகு சிறப்பாகச் சித்தரித்துள்ளார்.

கொன்ற நல்ல மரிக்கொழுந்தாம்
கொம்பனையாள் தான் எடுத்தாள்

ஆத்து நல்ல மணலெடுத்து
அரனாரையும் பூஜை செய்தாள்!
சேர்த்து நல்ல மணலெடுத்து
சிவனாரையும் பூஜை செய்தாள்!
தங்க நல்ல துரடெடுத்து
தாழம்பூ வைத்தான் எடுத்தாள்!
வெள்ள நல்ல துரடெடுந்து
வேண்டும் புஷ்பம் தானெடுத்தாள்!
பலவித புஷ்பங்களை பக்தியுடன் தானெடுத்து
பரமனையும் பூஜை செய்தாள்!

என்ற கோட்டையப்பப் புலவரின் பாடலில் அறம் வளர்த்த அம்பிகை அரனைப் பூஜித்த அரிய காட்சி அழகுறச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

சோமாஸ்கந்த மூர்த்தியாய் ஸச்சிதானந்தத்தை நல்கும் நாயகன் ஸதாசிவன், ப்ருத்வி லிங்கமாகப் பூமியைக் காத்து ரக்ஷிக்கும் பரமகாருண்யனாகக் காஞ்சியில் விளங்குகிறானென்கிறது. கச்சி ஏகம்பனின் கருணையை, "சிந்தயமாம் கந்தமுல கந்தம்" என்ற கிருதியில் ஸங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்து ஸ்வாமி தீக்ஷிதர் போற்றியுள்ளார். பட்டினத்தாரும் இப்பெருமானைப் போற்றிப் பாடியுள்ளார்.

ப்ருத்வி லிங்கமாகக் காஞ்சியில் கோயில் கொண்டிருக்கும் திருவேகம்பநாதர் திருக்கோயிலைப் பற்றிய குறிப்புகளைப் பெரிய புராணம், காஞ்சிப்புராணம், மணிமேகலை, மத்த விலாச ப்ரஹஸனம் முதலிய பல நூல்களில் காணலாம். புராண பிரசித்தியும், வரலாற்றுச் சிறப்பும் பெற்று காஞ்சி ஏகாம்ரேச்வரர் திருக்கோயில் சிற்பக்கலையின் சிறப்புக்குச் சிகரமான கலைக்கோயிலாகவே விளங்குகிறது.

காஞ்சியில் மிகப்பெரிய கோபுரத்தைக் கொண்டதும் மிக விசாலமானதும் ஏகாம்ரேச்வரர் திருக்கோயில் ஒன்றே. சுமார் 58 மீட்டர், அதாவது 192 அடி

உயரமுடைய இக்கோயிலின் இராஜகோபுரம் ஒன்பது நிலைகளைக் கொண்டது. இது விஜயநகரத்தை அரசாண்ட ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் எனும் மன்னனால் 1509–ஆம் ஆண்டில் கட்டப்பெற்றது. சென்னையிலிருந்து பூவிருந்தவல்லி, ஸ்ரீபெரும்பூதூர் வழியாக காஞ்சிபுரம் வரும் பக்தர்கள் வானளாவி நிற்கும் இக்கோபுரத்தை நெடுந்தொலைவிலேயே தரிசிக்க முடிகிறது. கோபுரத்தின் இருபுறங்களிலும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் மிகப் பெரிய கணபதி, ஸுப்ரமண்யர் சந்நிதிகள் உள்ளன.

கோபுர விநாயகரை வணங்கி உள்ளே சென்றதும். சரபேச மண்டபம் என்றழைக்கப்படும் வாஹன மண்டபம் உள்ளது. இதனை நவராத்திரி மண்டபமென்றும் அழைக்கின்றனர். ராஜகோபுரத்தையடுத்து உட்பிராகாரத்தில் ஆயிரங்கால் மண்டபம் இருக்கின்றது. ஆயிரங்கால் மண்டபத்திற்குச் செல்லும் வழியில் தற்போது குளமாகக் காக்ஷியளிக்கும் கம்பா நதியைத் தரிசிக்கலாம். குளமாக காக்ஷியளித்தபோதிலும் கம்பா நதி அந்தர்வாஹினியாகப் பூமிக்கடியில் ஓடுவதாகக் கருதப்படுகிறது. இந்நதிக்கரையில் தான் அம்பிகை தவமிருந்ததாக வரலாறு. ஆயிரங்கால் மண்டபத்தில் முகப்பில் அமைந்துள்ளதே இத்தலத்தின் விநாயகர் ஸந்நிதியாகிய விகடசக்கர விநாயகர் ஸந்நிதி. விஷ்வக்ஸேனர் விகடக் கூத்தாடி இந்த விநாயகரை மகிழ்வித்து அவரிடமிருந்து சக்கரப் படையைப் பெற்றதனால், இந்த விநாயகருக்கு விகடசக்கர விநாயகர் என்ற பெயர் உண்டாயிற்று என்று இரட்டைப் புலவர்கள் பாடியுள்ள திருவேகம்பநாதர் உலாவில் இந்த விகடசக்கர விநாயகரைப் போற்றிப் பாடப்பெற்றுள்ளது.

கோயிலின் கொடிக்கம்பத்தின் பக்கத்திலுள்ள திருக்கச்சி மயானமென்றழைக்கப்படும் ஸந்நிதியும் அதன் முன்பு வள்ளல் பச்சையப்ப முதலியார் மண்டபம் எனப்படும் கல்யாண மண்டபமும் உள்ளன. ஏகாம்ரநாதர் ஆலயத்து எல்லைக்குள் நாற்புறமும் அமைந்திருப்பவை திருக்கச்சி மயாணம், வாலீசம், ரிஷபேசம், ஸத்யநதீசம் எனப்பெறுபவை.

ஆலயத்திலுள்ள பெரிய புஷ்கரணி சிவகங்கைத் தீர்த்தம் எனும் புண்ய

தீர்த்தமாகப் போற்றப்படுகிறது. கோயிலினுள் சென்றதும் உயர்ந்த மேற்கூரையும், நெடிய தூண்களும் அவற்றின்மேல் செதுக்கப்பட்ட சிற்பங்களும் கண்கவரும் கலை பொக்கிஷமாக காக்ஷி தருகின்றன. இவற்றுள் ஒரு தூணில் கயிலையில் அம்பிகை அரனின் கண்களைப் பொத்திய காக்ஷியும், அதன் நேர் எதிரிலுள்ள தூணில் இறைவியின் தவத்துக்கிரங்கி இறைவன் இறைவியைக் கரம் பற்றிய கல்யாணக் கோலமும் வெகு அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

கோயிலின் உள்ளே முதற்சுற்றுப் பிரகாரத்தில் ப்ரளயகாலத்து வெள்ளம்போல் பெருக்கெடுத்து வந்த கம்பா நதியின் வெள்ளத்தைத் தன் கையிலுள்ள கபாலத்தில் அடக்கிய ப்ரளயப்ந்தினி எனும் பெயர் பெற்ற சக்தியின் சந்நிதியும் அதனையடுத்துள்ள மண்டபத்தில் சோமாஸ்கந்த வடிவத்தில் உற்சவ மூர்த்தியும் எழுந்தருளியுள்ளார்கள். அதை யொட்டியுள்ளதே இத்தலத்தின் தவ விருக்ஷமாகிய மாவடியாகும். நான்கு வேதங்களும் நான்கு கிளைகளாகத் தழைத்து விளங்கும் இம்மாவடியின் கீழே, மணலால் லிங்கம் அமைத்து அம்பிகை அரனை ஆராதித்த புனிதத் தலம் உள்ளது.

இந்த மரம் 3500 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றும், மரத்தின் நான்கு கிளைகளினின்றும் நான்கு விதமான சுவைகள் பொருந்திய கனிகள் கிடைப்பதாயும் முன்னொரு காலம் ப்ரளய காலத்தில் தனித்து நின்று தவித்த மார்கண்டேய முனிவருக்கு ஆதரவாய் ஸாக்ஷாத் ஸர்வேச்வரனின் ஸ்வரூபமாய் நின்ற மாமரமே இதுவென்று கருதப்படுகின்றது. மாவடியின் கீழ் சிவபெருமான் ஸோமாஸ்கந்த வடிவில், சின்முத்திரையுடன் வீற்றிருக்கிறார். இப்பீடத்தின் கீழே தபஸ் காமாக்ஷி உருவமும், அருகே லிங்கோத்பவரும் அடுத்து அம்பிகை ஐயனை ஆலிங்கனம் செய்துகொண்ட "தழுவக் குழைந்த" காக்ஷியும் தரிசிக்கப்படுவனவாம்.

மாவடியை அடுத்த மாவடிக்கந்தன் ஸந்நிதி, ஏலவார் குழலியம்மை திருச்சந்நிதி ஆகியவை அமைந்துள்ளன. உட்சுற்று முழுவதும் பல்வேறு லிங்கங்கள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் ஆயிரத்தெட்டு லிங்கங்கள், ஒரே லிங்கத்தில் அமைந்தாற்போல் விளங்கும் ஸந்நிதியே, ஸஹஸ்ரலிங்கேஸ்வரர்

ஸந்நிதி. உட்பிராகாரத்தில், அறுபத்துமூவர் விக்ரஹங்களும், உத்ஸவ மூர்த்திகளுடன் உள்ளன. ஆனந்த நடனமிடும் ஐயன் அம்பலக்கூத்தனுக்கு அழகான ஸந்நிதியும் இங்கு அமைந்துள்ளது. உட்பிரகாரத்தில், மேற்கு நோக்கி அமைந்துள்ள திருமாலின் ஸந்நிதி நிலாத்திங்கள்துண்டத்துப் பெருமாள் சந்நிதியாகும். இப்பெருமாள் ஏகாம்ரேஸ்வரருக்கு எதிரே, நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். க்ஷீரஸாகர மதனத்தின்போது பாற்கடலினின்று உருவான விஷ வெம்மையினால் தாளவொண்ணாத் தாபத்துக்காளாகிய திருமாலின் திருமேனியின்மீது த்ரியம்பகனின் ஜடையில் உள்ள சந்திரனின் சீதளக்கதிர்கள் பட்டு தாபோபசமனம் பெற்றமையினாலும், அம்பிகையின் தவத்தைச் சோதிக்கும்பொருட்டு சிவ பெருமானின் ஜடை முடியிலிருந்து வெளிப்பட்ட ஜலப்ரளயத்தைத் தடுத்து நிறுத்தும்பொருட்டு விண்ணளாவி எழுந்த விஷ்ணுவின் கண்டத்தில், நிலவொளியின் குளிர் கிரணங்கள் பட்டொளி வீசியதாலும், இப்பெருமாள், “நிலாத்திங்கள்துண்டத்துப் பெருமாள்” என்றழைக்கப்படலானார். இச்சந்நிதி திருமங்கை யாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற 108 ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசங்களில் ஒன்று.

கர்ப்பக்ரஹத்தில் மஹேசன், மணல் லிங்கரூபியாக எழுந்தருளியிருக்கிறார். மணலினாலான லிங்கமாதலின் ஸ்வாமியின் மீது வெள்ளிக்கவசம் சாத்தப்பெற்றுள்ளது. அபிஷேகப் பிரியனாகிய சிவபெருமான் இத்தலத்தில் ப்ருத்வி லிங்கமாக எழுந்தருளியுள்ள தால் ஆவுடையாருக்கே அபிஷேகம் நடைபெறுவதும் லிங்கத்திற்குப் புனுகு சட்டம் சாத்தப் பெறுவதும் இன்றளவும் நடந்து வருகின்றது.

புராணப் புகழ் படைத்த புண்ணியத் திருத்தலத்தில் அமைந்துள்ள தொன்மையான இத்திருக்கோயிலை அவ்வப் போது பல மன்னர்கள் சீர்படுத்தியும், செப்பனிட்டும், விஸ்தரித்தும் சிறப்பான திருப்பணிகள் செய்து வந்துள்ள செய்திகளைச் செப்புகின்ற ஏராளமான கல்வெட்டுக்கள் இன்றும் இத்திருக்கோயிலில் காணக்கிடைக்கின்றன.

சோழ, பல்லவ, விஜயநகர மாமன்னர்களாலும் பின்னர் ஆங்கிலேயர்

ஆட்சியில், 1779 ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் பதவியிலிருந்த ஹட்சன்துரையினாலும் 1900 ஆம் ஆண்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களாலும் பல திருப்பணிகள் செய்து பாதுகாக்கப்பட்டு வந்த இந்தத் திருக்கோயிலின் திருப்பணிகள் அண்மையில் 1979 ஆம் ஆண்டில் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீஜயேந்த்ர சரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகளின் கருணைசெறிந்த முயற்சியினால் நிறைவேற்றப்பட்டு மஹா கும்பாபிஷேகமும் செய்விக்கப்பட்டது. வருடத்தின் பன்னிரெண்டு மாதங்களிலும் இந்தத் திருக்கோயிலில் விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன.


பங்குனி மாத உத்திரப் பெருவிழாவே இங்கு ப்ரஹ்மோத்ஸவம். ப்ரஹ்மோத்ஸவத்தில் ஐந்தாம் திருநாள் காலை வெள்ளி அதிகாரநந்தி ஸேவை, மாலை கைலாஸபீட ராவணேஸ்வர வாகன சேவை, ஆறாம்நாள் காலை அறுபத்துமூவர், இரவு வெள்ளித்தேர், ஒன்பதாம் நாள் இரவு, வெள்ளி மாவடி ஸேவை, பத்தாம் நாளிரவு பங்குனி உத்திரத் திருக்கல்யாண உத்ஸவம் ஆகியவை சிறப்புப் பொருந்திய உற்சவங்களாகும். பங்குனி உத்திரத்தில் நடைபெறும் இறைவனின் திருக்கல்யாண மஹோத்ஸவத்தின் குறிப்பிடத் தகுந்த மிகப் பெரிய சிறப்பு இறைவன் இறைவிக்குத் திருக்கல்யாணம் நடக்கும் அதே சுபமுஹுர்த்த சுப வேளையில், இந்தத் திருக் கோயிலின் கல்யாண மண்டபத்தில் ஜாதி அந்தஸ்து வேறு பாடுகளில்லாமல் ஆயிரமாயிரவர் தங்கள் விவாஹங்களை நடத்திக்கொள்ளும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. இத்தகைய பல்வேறு சிறப்புகளும் சேர்ந்த திருக்கோயில் நாதரான ஏகாம்ரேஸ்வரர் நமக்குச் சொல்லாமல் சொல்லி உணர்த்தும் தத்துவப் பேருண்மைகள் ஏராளம். பிரளயமே வந்து பேரழிவு ஏற்படும் நிலையிலும் மனம் குலையாமலும், எடுத்துக்கொண்ட தவமுயற்சியிலிருந்து தளராமலும் ப்ரளயத்தையும் எதிர்த்து நிற்கும் மனவலிமை ஐயனின் அடிகளைத் தணையெனக் கொண்டோருக்கு ஏற்படுவதோடு அணுவளவும் இடையூறு ஏற்படாமல் சஞ்சலமற்ற நிலைதோன்றி, அஞ்சா நெஞ்சமும் எடுத்த செயலில் எண்ணிய வெற்றியும், அன்பும், அமைதியும் உண்டாகும். இவ்வாறு என்றும் களிப்புடன் வாழக் கச்சியேகம்பனின் கழலிணை துணை வரும்.

திருவேகம்பம் ஸ்ரீஏகாம்ரேசர் ஸந்நிதியில் அநேகசிவலிங்க மூர்த்தங்கள் எழுந்தருளி இருப்பதை காணலாம். திருவேகம்பத்தில் கொடிகம்பத்தினை அடுத்துள்ள தனிக்கோயில் திருக்கச்சிமயானம் சிவலிங்கம் உள்ளது. கருவறைவெளிச்சுவரில் கோஷ்ட மூர்த்தங்களாக துர்கை, பிரம்மா, லிங்கோத்பவர், விநாயகர் உருவங்கள் உள்ளன. திருவேகம்பம் உள் ப்ராகாரத்தில் உள்ள மார்க்கண்டேச சிவலிங்கத்திற்கு பக்கத்தில் சிறிய மண்டபத்தில் மத்தள மாதவேசம் சிவலிங்க மூர்த்தம் உள்ளது. இங்கு இறைவன் காப்பு நடனம் ஆடியருள திருமால் மாதவன் அதற்கேற்ப மத்தளம் வாசித்ததாக காஞ்சிப் புராணம் கூறுகிறது. மத்தள மாதவேசத்திற்கு பக்கத்தில் கள்ளக் கம்பம் சிவலிங்கமூர்த்தம் உள்ளது. சிவகங்கை தீர்த்தத்தின் மேற்க்குகரையில் உள்ள சிறியதனிக் கோயிலில் உள்ள சிவலிங்க மூர்த்தம் ரிஷபேசம். திருவேகம்பம் சந்நிதிக்கு நேர் எதிரில் வேளியேயுள்ள பெரிய நந்திக்கு பின்புறம் வாலிவழிபட்ட வாலீசம் தனிச்சந்நிதியுள்ளது. ஆயிரக்கால் மண்டபத்தினுள் ஸ்தலவிநாயகர் விகடசக்கர விநாயகரும், அதற்கு பக்த்தில் விடுவீசசிவலிங்க மூர்த்தமும் உள்ளன.

காஞ்சி ஏகாம்ரநாதர் திருக்கோயிலுக்கு பின்புறம் மேற்கு நோக்கிச் செல்லும் பஞ்சுப்பேட்டை பெரிய தெருவின் முடிவில், இடப்புறமாக ஓணகாந்தன்தளி எனும் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்தலத்து இறைவனை ஜலந்தரனின் சேனாதிபதிகளான ஓண்ன். காந்தன் என்ற இருவர் பூசித்துப் பேறு பெற்றனர். இவ்விருவர் பெயராலும் ஓணகாந்தேஸ்வரன் என இத்தல இறைவன் பெயர் வழங்கலாயிற்று. சுந்தரர் பொன் பெற்ற பதிகம் பாடி இத்திருக் கோயிலில் இறைவன் கருணையினால் பொன் பெற்றார் என்று கூறப்படுகிறது.

ஏகாம்பத்துறை எந்தாய்போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!!





Sri Adhi Sankara Bagavatpadhacharya

With Humble Pranamams :
Trustees
Parur Sri Sundaram Iyer Trust (Regd.)
F2, Kala Flats, 20, Kalvivaru Street, Mylapore, Chennai-4.



அவனி புகழ் ஆதிசங்கரரும், கருணைமிகு காமகோடி பீடமும்.

ஸ்ருதி ஸ்முருதி புரணானாம் ஆலயம் கருணாலயம்

நமாமி பகவத்பாதச’ங்கரம், லோகச’ம்கரம்!

அவனியில் அன்பு பெருகி அறம் வளர்ந்து அமைதி நிலவி ஆனந்தமாய் வாழ்வதற்கு இறையருளின் அவசியத்தை ஆன்றோர்கள் அனுபவபூர்வமாக உணர்ந்து உலகிற்கு எடுத்து உரைத்திருக்கின்றார்கள்.

குருவருளே திருவருளைப் பெற பெரிதும் துணைபுரிகிற தென்பதனை நம் பெரியோர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். உய்யும் நெறிக்கு வழிகாட்டிகளாக திகழ்பவர்கள் ஆசார்ய புருஷர்கள். அறியாமையினால் அகந்தைகொண்டு அல்லல்படும் அவனிவாழ் மக்கள் உண்மை நிலையினை அறியக்கூடிய பக்குவ நிலையை பெறுவதற்கு துணைபுரிந்து நிலையினை விளக்கி சிந்தையை தெளிவுபடுத்தி அன்பை வளர்த்து எவ்வுயிரையும் தன் உயிர்போல் எண்ணக்கூடிய பக்குவ நிலையினையடைந்து தன்னுள் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இறைத் தன்மையை மற்ற உயிர்களிடமும் கண்டு பண்பட்ட மனதோடு இறவாத் தன்மையைத் எய்துவதே ஜீவன் முக்தர்களின் நிலை. இந்நிலையினை அடைவதற்கு சாதனை தேவைப்படுகிறது. சாதனை என்பதற்குப் பயிற்சி என்று பொருள்.

நானிலத்தில் நற்பண்புகளுடன் நடந்து நலம் பல பெற்று நற்கதி அடைவதற்கு நல்வழிகாட்டி பக்தி நெறியில் நம்மை நடத்திச் செல்பவர்கள் நம் ஆச்சார்யர்கள். பயிற்சியைப் பெறுவதற்கு தெளிவான முறையைத்

தெளிவுபடுத்துபவர் ஸத்குரு என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஆச்சார்ய புருஷர்கள் என்றும், சமயாச்சார்யர்கள் என்றும், போற்றப்படுகின்றனர். காஞ்சியில் வசித்த சமயாச்சார்யர்களுள் ஸ்ரீ ஆதி சங்கரர் குறிப்பிடத்தக்கவர்.

சச்சிதானந்த மயமான ப்ரஹ்மம் ஒன்றே. இது வேதத்தின் தலையாய விளக்கமாகும். மனிதன் அகங்கார மமகாரங்கட்கு உட்பட்டு உலக விஷயங்களில் ஈடுபட்டு மாயவலையில் அகப்பட்டுக் கொண்டு, தன்னுள் அடங்கியிருக்கும் ஆத்மஞானத்தை அறியமுடியாமல் அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கும் மாய நிலையை நீக்கி மன மயக்கத்தை ஓட்டி, உள்ளத்தில் உள்ள மாசினை அகற்றி தன்னுள் இருக்கும் ஒளி மயமான மெய்யறிவை அறிவதற்கு உகந்த அத்வைத சித்தாந்தத்தை எடுத்துரைத்து, உலகை உய்விக்க அவதரித்த மகான் ஸ்ரீ ஆதிசங்கரர்.

"தன்னையறிய தனக்கு ஒருகேடுமில்லை. தன்னை அறியாமலே தான் கெடுகிறான்" என்ற திருமூலரின் வாக்கின்படி மனிதன், தான் பிரம்மத்தின் வடிவமே; தன்னுள் ப்ரம்மம் அடங்கியுள்ளது என்ற ஆன்மீக உண்மையை அறிய வேதங்கள், வேதாந்த ஆகமங்கள் உதவுகின்றன. ஆண்டவனை அடைய அவசியமான ஆன்ம ஞானமே வேதம். ஞானத்தை அடைய ஆகமங்கள் உதவுகின்றன. ஆத்ம தத்துவத்தைத் தெளிவுபடுத்தி "அஹம் ப்ரஹ்மாஸ்மி" "நான் ப்ரம்மம்" என்ற உண்மையை அறிய வழிகாட்டிகளாக உபநிஷத்துக்கள் விளங்குகின்றன. மமகார விகாரங்களை அகற்றி ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி பரமாத்மாவை அறியக்கூடிய வழியைக் காட்டுவது ஆகமசாரமான சித்தாந்தம்.

சிவ தத்துவத்தை விளக்கி சிவஞானத்தை செவ்வனே எடுத்துரைத்து அத்வைத சித்தாந்தத்தை ஸ்தாபித்த மகான் ஸ்ரீ ஆதிசங்கரர். அத்வைத குருபரம்பரை ஸ்ரீமந் நாராயணன் தொடங்கி ஸ்ரீஆதிசங்கரர் நடுவாக நம் ஆசார்யர் வரை தொடர்ந்து வருகிறது.

அத்வைத சித்தாந்த குரு பரம்பரையில் ஸ்ரீ ஆதி சங்கரர்க்கு முன்னர் விளங்கிய ஆசார்ய புருஷர்களில், த்ரவிடாச்சார்யார், பதஞ்சலி முனிவர், கௌட

பாதாச்சார்யார், கோவிந்த பகவத்பாதர் முதலானோர் வேத பாஷ்யத்தை விளக்கி பரமார்த்த தத்துவத்தை தெளிவுபடுத்தி, ஆத்ம ஞானத்தை அடைய வழி காட்டியவர்கள். இந்த ஆசார்ய பரம்பரையின் முதல் குரு ஸ்ரீமந்நாராயணன். அப்புறம் ப்ரஹ்மா, வஸிஷ்டர், சக்தி, பராசரர், வியாஸர், சுகர். சுகர் வரையில் இது புத்திரபரம்பரையாக வந்தது. சுகர் பிறந்தபொழுதே ஞானியானவர். அதனால் அவருக்கு பிறகு அது சிஷ்ய பரம்பரையாக வந்துவிட்டது. கௌடபாதர் சுகாசாரியரிடத்தில் ஸந்நியாஸம் பெற்றுக்கொண்டு ஆத்மநிஷ்டையில் இருந்துவிட்டார். அவரிடம் சென்று ஸந்நியாஸம் பெற்றவர் கோவிந்தபகவத்பாதாசாரியர். அவரிடத்தில் முறைப்படி ஸந்நியாஸம் பெற்ற ஆசார்யர் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாசார்யர். சுகர் முதல் வருகிற ஆசாரியர்களுக்கு பரிவ்ராஜகர்கள் என்னும் பெயர் உண்டு. ஆயினும், ஆதிசங்கரரே அத்வைத சித்தாந்தத்தை முதன்முதலாக விரிவாக உபதேசித்து வைதீக மார்க்கத்தை நிலையாக பாரதம் முழுவதும் பரவச் செய்தருளினார். முறைகளை நெறிப்படுத்தி நிலைநாட்டியவரும் ஆதிசங்கரரே!

உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் இருப்பனவும் இயங்குவனவும் அனைத்தும் ஜீவ சக்தியினாலும், ஆன்ம சக்தியினாலும் தான் நிலைத்து இயங்குகின்றன. இவற்றையெல்லாம் இருக்க வைப்பதும், இயங்க வைப்பதும் பரமாத்மா ஒன்றே தான். அதுவே எல்லாமாகவும், எங்கும் எதிலும் பரவியதாகவும் இருக்கின்றது என்ற ஆன்மஞான ஒளியைக் காட்டி உலக்திலுள்ள அஞ்ஞான இருளையகற்றி உலகை உய்விக்க அத்வைத சித்தாந்தமெனும் ஞான மார்க்கத்தைப் போதித்து அருளியவர் ஸ்ரீ ஆதிசங்கரர்.

பிரம்மஸூத்திரத்திற்கு பாஷ்யத்தை அருளிச்செய்த ஸ்ரீ ஆதிசங்கரர் ஈச, கேன, கட, முண்ட, மாண்டுக்ய, தைத்ரீய தாந்தோக்ய, ப்ருஹதாரண்யக உபநிஷத்துகளுக்கும் பகவத்கீதை, விஷ்ணு சகஸ்ரநாமம், லலிதாத்ரிசதி ஆகியவற்றிற்கும் பாஷ்யங்களை அருளிச்செய்தார். இவற்றுக்கெல்லாம் எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் எளிய முறையில் ப்ரகரணங்கள் எனப்படும் 35 விளக்க நூல்களையும் அருளினார். இவற்றுள் விவேக சூடாமணி, ஆத்மபோதம்,

ப்ரபோத ஸுதாகரம், சதச்லோகி ஆகியன பிரசித்தி பெற்ற நூல்கள் ஆகும். அவருடைய அத்வைத மார்க்கோபதேசத்தை எளிதில் உணர அவரது ப்ரகரணங்கள் பெரிதும் உதவுகின்றன. மேலும், ஆதிசங்கரர் ஆண்டவனின் அருளைப்பெற அறுபத்தேழு ஸ்தோத்திரங்களை அருளினார். அவற்றுள் சிவானந்த லஹரி, சௌந்தர்ய லஹரி, ஆனந்தலஹரி, தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம் ஆகியவை கடவுளின் கல்யாண குணங்களைப் பல வகையில் போற்றி அவனருளை எளிதில் பெற உதவுகின்றன.

வேதங்கள், தர்மசாஸ்திரங்கள், புராணங்கள் முதலியவைகளில் அநாதியாக இருந்து வந்த நம்பிக்கைக்குக் குறைவு ஏற்ப்பட்டு அதுவரை பரம்பரையாக இருந்து வந்த அநுஷ்டானம், பக்தி முதலியவைகளெல்லாம் மாறி இருந்தகாலம் மீண்டும் நிலைநாட்ட பரமேஸ்வரன் ஸாக்ஷாத் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திப் பெருமான் ஸ்ரீ சங்கரராக அவனியில் அவதரித்தார். வைசாக சுத்த சுக்லபஞ்சமி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் அவதார தினம். அப்பொழுது நக்ஷத்திரம் ஆருத்திரா (திருஆதிரை நன்னாள்) அல்லது புனர்வஸுவாக வரும் புண்ணியதினம். ஸநாதனதர்மத்தினை நிலைநாட்டுவதற்க்காக நம்புண்யபாரதத்தின் கேரளத்தில் காலடி என்னும் திருத்தலத்தில் வைதீக குடும்பத்தில் சிவகுரு ஆர்யாம்பாள் என்னும் புண்யதம்பதிகளின் குமாரனாக 2593–ம் வருஷம், கி.மு. 509–ம் ஆண்டு ஸ்ரீ ஆதிசங்கரர் அவதாரம் செய்தார்.

சங்கரர் குருகுலத்தில் சேரும்போது வயது ஐந்தே ஆகும். பிஞ்சுப்பருவத்திலேயே சங்கரர் வேதம், வேதாந்தம், புராணம், காவியம் ஆகியவற்றைக் கற்று சிறந்த ஞானத்தைப் பெற்றார். குருகுலத்தில் இருந்த சிறுவன் சங்கரர் ஒருநாள் துவாதசி அன்று விடியற்காலையில் ஒரு அந்தணர் வீட்டிற்குப் பிக்ஷைக்கு சென்றார். ஆனால், அந்த வீட்டில் பிக்ஷையிடுவதற்கு ஒரு மணி அரிசிகூட இல்லை. சிறுகுழந்தை சங்கரர்க்குக் கொடுத்து அனுப்புவதற்கு எதுவும் இல்லாத வறுமையினால் வாடிய அந்த அம்மையார் மிகவும் வருந்தி உள்ளே துவாதசி பாரணைக்காக தன் கணவர் வைத்திருந்த இரண்டு நெல்லிக்கனிகளில் தனக்கு உரிய பங்கான ஒன்றை எடுத்துவந்து சங்கரனின்

பிக்ஷைப் பாத்திரத்தில் போட்டுவிட்டு, கண்களில் கண்ணீர் தளும்ப உள்ளே ஓடிவிட்டாள். உடனே சங்கரர் அக்குடும்பத்தின் ஏழ்மை நிலையை உணர்ந்து அந்தக் குடும்பத்தின்மீது தன் கடைக்கண் பார்வையைச் செலுத்தி அருள்புரியும்படி வேண்டி திருமகளைத் துதித்தார். அவர் திருமகளைத் துதித்துப் பாடிய பாடல்கள்தாம் கனகதாரா ஸ்தோத்திரம் எனப் புகழ்பெற்று விளங்குகின்றது.

கனகதாராஸ்தோத்திரத்தினால் துதிக்கப்பட்டதிருமகளின் திருக்கடாக்ஷத்தினால் பொன்னாலான நெல்லிக்கனிகள் மழை போல் பொழிந்தன. கனகம் அதாவது தங்கத்தை தார அதாவது மழைபோல பொழியும்படி லக்ஷ்மியைத் துதித்து பாடியதால் இப்பாடல்கள் கனகதாரா ஸ்தோத்ரம் என்று பெயர் பெற்று விளங்குகின்றது.

சந்நியாசம் பெறத் தாயின் சம்மதத்தைப் பெற்று சங்கரர் காலடியிலிருந்து புறப்பட்டு, கால்நடையில் காடுகள், மலைகள், ஆறுகள், கிராமங்கள் முதலியவற்றைக் கடந்து நர்மதை நதிக்கரை அடைந்தார். அந்த நதியின் கரையில் ஒரு பெரிய மலைக்குகையில் தவம் புரிந்து வந்த கோவிந்த பகவத்பாதர் என்பவரை தரிசித்து வணங்கினார். சங்கரரின் மனப்பக்குவத்தை அறிந்த கோவிந்த பகவத்பாதர் சங்கரருக்கு முறைப்படி ஞான தீக்ஷை அளித்து சந்நியாசம் கொடுத்து மஹா மந்திர உபதேசம் செய்தார். அத்வைதம் என்ற அரும்பெரும் செல்வத்தை கோவிந்த பகவத்பாதர் ஆதிசங்கரருக்கு வழங்கினார். வேதங்களிலும், உபநிஷத்களிலும், பிரம்மசூத்திரத்திலும் பகவத் கீதையிலும் அடங்கி இருக்கும் தத்துவமே அத்வைதமாகும்.

“தத்வமஸி” – “அது – நீ” என்பதே தத்துவம். அது என்பது எல்லாவற்றிற்கும் ஆதாரமான மெய்ப்பொருள். அனைத்துக்கும் ஆதாரமான மூலப்பொருளே பரம்பொருளான பரமாத்மா. அதுதான் ப்ரம்மம். அதுவே சொல். அதுவே செயல். எங்கும் நிறைந்திருப்பதும், எப்போதும் இருப்பதும், எல்லாமாகவும், எங்குமாகவும் நிற்குணமாய்ப் ப்ரும்மம் நிலைத்திருக்கின்றது என்பதே அத்வைதம்.

எங்குமாகி, எல்லாமுமாகி இருப்பது ப்ரும்மம் என்னும் போது அதுவே

ஜீவனுள்ள ஜீவாத்மாவாகவும் உள்ளது. இரண்டும் ஒன்றேதான். ப்ரும்மம் ஒன்றே மெய்ப்பொருள். ஜீவனும் அதனின்று வேறு அல்ல என்பது ஆதிசங்கராின் அத்வைத சித்தாந்தம். நீரும் நீர்க்குமிழியும் ஒன்றேயாகும். நீர்க்குமிழி நீரில் தோன்றி, நீரில் மிதந்து இறுதியில் நீரிலேயே இரண்டறக் கலந்துவிடுகிறது.

அதுபோல் ஜீவாத்மா பரமாத்மா என இரண்டும் ஒன்றே ஆகும். அளவு மாத்திரத்தில்தான் இவைகளுக்குள் வித்தியாசம் ஏற்படுகிறது. ஒன்று சார்புடையது. மற்றொன்று சுயேச்சை உடையது. ஆயினும் இரண்டும் ஒன்றே. ஜீவர்கள் தங்களை உடலுடன் இணைத்து தங்களது ப்ரும்மநிலையை உணர முடியாமல் செய்வது மாயை. மாயா என்றால் எது இல்லையோ அது என்ற பொருள். மாயை ப்ரும்மத்தை மறைக்கிறது. நிலையற்ற உலகத்தை நிலையாக கருதும்படிச் செய்கிறது. மாயையைக் கடந்து நம்மையும், உலகையும் ஒரே பரம் பொருளாகக் கருதி நாம் ப்ரம்மமே என்ற உண்மையான நிலையை அடைந்து ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைவதே மோக்ஷமாகும். அதுவே அத்வைதத்தின் லட்சியம். ப்ரம்மசாட்சாத்காரம் பெறுவதற்கு ஞானமே சாதனம். ஐம்புலன்களை அடக்குவதன் மூலம் ப்ரம்மத்தை அடையலாம். பலனை எதிர்பாராது கர்மம் செய்வதால் மனம் தூய்மை அடைகிறது. நிஷ்காம்ய கர்மத்தினாலும் உபாசனை அல்லது பக்தியினாலும் மனத்தை ஒருமுகப்படுத்தி ப்ரம்மத்தை அறியும் அறிவைப் பெறமுடியும். ஆத்ம ஞானம் ஏற்பட்டால் இடைப்பட்ட மாயை தானாக விலகிவிடும். எல்லாமாகிய ப்ரம்மமே தான் என்ற நிலையை அடையும்போது எல்லா உயிர்களும் தானே என்ற உணர்வும் தானாகவே ஏற்படுகிறது. அனைத்தின்மீதும் அளவிலா அன்பு அப்போது ஏற்படுகிறது. மாயை என்னும் சூழலில் அகப்பட்டுக் கிடக்கும் பாமர மக்களுக்கு ப்ரம்மத்தை நிற்குணமாக தியானிப்பது இயலாது என்பதால் ஆதிசங்கரர் ஷண்மத ஸ்தாபனம் செய்து பக்தியினால் மனத்தைப் பக்குவப்படுத்தி ஆத்ம ஞானத்தை அடைவதற்குரிய நிலையைப் பெற வழி வகுத்தருளினார்.

பக்தியினால் இறையன்பும், ஜீவகாருண்யமும் மனப்பக்குவமும் ஏற்படுகிறது. நிஷ்காம்யமான ஸமநிலை ஏற்படுகிறது. மனதையடக்கி, புலன்களை அடக்கி இன்ப, துன்பங்களை ஒன்றாகவே கருதும் பக்குவத்தையடைந்து ஜீவன்

முமுட்சுவத்தை அடைகிறான். தர்மம் நிலையானது; சுகதுக்கம் நிலையற்றது. ஜீவன் நித்யமானது; ஜீவனம் அநித்யமானது. சுகமெனக் கருதுவதெல்லாம் நிலையற்றதாகவும் துக்கத்தில் முடிவதாயும் உள்ளதெனக் கண்டு இவ்வுலக இன்பங்களை வெறுப்பதில் வைராக்கியம், பகவானுடைய நாமகுணம் கேட்டல், சிந்தித்தல், பேசுதல், லோக க்ஷேமத்திற்காக கர்மங்களைச் செய்து பகவதர்ப்பணம் செய்தல் அப்பியாசம். இவ்வுபாயங்களால் இந்திரியங்களையும், மனத்தையும் வசப்படுத்தலாம். ஸத்சங்கதியினால் அதாவது நல்லவர்களுடன் சேர்ந்திருப்பதினால் அவர்களுடன் பந்தம் ஏற்படாமல் வைராக்கியம் வளர்ந்து சமநிலை உண்டாகிறது. அதனால் ஆசை அகன்று தகுந்த மனப்பக்குவம் ஏற்பட்டு சலனமற்ற மனநிலையை அடைந்து ஜீவன் முக்தியை அடையமுடியும் என்று ஸ்ரீ ஆதிசங்கரர் பஜகோவிந்தம் என்ற ஸ்தோத்திரத்தில் தெளிவுபடுத்தி இருக்கின்றார்.

ஒருவனின் மனம் அவன் செய்யும் நல்ல கர்மங்களினால் தூய்மை பெறுகிறது. உபாசனை மார்க்கத்தால் அவன் ப்ரம்மத்தை அறியும் அறிவையும் மனத்தையும் ஒன்றுபடுத்தி ஒருமுகமாய் த்யானிக்க முடிகிறது. உள்ளத்தையும் அறிவையும் ஒன்றுபடுத்தும் நிலையை அறிந்துகொள்ளும் அனுபவமே ஆத்ம ஞானமாகும். உள்ளத்திலுள்ள மாசு நீங்கியதும் உள்ளே இருக்கும் ஒளிமயமான மெய்யறிவு தன்னியல்புக்கு ஏற்ப விளங்கும். ஸ்ரீ ஆதிசங்கரர் பாரதம் பூராவும் திக்விஜயம் செய்து அத்வைத சித்தாந்தத்தை போதித்து வந்தார்.

ப்ருத்வியின் நாபிஸ்தலமாக திகழும் காஞ்சி க்ஷேத்திரத்தில் ஞான ஸ்வரூபிணியாய் விளங்கும் ஸ்ரீ காமாக்ஷி தேவியை ஸ்ரீசக்ர பிரதிஷ்டை செய்து அம்பிகையை வழிபட்டு அனைவரும் மோட்ச மார்க்கத்தைத் தேடிக்கொள்வதில் பெரிதும் உபகாரம் செய்தவர் ஸ்ரீ ஆதிசங்கரர்.

ஸ்ரீ காஞ்சியில் தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட காமகோடி பீடத்தில் தம்மால் கயிலாயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஐந்து ஸ்படிக லிங்கங்களுள் யோகலிங்கத்தை ஆத்ம பூஜைக்காக வைத்துக்கொண்டு காஞ்சியில் வசித்து வந்தார். இவரால் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரரே காஞ்சிகாமகோடி

பீடாதிபதிகளின் ஆராத்ய தெய்வமாக இன்றும் இருந்து வருகிறது. ஸ்ரீ ஆதிசங்கரரின் ஸர்வக்ஞபீடா ரோஹண வைபவம் "ஸ்ரீ சங்கரவிஜயம்" பிரஹத் சங்கர விஜயம், ஆனந்தகிரி விஜயம் போன்ற கிரந்தங்களில் வெகு அழகாக விவரிக்கப்பட்டுள்ளது.

அத்வைத ஸித்தாந்தம் அவனியில் நிலைத்திருக்க ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட பீடங்களுள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் மிக ப்ரசித்தி பெற்றது. அன்னை காமாக்ஷி நம்மையெல்லாம் ஆட்கொண்டு அருள் புரியும் வகையில் ஸ்ரீசக்ர ப்ரதிஷ்டை செய்து உலகம் உய்ய பேருதவி செய்த பெருமைக்குரியவர் ஸ்ரீ ஆதிசங்கரர். அவர் வழிவந்த காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அனைவரும் ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரரையும் அன்னை காமாக்ஷியையும் லோக கல்யாணத்திற்காக ப்ரார்த்தித்து வருகின்றனர்.

ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளின் ஆச்ரமப் பெயருடன் இந்திர ஸரஸ்வதி என்று சேர்த்துப் போற்றுவது மரபாக உள்ளது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளுள் ஒருவராகிய ஸ்ரீ மூகசங்கரர் பிறவி ஊமையாக இருந்து பிறகு அன்னை காமாக்ஷியின் அருட்காடாக்ஷத்தினால் அருட்கவியாகத் திகழ்ந்து காஞ்சி காமாக்ஷியின் கருணாவிலாஸத்தை ஐந்நூறு ச்லோகங்களில் போற்றிப் பாடியுள்ளார், அவரால் அருளப்பட்ட ஸ்ரீகாமாக்ஷியின் வைபவத்தைப் போற்றும் பாமாலை மூக பஞ்ச சதி என்ற பெயரில் புகழ்பெற்றது.

ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடம் மிகவும் பழமையானது; ப்ரஸித்தி பெற்றது. காஞ்சியில் ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாள் அமைத்த ஸ்ரீகாமகோடி பீடத்தை அலங்கரித்த ஆசார்யபரம்பரை ஸ்ரீஆதிசங்கரரை முதலாமவராகக் கொண்டது. ஸ்ரீ சங்கரர் காலம் கி.மு. 509–477 ஆகும். ஸ்ரீசுரேஸ்வரர் இவருக்குபின் காஞ்சிகாமகோடி பீடத்தை அலங்கரித்தவர் அவருக்குபின் வந்த ஆசார்யர்கள் அனைவரும் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ரஜகாசார்யர்கள். யோகப்பட்டங்கள் பத்து என பெரியோர்கள் கூறுவர். அவை வன, ஆரண்ய, பாரதி, சரஸ்வதி, பூர்ண, தீர்த்த, ஆஸ்ரம, கிரி, பர்வத, சகர என்பவை இவற்றுள் ஒன்று சரஸ்வதி. ஸ்ரீ

காஞ்சி காமகோடி பெரியவர்கள் இந்த "சரஸ்வதி" என்ற யோகப்பட்டத்துடன் தம்பெரும் பெருமைக்கு காரணமாக "இந்திர சரஸ்வதி" என்று கூறப்பெறுகின்றனர். ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீமுக முத்திரை "ஜகத்குரு ஸ்ரீசங்கர பகவத்பாத ப்ரதிஷ்டித ஸ்ரீகாமகோடி பீடாதிபர்" என்று குறிப்பிடுகிறது. ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடம் ருக்வேத பீடமாக போற்றப்படுகிறது.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தில் அருளாக்ஷிபுரிந்த ஆசார்யர்களின் மரபு கூறும்நூல்களில் ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ ஸர்வக்ஞஸதாசிவ போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் (1524–1539) அவர்கள் அருளிச்செய்த நூல் மிகவும் பழமையானது; 109 செய்யுட்களைக்கொண்டது. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் திருமரபினரில் தம் குருநாதருக்கு முற்பட்ட 55 ஆசார்யர்கள் சித்தியுற்ற நாள், இடம், முதலிய விவரங்களை மட்டும் குறிப்பிட்டிருக்கிறார். இந்நூலுக்கு 1704–1746 –ல் வாழ்ந்த ஸ்ரீஆத்மபோதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் புண்யஸ்லோக மஞ்சரிமகரந்தம் என்ற விரிவுறை நூலினை எழுதினார். பிறகு ஸ்ரீஆத்மபோதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் 56ஆவது ஆசார்யர் முதல் 60வது ஆசார்யர் வரை எழுந்தருளி இருந்த ஆசார்யர்கள் சித்தியெய்தியதை கூறும் "புண்யஸ்லோக மஞ்சரி ப்ரிசிஷ்டா" என்றும் இணைப்பு நூலினை அருளிச் செய்தார். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் 65வது பீடாதிபதி ஸ்ரீ சுதர்சன மஹாதேவேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் (1850–1891) அருளிச்செய்த "ஜகத்குரு பரம்பரா ஸ்தோத்திரம்" ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதிகள் திருமரபு கூறும் நூலாகும். அதற்க்கு பிறகு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளாக எழுந்தருளிய ஆசார்யர்களின் வரலாற்று நூல்கள் பல அறிஞர்களால் தொகுக்கப்பெற்று காணகிடைக்கின்றன. மிகவும் பெருமை வாய்ந்து உலகப்புகழ்ப்பெற்றது ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் திருமரபு.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தில் குருபரம்பரையில் தோன்றிய ஸ்ரீமூக சங்கரர் ஸ்ரீகாஞ்சி காமாக்ஷி அம்பாளின் பெருமையை மூகபஞ்ச ச'தி எனும் ஐநூறு ஸ்லோகங்களைக் கொண்ட தோத்திர பாடல்தொகுப்பினை அருளியவர்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்து ஆச்சார்யர்களுள் ஸ்ரீஆத்மபோதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ பகவந்நாமபோதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ சுதர்சன மஹாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், 68–வது பீடாதிபதிகளாக விளங்கிய ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள் மிகவும் பிரஸித்தி பெற்றவர்கள்.

ஸ்ரீ ஆதிசங்கரர் முதல் ஆசார்யராகத் திகழ்ந்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்து ஆசார்ய ஸ்வாமிகளின் வரிசையில் அறுபத்தெட்டாவது ஆசார்யராக திகழ்ந்த ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும், இன்று நம்மிடையே அன்பின் திருவுருவமாய் திகழ்ந்து அருளாட்சிபுரிகின்ற அறுபத்தொன்பதாவது ஆசார்யராக ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும், எழுபதாவது ஆசார்யராக ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் அருள் நெறியை எங்கும் பரப்பி, பக்தி வழியில் நம்மை நடத்திச் செல்லும் பாக்யம் நாம் பெற்றிருக்கிறோம்.

ஸ்ரீமடத்து ஆசார்யர்கள் வேதசம்ரக்ஷணததில் மிகவும் கவனம் செலுத்தி வருகின்றனர். வேதம் தர்மத்துக்கு மூலம் அவ்வேதநெறிதழைதோங்க ஸ்ரீகாஞ்சி கமாகோடிபீடம் ஸ்ரீ சங்கராத்வைத்த நிலையம் ஏற்படுத்தி சதுர் வேதங்களுக்கும் பாடசாலைகள் நடத்தி, வேதஸம்ரக்ஷண நிதி போன்ற பல அமைப்புகளை உருவாக்கி அவ்வற்றின்மூலம் வேத அத்யயனத்திற்கு பெரிதும் பாடுபட்டு வருகிறது.

ஸ்ரீ சங்கர மடத்தின் ஆதரவில் வேத தர்ம பரிபாலன சபை கும்பகோணத்தில் நிறுவப்பட்டு, அதன்மூலம் நாடெங்கும் வேத தர்ம ஸதஸ்களும் ஸமய சொற்பொழிவுகளும் நடத்தப்பட்டு வருகின்றது. ஸ்ரீ ஆதிசங்கரரின் நூல்களை வெளியிடும் பணியைக் குறிக்கோளாகக் கொண்ட ஸ்ரீ ஆதிசங்கர அத்வைத ஆராய்ச்சி நிலையம் சென்னையில் நிறுவப்பட்டு உள்ளது.

ஸனாதன தர்மத்தினை நிலைநாட்டி, மக்களிடையே பக்திநெறியையும், மனித நேயத்தையும் வளர்த்து குருபக்தி, தெய்வபக்தி, தேச பக்தியை வலியுறுத்தி நாட்டின் ஒற்றுமைக்கும், சமுதாய மேம்பாட்டிற்க்கும் தம்மை அர்பணித்துக் கொண்டுள்ள ஸ்ரீ காஞ்சி காமகோடி குருபரம்பரை மிகவும் பழமையானது, பிரஸித்தமானது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் திருமரபுப் பட்டியல் (குறிப்புக்களுடன்)

எண்	திருநாமம்	ஜன்மக்ஷேத்ரம் அவதாரஸ்தலம்	சித்தியுற்ற ஸ்தலம்	ஆண்டு	அருளாட்சியாண்டு
1.	ஸ்ரீ சங்கர பகவத்பாதர்	காலடி	காஞ்சி	கி.மு. 477	509 – 477
2.	ஸுரேஸ்வராசார்யார்	காஷ்மீர்	காஞ்சி	கி.மு. 407	70
3.	ஸர்வக்ஞாத்மேந்திர ஸரஸ்வதி	தாம்ரவருணி	காஞ்சி	கி.மு. 364	43
4.	சத்திய போதர்	அமராவதி தீர்த்தம்	காஞ்சி	கி.மு. 268	96
5.	ஞானானந்தர்	மங்கலம்	காஞ்சி	கி.மு. 205	63
6.	சுத்தாநந்தர்	வேதாரண்யம்	காஞ்சி	கி.மு. 124	81
7.	அனந்தானந்தர்	சேரநாடு	ஸ்ரீசைலம்	கி.மு. 55	69
8.	கைவல்யாநந்தர்	திருப்பதி	காஞ்சி	கி.பி. 28	83
9.	க்ருபாசங்கரர்	ஆந்திரம்	விந்தியமலை	கி.பி. 69	41
10.	ஸுரேச்வரர்	மகாபலேச்வரம்	காஞ்சி	கி.பி. 127	58
11.	(சிவானந்த) சித்கனர்	கர்நாடகம்	விருத்தாசலம்	கி.பி. 172	45
12.	சந்திரசேகரர் I	பாலாறு அருகில்	சேஷாசலம்	கி.பி. 235	63
13.	ஸத்சித்கனர்	கெடிலம் அருகில்	காஞ்சி	கி.பி. 273	38
14.	வித்தியாகனர் I	ஆந்திரம்	அகஸ்தியமலை	கி.பி. 317	44
15.	(கீஷ்பதி) கங்காதரர்	காஞ்சி	காஞ்சி	கி.பி. 329	12
16.	உஜ்வல சங்கரர்	தபதிதீரம்	காஷ்மீர்	கி.பி. 367	38


எண்	திருநாமம்	ஜன்மக்ஷேத்ரம் அவதாரஸ்தலம்	சித்தியுற்ற ஸ்தலம்	ஆண்டு	அருளாட்சியாண்டு
17.	பாலகுரு சதாசிவர்	காஷ்மீர்	த்ரியம்பகம்	கி.பி. 375	8
18.	யோகிதிலக ஸுரேந்திரர்	மகாராஷ்ட்ரம்	உஜ்ஜைனி	கி.பி. 385	10
19.	மார்த்தாண்ட வித்தியாகனர்	மகாராஷ்ட்ரம்	கோதாவரி தீரம்	கி.பி. 398	13
20.	மூகசங்கரர்	மகாராஷ்ட்ரம்	கோதாவரி தீரம்	கி.பி. 437	39
21.	ஸார்வபௌம சந்திரசேகரர்	கொங்கணம்	காசி	கி.பி. 447	10
22.	பரிபூர்ணபோதர்	ரத்னகிரி	ஜகந்நாதம்	கி.பி. 481	34
23.	சத்சித்சுகர்	ஸ்ரீகாகுளம்	ஜகந்நாதம்	கி.பி. 512	31
24.	சித்சுகர்	கொங்கணம்	ரத்னகிரி	கி.பி. 527	15
25.	ஸச்சிதாநந்தகனர்	ஸ்ரீமுஷ்ணம்	கோகர்ணம்	கி.பி. 548	21
26.	பிரக்ஞானகனர்	பினாகீதீரம்	காஞ்சி	கி.பி. 564	16
27.	சித்விலாசர்	ஹஸ்திகிரி	காஞ்சி	கி.பி. 577	13
28.	மகாதேவர் I	மிதிலா	காஞ்சி	கி.பி. 601	24
29.	பூர்ணபோதர் I	ஆந்திரம்	காஞ்சி	கி.பி. 618	17
30.	போதர் I	ஆந்திரம்	காஞ்சி	கி.பி. 655	37
31.	பிரம்மானந்தகனர்	கடிலம்	காஞ்சி	கி.பி. 668	13
32.	சிதானந்தகனர்	ஆந்திரம்	காஞ்சி	கி.பி. 672	4
33.	சச்சிதானந்தகனர்	ஆந்திரம்	காஞ்சி	கி.பி. 692	20
34.	சந்திரசேகரர் II	வேகவதிதீரம்	காஞ்சி	கி.பி. 710	18
35.	சித்சுகர் II	வேதாசலம்	ஸஹ்ய மலைத் தொடர்	கி.பி. 737	27

எண்	திருநாமம்	ஜன்மக்ஷேத்ரம் அவதாரஸ்தலம்	சித்தியுற்ற ஸ்தலம்	ஆண்டு	அருளாட்சியாண்டு
36.	சித்சுகானந்தர்	பாலாறுநதிதீரம்	காஞ்சி	கி.பி. 758	21
37.	வித்யாகனர்	—	சிதம்பரம்	கி.பி. 788	30
38.	அபிநவசங்கரர்	சிதம்பரம்	இமயமலை தத்தாத்ரேயர் குகை	கி.பி. 840	52
39.	ஸத்சித் விலாசர்	மஹாராஷ்டிரம்	காஞ்சி	கி.பி. 873	33
40.	சோபனமகாதேவர்	கர்நாடகம்	காஞ்சி	கி.பி. 915	42
41.	கங்காதரர் II	பீமாநதிதீரம்	காஞ்சி	கி.பி. 950	35
42.	பிரம்மாநந்தகனர்	கர்நாடகம்	காஞ்சி	கி.பி. 978	28
43.	ஆனந்தகனர்	துங்கபத்ரா	காஞ்சி	கி.பி. 1014	36
44.	பூர்ணபோதர் II	கர்நாடகம்	காஞ்சி	கி.பி. 1040	26
45.	பரமசிவர் I	கர்நாடகம்	காஞ்சி	கி.பி. 1061	21
46.	ச’ந்த்ரானந்தபோதர்	கர்நாடகம்	அருணாசலம்	கி.பி. 1098	37
47.	சந்திரசேகரர் III	குந்தியாறு	அருணாசலம்	கி.பி. 1166	68
48.	அத்வைதானந்தபோதர்	பினாகிநியாறு	சிதம்பரம்	கி.பி. 1200	34
49.	மகாதேவர் II	சாயாவனம்	கடிலம்	கி.பி. 1247	47
50.	சந்திரசூடர் I	—	கடிலம்	கி.பி. 1297	50
51.	வித்தியாதீர்த்தர்	பில்வாரண்யம்	ஹிமாசலம்	கி.பி. 1385	88
52.	சங்கரானந்தர்	மத்யார்ச்சுனம்	காஞ்சி	கி.பி. 1417	32
53.	பூர்ணானந்த சதாசிவர்	நாகாரண்யம்	காஞ்சி	கி.பி. 1498	81
54.	வியாசலமஹாதேவர்	காஞ்சி	வ்யாஸாசலம்	கி.பி. 1507	9

எண்	திருநாமம்	ஜன்மக்ஷேத்ரம் அவதாரஸ்தலம்	சித்தியுற்ற ஸ்தலம்	ஆண்டு	அருளாட்சியாண்டு
55.	சந்திரசூடர் II	அஸ்மசாலா	காஞ்சி	கி.பி. 1524	17
56.	சர்வக்ஞ சதாசிவபோதர்	பெண்ணாற்றுதீரம்	ராமேஸ்வரம்	கி.பி. 1539	15
57.	பரமசிவர் II	பம்பாதீரம்	ஸ்வேதாரண்யம்	கி.பி. 1586	47
58.	ஆத்மபோதர்	விருத்தாசலம்	கடிலம்	கி.பி. 1638	52
59.	பகவந்நாமபோதர்	காஞ்சி	கோவிந்தபுரம்	கி.பி. 1692	54
60.	அத்வைதாத்மப்ரகாசர்	வசிஷ்டாநதி	கோவிந்தபுரம்	கி.பி. 1704	12
61.	மகாதேவர் III	–	திருவொற்றியூர்	கி.பி. 1746	42
62.	சந்திரசேகரர் IV	–	கும்பகோணம்	கி.பி. 1783	37
63.	மகாதேவர் IV	கும்பகோணம்	கும்பகோணம்	கி.பி. 1814	31
64.	சந்திரசேகரர் V	–	கும்பகோணம்	கி.பி. 1851	37
65.	சுதர்சன மஹாதேவர்	மத்தியார்ச்சுனம்	இளையாத்தான்குடி	கி.பி. 1890	39
66.	சந்திரசேகரர் VI	உதயம்பாக்கம்	கலவை	கி.பி. 1907	17
67.	மகாதேவர்	திருவிசலூர்	கலவை	கி.பி. 1907	8 நாட்கள்
68.	சந்திரசேகரர் VII	விழுப்புரம்	காஞ்சிபுரம்	கி.பி. 1994	87

(குறிப்பு :– மூன்றாவது ஆசார்யாள் முதல் ஒவ்வொருவர் திருநாமத்தின் பின்னும், இந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் என்பதனை இணைத்துக்கொள்ள வேண்டும்.)

69. மன்னார்குடி சமீபத்திலுள்ள இருள்நீக்கி என்ற திருத்தலத்தில் திருஅவதாரம் செய்தவர் 69–வது பீடாதிபதியாக விளங்குகின்ற ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜ காசார்ய வர்ய ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள். திருவள்ளூர் சமீபம், பெரிய பாளையம் அருகிலுள்ள தண்டலம் திருத்தலத்தில் திருஅவதாரம் செய்தவர் 70–வது பீடாதிபதி ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜ காசார்ய வர்ய ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்கள் ஆகியோர் இந்நாளில் காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடத்து ஆசார்யர்களாக இனிது எழுந்தருளி அருளாட்சி புரிந்து வருகின்றனர்.



Brindavanam of
H.H.Sri Chandrasekharendra Saraswathi Mahaswamigal

With Humble Pranamams :
T.C.Asokan
Book Stall, Sri Kamakshi Amman Temple
Kanchipuram - 2.

ஸ்ரீ ஆதிசங்கரர் போலவே ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடத்து 68வது பீடாதிபதிகள் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா ஸ்வாமிகளின் பெருமையை உலகு நன்கு அறியும். ஊமையாய் இருந்த ஒருவரை பேசவைத்து தமது சிஷ்யராக அநுக்ரஹித்து ஜகத்குருவாக உயர்த்தியவர் ஸ்ரீஆதிசங்கரர். அவரே ஹஸ்தாமலகர். ஹஸ்தாமலகரும் ஒரு சாதாரண குதிரைப்பாகனையும், யானைப்பாகனையும் கவிஞராக்கியதும் அற்புதம். அதுபோலவே இந்த நூலினை எழுதும் அளவிற்கு அடியேனுக்கு தமிழறிவை தந்தருளியதும் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளின் அநுக்ரஹமே. அதுபோலவே எனது இரண்டாவது மகள் சாந்தி; மூன்று வயதாகியும் பேசமுடியாதநிலையில் இருந்தவள் ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகளின் அநுக்ரஹத்தினால் பேசலுற்று இன்று நல்ல பேச்சாற்றலோடு நல்ல வாழ்க்கை அமைந்து சிறந்து விளங்குகிறாள்.

அதுபோல் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி மஹா ஸ்வாமிகளின் அநுக்ரஹத்தினால் பலரும் தம் தம் அபீஷ்டங்கள் எண்ணியபடி நிறைவேறி நிம்மதியடைந்த சம்பவங்கள் பலப்பல. வெளிநாடுகளிலிருந்தும் நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் பக்தர்கள் வந்துதரிசித்து மனநிறைவுபெற்றுள்ளனர். இவரது மஹிமை உலகெலாம் பரவியது. அவரை தரிசித்த ஒவ்வொருவரும் அவரது எளிமையையும், கனிவு, கருணை, பரிவு, அறிவாற்றல், ஆஸ்ரிதவாத்ஸல்யம் பற்றிய அநுபவங்களை நினைந்து நினைந்து குளிர்ந்திடுவர். அவரது அறிவாற்றல் பற்றியும் சமய, சமுதாய பணிகளைபற்றியும், தெய்வத்தன்மையைபற்றியும் விவரிப்பதற்குவார்த்தைகள்போதா. அவர் ஓர்மாமனிதர்! ஸர்வஜ்ஞர், அருளாளர், ஞானி, ஸத்குரு, ஜகத்குரு. அவரே தெய்வம், வரம்தரும்தெய்வம், நடமாடும் தெய்வம். அவர் அருளிச் செய்த தர்ம உபதேசங்கள் தெய்வத்தின் குரல் என்ற தலைப்பில் சம்புடமாக பலமொழிகளில் நூல்வடிவத்தில் வெளிவந்துள்ளது. "தெய்வத்தின் குறல்" ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடம் நடமாடும் தெய்வத்தின் குறல். பகவத்கீதைக்கு ஒப்பானதாக அனைவராலும் மதிக்கப்பெற்று வருகிறது. நடமாடும் தெய்வமாக நம்மிடையே எழுந்தருளி இருந்து நம்மை எல்லாம் நந்நெறிபடுத்தி நம்மிடயே மனித நேயம் வளர்த்து நாம் ஒற்றுமையாய் வாழ்பதற்க்கு நல் வழிகாட்டிய

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் 68வது பீடாதிபதி ஸத்குரு ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் காஞ்சி ஸ்ரீ சங்கரமடத்தில் 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் தேதி மார்கழிமாதம் கிருஷ்ணபக்ஷத்தின் துவாதசி திதியன்று முக்திஅடைந்தார்.

காஞ்சி ஸ்ரீ சங்கரமடத்தில் உள்ள அவரது அதிஷ்டான பிருந்தாவனத்திற்க்கு நித்ய அபிஷேக ஆராதனைகள் வெகுசிறப்பாக நடத்தப்பெற்று வருகின்றன. ஸ்ரீமஹாஸ்வாமிகளின் ப்ருந்தவனத்தை வலம்வந்து சேவித்து அடியார்கள் தம் அபிஷ்டங்கள் நிறைவேறப்பெறுகின்றனர். ஸ்ரீமஹா ஸ்வாமிகளின் அநுகரத்தினை மனம் நிறைந்து போற்றி வருகின்றனர்.

நடமாடும் தெய்வம் ஸ்ரீசந்திரசேகரேந்தி சரஸ்வதி மஹாஸ்வாமிகள் நமக்களித்தருளிய நன்மணிகள், குருமணிகள் 69வது பீடாதிபதி ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், 70வது பீடாதிபதி ஸ்ரீ சங்கரவிஜயேந்திர சரஸ்வதிஸ்வாமிகள். இந்து சமயவளர்ச்சியிலும், சமூக நலத்திலும், நலிந்த மக்களின் முன்னேற்றத்திலும் மிக்க ஆர்வமும் கொண்டு சமுதாய வளர்ச்சிக்கும் மக்களிடயே மனிதநேயம் வளர்ப்பதிலும், சமுதாய ஒற்றுமைக்கும், மேம்பாட்டிற்க்கும் தம்மை அர்ப்பணித்து கொண்டு மக்களின் மனதில் குடிகொண்ட கருணைதெய்வங்கள் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்து ஆசார்யஸ்வாமிகள்.

ஸ்ரீ ஆதிசங்கரரைபோல ஸ்ரீஜயேந்திரசரஸ்வதி ஸ்வாமகளும் நம்பாரத தேசம் முழுவதும் சென்று திக்விஜயம் செய்த மஹான். ஆதிசங்கரர் போல துவாதசலிங்க சேத்திரங்களை தரிசித்தவர், பன்முறை ஸ்ரீபசுபதி நாதரைத் தரிசித்த போற்றினை பெற்றவர். ஸ்ரீ ஆதிசங்கரருக்கு அடுத்து மானஸஸரோவரம் தரிசித்த ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் ஆசார்யர் இவரே. திருக்கயிலாயத்தில் வியாஸ பூஜை நடத்திய பெருமைக்குரியவர். அமர்நாத் சென்று பனிலிங்கத்தை தரிசனம் செய்த ஆசார்யரும் இவரே. நேபாளத்திற்க்கும் பங்காளதேஷ்க்கும் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் விஜயம்செய்துள்ளார்.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஆற்றி

சமயப்பணிகள் பலப்பல. பக்தி நெறியை வளர்ப்பதற்காக காஞ்சியில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளால் துவக்கப்பட்டு அவரது அருளாணைப்படி ஸ்ரீ சங்கர பக்தஜன சபா, இந்துசமய மன்றம், இந்து தமிழ்க் கவிஞர் மன்றம், இந்து தமிழ் எழுத்தாளர் மன்றம், ஆன்மீக நற்பணி மன்றம், பாரதியார் மன்றம், ஸ்ரீ பச்சைவண்ணர்; பவளவண்ணர் பக்தஜனசபா, ஸ்ரீமடம் ஸ்ரீமகாஸ்வாமிகள் அதிஷ்டான குருவார வழிபாட்டு மன்றம், ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான சாரத நவராத்திரி கலை நிகழ்ச்சிகள் டிரஸ்ட் போன்ற பல ஆன்மீக நற்பணி அமைப்புகள் இயங்கி வருகின்றன.

உலகிலுள்ள இந்துக்களிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும், இந்து சமய கருத்துகளை உலகெங்கும் உள்ள இந்துக்கள் நன்கு அறியும்படிச் செய்யவும், ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களால் 1976—ம் ஆண்டு உலக இந்து பேரவை தோற்றுவிக்கப்பட்டது நாம் செய்த பெரும்பாக்கியமாகும். ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் அருளாசியோடு சேலம் கெஜ்ஜல் நாய்க்கன் பட்டியில் கீதா தர்ம டிரஸ்டின் சார்பில் இந்துசமயக் கல்லூரியும், கோயம்பத்தூரில் ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியும் நடத்தப்பட்டுவருகின்றன. காஞ்சியிலும், சென்னையிலும் கோ—ஸம்ரக்ஷணசாலைகள் அமைத்து முதுமை நிலையில் புறக்கணிக்கபட்ட பசுக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு பொதுமக்கள் தாமே முன்வந்து மனமுவந்து தீவனப் பொருள்களையும் தந்து உதவி வருவது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ காளஹஸ்தியில் முதியோர் நல்வாழ்வு விடுதி அமைத்து 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு வழிபாட்டிற்குரிய வசதிகளும் இலவசமாக உணவு வசதியும் அருகதையின் அடிப்படையில் செய்து தரப்படுகின்றன. காஞ்சிபுரம் ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் தேவஸ்தானமும், தஞ்சாவூர் ஸ்ரீபங்காரு காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானமும், திருவானைக்காவல் ஸ்ரீபஞ்சமுகேச்வரர் ஸ்வாமி தேவஸ்தானமும், திருவிடைமருதூர் ஸ்ரீ விஸ்வநாத ஸ்வாமி தேவஸ்தானமும், ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானமும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்து ஸ்ரீமடத்தின் சார்பில் ஹரித்வாரில் ஸ்ரீ சங்கர மாதா கோவிலும், பூரியில் ஸ்ரீஆதிசங்கரர், ஜயதேவர், சைதன்யர் கோயில்களும், நேபாளம்,

ரிஷிகேஷம், குருக்ஷேத்ரம், பத்ரிநாத், திருப்பதி க்ஷேத்ரங்களில் ஸ்ரீ ஆதிசங்கரர் மண்டபங்களும், கன்யாகுமரி, திருவனந்தபுரத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் பாதுகா மண்டபங்களும் சீர்காழியில் திருஞானசம்பந்தர் அவதரித்த இல்லமாகிய நினைவாலயமும், ஸ்ரீஆதிசங்கரர் அவதரித்த காலடி க்ஷேத்திரத்தில் ஸ்ரீஆதிசங்கரர் கீர்த்தி ஸ்தம்பமும் அமைக்கப்பட்டுள்ளன. இந்து சமயத்திற்கும் மக்களுக்கும் ஸ்ரீமடத்தின் மூலமாக பல நற்பணிகளை செய்விப்பதோடு திருப்பாவை, திருவெம்பாவை மகாநாடுகள், சமயப் பயிற்சி வகுப்புகள் நடத்தியும், இந்து சமய நூல்களை வெளியிட்டும் இந்து சமய வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்து மக்களிடையே அன்பும், சகிப்புத்தன்மையும், ஒருமைப்பாடும் வளர்வதற்கு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அருள்புரிவது நாம் பெற்ற பெரும் பேறாகும்.

பழமை, புதுமை இரண்டுமே மனிதமேம்பாட்டிற்க்கு அவசியம் என கருதுபவர் ஸ்ரீஆசார்யஸ்வாமிகள். மனித வாழ்க்கை மேன்மையுற குருபக்தி இன்றிமையானது என வலியுறுத்தி வருகிறார் ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள். தம் குருநாதரின் திருநாமத்தால் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வமஹா வித்யாலயா எனும் நிகர் நிலைப் பல்கலைக்கழகத்தினை ஏற்படுத்தினார். இப்பல்கலைகழகம் வேதம், வேதாந்தம், வேதாகமங்கள், சாஸ்த்திரங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்வதோடு சமஸ்கிருதத்துடன் M.B.A., M.C.A., B.E., முதலான விஞ்ஞானபடிப்புகளும் கற்பிக்கும் நிலையமாக திகழ்ந்து வருகின்றது. ஸ்ரீ ஆதிசங்கரர் பெயரில் இவரால் நிறுவப்பெற்ற ஸ்ரீ சங்கரா அறிவியல், கலைக்கலூரி மிக சிறந்த கல்லூரியாக விளங்குகிறது.

ஸ்ரீ ஆதிசங்கரருடன் தொடர்புடைய ஸ்தலங்கள் அனைத்திலும் ஸ்ரீஆதிசங்கரருக்கு நினைவு சின்னங்களை ஏற்படுத்தியவர் ஸ்ரீஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள். தொன்மையான திருக்கோயில்களின் மரபுகள் காக்கப்படுவதில் பேரார்வம் கொண்டுள்ளனர் நமது ஆசார்யாள். வேத சம்ரக்ஷணத்தோடு தேவார திருமுறைகளின் வளர்ச்சியிலும் பெரிதும் கவனம் செலுத்தி வருகின்றனர். பழுதடைந்த பலபழமையான திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் நடந்திடச்செய்து குடமுழக்கும் நடந்திடச் செய்தவர் ஸ்ரீஸ்வாமிகள். கிராமத்துகோயில்களிலும்

நலிவடைந்த நிலையில் உள்ள கோயில்களும் நித்பூஜை நடைபெற பொருளுதவியும் செய்து வருகிறார்கள். காஞ்சி ஸ்ரீகாமாக்ஷி கோயில் விமானம், ஸ்ரீ ஆதிசங்கரர் விமானம் பொன்வேந்ததும், ஸ்ரீகாமாக்ஷி தேவிக்குப் பொன்தேர், ஸ்வர்ண சிம்மவாகனம், தங்க சகஸ்ரநாம மாலை, ஸ்வர்ணவஸ்திரகவசம், வைரங்கள் பதித்த திருமாங்கல்யம், மோகனமாலை போன்ற திருவாபரணங்களை சமர்பித்தவரும் ஸ்ரீஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள். வருடந்தொறும் நவராத்திரி உத்ஸவத்தில் ஸ்ரீ காஞ்சிகாமாக்ஷி அம்பாள் சந்நிதியிலும், தஞ்சாவூர் ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மாள் சந்நிதியிலும் சங்கீத கச்சேரிகளும், விஜயதசமியன்று தங்க ரதஉத்ஸவத்தில் தமிழ்நாட்டின் பல இடங்களிலிருந்து பல ப்ரபல நாதஸ்வர வித்வான்களை வரவழைத்து ஒரே சமயத்ததில் அனைவரும் சேர்ந்தார்போல் மல்லரிவாசிக்க ஸ்ரீ அம்பாள் தங்கரதபவனி வருவது, விஜயதசமியை அடுத்த துவாதசியன்று வருடத்தில் ஒருமுறை ஸ்ரீகாமாக்ஷி அம்பாளுக்கு ஸஹஸ்ர ஸ்வர்ண கலசாபிஷேகமும் நடந்திட வழிவகுத்துத்தந்து இந்த கைங்கர்யங்களை செவ்வன நடத்திட ஸ்ரீகாஞ்சிகாமாக்ஷி அம்பாள் சாரத நவராத்திரி கலை நிகழ்ச்சிகள் டிரஸ்ட் என்ற அமைப்பினை ஏற்படுத்தியதும் நம் பூஜ்ய ஆசார்ய ஸ்வாமிகளே ஸ்ரீ ஆசார்யாள் ஆலயவழிபாட்டு முறைகளில் காட்டிவரும் ஆர்வத்தோடு கலைகளையும், கலைஞர்களின் வளர்ச்சியிலும் மிகுந்த அக்கரைக் கொண்டுள்ளனர். கிராமிய கலைகளின் வளர்ச்சியிலும் ஸ்ரீ ஆசார்யாள் பெரிதும் கவனம் செலுத்தி ஆதரவளித்திவருகிறார். வேத, ஆகம, சில்பஸதஸ்களை நடத்துவதும், ஸ்ரீமடத்திலும், ஆலயங்களிலும், சங்கீத்மும்மூர்த்திகள் அவதாரஸ்தலம் திருவரூரிலும் இசைநிகழ்ச்சிகள் நடத்தவும் ஏற்பாடுசெய்துள்ளனர். பல தர்மஸ்தாபனங்கள் மூலமாக மக்களுக்கு மருத்துவஉதவிகள் செய்தல், கவுஹாத்தியில் ஸ்ரீசங்கரா கண் மருத்துவசாலை, ஊனமுற்றோர் மறுவாழ்வு இல்லம் நடத்துதல், வயதான்—ஆதரவுஅற்ற முதியவர்களுக்காக முதியவர் இல்லங்கள் விருத்தாச்ரமம் ஸ்ரீகாளஹஸ்த்தி, கலவை, சென்னை பூவிருந்தவல்லி போன்ற இடங்களில் நடத்திவருவது, ஜனகல்யாண் அமைப்பின் மூலமாக சுயவேலை வாய்பு, சமூகநல திட்டங்கள் ஏற்படுத்ததுதல், பல்வேறு கல்வி நிலையங்களை நடத்துதல்

போன்ற பணிகள் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. காஞ்சிக்கு அருகில் கலவையில் உடல் ஊனமுற்றவர்களுக்கான விடுதியை ஸ்ரீமடம் நடத்துகிறது.

பசுக்களை காப்பாற்றுவதற்க்காக ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் பெரும் முயற்ச்சி மேற்கொண்டுள்ளார்கள். நம் சமுதாயத்தில் பசுவிற்க்கென தனிமதிப்பும், புனிதத்வமும் உள்ளதென்பதை மக்களிடையே பரப்புவதோடு பசுக்களை ஸம்ரக்ஷணம் செய்வதிலும் கவனம் செலுத்தி வருகிறார்கள். பசுவதையை தடுப்பதற்க்கு தகுந்த சட்டம் கொண்டு வருவதோடு தக்க நடவடிக்கையையும் அரசு மேற்கொண்டு செயல் படுத்தவேண்டுமென வலியுறுத்தி வருகிறார் நம் ஆசார்ய ஸ்வாமிகள். கோயில்களில் கோபூஜை நடத்தப்படவேண்டும், திருக்கோயில்களில் கோசாலைகள் அமைத்து கோ சம்ரசாணத்திற்க்கு ஆலயங்கள் துணைபுரிய வேண்டுமென்பது ஸ்ரீஆசார்யாளின் விருப்பம். கோமாதா காமதேனு! பூஜிக்கப்படவேண்டும். அனைவரும் கோஸம்ரக்ஷணத்தில் அக்கரை காட்டவேண்டுமென்கிறார்கள் ஸ்ரீஆசார்யஸ்வாமிகள்.

மனித நேயம் பெருகச் செய்தலே ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகளின் முக்கிய நோக்கம். ஸ்ரீஆசார்யஸ்வாமிகள் ஆற்றிவரும் சமய சமுதாயப்பணிகள் ஏராளம்! ஏராளம்!! நலிவடைந்த மக்களுக்கு உதவுவதே தம் குறிக்கோளாக கொண்டு சமூக வளர்ச்சிப் பணிகளை செய்துவருகிறார்கள். இவற்றுள் ஹிந்துமிஷன் மூலமாக பல இடங்களில் பொது மருத்துவமனைகள், கும்பகோணம் போன்ற இடங்களில் தொழுநோய் ஒழிப்பு மற்றும் தடுப்பு மருத்துவனைகள், ஸ்ரீசங்கர ஹெல்த் சென்டர் குறிப்பிடத்தக்கவை. இப்படி எத்தனை எத்தனையோ சமுதாய பணிகள்!

ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் ஸ்ரீஜயேந்திரர் வகுத்த வழியில் சமய சமூதாயபணிகளில் பெரிதும் கவனம் செலுத்திவருகிறார். அறிவியலும் ஆன்மீகமும் இணைந்தால் நம் நாடு செழிப்புடன் திகழ முடியும் என்றும், பள்ளிமுதல் பல்கலைவரை ஆன்மீகம் குறித்து மாணவ மாணவியருக்குக் கற்றுத்தரவேண்டுமென்று வலியுறுத்துகிறார் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். உத்யோகத்துக்காக கல்வி என்று நின்றுவிடாமல் உத்யோகத்துக்கு

போனாலும் தொடர்ந்து நிறையப் படிக்கவேண்டும், சத்தானவிஷயங்களை படிக்கவேண்டும், ஆங்கிலத்தோடு தாய்மொழியையும் அவசியம் கற்கவேண்டும், பணத்தாலோ, தங்கள் அறிவாலோ, இல்லை சரீரத்தாலோ தங்களுக்கு தோன்றிய விதத்தில் சமுதாயசேவைசெய்திடல் வேண்டும், எந்தகாரணத்திற்காகவும் வன்முறையில் ஈடுபடலாகாது, தேசபக்தி மிகவும் முக்கியமானது. குருபக்தி, தெய்வபக்தி, பெற்றோர்கள் பெரியவர்களிடத்தில் மதிப்பு மனதினை பக்குவப்படுத்தி நம்மை நல்வழிபடுத்துகிறது. ஆன்மீகத்தை அடித்தலமாய் கொண்டு அறிவினை வளர்த்து ஆக்கபூர்வமான சேவைசெய்வதே மனநிறைவோடு வாழ்வதற்க்கான நல்ல வழியென்று வலியுறுத்தி கூறுகிறார் ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். நல்லதைப்பார்த்து நல்லவர்களுடன் பழகி, நல்லவை சிந்தித்து நல்லவையே பேசிக்கொண்டு நன்மையைசெய்திடல் வேண்டும், யாவரிடத்திலும் அன்பாக பழகிடவேண்டும் என்று வலியுருத்தி வருகிறார். தாமாகவே முன்வந்து உதவிட பழகிக்கொள்ளவேண்டும். அன்பைசெலுத்திடு இன்பம் பெறுகிடும், இறக்கம் காட்டிடு இனிதேவாழலாம் என்பது இவரது அருள்மொழி. நம்மை அன்புவழியில் அழைத்துச் செல்கிறார்கள் நம் ஆசார்யாள் ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி ஸ்வாமிகளும், ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும்.

ஆதிசங்கரர் நிலைநாட்டிய அத்வைத சித்தாந்தம் மனதைப் பக்குவப்படுத்தி எல்லாவற்றையும் தன்னைப்போல் கருதி, நேசமனப்பாங்குடன் நெருங்கி ஈசன் எங்கும் நிறைந்திருப்பதைக் காணும்படிச் செய்கிறது. இந்நிலை ஏற்பட இடைவிடா பக்தியும் அகத்தூமையும் அவசியமாகிறது. அகத்தூய்மை ஏற்படும் போது அன்பு மலர்கிறது. அன்பின் வளர்ச்சியில் அனைத்தையும் ஒன்றாகவே கருதும் மனத்தெளிவும், பக்குவமும், ஒருமைநிலையும் உண்டாகின்றன. வேற்றுமை அகல்வதினால் அமைதியும், அமைதியினால் ஆனந்தமும் கிட்டுகிறது. அதுவே இன்பநிலை. எல்லாம் சிவமயம் என்பதும் அன்பே சிவம் என்பதும் புலனாகின்றன. அன்பே சிவம் என்பதனால் அன்பு இல்லையென்றால் வாழ்விற்கு பொருள் இல்லாமல் பயனற்றுப்போகிறது. வாழ்வின் பயனைப் பெறுவதற்கு அருள் அவசியமென்றால் அருளைப் பெறுவதற்கு அன்பு அவசியமாகிறது.

அன்பு வழியே இன்பநிலையை எய்துவதற்கு உகந்தவழி. அனைத்திற்கும் அன்பே ஆதாரம். இந்த உயர்வான வாழ்க்கைதத்துவத்தினை நாம் உணரும்படியாக செய்தருள்பவர் ஆசார்யர்கள். ஆசார்யாபிமானமே உத்தாரகம். இதை நங்குணர்ந்து நமக்கு நல்வழிகாட்டி வரும் அருளாளர்கள் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் பொன்னார் திருவடிகளைத் தொழுது, நல்வழி நடந்து நலங்கள் பலபெற்று நானிலந்தன்னில் நல்லவர்களாக நலமுடன் வாழ்ந்து பிறவிப் பயனைப் பெற்று இன்புறுவோமாக!

விச்வம் தர்ப்பணத்ருச்யமான நகரீ துல்யம் நிஜாந்தர்கதம்
பச்யன்னாத்மனி மாயயா பஹிரிவோத்பூதம் யதா நித்ரயா
ய: ஸாக்ஷாத்குருதே ப்ரபோதஸமயே ஸ்வாத்மானமேவாத்வயம்
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே

– ஸ்ரீ ஆதிசங்கரர் அருளில் செய்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்

தேவ்யா லிங்கனவாமாங்கம்
பாதோதபஸ்ம்ருதிம் சிவம்
நந்திவாஹன மீஸானம்
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி மாஸ்ரயே

– ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி மஹா ஸ்வாமிகள்!

"நமோ நமஸ்தே குரவே மஹாத்மனே
விமுக்த ஸங்காய ஸதுத்தமாய!
நித்யாத்வ யானந்த ரஸ ஸ்வரூபிணே
பூம்னே ஸதாபார தயாம்புதாம்னே"

- ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிச் செய்த
விவேக சூடாமணி சுலோகம் 486.

ஸ்ரீ தோடகாஷ்டகம்

விதிதாகில ச’ாஸ்த்ர ஸுதாஜலதே
மஹிதோபநிஷத் கதிதார்த்தநிதே
ஹ்ருதயே கலயே விமலம் சரணம்
பவ ச’ங்கர தேசி’க மே ச’ரணம்

ஹே ச’ங்கர குரோ! தாங்கள் அம்ருத ஸமுத்திரம் போன்ற எல்லா ச’ாஸ்திரங்களையும், உள்ளே புகுந்து நன்கறிந்தவர். போற்றத் தகுந்த உபநிஷத்துக்களில் கூறப்பட்ட தத்வங்களுக்கு இருப்பிடம். தங்கள் தூய திருவடியை மனத்தில் த்யானம் செய்கிறேன். என்னைக் காப்பாற்ற வேண்டும்.

கருணாவருணாலய பாலய மாம்
பவஸாகர துக்கவிதூநஹ்ருதம்
ரசயாகிலதர்ச’ந தத்வவிதம்
பவ ச’ங்கர தேசி’க மே ச’ரணம்

கருணைக் கடலே! பிறவிக் கடலில் உண்டாகும் துன்பங்களால் மனத்தில் மிகுந்த தாபத்தை அடைந்த என்னை, பெரியோர்களால் அருளப்பட்ட எல்லா தர்சனங்களின் தத்வத்தையும் அறிந்தவனாகச் செய்து காப்பாற்ற வேண்டும். ஹே சங்கர குரோ! எனக்கு ரக்ஷகராக இருக்க வேண்டும்.

பவதா ஜநதா ஸுஹிதா பவிதா
நிஜபோதவிசாரண சாருமதே
கலயேச’வரஜீவவிவேகமிதம்
பவ சங்கர தேசி’க மே ச’ரணம்

ஆத்ம ஞானத்தை விசாரிப்பதில் சிறந்த புத்தி உள்ள ஹே சங்கர குரோ! தங்களால் ஜன ஸமூஹத்திற்கு க்ஷேமம் ஏற்படும். ஈஸ்வர ஸ்வரூபத்தையும், ஜீவ ஸ்ரூபத்தையும் உபாதிகளிலிருந்து பிரித்துத் தெரிந்து கொள்ளும்படியான ஞானத்தை எனக்கு அருள வேண்டும். என்னைக் காப்பாற்ற வேண்டும்.

பவ ஏவ பவாநிதி மே நிதராம்
ஸமஜாயத சேதஸி கௌதுகிதா
மம வாரய மோஹமஹாஜலதிம்
பவ ச’ங்கர தேசி’க மே ச’ரணம்

ஹே ச’ங்கர குரோ! தாங்கள் மஹேச்’வரன் தான் என்று என் மனதில் மிகுந்த ஆவல் ஏற்பட்டுவிட்டது. மோஹம் என்னும் பெரும் கடலை என்னிடம் நெருங்காவண்ணம் தடுக்க வேண்டும். எனக்கு ரக்ஷகராக இருக்கவேண்டும்.

ஸுக்ருதே அதிகிருதே பஹுதா பவதோ
பவிதா ஸமதர்ச'நலாலஸதா
அதிதீநமிமம் பரிபாலய மாம்
பவ ச'ங்கர தேசி'க மே ச'ரணம்

பலவிதமாகப் புண்யம் அதிகமாகச் செய்த பிறகு தான் தங்கள் திருவடியைத் தர்ச'னம் செய்ய ஆசை உண்டாகும். மிகவும் தீனனான இந்த என்னைக் காப்பாற்ற வேண்டும். ஹே ச'ங்கர குரோ! எனக்கு ரக்ஷகராக இருக்கவேண்டும்.

ஜகதீமவிதும் கலதாக்ருதயோ
விசரந்தி மஹாமஹஸஸ்சலத :
அஹிமாம்சுரிவாத்ர விபாஸி புரோ
பவ ச'ங்கர தேசி'க மே ச'ரணம்

மிகுந்த காந்தியுள்ள பலர் உலகைக் காப்பாற்றுவதற்கு சரீர உருவம் எடுத்து கொண்டு மறைந்து ஸஞ்சரிக்கின்றனர். தாங்கள் ஸூரியன்போல் எங்கள் முன் ஒளியுடன் விளங்குகிறீர். ஹே ச'ங்கர குரோ! என்னைக் காப்பாற்ற வேண்டும்.

குருபுங்கவ புங்கவகேதந தே
ஸமதாம் அயதாம் நஹி கோபி ஸுதீ :
ச'ரணகதவத்ஸல தத்வநிதே
பவ ச'ங்கர தேசி'க மே ச'ரணம்

குரு சிரேஷ்டரே! விருஷப த்வஜரான பரமேச்வரரே, ஒரு வித்வானும், உமக்குச் சமமாக ஆக மாட்டார். சரணமடைந்தவர்களிடம் அன்பு கொண்டவரே! தத்வத்திற்கு இருப்பிடமானவரே! ஹே சங்கர குரே! என்னைக் காப்பாற்ற வேண்டும்.

விதிதா ந மயா விசதைககலா
நச கிஞ்சந காஞ்சநமஸ்தி குரோ
த்ருதமேவ விதேஹி க்ருபாம் ஸஹஜாம்
பவ சங்கர தேசிக மே ஸரணம்.

ஹே குரோ! நான் ஒரு கலையைக் கூடத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவில்லை. என்னிடம் ஸ்வர்ணம் கொஞ்சம் கூட இல்லை. தங்களுக்கு இயற்கையாக உள்ள கிருபையை விரைவில் என்னிடம் காட்ட வேண்டும். ஹே ச'ங்கர குரோ! எனக்கு ரக்ஷகராக இருக்க வேண்டும்.

ஸ்ரீ குருப்யோ நம:

குருஸ்துதி

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அருளியது

ராகம் : ஹிந்துஸ்தானி காபி

தாளம்–ஆதி

பல்லவி

ப்ரணதோத்தாரணா கருணைக்கடல் ச'ங்கரா

சரணம்

ப்ரணதோத்தராணா பக்தன் மீது கருணைபுரி

ஸூகுணானந்தரங்கனா ஆனந்தகுரு மகேச'ா

(ப்ரணதோ)

நிகமோத்தாரணா அகணிதமஹிமநா

மங்களதாயகனா ஆனந்தகுரு நடேச'ா

(ப்ரணதோ)

அனோரணியனா மஹதோமஹீயனா

அப்ரமேயனா ஆனந்தகுரு மகேச'ா

(ப்ரணதோ)

பரமபுருஷனா பரப்ரும்மதேவனா

ஜகத்குரு புங்கவனா ஆனந்தகுரு நடேச'ா

(ப்ரணதோ)

இராகம்–பீலு

தாளம் ஆதி

பஜரே குருநாதம்

மானஸ

பஜரே குருநாதம்

பஸ்ம ருத்ராக்ஷாதி

அலங்க்ருத ச'ரீரம்

பில்வ மாலாதி

அலங்க்ருத சி'ரஸ்கம்

அலங் க்ருத சிரஸ்கம்

பஜரே...

மந்த்ர மஹாமணி

மந்த்ர ஸ்வரூபம்

ப்ரணவ பயோதர

ப்ரணவ ஸ்வரூபம்

ப்ரணவ ஸ்வரூபம்

பஜரே...

மந்தஹாஸ முகம்

மந்தாக்ஷ வீக்ஷணம்

ராஜாதி ராஜம்

ஜகத்குரு ரூபம்

காமகோடி ரூபம்

பஜரே குருநாதம்

மானஸ

பஜரே குருநாதம்.

104

குருபக்தி

ஸ்ரீ ஜயேந்த்ரசரஸ்வதி ஸ்வாமிகள் அருளியது

நம்முடைய இந்து சமயத்தில் அரிதானவை மூன்று. 1. மனிதப் பிறவி எடுப்பது. 2. எடுத்த மனிதப் பிறவியில் அடையவேண்டியதான ஞானத்தைப் பெறுவதற்கு விரும்புவது. 3. அதற்குத் தகுந்த ஆசானை அடைவது, இந்த மூன்றும் ஒரு மனித வாழ்வில் மிக முக்யமானது. இறைவனையே ஆதி குருவாகச் சொல்லப்பட்டு வருகிறது. அந்த வகையிலே நம்முடைய குருவும் ஒருவரே! ஒரு தீபத்திலிருந்து மற்றொரு தீபத்தை ஏற்றி ஒளி பெறுவது போல் ஞான தீபமும், ஞானதீப பரம்பரையும், இறைவன் முதல் தொடங்கி நம்முடைய குருநாதர் வரை ஞான ஒளியாக வந்துகொண்டிருக்கிறது.

ஒரு மனிதனுடைய வாழ்விலே, குரு மிக முக்யமானவர். குருவினுடைய தன்மையைப்பற்றி சீடன் ஆராயாமல், நம்பிக்கையோடும், விச்'வாஸத்தோடும், பக்தியோடும் தொண்டு செய்துவந்தால், குருவினுடைய அருள் பரிபூர்ணமாகக் கிடைக்கும். குருவுக்கு உவமையே இந்த உலகில் கிடையாது என்று ஸ்ரீ ஆதிசங்கரர் கூறுகிறார்.

ஒரு குருவிடம் ஞானம் பெற்ற சீடன் மூலமாக பரம்பரை பரம்பரையாக பல சீடர்களை ஞானிகளாகக் கொண்டுவர இயலும். ஆகவே, குருவினுடைய பரம்பரை ஒவ்வொருவனுடைய வாழ்க்கையிலும் இருக்கவேண்டியது அவசியம்.

இந்த உலகில் இருவர் மிகவும் சுலபமாக இறை அருளைப் பெறமுடியும், ஞானத்தைப் பெறமுடியும். 1. மாணவன். 2. மனைவி. இவ்விருவரும் மிகவும் பொறுமையுடனும், சிரத்தையுடனும், நம்பிக்கையுடனும், பக்தியுடனும் ஆசிரியருக்கும், கணவனுக்கும் பணிவிடை செய்துவந்தால், அதன் மூலம் இருவருக்கும் சகல ஞானங்களும் கிடைக்கும். இப்படித்தான் பலர் பெற்றிருக்கிறார்கள். இதையெல்லாம் விளக்கமாகச் சொல்வதற்கு நம்முடைய ஜகத்குருவான ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமி அவர்கள் நமக்கெல்லாம் சாட்சியாக விளங்குகிறார்கள்.

ஆகவே, அவரை இந்த நேரத்தில் நாமெல்லாம் மனதார நினைத்து, தொழுது, வணங்கி அவர் அநுக்ரஹத்தை பெறுவோம்.

ப்ரஸீதது குருர்மயி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிப ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமி
நாம் அந்தே வாசி வர்யை :

ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிபி:
ஸ்வ பரமகுரு ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமி
பாதானாம் சரண நளினயோ : ஸமர்ப்பிதா ப்ரார்த்தனா

ப்ரார்த்தனா
நமஸ்யே சித்த சுத்தயே

1. ச்'ருதி ஸ்மிருதி பூராணோக்த தர்ம மார்க ரதம் குரும்;
பக்தானாம் ஹிதவக்தாரம் நமஸ்யே சித்த சுத்தயே.

2. அத்வைதானந்தபரிதம் ஸாதூநாம் உபகாரிணம்;
ஸர்வ ச'ாஸ்திரவிதம் ச'ாந்தம் நமஸ்யே சித்த சுத்தயே.

3. கர்மபக்தி ஞானமார்க பிரசாரே பத்தகங்கணம்;
அனுக்ரஹ பிரதாதாரம் நமஸ்யே சித்த சுத்தயே.

4. பகவத்பாத பாதாப்ஜ விநிவேசி'த சேதஸ;
ஸ்ரீ சந்திரசே'கர குரோ : ப்ரஸாதோமயி ஜாயதாம்.

5. க்ஷேத்ர தீர்த்த கதாபிக்ஞ : ஸச்சிதானந்த விக்ரஹ;
சந்த்ரசே'கர வர்யோமே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி.

6. போஷணேவேதச'ாஸ்த்ராணாம் தத்த சித்த மஹர் நிசம்;
க்ஷேத்ரயாத்ரா ரதம் வந்தே ஸத்குரும் சந்த்ரசே'கரம்.

7. வேதஞான வேதபாஷ்யக்ஞான கர்தும் யஸ்ய ஸமுத்யம:
குருர்யஸ்ய மஹாதேவ : தம் வந்தே சந்த்ரசே'கரம்.

8. மணிவாசக கோதாதி பக்தி வாகம்ருதைர் ப்ருச'ம்;
பாலாநாம் பகவத் பக்திம் வர்தயந்தம் குரும்பஜே.

9. லகூபதேசை'ர் நாஸ்திக்ய பாவமர்த்தன கோவிதம்;
சி'வம் ஸ்மிதமுகம் ச'ாந்தம் ப்ரணதோஸ்மி ஜகத்குரும்.

10. வினயேன ப்ரார்தயேஹம் வித்யாம் போதய மேகுரோ
மார்கமன்யம் நஜாநேஹம் பவந்தம் ச'ரணம் கத :.

வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் கூறப்பட்ட தர்மங்களை அனுஷ்டித்துக் காட்டுவதில் ஈடுபடுபவரும், உலக குருவாக விளங்குபவரும், பக்தர்களுக்கு நன்மை புகட்டுபவருமான குருவை மனத்தூய்மையடைவதற்காக வணங்குவேன்.

அத்வைத நிலையான பேரானந்தத்தில் திளைத்துள்ளவரும், நல்லோர்களது விருப்பத்தை நிறைவேற்றுபவரும், எல்லா சாஸ்திரங்களையும் அறிந்தவரும், அமைதியே வடிவான வருமான குருவை மனத்தூய்மைக்காக வணங்குவேன்.

கர்ம—பக்தி—ஞானம் ஆகிய மூன்று வழிகளையும் காட்டி, பிரசாரம் செய்வதில் முனைந்துள்ளவரும், எப்போதும் யாவர்க்கும் (பார்வை, புன்முறுவல், பேச்சுக்களால்) அனுக்ஹரகம் செய்பவருமான குருவை மனத்தூய்மை வேண்டி வணங்குவேன்.

ஆதிச'ங்கரரின் பாதகமலங்களில் ஈடுபட்ட மனத்தை உடையவரான ஸ்ரீசந்திரசேகர குருவின் கருணை கடாக்ஷம் என்னிடம் உண்டாகட்டும்.

ஒவ்வொரு புனிதத்தலம், தீர்த்தம் முதலியனவற்றின் உண்மைக் கதைகளை அறிந்தவரும், ஸச்சிதானந்த வடிவமானவருமான ஸ்ரீசந்நிரசே'கரரான சிறந்த குரு எப்போதும் என் மனத்தில் நிலைத்திருக்கட்டும்.

வேதச'ாஸ்திர வளர்ச்சி பற்றியே ஸதா சிந்திப்பவரும், பல புண்யத் திருத்தலங்களுக்குப் பாதயாத்திரை செய்வதில் ஈடுபட்டவருமான ஸத்குரு ஸ்ரீசந்திரசேகரரை வணங்குகிறேன்.


தகுதியுள்ளவர்களை வேதம் கற்றவர்களாகவும்—வேத உட்பொருளை அறிந்தவர்களாகவும் ஆக்கும் பணியில் முயற்சியுடையவரும், ஸ்ரீமகாதேவேந்திர ஸரஸ்வதியை குருவாக உடையவருமான சந்திரசே'கரரை வணங்குகிறேன்.

மாணிக்கவாசகர், ஆண்டாள் ஆகியோரின் பக்தி ததும்பும் (திருப்பாவை—திருவெம்பாவை) பாடல்களைப் பரப்புவதன் மூலம், குழந்தைகளுக்கு கடவுள் பக்தியை வளர்ப்பவரான குருவை வணங்குகிறேன்.

யாவர்க்கும் மனத்தில் பதியுமாறு தெளிவான தனது எளிய தெயவீகப் பேச்சுக்களால் நாஸ்திக எண்ணங்களை அடியோடு அகற்றுவதில் நிகரற்றவரும், புன்னகை தவழும் முகத்தினால் மங்களங்களை அளிப்பவரும், ச'ாந்தி வடிவெடுத்த வருமான ஜகத்குருவை வணங்குகிறேன்.

ஓ குருவே! எனக்கு ஆத்மஞானத்தைப் போதிக்க வேண்டுமென்று நான் வேண்டுகிறேன். எனக்கு வேறு வழி ஒன்றும் புரியவில்லை. உம்மையே ச'ரணடைந்துள்ளேன்.

ஹர ஹர ச'ங்கர!! *ஜய ஜய ச'ங்கர!!!*



With Humble Pranamams :
S. Sridharan
Jayasree Jewellery
144 (New 313) Raja Street, Coimbatore - 1.



ஸ்ரீ:

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷியின் கருணை

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாளின் திருக்கோயில் நம் புண்ய பாரதத்தின் ஐம்பத்தி ஒரு சக்தி பீடங்களில் ப்ரதானமான காமராஜ பீடம் எனவும், ஸ்ரீகாமகோடி பீடம் எனவும் போற்றப் பெறுகிறது.

அகிலத்துக்கெல்லாம் அன்னையாகத் திகழ்ந்து தன் அருட்பார்வையினால் அண்டி வரும் அடியார்களின் அபிலாஷைகளை ஈடேறச் செய்து அருள்பவள் அன்னை காமாக்ஷி. "தாய்மனக் கருணை" என்பது, கருணைக்குப் பிறப்பிடம் தாயின் உள்ளம் என்பதை உணர்த்துகிறது. குழந்தைகள் பிழைகளைச் செய்த போதிலும் குற்றம் கருதாது பரிவோடு ஆதரிப்பது தாயின் தனித் தன்மை ஆகும்.

"லோக ஜனனி" எனப் போற்றப்பெறும் லலிதாம்பிகையின் ஸ்வரூபமான ஸ்ரீ காமாக்ஷியின் கருணையினால் பலரும் வேண்டுவன ஈடேறப் பெற்று ஸ்ரீ காமாக்ஷியின் கருணையே கருணை என்று போற்றுகின்றனர்.

"ஸ்ரீ வித்யா" மந்திரங்களினால் உபாசிக்கப்பெறும் ஸ்ரீ லலிதா திரிபுரஸுந்தரியின் பூர்ணபிம்ப ஸ்வரூபிணியாகத் திகழ்வது ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி தேவியின் மூல விக்ரஹம் ஒன்றே என்று கருதப்படுகிறது.

பக்தர்களின் விருப்பங்களைத் தன் அருட் பார்வையினால் பூர்த்தி செய்து அருளுவதனால் "காமாக்ஷி" எனப் பெயர் பெற்று விளங்குகிறாள்.

காமங்களை, அதாவது விருப்பங்களைப் பூர்த்தி செய்கின்ற "அக்ஷி"

கண்களுடையவள் என்ற பொருள்படக் "காமாக்ஷி" என்று போற்றப்படும் இந்த அம்பிகையே பராசக்தியின் உண்மையான ஸ்வரூபம்.

பராசக்தியாகிய ஸ்ரீ காமாக்ஷிதேவி தன் வலது கண்ணால் பிரஹ்மாவையும். இடது கண்ணால் மஹா விஷ்ணுவையும் கடாக்ஷித்தருளி பிரஹ்மாவிற்கு (கா) ஸரஸ்வதியும் விஷ்ணுவிற்கு (மா) லக்ஷ்மியையும் தன் கண்களிலிருந்து கிடைக்கும்படிச் செய்து அருளியதால் "காமாக்ஷி" எனப் போற்றப் பெறுவதாக புராணங்கள் புகலுகின்றன.

லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் இருபுறம் இருந்து கவரி வீச ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் காஞ்சியில் கொலுவீற்றிருக்கிறாள். "ஸசாமர ரமாவாணீ ஸவ்ய தக்ஷிண ஸேவிதா" என்ற லலிதா ஸஹஸ்ர நாமத்தின் சொல்லாட்சிக்கேற்ப உத்ஸவ காமாக்ஷி காட்சி அளிக்கிறாள்.

தன்னை அண்டியவர்களுக்கு அவரவர் எண்ணியவாறு அவரவர் விருப்பங்களை நிறைவேறச் செய்வதனாலும், செல்வத்தை வேண்டும் அடியார்களுக்கு கோடிக் கணக்கில் ஏராளமாகச் செல்வத்தினைத் தந்துதவதாலும், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் தந்தருளுவதாலும் காமாக்ஷி எனவும், விருப்பத்தின் (காமத்தின்) எல்லை (கோடி) ஆகிய மோக்ஷத்தினை (வீடுபேறு) தந்தருளுவதால் "காமகோடி காமாக்ஷி" எனவும் போற்றப் பெறுகிறாள்.

காமாக்ஷி என்று பெயர் கொண்ட அம்பிகையின் திருக்கோயில்கள் நம் நாட்டின் வடகோடியிலிருந்து தென்கோடி வரை அமைந்துள்ளபோதிலும் "காமாக்ஷி" என்றதுமே அனைவர் நினைவிலும் நிற்பது ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி தேவியே. ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அநுக்ரஹம் என்ற ஐந்தொழில்களுக்கு மூலாதாரமாகத் திகழ்ந்து வேத, ஆகம, புராணங்களில் "பராசக்தி" எனப் போற்றப் பெறுபவளும், முனிவர்கள், யோகிகள், சித்தர்கள் ஆசார்யர்கள் போன்ற அருளாளர்கள் உள்ளங்களில் நிலைத்திருந்து அண்டியவர்களின் மேன்மையில் அக்கரை கொண்டு அருள்பாலிக்கும் அன்புடைய அன்னை ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி.

இதனால் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் "ஸ்ரீமாதா" என்ற சொல் ஸ்ரீ காமாக்ஷியைக் குறிப்பதாகக் கூறுவர். அடியார்களின் தகுதியைப் பாராமல், கனிவுடைய மனத்தோடு கேட்போர்க்குக் கேட்டதைக் கிடைக்கச் செய்தருளுவதால்

"காமதாயினி" எனவும் "அவ்யாஜ்ய கருணாமூர்த்தி" எனவும் போற்றப் பெறுகிறாள்.

"ஸகல லோக ஜனனி" என்ற ஸம்பந்தமே ஹேதுவாக (உலகங்களுக்கு எல்லாம் தாய் என்பதனாலேயே) பக்தி செய்வோருக்கு நல்லவையே நல்கி நலமுடன் வாழச் செய்து படிப்படியாக மனதினைப் பக்குவப்படுத்தி ஞானத்தைத் தந்து அதனால் வீடுபேறடையச் செய்கிறாள் என்பதனால் "பக்த சௌபாக்ய தாயினி" என்று ஸ்ரீ காமாக்ஷி போற்றப் பெறுகிறாள்.

கருணையே வடிவானவள் காஞ்சி காமாக்ஷி என்பதை க்ருத யுகத்தில் 2000 ஸ்லோகங்களினால் துர்வாஸ முனிவரும். த்ரேதா யுகத்தில் 1500 ஸ்லோகங்களினால் பரசுராமரும், த்வாபர யுகத்தில் 1000 ஸ்லோகங்களினால் தௌம்ய முனிவரும், கலியுகத்தில் 500 ஸ்லோகங்களினால் மூகசங்கரரும் போற்றி பரவியுள்ளனர்.

எங்கும் நிறைந்திருந்து, எல்லாமுமாய் எல்லாவற்றையும் காத்து ஆட்கொள்ளும் கருணையுடையவளாகிய ஆதிபராசக்தி தர்ம சம்ரக்ஷணார்த்தம் பக்தவாத்ஸல்யத்தினாலும் முன்னர் தேவர்களுக்கு அஸுர பயம் நீக்கி அபயம் தந்து ஆட்கொண்டு தன்னை ஆராதிக்கச் செய்தும், பின்னர் நம் எல்லோரையும் நல்வழியிலேயே நடத்திச் சென்று நன்மைகளைப் பெறுவதற்கு தன் அருட்பார்வையினால் காத்தருளும் ஆதிபராசக்தியாகிய அன்னை காமாக்ஷி காஞ்சி க்ஷேத்ரத்தில் பிலாகாசரூபத்திலும், ஸ்ரீசக்ர வடிவத்திலும் சதுர்புஜங்களோடு காயத்ரீ மண்டபத்தில் கொலுவிருக்கிறாள். ஆதிபராசக்தி கருணை காமாக்ஷியாகக் காஞ்சியில் தோன்றிய வரலாறு மிகவும் பிரஸித்தி பெற்றது.

முன்னொரு காலத்தில் பந்தகாசுரன் எனும் அசுரன் கடும் தவம் செய்து ப்ரும்மாவினிடமிருந்து வரங்கள் பல பெற்று ஆணவ மிகுதியால் மூவுலகங்களையும் கைப்பற்றி தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் பெரும் துன்பத்தை விளைவித்து வந்தான். பந்தகாசுரனால் துன்பப்படுத்தப்பட்டு துரத்தப்பட்ட தேவர்கள் சிவபெருமானை தம்மைக் காத்து ஆட்கொள்ளும்படி வேண்டினர். பிரும்மாவின் வரத்தின் மஹிமையினால் வலுப்பெற்ற பந்தகனின் வலிமையினையறிந்த பரமேஸ்வரன் பந்தகனை அழிக்கும் வல்லமை பெற்றவள் பராசக்தி ஒருத்தியே

என்பதை உணர்ந்து தஞ்சம் அடைந்தோரை தள்ளிவிடுவது சரண்யனுக்கு லக்ஷணம் ஆகாது என்பதனால் தேவர்களைக் கைலாஸத்திற்கு வடக்கில் உள்ள கோமுகம் எனும் திவ்ய க்ஷேத்திரத்திலிருக்கும் பிலத்துள் சென்று காஞ்சி க்ஷேத்ரத்தில் பிலத்தின் வழியே வெளிவந்து அங்கு அன்னை பராசக்தியை வணங்குவதே துன்பத்திலிருந்து விடுபடுவதற்கு சிறந்த வழி என்று அருளிச் செய்தார். காமகோடி பீடத்தின் சிறப்பினை சிவபெருமான் எடுத்துரைக்க அன்னையை தஞ்சமடைய தேவர்கள் பிலத்வாரத்தின் வழியே வந்து காமகோடி பீடத்திற்கு அருகே ஒரு செண்பக விருக்ஷத்தில் கிளி வடிவம் கொண்டு அன்னையை வழிபட்டு வந்தனர். அம்பிகை தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, மிகுந்த கோபத்தோடு பிலத்தினிலிருந்து வெளிப்பட்டு கைலாயத்தில் பந்தகாசுரன் நித்திரை செய்வதை அறிந்து அவனது கண்டத்தில் ஒரு பாதத்தையும், மார்பில் மற்றொரு பாதத்தையும் வைத்து 18 புஜங்களுடன் 18 ஆயுதங்களை தரித்து பைரவிரூபிணியாய் தோன்றி அவனது சிரஸை அறுத்து சிகையைப் பிடித்து அவன் தலையுடன் ஐந்து வயதுடைய கன்னிகையாய் காமகோடி பீடமாகிய பிலத்வாரத்தை வந்து அடைந்தாள்.

கன்னிகை உருவத்தில் வந்த அம்பிகையின் திருக்கரத்தில் பந்தகாசுரனுடைய சிகை சிக்குண்டு இருக்கும் கோரத்தைக் கண்டு பயந்து தேவர்கள் மூர்ச்சையுற்றனர். மூர்ச்சையுற்ற தேவர்களின் அச்சத்தைப் போக்கும்வண்ணம் அம்பிகை அதிசுந்தரமான திருமேனியுடன் சர்வாலங்கார பூஷிதையாய் பட்டாடை உடுத்திய சிறுபெண்போல் தேவர்களுக்கு முன் காட்சி அளித்தாள். மூர்ச்சை தெளிந்த தேவர்கள், திவ்ய மங்கள ஸ்வரூபிணியான கன்னிகையைக் கண்டு வியந்து அம்பிகையின் சக்தியை உணர முடியாமல் திகைத்து நின்றனர். வணங்கி நின்ற தேவர்களைக் கண்ட அன்னை அவர்களை அவ்விடத்தில் ஒரு பள்ளம் தோண்டி அதில் பந்தகனைப் புதைத்து ஜெயஸ்தம்பத்தை நாட்டும்படி பணித்தாள்.

தேவர்களும் அவ்விடம் பள்ளம் தோண்டும் சமயத்தில் அவ்விடத்தில் மல்லகன் எனும் அசுரன் தவம் செய்துகொண்டு த்யானத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட தேவர்கள் அவன் தவம் முடிந்து எழுந்தால் அவனை அடக்க முடியாதென்று அவனையழித்து தம்மை ஆட்கொள்ளும்படி விஷ்ணுமூர்த்தியை வேண்டினர். விஷ்ணுவும் அவனைத் தாக்கவே அவனது சரீரத்தினின்றும் வெளிப்பட்ட ஒவ்வொரு

ரத்த பிந்துவினின்றும் ஒவ்வொரு அசுரனாகத் தோன்றி பெரும் அசுரர் கூட்டம் தோன்றியது. போர் புரியும்போது அவர்கள் மாள்வதற்குப் பதிலாக சிதறுகின்ற ரத்தத் துளிகளினின்றும் மேலும் அசுரர்கள் விருத்தியாவதைக்கண்டு அசுரர்களை அழிப்பதில் துணை புரியும்படி ருத்திரமூர்த்தியை வேண்டவே அவர் தம் ஜடையை விரித்து பூமியில் அடித்து இரண்டு பூதங்களை உண்டாக்கி மேன்மேல் அசுர விருத்தியாகாதவண்ணம் சிதறுகின்ற ரத்த பிந்துக்களைப் பானம் செய்யும்படி கட்டளையிட்டார். பூதங்கள் ரத்தபானம் செய்யவே அசுர விருத்தியாவது தடுக்கப்பட்டு திருமாலும் மல்லகனை அழித்தார்.

ஆயினும், பூதங்கள் அசுர ரத்தம் குடித்ததனால் அசுரத்தன்மையை அடைந்து, வெறிகொண்டு திருமாலை எதிர்க்கலாயின. திருமாலும் அவ்விரு பூதங்களையும் கீழே தள்ளி மேலே நின்றனன். பூதங்களும் அவரை எதிர்த்து நின்றன. விஷ்ணுமூர்த்தி மீண்டும் பூதங்களை கீழே தள்ளி அவை எழுந்திராத வண்ணம் அவற்றின் மேல் அமர்ந்தனன். பூதங்கள் எப்படியாவது எழுந்திருக்கவேண்டும் என்று பெரிதும் பிரயத்தினப்படுவதைக் கண்ட திருமால் அவைகளைக் காலால் மிதித்து மேலே சயனித்துக்கொண்டு பூதங்களின் கர்வத்தை அடக்கி பூதபந்தனன் என்று பெயர் பெற்று விளங்கினார். போதை தெளிந்து தாம் விஷ்ணுமூர்த்தியை எதிர்த்ததை உணர்ந்த பூதங்கள் தம்மை மன்னித்து அருளும்படி திருமாலை வேண்டின. திருமாலும் சிவபெருமானால் தமக்கு உதவிக்காக அனுப்பப்பட்ட பூதங்களை உதைத்து சிவ அபராதம் செய்ய நேர்ந்ததே என்று வருந்தவே சிவபெருமான் தனது ஜடை முடியிலுள்ள கங்கையைப் பெருகி வரச்செய்து பஞ்சதீர்த்த மென்னும் தீர்த்தத்தை ஏற்படுத்தி அதில் பூதங்களையும் விஷ்ணுமூர்த்தியையும் முழுகி வரச் செய்து பூதங்கள் விஷ்ணுமூர்த்தியுடன் போர் புரிந்த பாவத்திலிருந்தும், திருமால் சிவகணங்களைத் துன்புறுத்தியதற்கு பரிகாரமும் காண வழி செய்து அருளினார்.

திருமாலும் அந்த ஆண், பெண் பூதங்களை பஞ்சதீர்த்தம் காப்பவைகளாகப் பிரதிஷ்டை செய்து அவற்றின் மதிய பாகத்தின் மேலிடத்தில் முன் பூதங்களுடன் சண்டையிட்ட போது நின்றும், இருந்தும், கிடந்தும் இருந்ததுபோல் மூன்று பேத ரூபங்களாகவே எழுந்தருளி புத்திர பாக்யத்தை வேண்டி பஞ்சதீர்த்தத்தில் நீராடுபவர்க்கு சந்தானத்தை அனுக்கிரஹித்து அருள எழுந்தருளினார்.

தேவர்கள் தேவியின் கட்டளைப்படி பந்தகனைப் புதைத்து அவ்விடத்தில் வெற்றிக்கொடியாக ஜெயஸ்தம்பத்தை நாட்டி அவ்விடத்தினின்றும் பிலாகாசத்திற்குப் போக ஓர் த்வாரம் அமைத்து, அதற்கருகாமையில் தெற்கில் பிலத்தின் வெளி எவ்வளவு உள்ளதோ அவ்வளவும் நாற்சதுரங்களாக அமைத்து, அதில் காயத்ரியினுடைய வர்ணங்களையே இருபத்து நான்கு கால்களாக நாட்டி, காயத்ரி மண்டபம் என்று பெயரிட்டு அம்மண்டபத்துள் ப்ரணவத்தை ரத்ன ஸிம்ஹாஸனமாக அமைத்து அப்பீடத்தின்மேல் கன்யா ரூபமாக இருந்த அம்பிகை போன்ற ஒரு பிம்பத்தை செய்து ஆவாகித்து ஆராதித்து கதவை மூடிவிட்டு வெளியேயிருந்து சூரியோதயம் ஆகும்வரை ஜபித்திருந்தனர். அருணோதய காலத்தில் ஆசாரத்தோடு கதவைத் திறந்து பார்க்கும்பொழுது தாங்கள் வைத்திருந்த விக்ரஹத்திற்கு பதில் ராஜராஜேச்வரியாகிய த்ரிபுரஸுந்தரி நிஜ ரூபத்தோடு ஆவிர்ப்பவித்திருப்பதைக் கண்டு வியந்து, போற்றி, துதித்து, வணங்கி நின்றனர், அன்று ஸ்ரீ லலிதாம்பிகை ஆவிர்பவித்த காலமானது சாவித்திரி ஸ்வயம்பு மன்வந்தரத்தில் க்ருத யுகம் ஸ்ரீமுக வருஷம் கும்ப மாஸமாகிய பங்குனி மாதத்தில் க்ருஷ்ணபக்ஷம் ப்ரதமை திதி பூர நக்ஷத்திரம் கூடிய சுக்ரவார சுபதினமாகும்.

ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கின்ற பரமேச்வரிக்குப் பட்டாபிஷேக உத்ஸவம் செய்யவெண்ணி விஸ்வகர்மா பல்லக்கையும், பிரமன் முத்துக் கொண்டையையும், நாராயணன் நவரத்தின மகுடமும், சிவபெருமான் ஸ்ரீசக்ரமென்னும் பதக்கமும் கொடுக்க அம்பிகையை அலங்காரம் செய்து என்றும் காஞ்சியில் ஸான்னித்யமாக இருந்து அருள் பாலித்து வரவேண்டுமென்று வணங்கி வேண்டினர்.

முன்னர் தாரகாஸுர ஸம்ஹார நிமித்தம் சிவகுமாரன் ஷண்முகன் அவதாரம் செய்யவேண்டிய அவஸ்யத்தை உணர்ந்து தேவர்கள் தவத்திலாழ்ந்திருந்த சங்கரனின் மனம் கௌரியின் பக்கம் திருப்பச் செய்யவேண்டி மன்மதனை சிவபெருமானிடம் கைலாயத்திற்கு அனுப்பி வைத்தனர். மன்மதனின் மலரம்புகளால் தாக்கப்பட்டு த்யானநிலை கலையவே தன் மனச்சலனத்திற்கு காரணமாயிருந்த மன்மதனை முக்கண்ணன் சினம் கொண்டு மூன்றாவது கண்ணாகிய அக்கினி நேத்திரத்தினால் பஸ்மம் செய்தார்.

பூர்வத்தில் பரமேச்வரனுடைய நெற்றித் தீப்பொறியால் அனங்கனாய்ப்போன மன்மதன் முன்போல் அங்கம் பெற்று சிவபெருமானை ஜெயிக்க வேண்டுமென்ற விருப்பத்தோடு காமகோட்டத்தை அடைந்து அன்னை காமாக்ஷியை வணங்கி மனோஹரமான தேகத்தைப்பெற்றான். பிறகு அம்பிகையிடம் தன் விருப்பத்தை தெரிவித்து நிறைவேற்றி அருள்புரியும்படி வேண்டினான். அன்னையும் திருவிளையாடல் புரிய எண்ணினாள். மன்மதனைக் கைலாயத்திற்குச் சென்று சிவபெருமான் மேல் மீண்டும் மலரம்புகள் வீசச் செய்தாள். இம்முறை ருத்ரனின் நேத்ராக்னி மன்மதனை எரிக்காமல் அவனது முடியில் இரத்தினம்போல் பிரகாசித்தது. காம இச்சைக்கு உள்ளானவராய் சங்கரன் அந்தப்புரம் சென்றார். அங்கு சக்தி இல்லாமையைக் கண்டார். காரணம் காஞ்சிபுராதீசையாகிய பராசக்தி கைலாசம் முதலிய ஸ்தலங்கள் தோறும் இருக்கின்ற தனது அம்சமான சக்திகளையெல்லாம் ஆகர்ஷித்துக்கொண்டு காமாக்ஷி என்ற ஏகசக்தி ஸ்வரூபமாக காஞ்சியில் வீற்றிருந்ததால் கைலாயத்ததில் தேவி காணாமல் போனாள்.

கைலாயத்தில் தேவியைக் காணாது சிவபெருமான் மற்ற சிவஸ்தலங்களுக்குச் சென்று, அங்கேயும் தேவியைக் காணாது தேவிக்கு ரஜஸ்தானமாகிய காஞ்சிக்கு வந்து அங்கு தவக்கோலத்தில் வடிவுக்கரசியாய் காக்ஷி தந்த காமாக்ஷியை கண்டு கௌரி என்று நினைத்து தமக்கு உண்டாகியிருக்கும் காமம் தணியுமாறு கோரி சமீபித்தார். தேவியும் சிவபெருமானுக்கு உண்டாகியிருக்கும் காமத்தைத் தணிவிக்கும் கௌரி தானில்லை என்றும், காமம் தணிய மன்மதனின் தயவை நாடுவது தான் ஒரே வழி எனவும் நவில நாயகன் நகைத்து மன்மதன்பால் தான் செல்வது நடவாத செயலென்று கூறி அம்பிகையின் திருக்கரம் பற்ற முயன்றபோது அவ்வம்பிகை தனது திருக்கண் பார்வையினால் கோடி மன்மதர்களை உண்டாக்கி பெருமான் மேல் ஏவினாள். அவர்கள் சிவபெருமானைச் சூழ்ந்து போர் செய்யத் தொடங்கினர். சிவபெருமானும் கோடி ருத்ரர்களை உண்டாக்கி தன்னுடன் போர் புரிய வந்த மன்மதர்கள்மேல் ஏவினர். ருத்ரமூர்த்திகள் ஸ்ரீகாமாக்ஷியின் கருணையினால் தோற்றுவிக்கப்பட்ட மன்மத மூர்த்திகளிடம் தோல்வி அடைந்தனர்.

தேவியினுடைய லீலா சங்கல்பத்தினால் தனது மனோபீஷ்டம் ஈடேறிய

மன்மதன் மகிழ்ந்து சிவபெருமானை அணுகி, அம்பிகைபால் பலி ஏற்கச்செய்தனன். அம்பிகையும் தம்மால் உண்டாக்கப்பட்ட மன்மதர்களை தம்முடைய காமகோடி பீடத்திற்கு நேராக ஆகாயத்தில் நக்ஷத்திர ரூபமாக வசிக்கச் செய்து தம் அம்சாமாகிய கௌரியோடு சிவபெருமான் கூடியிருக்க தான் அதுவரை ஆகர்ஷித்து வைத்திருந்த சக்தி ரூபங்களை அந்தந்த ஸ்தலங்களில் மீண்டும் எழுந்தருளி ப்ரகாசிக்கும்படி செய்து அருளினாள். மன்மதனின் புஷ்பபாணங்களாகிய தாமரை, அசோகம், மா, மல்லிகை, நீலோத்பலம் என்ற ஐந்து வகை மலர் அம்புகளையும், கரும்பு வில்லையும் தன் கையில் தரித்து காக்ஷி தந்ததினால் "ஸுமபாணேக்ஷுகோதண்ட மண்டிதா" என்று ஸ்ரீ காமாக்ஷி போற்றப் பெற்றாள்.

"பக்தர்களிடமும், ஞானிகளிடமும் உன் கைவரிசையைக் காட்டாதே" என்று மன்மதனிடம் கூறி, அவனிடமிருந்து கரும்பு வில்லையும் புஷ்ப பாணங்களையும் வாங்கி வைத்துக்கொண்டுவிட்டாள் தேவி என்று காஞ்சி காமகோடி பெரியவர் பரமாச்சாரியார் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பந்தகனும், மன்மதனும் ரஜோகுண ஸம்பன்னர்கள். ரஜோகுணமானது இரண்டு ஸ்வபாவங்களைக் கொண்டது. ஒன்று காமம், மற்றொன்று க்ரோதம், மன்மதன் காமஸ்வரூபி; பந்தகன் க்ரோதஸ்வரூபி, காமம் என்பது ஆசையைக்குறிக்கும், ஆசை நிறைவேறாத போது க்ரோதம் உண்டாகிறது. காமக் க்ரோதங்களை அறவே அழித்துவிட முடியாது. அவற்றை அடக்கி வைத்து தர்மாசரணத்திற்கு அனுகுணமாக வைத்திருப்பதே உய்யும் வழிக்குரிய வழியாகும். அதற்கு அம்பிகையின் கருணாவிலாஸமே உறுதுணையானது.

ரஜோகுணமென்பது செயல் துடிப்பைக் குறிக்கும். செயல் துடிப்பைத் தவறாக இல்லாமல் ஒழுங்குபடுத்துவதினாலேதான் செயல் அழகாக அமையும். செயல்முறையை ஒழுங்குபடுத்தி நற்செயலாக இருக்கத் துணைபுரிவது அன்னையின் அருளே. தமோகுணம் நிறைந்த பந்தகனை அழித்து, அதன் மூலம் செயலின் அவசியத்தையும் அதிலும் நற்செயலின் முக்கியத்துவத்தையும் நிலைநாட்டியவள் அன்னை. தமோகுணம் என்பது செயலற்ற சோம்பலையும். மயக்க நிலையினையும் குறிக்கும். செயல் ஊக்கமே இல்லாவிடில் சாதனை ஏது? வீடுபேறு பெற வழி தான் ஏது? தமோகுண பந்தகனை அழித்தும், ரஜோகுண மன்மதனை

அடக்கியும் அவனியை ஆட்கொண்ட அன்னை தன் அருட்பார்வையினால் நம்மை நல்ல செயல்களில் நாட்டம் கொண்டு பயனைப்பெறும்படி அருள் புரிவதனால் அம்பிகை கருணை காமாக்ஷி ஆனாள்.

காஞ்சியில் சிவாலயங்களில் அம்பிகைக்குத் தனிச் சந்நிதி கிடையாது. காஞ்சியில் சிவாலயங்கள்தோறும் இருக்கத் தக்க சக்திகளெல்லாம் காமாக்ஷியினிடத்தில் கலந்திருப்பதே இதற்குக் காரணமாகும். பிரும்மா ஒருசமயம் அன்னையை வணங்கி காஞ்சியில் ஏகாம்ரேசருக்குத் திருக்கல்யாண வைபவம் நடத்திவைக்க வேண்டுமென்ற விருப்பம் தெரிவிக்கவே அன்னை காமாக்ஷி தன் நெற்றிக்கண்ணினின்று சித் ஜோதி ஸ்வரூபமாய் ஒரு சக்தி ஸ்வரூபத்தைத் தோன்றச் செய்தாள்.

அந்த சக்திஸ்வரூபம் பூர்வத்தில் ஏகாம்ரநாதரை ஏகாக்ர சித்தத்தோடு த்யானித்து தவம் செய்து, பின்னர் நாயகனை அடைந்து நித்யகல்யாணியாய் விளங்கியவள் என்றும் சிவமன்மதர்களின் போராட்டத்தின்போது தன்னால் ஆகர்ஷிக்கப்பட்டு தன்னுள் இருந்தவள் என்றும் அருளிச் செய்து அந்த ஜோதிஸ்வரூபமாகிய அம்பிகை போலும் ஸ்வர்ணத்தினால் விக்ரஹம் செய்து ஸ்தாபித்து விவாக காலங்கள் தோறும் ஏகாம்ரநாதருக்கு விவாஹம் செய்வித்து மகிழும்படி பணித்தாள். அதுபோலவே பிரும்மாவும் ஸ்வர்ணத்தினால் அம்பிகை விக்ரஹம் செய்வித்து ஏகாம்ரநாதருடன் கல்யாணோத்ஸவம் நடத்தி மறுநாள் காமாக்ஷி தேவி ஆலய ப்ரதக்ஷிணமாக வந்து, ஏகாம்ரநாதரை அவரது பரிவாரங்களுடன் அவரது ஆலயத்திற்கு எழுந்தருளும்படி செய்து, ஸ்வர்ண காமாக்ஷியை ஸ்ரீ காமாக்ஷி ஆலயத்திற்குள் எழுந்தருளச் செய்து சாந்தி அபிஷேகங்கள் நடத்தினார். இதுபோல் நிரந்தரமாக நடைபெற வழிசெய்ய திருவுளங்கொண்டப்ரஹ்மா அம்பிகையைப் பூஜித்த புஷ்பங்களிலிருந்து ஒரு தாமரைப் பூவை ஆகாயத்தில் வீசவே அது விரிந்து பூமியை வந்தடைந்து மனித உருவம் எடுக்கவே அவருக்கு ஆகாசபூபதி எனப் பெயரிட்டு அம்பிகையின் ஆலய வழிபாட்டினை சரியாக நடத்திவரும்படி கட்டளையிட்டார்.

ஸ்ரீ காமாக்ஷியினின்று தோன்றிய சக்திஸ்வரூபிணிக்கும் ஸ்ரீஏகாம்ரேஸ்வரருக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றதை வைத்து ஸ்ரீகாமாக்ஷியை ஸ்ரீ ஏகாம்ரேச பத்தினியாக போற்றுவது மரபாகியுள்ளது. முன்னர் கௌரி

ஸ்ரீஏகாம்ரேச்வரரை பதியாக அடைந்த வரலாறு மிகவும் ப்ரஸித்தமானது.

ஒரு சமயம் கைலாசத்தில் போகமூர்த்தியாய் அம்பிகையோடு அர்த்தாஸனத்தில் வீற்றிருந்தபோது, லீலா வினோதமாக, இறைவனின் இரு கண்களையும் இறைவி விளையாட்டாகப் பொத்தியதும், இறைவனின் இருவிழிகளாக விளங்கிய ஸூர்ய, சந்திரர்களின் ப்ரகாசமும் மறைக்கப்பட்டு அகிலமே இருளில் ஆழ்ந்து, ப்ராணிகளுக்குத் துன்பம் நேரிடக் காரணமாகிறது. அதுசமயம் பிராணிகளிடத்துப் பரம காருண்யத்தினால் முக்கண்ணானகிய பரமன், அக்னி நேத்ரமாகிய தம் மூன்றாவது கண்ணைத் திறந்து உலகுக்கு ஒளிதந்து ஆட்கொண்டதோடு, ஜீவராசிகளுக்குச் சிரமம் ஏற்படுத்தியதால் அம்பிகையைப் பிராய்ச்சித்தமாகப் பூவுலகில் தவம் செய்யவும் பணித்தார்.

அம்பிகையும் ஐயனின் தர்ம சிந்தனைக்குத் தலைவணங்கிப் பூமியின் நாபிஸ்தானமாக விளங்குவதும் சத்யவ்ரதமென்று புகழ் பெற்றதும் ஆகிய காஞ்சியில் தவம்கொள்ள வெண்ணிப்பதரிகாச்ரமத்தில் ஒரு குழந்தை வடிவங்கொண்டு தோன்றினாள். புத்ரபாக்கியம் வேண்டிப் பதரியில் தவமிருந்த காத்யாயன முனிவர் குழந்தை வடிவிலிருந்த அம்பிகையைக் கண்டு எடுத்துவந்து தம் ஆச்ரமத்தில் வளர்த்து வந்தார். இதனால் அம்பிகைக்கு காத்யாயனி எனும் காரணப்பெயர் ஏற்பட்டது. காத்யாயனி பால்யத்தை அடைந்ததும், அம்பிகையின் அவதார காரணத்தை அறிந்த காத்யாயனர், அவளுக்கு யோகதண்டம், ஜபமாலை, தீபஸ்தம்பம், புலித்தோல், புத்தகம், வறுத்த பயறு, கங்கை மணல், கங்கா தீர்த்தம், குடை, விசிறி இரண்டு சாமரம் ஆகியவற்றைத் தந்துத் தென் திசையில் சென்று ஸத்யவ்ரத க்ஷேத்திரத்தை அடைந்து, ஐயனைக் குறித்துத் தவமிருக்கச் சொல்லிக் காஞ்சியைக் கண்டறிய சில அடையாளங்களையும் தெரிவித்து மங்களநாயகி மங்களம் பெற வாழ்த்தி அனுப்பிவைத்தார்.

பதரிகாச்ரமத்திலிருந்து புறப்பட்ட காத்யாயனி காசிக்கு வந்து, அங்கு மழையின்மையினால் வறுமை ஏற்பட்டு மக்கள் வாடுவதைக் கண்டு மனமிரங்கித் தன் அருட்கடாக்ஷத்தினால் மழை பெய்வித்ததோடு பயிர்கள் நன்றாக வளர்ந்து தான்ய சம்விருத்தியோடு விளங்கும்படி அருள்புரிந்து அன்னதானம் செய்து ப்ரஜைகளைப் பட்டினிப் பிணியிலிருந்து விடுவித்து அன்னபூரணி எனப் பெயர்பெற்று காசியிலிருந்து காஞ்சியை வந்தடைந்தாள். காத்யாயன முனிவர்

அடையாளமாகச் சொன்னதுபோல், புலித்தோல் சோமவிருத்தமாகவும், குடம் ஆதாரபீடமாகிய அதன் ஸூத்ரமாகவும், கங்கைமணல் லிங்க ரூபமாகவும், ருத்ராக்ஷமாலிகை பில்வ மாலையாகவும், குடை நாகாபரணமாவும், யோகதண்டம் திரிசூலமாகவும், விசிறி கிளியாகவும், சாமரங்கள் இரண்டும் இரு பெண்களாகவும் புத்தகம் காமதேனுவாகவும், வித்யாதரம் ஊசியாகவும், வறுத்த பயறு முளையோடு கூடியதாயும் மாறிடவே, அத்திருத்தலமே ஸத்யவ்ரத க்ஷேத்திரமாகிய காஞ்சி க்ஷேத்திரம் என்பதனை உணர்ந்து அம்பிகை, நான்கு வேதங்களையே கிளையாக கொண்ட மாவடியின் கீழ் கங்கை மணலால் லிங்கம் அமைத்து, இரு பெண்களையும் காவலாக வைத்துப் பஞ்சாக்னியை வளர்த்து அதன் நடுவே ஊசியின் முனையில் நின்று பரமேஸ்வரனைத் தியானித்துத் தவமியற்றி வந்தாள்.

காஞ்சியில் மாவடியின்கீழ் தவம் புரிந்துவந்த அம்பிகையின் பக்தியின் உறுதியை விளங்கச் செய்யும் பொருட்டு அம்பிகையின் தபோநிஷ்டையைச் சோதிப்பது போல், திருவிளையாடல் புரியத் திருவுளங்கொண்ட இறைவன் தம் திருமுடியில் வசிக்கும் கங்கையை இறக்கி விடவே, அது பெரும் வெள்ளமாகப் பெருக்கெடுத்து மஹாதேவி தவம் புரியும் இடத்தை நோக்கி வந்தது. ஜலப்ரளயம் போல் பயங்கரமாக வெள்ளம் வருவதைக்கண்டு அஞ்சிய காத்யாயனி "கம்ப கம்ப" (பயம் பயம்) என நடுக்கமுற்றாள். எனவே, இதற்குக் கம்பாநதி எனும் பெயர் ஏற்பட்டது. அம்பிகையும் அப்பிரளயத்தைத் தடுக்கவெண்ணி தமது தோழியருள் ஒரு சக்தியை அந்த வெள்ளத்தை தடுக்கும்படி கட்டளையிட்டாள். அந்த சக்தி காளி ரூபமெடுத்து, அவ்வெள்ளத்தக்கெதிர் நின்று தன் கையிலிருந்த கபாலத்தில் அப்பெருவெள்ளத்தை உள்ளடக்கினாள். அதனால் அந்த சக்தி மஹா ப்ரளயபந்தினி, ப்ரளயம் காத்த மாதா எனும் பெயர் பெற்றாள்.

சிவபெருமானும் தன் திருவிளையாடலைத் தொடர்ந்தார். கபாலத்தில் அடங்கிய வெள்ளம் பெருவெள்ளமாகக் கபாலத்திலிருந்து வெளியே வரச்செய்தார். கபாலத்தில் அடங்கியிருந்த வெள்ளம் மீண்டும் பெருகி வருவதைக்கண்டு அம்பிகை ஆபத்பாந்தவனாகிய தனது சகோதரன் திருமாலைத் துணைபுரியும்படி வேண்டினாள். திருமாலும் விஸ்வரூபமெடுத்துப் பூமியில் பாதங்களும், ஆகாயத்தில் முடியுமாகத் தனது கண்டத்தில் சந்திரகிரணம் விளங்க பேருருவம் கொண்டு அவ்வெள்ளத்தைத் தடுப்பார் போன்று நின்று தஞ்சமடைந்த தங்கையை நோக்கி

அவளது தவத்தைச் சோதிப்பதற்கு சிவபெருமானே வெள்ளத்தைத் தோற்றுவிப்பதைத் தெளிவுபடுத்தி அவனைச் சரணடைந்து தவப்பயனைப் பெறும்படி அருளிச் செய்தார். சந்திர கண்டராய், நிலாத்துண்டப் பெருமானாகக் காட்சி தந்து நிலைமையை நாரணன் நன்கு தெளிவுபடுத்தவே அம்பிகையும் தாம் அமைத்த மணல்லிங்கம் நீரில் கரைந்துபோகாமலிருக்கத் தம்மிரு கரத்தினாலும் அணைபோல் தடுத்து ஆலிங்கனம் செய்து தழுவினாள். எம்பெருமானும் பிராட்டியாரது மார்பும், வளைத்தழும்பும் தமது திருமேனியில் அழுத்தப் பெறவே அகமகிழ்ந்து காமேசராய்க் காத்யாயினியை ஆட்கொண்டருளினார். அம்பிகையினால் வேதஸ்வரூபமான மாவின்கீழ் மாதேவன், தழுவக் குழைந்த தலைவனாக, ஏகாம்ரேஸ்வரராக எழுந்தருளினார். ஏகாம்ரம் – அதாவது ஒற்றை மாமரத்து ஈசன், சூதநாதர், ஏகாம்ரேச்வரர், ஏகாம்ரநாதர் எனவும் கச்சித் திருஏகம்பன் எனவும் இறைவன் போற்றப்படலானார். அம்மையையும் ஐயனையும் கல்யாணக் கோலத்தில் காட்சிதந்த சம்பவம் பங்குனி உத்திர நன்னாளில் திருமண வைபவம், பிரம்மோற்சவத்தில் வெகுசிறப்பாக இன்றும் கொண்டாடப் பட்டுவருகிறது. காமாக்ஷியின் அம்சமாகிய ஏலவார்குழலி ஏகாம்ரேச்வரனை அடைந்ததனால் திருகாமாக்ஷியம்மை இடங்கொண்ட திருவேகம்பநாதர் என்றே இப்பெருமான் அழைக்கப்படுகின்றார்.

லலிதாதேவியானவள் சிவசக்தி ரூபிணியாதலால் அந்தத் தேவியை நிர்குணபரமான சிவபாவனையாகவும் ஸகுணபரமான சக்திபாவனையாகவும் த்யானித்து சிவசக்தியாத்மகமாக அர்ச்சித்தல் அவசியம். லலிதாம்பிகையாகிய த்ரிபுராம்பிகையும் அவளிடத்தில் தோன்றிய தபஸ் காமாக்ஷியையும் சிவசக்தி ஐக்கிய பாவனையாகவே பூஜித்தல் வேண்டும். ப்ரும்மதேவனால் செய்விக்கப்பட்ட மூன்றாவது திருவுருவான கௌரியாகிய ஸ்வர்ண காமாக்ஷி ஏகாம்பரநாதருடைய பத்தினியாய் தனித்து அவரது வாமபாகத்தில் உடனிரக்கப்பெற்றவராதலால் முன்னர் ஏகாம்ரநாதரையும் அதன் பின்னர் இவ்அம்பிகையையும் அர்ச்சித்தல் வேண்டும் என்ற முறையையும் ஏற்படுத்தித் தந்த பிரும்மாவினால் ஏற்படுத்தப்பட்ட ப்ரமமோத்ஸவத்தையும் நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவ, மாஸோத் ஸவங்களையும் நியமப்படி ஆகாசபூபதியும், துண்டீர மஹாராஜனும், அவர்வழி வந்த அரசர்களும் நடத்தி வந்தனர்.

பூர்வம் க்ஷீரஸாகர மதன சமயத்தில் வாஸுகியின் வாயிலிருந்து வெளிவந்த

காலகூட விஷஜ்வாலைகளினால் சமுத்திரத்தின் அடியில் கூர்மரூபியாய் மந்திர பர்வதத்தைத் தாங்கிவந்த திருமாலின் திருமேனி நீலநிறமுடையதாயிற்று. அழகிய திருமேனி கறுத்துப் போகவே ஹிரண்யவர்ணமுடைய லக்ஷ்மி தேவி பொன்னிறமாயிருக்கும் தனக்கு கருமை நிறமடைந்த திருமாலின் அழகு குறைந்ததென்று பரிகாசம் செய்யவே சர்வாங்க சுந்தரியாகிய லக்ஷ்மிதேவியின் கர்வத்திற்கு அவளது அழகே காரணமென்று உணர்ந்த விஷ்ணுமூர்த்தி லக்ஷ்மியைக் குரூபியாக சபிக்க, லக்ஷ்மி காஞ்சி வந்தடைந்து காமாக்ஷியைப் பணிந்து நின்றாள். அம்பிகையும் லக்ஷ்மி தேவியை காயத்ரீ மண்டபத்தில் தனக்கு இடது பக்கத்தில் சந்நிதியாகயிருந்து தன்னை அர்ச்சித்த குங்குமத்தை பக்தர்கள் லக்ஷ்மியின் திருவடிகளில் சமர்ப்பிக்கும்போது குங்குமத்தின் மஹிமையினால் தன் நிஜ ரூபத்தைப் பெறுவதோடு பக்தர்களுக்கு அஷ்ட ஐஸ்வர்யத்தை அருளக்கூடிய வரப்ரசாதினியாகவும் விளங்கும்படி கடாக்ஷித்தருளினார். மங்கள நாயகியின் குங்கும ப்ரசாத மஹிமையினால் அரூபலக்ஷ்மி ஸ்வரூபலக்ஷ்மியாகி இழந்த அழகை மீண்டும் பெற்றாள்.

காஞ்சி காமக்கோட்டத்துக் காமாட்சியினிடத்து விமோசனம் பெறவேண்டி வந்த தன் பத்தினி லக்ஷ்மியை யாரும் அறியாதவண்ணம் என்ன நடக்குமோ பார்ப்போம் என்று வந்த திருமால் திவ்யரூபத்தைப் பெற்ற லக்ஷ்மியைக் கண்டுகளித்தார். ஒளிந்துவரும் புருஷனைப்பார்த்து புத்தெழில் கொண்டு இன்பம் பெருகிட அம்பிகை துணை இருக்கிறாள் என்ற தைரியத்தோடு, “கள்ளா, வா” என்றழைத்தாள். அதனால் காயத்ரீ மண்டபத்தில் ஸ்வரூப லக்ஷ்மிக்கு சமீபத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு கள்வர் என்ற பெயர் ஏற்பட்டது. புராணப்படி இவர் திருநாமம் ஆதிவராகன். கிழக்கே திருமுக மண்டலமாய் நான்கு திருக் கரங்களுடன் எழுந்தருளி இருக்கிறார்.

ஸ்ரீ வைஷ்ணவ திவ்யதேசங்கள் நூற்றெட்டில் கள்வர் சந்நிதியும் ஒன்று – திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகத்தின் எட்டாம் பாடலில் ஆழ்வார் இவரை மங்களா சாஸனம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தனது ஆலய கைங்கர்யத்தில் முழுமையாக ஈடுபட்டிருந்த ஆகாசபூபதியின் பக்திக்கு மெச்சி அன்னை காமாக்ஷி காஞ்சியில் பொன்மாரி பொழிந்த அற்புத செயல் மிகவும் ப்ரசித்தமானது. ப்ரம்மாவினால் நியமிக்கப்பெற்று அன்னை

காமாட்சியை அர்ச்சனை செய்து அதிலிருந்து ஒரு தாமரை மலரை எடுத்து ப்ரஹ்மதேவன் ஆகாயத்தில் வீச அது மேலே விரிந்து மலர்ந்து பூமியை வந்தடைந்து மானிட உருவம் கொண்டு ப்ரஹ்மாவை வணங்கி நின்றது. ப்ரஹ்மாவும் அவரை காஞ்சி மாநகரத்திற்கு அரசனாக நியமித்து அன்னையை ஆராதித்து வரும்படி பணித்தார். ஆகாசபூபதி என்ற பெயருடன் விளங்கிய அவர் அரசாண்ட காலத்தில் ஒரு சமயம் வளம் குன்றி மக்கள் அவதிப்பட நேரிட்டது.

மகப்பேறும் இல்லாததால் அரசன் தனக்கு புத்திரபாக்யத்தை அருளும்படியும் காலத்தே மழைபெய்து பயிர்கள் நன்றாக விளைந்து தன, தான்ய ஸம்ருத்தியுடன் மக்கள் செழிப்புடன் வாழ்வதற்கும் அன்னையின் அருளை வேண்டி விரதமிருந்தார். அன்னை காமாட்சி தன் அளவிலா கருணையினால் ஆகாசபூபதிக்கு விநாயகப்பெருமானின் அவதாரமாகக் குமாரனை அனுக்ரஹித்தாள். பின் அரசன் நாளும் வளமோடு திகழ அன்னையை வேண்டி விரதமிருந்து அன்னதானம் செய்த சமயம் பந்தியில் சுமங்கலிகள் அமர்ந்திருந்த வரிசையில் அன்னை காமாக்ஷி தானும் ஒரு சுமங்கலி ரூபத்தில் வந்தமர்ந்து உணவருந்தியதும் பந்தலுக்கு வெளியே பொன்மாரி பொழிந்தது.

மஹாராணி, சந்தர்ப்பணைக்கென்று வைத்திருந்த பயிர் தான்யத்தை சோதிக்குங்கால் கை நெளியிலிருந்து ஒரு பொன்மணி உதிர்ந்து பயிருடன் சேர்ந்து ஆகாரத்துடன் அன்னையின் குக்ஷியில் (வயிற்றில்) சேர்ந்ததே பொன்மாரி பெய்ததற்கு காரணமென்று சிறுகுழந்தையாக இருந்த துண்டீரன் எடுத்து கூறிய அதிசயத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர். அன்று பெய்த பொன்மழையின் காரணமாக பூமியில் பொன்போன்ற கதிர்களுடன் நெல் விளையவே அவ்விடம் இன்றும் பொன் விளைந்த களத்தூர் என்று விளங்குகிறது. ஆகாசபூபதியின் அரும் புதல்வதனாக அவதரித்து அன்னை காமாட்சியின் ஆராதனையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு தொண்டின் திருவுருமாக திகழந்தவரே துண்டீர மஹாராஜா. துண்டீர மஹாராஜா அன்னை காமாக்ஷியின் மூலஸ்தானத்திற்கெதிரே ஓரமாக கைகூப்பிநின்று அந்தர்யோகத்தில் ஆழ்ந்த பெருமை இன்றும் உற்சவ காமாக்ஷியின் சந்நிதிக்கு எதிரேயுள்ள துண்டீரனின் தவக்கோல விக்ரஹம் தெளிவுபடுத்துகிறது. த்யானயோகத்திற்கு உதாரணமாக அமைந்திருக்கும் இவரது பிம்பத்திற்கு முன்பு ப்ரதக்ஷிணம் செய்கையில் அவரது தியான நிலை கலையாமல்

இருப்பதற்கென்று வாய்மூடிகைகுவித்தவண்ணம் செல்வது இன்னமும் வழக்கத்தில் உள்ளது.

காஞ்சியில் கனகவர்ஷம் பொன்மழை பெய்வித்ததுபோல் ஸ்ரீகாமாக்ஷி பல மஹான்களுக்கு கவித்திறனை வழங்கிய சம்பவங்களும் குறிப்பிடத்தக்கவை. அவர்களுள் யுகத்திற்கொருவராக துர்வாஸர், பரசுராமர், தௌம்யர், மூகசங்கரர் போன்ற யுகபுருஷர்கள் சிறந்த தேவி உபாஸகர்களாக புகழ் பெற்றது ஸ்ரீ காமாக்ஷியின் கருணையினாலேயே.

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் ஸ்ரீ காமாக்ஷியின் சந்நிதியில் விதேஹ கைவல்யம் அடைந்ததை உலகம் அறிய ஸ்ரீகாமாக்ஷி கோயிலில் ஸ்ரீ சங்கரருக்கு சந்நிதியுள்ளது. காமகோடி பீடத்தின் பெயரையே ஆசார்யாள் காஞ்சி மடத்தின் பெயரில் கொண்டுள்ளது அன்னை காமாக்ஷிக்கும் ஸ்ரீ சங்கர மடத்திற்குமுள்ள பந்தத்தைத் தெளிவுபடுத்துகிறது.

ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் ஸ்ரீ சக்ர பிரதிஷ்டை செய்தது மட்டுமின்றி ஸ்ரீசக்ராகாரமான ஸ்ரீ காமாக்ஷியின் ஆலயத்தையும் புதுபிக்கச்செய்து, அப்போது ஆட்சி புரிந்துவந்த ராஜசேனனைக் கொண்டு காஞ்சிபுரத்தை ஸ்ரீசக்ர ரூபத்தில் மாற்றியமைத்து அதன் பிந்துவாக காமகோட்டக் கருவறை அமைந்து இருக்கும்படி செய்து அங்கு சர்வக்ஞ பீடத்தை ஸ்தாபித்து பீடாரோஹணம் செய்தார். காமகோடி பீடாதிபதிகளுள் இருபதாவது பீடாதிபதியாகிய மூகசங்கரர் ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் பெயரில் ஐநூறு ஸ்லோகங்கள் இயற்றியவர். மூகர் என்பது காரணப்பெயர். ஊமை என்று இதற்குப் பொருள். ஊமையும் மந்தமதியுமாக இருந்த இவர் ஸ்ரீகாமாக்ஷியின் கருணையினால் பேசலுற்று, கவிபாடும் திறனைப்பெற்ற வரலாறு மிகவும் ப்ரஸித்தமானது. இவர் காளிதாஸரின் மறுபிறவியாகக் கருதப்படுகிறார். இந்த வரலாறு மிகவும் சுவையானது.

கவிதைக்கு காளிதாஸன் என்பது பிரஸித்தமான பழமொழி. குமார ஸம்பவம், மேகதூதம், ரகுவம்சம் போன்ற மஹா காவியங்களை உலகுக்குத் தந்தருளிய மஹாகவி காளிதாஸர் காளிகாம்பாளின் பேரருளால் கவிபாடும் பேராற்றல் பெற்ற அருளாளரும் ஆவார்.

போஜராஜனின் அரசவையில் விளங்கிய கவிஞர்களுள் மிகவும்

ப்ரஸித்தமானவர் காளிதாசர். அவர்போல் அரசவையை அலங்கரித்துவந்த கவிஞர்களுள் மூத்த கவிஞர் தண்டி என்பவர்.

கொடியும், கொடி போன்ற கன்னியும், காவியக் கன்னியை உருவாக்கும் கவிஞனும் ஆதரிப்போர் இன்றி விளங்குவதில்லை என்பதற்கேற்ப இவ்விரு மாபெரும் கவிஞர்களும் போஜராஜனின் நல்லாதரவில் நல்ல கவிதைகளைப் புனைந்து நானிலம் போற்றும் வகையில் பொலிவுற்றிருந்தனர். புலமையில் பொறாமை கொள்ளாது, பொருந்திய அன்போடு சிறந்த தேவிபக்தர்களாக ஒற்றுமையுடன் வாழ்ந்துவந்தனர். ஆயினும் மற்றவர்கள் இவர்களில் எவர் சிறந்த கவிஞர் எனும் வினாவை எழுப்பினர். மற்றவர் பூசலில் மகிழ்வு கொள்வது தானே உலக நியதி.

போஜனுக்கு இது பெரும் பிரச்னையே ஆகிவிட்டது. காரணம் இருவரும் நிகரற்ற கவிஞர்கள் – தேவியின் அருள் பெற்றவர்கள். காளிதாஸனின் கவிதைகளில் ஸ்ருங்கார ரசம் மிகுதியாக இருந்து மனம் கவரும்வண்ணம் அமைந்திருந்ததென்று அறுதியிட்டுத் தீர்ப்பளித்தால், காளிதாஸனிடத்தில் தனக்குள்ள அபிமானம் வெளிப்படும் என்ற அச்சம் போஜனுக்கு ஏற்பட்டது.

நடுவராக இருப்பவர் போட்டி இடுபவரினும் அத்துறையில் அதிகத் திறனுடையவராகத் திகழ வேண்டும் என்ற அடிப்படையில் அவ்விரு கவிஞர்களின் ஆற்றலைச் சோதித்து பார்க்கும் தகைமை தனக்கில்லை எனக் கூறி காளிகாதேவியிடமே முறையிட்டு, யார் சிறந்த கவிஞரென்று தீர்வு காணும்படி பரிந்துரைத்தார்.

தண்டியும் காளிதாசரும் காளியின் ஆலயம் சென்று தம் கவிதைகளால் தேவியின் புகழ்ப்பாடிப் போற்றி நின்றனர். காளிகாம்பிகை தண்டியை "கவிஞன்" என்று கூறி காளிதாஸனைப் பற்றிய கருத்தை உரைக்குமுன் ஆத்திரமடைந்த காளிதாஸன் அவசரப்பட்டு "அப்படியென்றால் நான் யாரடி" என்று அம்பிகையை ஏக வசனத்தில் ஏசினான். காளிகாம்பிகையும் அமைதியாய் "நீயே நான்" என்று தனக்கும் காளிதாஸனுக்கும் பேதம் இல்லை என்று காளிதாஸனின் உயர்வினை எடுத்துரைத்தனள். ஆயினும், நடுவரின் நிலையில் நின்ற அன்னையாகிய தன்னை அவசரப்பட்டு அவதூறாகப் பேசிய அபராதத்திற்குத் தண்டனையாகக் காளிதாசன்

ஊமையாக போகக் கடவது என்று சபித்தனள்.

"ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு" என்பது காளிதாசனிடத்திலும் உண்மையாயிற்று. தன் தவறுக்கு வருந்திய காளிதாசன் அன்னையின் மலரடி பணிந்து தன் பிழை பொறுத்து அருளும்படி வேண்டினான். காளியும் மனமிரங்கி தவறுணர்ந்த தனயனை நோக்கி தன்னருளால் கவிபாடிப் புகழ்பெற்ற காளிதாசன் மறுபிறவியில் ஊமையாகப் பிறந்து தன் அருளால் மீண்டும் தன்மேல் கவிபாடும் திறனைப் பெறும்படி ச'ாப விமோசனம் கொடுத்தருளினாள். அவ்வண்ணம் ஊமையாகத் தோன்றியவர் மூகர் என்ற வரலாறு வழக்கில் உள்ளது.

சக்தி பீடங்களில் முதன்மையாக விளங்கும் ஸ்ரீகாஞ்சி க்ஷேத்திரத்தில் ஒரு ரிக் வேத ஸனாதன குடும்பத்தில் ஊமையாகத் தோன்றியவர் மூகர். பால்யத்திலிருந்தே அம்பிகையினிடத்தில் அளவிலா பக்தி கொண்டு ஸ்ரீகாமாக்ஷி அம்மையை வலம் வந்து ஸந்நிதியில் அமர்வது வழக்கம். பக்கத்தில் ஒரு ஸ்ரீவித்யா உபாஸகர் வாக்ஸித்தியை வேண்டி காமாக்ஷியைத் தியானித்து வந்தார். ஒருநாள் உபாஸகரைக் கடாக்ஷித்தருளும் திருவுள்ளத்தோடு ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் கன்னி உருவில் உபாஸகரின் முன் தோன்றினாள். அம்பிகையின் அதிலோக ஸௌந்தர்யத்ருபதைக்கண்டு வியந்த ஊமைச்சிறுவன் வாயைத் திறந்து "பேபே" என்று தன் ஊமை மொழிகளால் உரக்கக் கத்தித் தன் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த முயன்றான்; வந்தவள் தன்னை ஆட்கொள்ள வந்த அன்னையே என்று பூர்வ ஜென்மம் நினைவால் உணர்ந்த போதிலும், வந்தவளைப் போற்ற வாயில்லையே என்ற வேதனையை வெளிப்படுத்தவும் முயன்றிருக்கலாம்.

ஊமைச்சிறுவனின் உளறல் ஒலிகேட்டு தியானம் கலைந்த உபாஸகர் கண்விழித்துப் பார்த்து ஊமையின் அலறலுக்கு அங்கிருந்த கன்னிகையே காரணம் என்று கருதி அவளை அவ்விடம் விட்டு விலகிச் செல்லும்படி கடிந்துகொண்டார்.

வந்திருக்கும் கன்னிகை காமாட்சியே என்று உணர முடியாதபடி கர்ம வசத்தினால் ஏற்பட்ட உபாசகரின் நிலையை எண்ணிப் புன்முறுவல் பூத்த காமாக்ஷியின் திருவாயினின்று தாம்பூலத்துளிகள் தெறித்து ஊமையின் வாயில் விழுந்தன.

அம்பாளின் தாம்பூல ஸ்பரிசத்தினால் ஊமையாக இருந்த மூகரும்

பேசலுற்று கவிபாடும் அற்புதமும் நிகழ்ந்தது ஸ்ரீ காஞ்சி காமாக்ஷியின் கருணைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

இன்றைக்கு சுமார் 1600 ஆண்டுகளுக்கு முன்னர் காஞ்சியில் வாழ்ந்து வந்த ஓர் அந்தணக் குடும்பத்தில் உதித்தவன் மேலே உள்ள மூகன். பிறவிலேயே ஊமையான மூகனை, சிறுகுழந்தையாக இருக்கும் தருணம் முதல் அவனின் தாய் தினமும் மாலையில் ஸ்ரீகாமாக்ஷி அன்னையின் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று, ஆங்கு அம்பிகையினிடம் தன் ஊமை குழந்தைக்குப் பேசும் சக்தி வரவேண்டுமென நீண்டநேரம் பிரார்த்திப்பதை வழக்கமாகச் செய்துவந்தாள். திருவிழாக் காலத்தில் ஒருநாள், அவ்வம்மையார் குழந்தையையழைத்துக் கொண்டு சற்று தாமதமாக கோயிலுக்குச் சென்றாள். திருவிழாக்கூட்டத்தில் பாலகன் மூகன் தாயிடமிருந்து பிரிந்துவிட்டான். தாம் தேடிப்பார்த்துவிட்டு ஒருகால் பையன் வீட்டிற்குச் சென்றிருப்பான் என எண்ணி வீட்டிற்கு விரைந்தாள். அங்கும் அவன் இல்லாததால் மிகவும் பயந்து, துயரத்துடன் மறுபடி கோயிலுக்குச் சென்றாள். கூட்டம் கலைந்திருந்தது. பூஜகர் வெளியே உட்கார்ந்திருக்க பாலகன் மூகன் நின்றுகொண்டு தேவியைக் குறித்து, ஸம்ஸ்க்ருதத்தில் இனிய குரலில், ஆனந்தப் பரவசத்தில் மூழ்கியவனாக பாட்டின்மேல் பாட்டாகப் பாடிக்கொண்டே இருப்பதைக் கண்ணுற்றத் தாய் ஆச்சர்யமடைந்தாள். முன்னர் தாயைக் காணாது பயந்து வருந்திய சிறுவன், தாயைத் தேடியவனாக, உலகன்னையை நோக்கி அழுதகொண்டே உள்ளே செல்லும் வழியில், யாரோ ஒரு மாது அவன் கையில் தேவியின் பிரஸாதத்தில் சிறிது கொடுக்க, அவன் அதை தன் வாயில் போட்டுக்கொண்டான். அக்ஷணமே அவன் வருத்தமும், ஊமைத் தன்மையும் நீங்கியது. தன் தாயைத் தேடியவன் உலகின் தாயின் ஒளிமயமான கண் இலக்குக்கு உட்பட்டான்.

இப்படி ஊமை நீங்கி. உலகன்னையாம் ஸ்ரீ காமாக்ஷியை அன்று அவன் துதித்துப் பாடிய 500 பாக்களும் தான் "மூகபஞ்ச சதீ" என்ற நூலாக உருவாகியுள்ளது. பிறவி ஊமையும் அம்பிகையின் கடாக்ஷ வீக்ஷண்யத்தாலும், ப்ரஸாதத்தினாலும், கீர்த்தியுள்ள கவியாக மாறக் கூடும் என்பதை மூககவி ஆர்யா சதகத்தின் 57வது பாவிலும், கடாக்ஷ சதகத்தின் 74வது பாட்டிலும் தன்னையே எடுத்துக்காட்டாக வைத்துப் பாடுகின்றார்.

இச்சிறுவனே பின்னர் கி.பி. 398 ஆம் ஆண்டில் பிரம்ம சர்ய்த்திலிருந்தே, காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராசார்ய பீடத்தின் 19வது குருவினிடம் ஸன்யாஸ தீக்ஷை பெற்று அப்பீடத்தில் "மூகசங்கரேந்த்ரர்" என்ற பெயருடன், 20ஆவது ஆசார்யராக, 39ஆண்டுகள் திகழ்ந்து, தாத்ரு வருஷம் (437 கி.பி.) ச்ராவண பூர்ணிமையன்று ஸித்தியடைந்தார் எனக் காஞ்சிபீட வரலாறு குறிப்பிடும்.

காமாக்ஷியின் கருணையைப் போற்றி இவரால் இயற்றப்பட்ட 500 ஸ்லோகங்களைதக் கொண்டது "மூகபஞ்ச சதீ" எனும் நூல். இதில் ஒரு சதகத்திற்கு நூறு ஸ்லோகங்கள் வீதம் ஐந்து சதகங்கள் இருக்கின்றன. அவை ஆர்யா சதகம், பாதார விந்த சதகம், ஸ்துதி சதகம், கடாக்ஷ சதகம், மந்தஸ்மித சதகம் என்பவை.

ஊமையாக இருப்பினும் அன்னை காமாக்ஷியை ஒரு கணம் நினைப்பதனால் பேச்சாற்றலைப் பெற்று பெரும்புகழைப் பெறுகிறான் என்று ஆர்யா சதகத்தின் 57வது ஸ்லோகத்தில் வலியுறுத்தி கூறுகிறார், ஊமைகளுக்குக் கூட தேவநதியான கங்கை வெள்ளம் போன்று வாக்கின் பெருக்கை உண்டு பண்ணுவது ஸ்ரீ காமாக்ஷியின் கருணை என்று ஸ்துதி சதகத்தின் 11வது ஸ்லோகத்தில் போற்றி இருப்பதைக் காணலாம்.

ப்ரஹ்மாதி தேவர்களும் காமாக்ஷியின் கருணையைப் போற்றுதற்குரிய வார்த்தைகள் முழுமையாகக் கிடைக்காமல் யோசித்துக் கொண்டிருக்கத் தான் அம்பிகையின் அருளைப் போற்றுவதற்குத் துணிந்தது ஸ்ரீகாமாக்ஷியின் திருவடிகளை ஆச்ரயித்திருப்பதினாலேயே என்கிறார் ஸ்துதி சதகத்தின் முதல் ஸ்லோகத்தில் மூக சங்கரர்.

இதயத்தின் உள்ளிருந்து சொல் வடிவில் வெளிவந்த கீர்த்தியைத் தருவது ஸ்ரீகாமாக்ஷி தேவியின் சக்தியே. சித்சக்தி ஆகிய அம்பிகை, இதயத்தில் குடிகொண்டு இயக்கும் வரையில் அனைவரும் ஊமைகளே!

நாவில் நின்று நல்வாக்கை நல்கிடும் நாயகி ஸ்ரீகாஞ்சி காமாக்ஷி என்பது "மூகபஞ்ச சதீ" யில் பல இடங்களில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. தெய்வ வழிபாட்டு முறையில் பல தத்துவங்களைப் பின்பற்றி இந்நூல் அமைக்கப்பட்டுள்ள தென்று பெரியோர் கூறுவர். மந்த்ர சாஸ்திரம், அஷ்டாங்கயோகம், குண்டலினிப் ப்ரபோதம்,

அத்வைதானுபவம் இவரது ஸ்லோகங்களில் ஆங்காங்கே ரஸமாகச் சொல்லப்பட்டிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பு.

நவரஸங்களின் பெருக்கும், கவிச்சுவையும் நிறைந்த பக்திரஸ ப்ரதானமான நூலாகவும் இது திகழ்கிறது. நம்மை நன்னெறிப்படுத்தி நல்லவர்களாக்கும் வழிகாட்டிகள் ஆச்சார்யர்கள் என்பதற்கு ஒப்ப ஸ்ரீ காமாக்ஷியையே குரு மூர்த்தியாகக் கொண்டு வழிபட்டுப் பெரும் பேற்றினைப் பெற்றவர் மூக சங்கரர். "குருமூர்த்தே த்வாம் நமாமிகாமாக்ஷி" என்று ஸ்ரீ மூகசங்கரர் ஸ்ரீகாமாக்ஷி தேவியை குருவாகவே எண்ணி வணங்குகிறார்.

ஸ்ரீ மூகசங்கரரைப் போலவே பல மஹான்கள் ஸ்ரீகாஞ்சி காமாக்ஷியின் கருணையைப் பலவாறாகப் போற்றி இருக்கின்றனர். ஸ்ரீகாமகோடி பீடத்தின் 62வது பீடாதிபதியாகிய ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் "சிவகீத மாலிகா" என்ற நூலில் ஸ்ரீ காமாக்ஷியின் வைபவத்தை வர்ணித்திருக்கிறார்.

உபாஸனா மார்க்கங்களில் நாதோபாஸனை வெகு சிலாக்யமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இசை என்பது இசையவைக்கும் தன்மையைக் குறிக்கும். இறைவனிடத்தில் உள்ளம் இசையும்படியும், அடியார்களின் பக்திக்கு இசைந்து இறைவன் அருள்புரியும்படியும் செய்கின்ற உயர்வழி நாதோபாஸனை.

தம் பாடல்களினால் தமது இஷ்ட தெய்வங்களைப் போற்றிப் பாடி வழிபட்டு வந்தவர்கள் வாக்கேயக்காரர்கள். இவ்வரிசையில் சிறந்த சக்தி பீடமாக விளங்கும் திருவாரூரில் தோன்றியவர்கள் சங்கீத மும்மூர்த்திகள் எனப் புகழ்பெற்ற ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ ஸ்யாமா சாஸ்திரிகள் ஆவர். இதில் இராமபிரானை ஆராத்ய தெய்வமாகக் கொண்டு பல கீர்த்தனங்களை இயற்றிப்போற்றிப்பாடிப் பேறு பெற்றவர் ஸ்ரீ தியாகராஜர்.

அதுபோல் குமரக் கடவுளை தமது இஷ்ட தெய்வமாகக் கொண்டு "ஸ்ரீகுருகுஹ" என்ற முத்திரையை வைத்து க்ருதிகளை இயற்றியவர் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர். சிறந்த தேவி உபாஸகராக விளங்கி தேவியின் பெயரில் எண்ணற்ற ஸாஹித்யங்களை இயற்றியவர் ஸ்ரீ ஸ்யாமா சாஸ்த்ரிகள்.

இம்மூவரும் அன்னையின் அருளே அனைவரையும் காத்தருள வல்லது

என்பதை வலியுறுத்தி தேவியின் பரமாக பல ஸாஹித்யங்களைப் புனைந்திருக்கின்றனர். தேவியின் பெயரில் இவர்கள் இயற்றிய அருட்பாடல்கள் இவர்கள் அம்பிகையிடத்தில் கொண்டுள்ள ஆழ்ந்த பக்தியைத் தெளிவுபடுத்துகின்றன.

இம்மூவரும் ஸ்ரீ காஞ்சி காமாக்ஷியை மனமுருகிப் போற்றிப்பாடி இருக்கின்றனர். ஸ்ரீகாஞ்சி காமாக்ஷியின் இணையிலாக் கருணையை இவர்களது பாடல்கள் மூலம் உணர முடிகிறது.

புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரி அதிஷ்டானம் ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள், காஞ்சியில் சிலகாலம்வசித்து கரதலபிக்ஷை தீக்ஷையுடன் ஸ்ரீகாமாக்ஷி தேவியின் கருணையை வேண்டி தவமிருந்து அன்னையின் அருளால் அவனிபுகழ் அருளாளராக விள்ங்குபவர். ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் தமக்கு ஞானத்தை தந்தருளி உயர்த்தியது ஸ்ரீ காஞ்சி காமாக்ஷியின் கருணையே என்று போற்றி வருவது ஸ்ரீ காமாக்ஷியின் கருணையை விளங்கச் செய்கிறது.

ஸ்ரீ ஆதிசங்கரர் பிரதிஷ்டைசெய்தருளிய ஸ்ரீசக்ரஸ்வரூபிணி ஸ்ரீகாமகோடி பீடவாஸினி ஸ்ரீகாமாக்ஷி தேவி. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி திருக்கோயிலின் பரம்பரை தர்மகர்த்தாக்களாக விளங்கி வருவதோடு லோகக்ஷேமத்திற்காக ஸ்ரீகாமாக்ஷியை அநவரதமும் ப்ரார்த்தித்து வருகின்றனர்.

அரசர்கள் போலவே காமகோடி பீடத்து ஆசார்யர்களும் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் திருக்கோவிலை அவ்வப்போது புதுப்பித்துள்ளார்கள். ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் திருக்கோயில் ஸ்ரீமடத்துத் திருக்கோயிலாகவே பீடாதிபதிகளை பாரம்பர்ய தர்மகர்த்தாவாகக் கொண்டு பரிபாலிக்கப்பட்டு வருகிறது. 1761ல் ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் எனப்படும் சங்கராச்சார்ய ஸ்வாமிகள் இக்கோயிலின் திருப்பணி செய்வித்ததாகச் சாஸனங்கள் உள்ளன. 1942ஆம் ஆண்டில் காஞ்சி காமகோடி பீடத்துப் பரமாச்சார்யாள் ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் இத்திருக் கோயிலின் திருப்பணியையும், மகாகும்பாபிஷேகத்தையும் செய்வித்து தொடர்ந்து ஸ்ரீ காமாக்ஷி அம்பாளுக்கு ஸ்ரீ சக்ராகாரமாக வெள்ளிரதமும் அம்பாளுக்கு ஸ்வர்ண ஸஹஸ்ரநாம ஹாரத்தையும் செய்வித்துச் சமர்ப்பித்தார்.

ஸ்ரீ கிருஷ்ணதேவராயரால் புதுப்பிக்கப்பட்டு பல்லவ அரசர்களால் அபிவிருத்தி செய்யப்பட்டுப் பின்னர், 1942 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற காஞ்சி காமாக்ஷி அம்பாள் திருக்கோயிலில் ராஜகோபுரமும் ப்ரகார கோபுரங்களும் விமானமும் திருப்பணி செய்யப்பட்டு 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் ஐந்தாம் நாள் அன்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளால் மஹாகும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடத்திவைக்கப்பட்டது.

அன்று முதல் நாள்தோறும், தினத்திற்கு ஒன்று, இரண்டு, மூன்று என நாற்பத்தெட்டு நாட்களில் எழுபத்தியைந்து இசைக் கச்சேரி நிகழ்ச்சிகளும், மூன்று நாட்கள் ஹிந்து சமய சிறப்பு மாநாடும், வித்வத் ஸதஸ்களும், விசேஷ அபிஷேக ஆராதனைகளும் இனிது நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. மண்டலாபிஷேகம் நிறைவுபெறும்வரை இசைநிகழ்ச்சிகளை அமைத்து நடத்துகின்ற பெரும் பேற்றினை இந்த நூலாசிரியராகிய எனக்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அநுக்ரஹித்தருளியது அடியேனின் முன்னோர்கள் செய்த பாக்கியமாகும். 1979ல் பிப்ரவரி மாதம் ஒன்றாம் நாள் ஸ்ரீ காமாக்ஷி சந்நிதியின் விமானத்திற்குத் தங்கத்தினாலான தகடுகள் வேயப்பட்டு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களால் கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடத்திவைக்கப்பட்டது. ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அம்பாளுக்கு தங்கரதம் செய்வித்து சமர்ப்பித்திருக்கிறார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மற்றும் வருடத்தில் முக்கியமான நாட்களில் தங்க ரதோத்ஸவம் நடைபெறுவதற்கு வழி செய்யும் வகையில் உபயதாரர்கள் பெயரில் ஸ்வர்ணரத டிரஸ்ட் நிறுவப்பட்டு சிறப்பாக நடைபெறுகிறது.

த்ன்னை நாடிவரும் பக்தர்களின் இன்னல்களைப் போக்கி, இன்பத்தை நல்கும் நாயகியாய், தன் அருட்பார்வையினாலேயே வேண்டுபவருக்கு வேண்டுவன அருளும் அருள் வடிவமாக அன்னை காமாட்சி காஞ்சியில் கோயில் கொண்டு விளங்குகிறாள். நான்கு திசைகளிலும், நான்கு பெரிய கோபுரங்களுடனும், உயர்ந்த மதில்களுடனும், நல்ல சிற்ப வேலைப்பாடுகளுடனும் காண்பவரின் கண்கவரும் கோயிலாக ஸ்ரீ காமாட்சியம்பாள் திருக்கோயில் திகழ்கின்றது. மதிலைக் கடந்து உள்ளே போனால், திசைகளே சரியாக அறிய முடியாவண்ணம் அமைந்து இக்கோயில் திசைமயக்கம் உள்ள கோயில் எனப் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

ராஜகோபுரத்தின் வழியே மதிலைக் கடந்து உள்ளே சென்றதும் உயர்ந்த த்வஜஸ்தம்பமும், பலிபீடமும் காணப்படுகின்றது. த்வஜஸ்தம்பத்திற்கு எதிரே சந்நிதி பிராகாரத்தில் கவாக்ஷம் (ஜன்னல்) அமைக்கப்பட்டுள்ளது. சுவரில் உள்ள கல் ஜன்னல் வழியாகப் பார்த்தால் உள்ளே காயத்ரீ மண்டபத்தில் வீற்றிருக்கும் அம்பிகையைத் தரிசிக்கலாம். கொடிக் கம்பத்தின் எதிரே, வரப்ரசாதியாக விநாயகர் எழுந்தருளி உள்ளார். கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் சுக்ரவார மண்டபம் உள்ளது. வெள்ளிக்கிழமைகளில் உத்ஸவ காமாட்சி இம்மண்டபத்திற்கு எழுந்தருள்வதால், இந்த மண்டபம் சுக்ரவார மண்டபம் அல்லது வெள்ளிக்கிழமை மண்டபம் எனப்பெயர் பெற்றது. இந்த சுக்ரவார மண்டபத்தூணில் காட்சி அளிக்கும் ஆஞ்ஜநேயர் அடியார்களை ஆகர்ஷிக்கின்றார்.

சுக்ரவார மண்டபத்தின் வழியாக ப்ரதான வாயிலைக் கடந்து உட்சென்றதும், ஜயஸ்தம்பம் இருக்கின்றது. அதற்கு எதிரேயுள்ள வாயில் வழியே உள்ளே சென்று இடப்புறம் திரும்பியதும் விக்ன நிவாரண கணபதியைத் தரிசிக்கலாம். அம்பாள் சந்நிதி ப்ரதக்ஷிணமாக ப்ரகாரம் அமைந்திருந்த போதிலும், உத்ஸவ காமாட்சி எழுந்தருளிருக்கும் உத்ஸவ மண்டபத்தை ப்ரதட்சிணமாகச் சென்று, ஸரஸ்வதி, பங்காரு காமாக்ஷி, அன்னபூரணி சந்நிதிகளைத் தரிசித்து அம்பாள் சந்நிதியை வந்தடைவது வழக்கம். உற்சவ மண்டபத்தின் படிக்கட்டுகள் ஏறியதும் துர்வாஸ முனிவர் காட்சி தருகிறார்.

அத்ரி மஹாமுனிவருக்கும், அவரது தர்ம பத்னியான அனஸூயைக்கும், ப்ரம்ஹாவின் அம்சத்தில் சந்திரனும், விஷ்ணுவின் அம்சத்தில் தத்தாத்ரேய முனிவரும், ருத்ராம்சத்தில் துர்வாஸ முனிவரும் குமாரர்களாகத் தோன்றினர், இம்மூவரும் ஜகன் மாதாவாகிய அம்பிகையை ஆராதித்து அவளது அளவிலாக் கருணையினால் ஈடில்லாப் பேற்றினைப் பெற்றனர். ப்ரஹ்மாம் உதித்த சந்திரன் அம்பிகையின் மகுடத்திற்கு அலங்காரமாக அமர்ந்ததனால் அம்பிகைக்குச் சந்திரமௌளீஸ்வரி என்ற பெயர் ஏற்பட்டது.

விஷ்ணு அம்சத்தில் உதித்த தத்தாத்ரேயர் அம்பிகையை ஆத்மார்த்தமாக உபாஸிக்கும் மார்க்கத்தை உலகிற்கு எடுத்துக் காட்டியவர். ஆத்மதத்துவ விசாரத்தினால், பரமாத்ம தத்துவத்தை உணர முடியுமென்றபோதிலும், அத்வைத தத்துவத்தை உணரக்கூடிய பக்குவ நிலையினை ஏற்படுத்தக் கூடியது

பரமாத்மாவின் கருணையே என்றும், அவனை அடைய குரு பரம்பரையில் முதலாகத் திகழும் அம்பிகையை ஆச்ரயிப்பதே சிறந்த வழியென்றும் எடுத்துரைத்தவர் தத்தாத்ரேய முனிவர்.

ஆத்மார்த்தமாக மட்டுமில்லாமல் பஹிரங்கமாக உபாஸிக்கும் உபாஸனா முறையை லோக க்ஷேமத்தைக் கருதி மார்க்கங்களை முறைப்படுத்தி, ஸௌபாக்யசிந்தாமணி எனும் ஆகம ரீதியில் அன்னை காமாக்ஷியை வழிபடும் விதத்தினை அருளிச் செய்தவர் ருத்ராம்சத்திலுதித்த துர்வாஸ முனிவர். இதனாலேயே போற்றத்தக்கவர் என்று த்வனிக்கும்படியான பட்டாரகர் என்ற பெயரும் துர்வாஸ முனிவருக்கு ஏற்பட்டது. துர்வாஸ முனிவரை க்ரோதபட்டாரகர் என கூறுவது வழக்கில் உள்ளது. இங்குள்ள துர்வாஸமுனிவரை வேண்டுவதனால் அவர் நம்மிடையே உள்ள க்ரோதத்தினை அகற்றி, சாந்தமுடையவர்களாக பொருமையைத் தந்தருள்கிறார் என்று நம்பப்படுகிறது. இன்றைக்கும் காஞ்சி ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் சந்நிதியில் துர்வாஸ முனிவர் வகுத்த முறையிலேயே பூஜா விதானங்கள் நடைபெற்று வருகின்றன. துர்வாஸ முனிவரை வணங்கி ப்ரதக்ஷிணமாக திரும்பியதும் பள்ளியறை அமைந்திருப்பதைக் காணலாம். ப்ரதக்ஷிணமாக வரும்போது இஷ்டசித்தி விநாயகரை வணங்கி உத்ஸவ காமாக்ஷி எழுந்தருளியிருக்கும் ஆஸ்தான மண்டபத்தை வந்தடைகிறோம்.

"ஸசாமர ரமாவாணி ஸவ்யதக்ஷிண ஸேவிதா" என்று போற்றப்படும் வகையில் ஸ்ரீ லக்ஷ்மிதேவி ஒருபுறமும், வாக்தேவி மறுபுறமும் கவரி வீச ஜகந்நாயகியாகக் காமாக்ஷி தேவி காட்சி தருகிறாள். அங்கு மண்டபத்தில் நின்றவண்ணமே மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ காமாக்ஷி அம்மனின் மூலவிக்ரஹத்தையும் ஸ்ரீ சக்கரத்தையும் மண்டபத்தில் நின்றபடி தரிசிக்க முடிகிறது. உற்சவ காமாக்ஷியைத் தரிசித்துவிட்டு மண்டபத்தின் வழியே செல்லும்போது மண்டபத்தில் தனியே இருகரம் கூப்பியவண்ணம் காட்சி அளிக்கிறார் விநாயகப் பெருமானின் அவதாரமாகக் கருதப்படும் துண்டீர மஹாராஜா. மண்டபத்தின் மறுபுறம் அமைந்துள்ள ஸ்வர்ண காமாக்ஷி சந்நிதியின் வாயிலில் ஒருபுறம் ஸௌபாக்ய கணபதியும், மறுபுறம் ஸுப்ரஹ்மணியரும் காட்சி அளிக்கின்றனர். இங்கு எழுந்தருளியிருந்த ஸ்வர்ண காமாக்ஷியே "பங்காரு காமாக்ஷி" எனப் புகழ் பெற்று விளங்கியவள். ஆதியில் ப்ரஹ்மாவினால் செய்விக்கப் பெற்ற ஸ்வர்ணவிக்ரஹம் இதுவே.

அந்நியர்களின் தாக்குதலின்போது இந்த ஸ்வர்ண காமாக்ஷி, சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளின் பெரியோர்களால் செஞ்சி, உடையார்பாளையம், திருவாரூர் வழியாகத் தஞ்சாவூருக்கு எழுந்தருளச் செய்யப்பட்டு அங்கே கோயிலொன்று அமைத்து அதில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு "பங்காரு காமாக்ஷி" எனும் பெயரோடு புகழ்மிகுந்து விளங்குகின்றாள்.

தஞ்சாவூரிலுள்ள ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மன் ஆலயத்தினை ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் பரம்பரை தர்மகர்த்தாக்களாக இருந்து பரிபாலித்து வருகிறார்கள். இந்த ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி உத்ஸவத்தில் ஒன்பது நாட்களும் ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான சாரத நவராத்திரி கலை நிகழ்ச்சிகள் டிரஸ்ட் கலை நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

முன்னர் ஸ்வர்ண காமாக்ஷி எழுந்தருளியிருந்த இடத்தில் அம்பிகையின் திருவடிகள் ப்ரதிஷ்டை செய்த பீடம் உள்ளது. இந்த திருவடி சேவைக்குப் பின் உற்சவ மண்டபத்தை விட்டு இறங்கியதும் மூலஸ்தான நுழை வாயிலுக்கு எதிரே அன்னபூரணியின் சந்நிதி இருக்கிறது.

அன்னபூரணியைத் தரிசித்து மூலஸ்தானத்தை வந்தடைந்ததும் காயத்ரியின் அக்ஷரங்களை அனுசரித்து இருபத்துநான்கு தூண்களைக்கொண்ட காயத்ரீ மண்டபத்தில் கொலு வீற்றிருக்கும் ஸ்ரீ காமாக்ஷி தேவியைத் தரிசித்துப் பக்தர்கள் பிறவிப்பயனை அடைகின்றனர். சந்நிதிக்குச் செல்லும்போது ச்யாமள, ஸௌந்தர்ய லக்ஷ்மி காட்சி தருகின்றனர். மூலஸ்தானத்தில் ஸ்ரீ காமாக்ஷிதேவி பிலாகாசமாகவும், தபஸ் காமாட்சியாகவும் சதுர்புஜங்களோடு வாமோர்த்வ கரத்தில், அதாவது இடது மேல் கையில் பாசத்துடனும், தக்ஷிணோர்த்வ கரத்தில், அதாவது வலது மேல்கையில் அங்குசத்தோடும், வாமாதஹ் கரத்தில் அதாவது இடது கீழ்கையில் கரும்பு வில்லுடனும் தக்ஷிணாதஹ் கரத்தில் அதாவது வலது கீழ்கையில் புஷ்ப பாணங்களோடும் ஸ்ரீவித்யா லலிதா த்ரிபுரஸுந்தரி ஸ்ரீ காமாக்ஷி தேவியாகக் காட்சி அளிக்கிறாள்.

கருணை பொழிகின்ற கண்களைக் கொண்ட காமாக்ஷி திவ்ய மங்கள ஸ்வரூபத்தை வர்ணிப்பதற்கு வார்த்தைகள் போதா. அம்பிகையின் தரிசனத்தில்

மெய்மறந்து சிதானந்தத்தை அனுபவிப்பதை யாரும் அனுபவபூர்வமாக உணர வேண்டிய விஷயமே. எழுத்துக்கு எட்டாத வடிவழகைக் கொண்ட காமாக்ஷியின் கருணையைப் பலர் இயன்ற அளவில் போற்றியிருக்கிறார்கள்.

மூல காமாக்ஷிக்கு பக்கத்தில் வலப்புறம் தவக்கோலத்தில் தபஸ் காமாக்ஷி காட்சி தருகிறாள். மூல காமாக்ஷியைத் தரிசிக்கின்றவர்கள், அன்னையின் கண்களிலிருந்து அருள்மழை பொழிவதைக் கண்டுகளித்து பரவசமடைவதோடு, அன்னையின் அருட்கடாக்ஷத்தினால் தத்தம் அபீஷ்டங்கள் நிறைவேறி அன்பு மலர்ந்து இன்பம் பெருகி, இனிதே வாழ அன்னையின் திருவடிகளே துணை என்பதறிந்து வழிபட்டு வருகின்றனர்.

ஸ்ரீ காமாக்ஷி தேவியின் முன்பாக விளங்குவது ஸ்ரீ ஆதிசங்கரர் ப்ரதிஷ்டை செய்த ஸ்ரீ சக்ர வடிவமாகும். ஸ்ரீ சக்ரம் என்பது ஸ்ரீவித்யா ஸ்வரூபிணியென்று கருதப்படும் ஸ்ரீ லலிதா த்ரிபுரஸுந்தரி தேவியின் இருப்பிடமாகப் போற்றப்படுவதாகும். ஸ்ரீ என்பது ஸ்ரீ வித்யையும், சக்ரம் என்பது சக்ர வடிவிலமைந்த யந்திர ரூபத்தையும் குறிக்கும். ஸ்ரீ என்பது பரம ப்ரக்ருதி ஸ்வரூபிணியாகிய பராசக்தியைக் குறிக்கும். வித்யா என்றால் ஞானம் அல்லது அறிவு என்பதாகும். பராசக்தியின் தன்மையைத் தெளிவுபடுத்தும் சாதனமாக அமைந்தது ஸ்ரீ சக்ரவடிவம். ஸ்ரீ சக்ரத்தை ஆராதிப்பது அம்பிகையை வழிபடும்முறை. ஸ்ரீ காமாக்ஷி கோவிலில் அர்ச்சனைகள் ஸ்ரீ சக்ரத்திற்கே நடத்தப்படுகின்றன. ஸ்ரீ சக்ரத்தைச் சுற்றி அமைந்துள்ள கவசத்தில் அஷ்ட லக்ஷ்மிகள் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர். அன்னையின் குங்குமப் பிரசாதம் பெற்று, ஸந்நிதிக்குப் பக்கத்தில் எழுந்தருளியிருக்கும் அருபலஷ்மியிடம் சமர்ப்பித்து, அங்கிருந்து குங்குமத்தை எடுத்து நெற்றியிலிட்டுக்கொள்வது மரபாக உள்ளது. சந்நிதியில் வராஹியும், ஸந்தான கணபதியும் எழுந்தருளிக் காக்ஷி தருகின்றனர்.

ஸ்ரீ காமாக்ஷி அம்பாளைத் தரிசித்துக் காயத்ரீ மண்டபத்தின் வெளியே வந்து அன்னபூர்ணி அம்மனை வலமாக வரும் போது பூர்ண புஷ்களா ஸமேத ஸ்ரீ சாஸ்தாவின் சந்நிதியைத் தரிசிக்கலாம். அதை அடுத்து இருப்பது ஜகத்குரு ஸ்ரீஆதிசங்கரரின் சந்நிதி. ஆதிசங்கரர் ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்த இடம் இதுவே. அன்னையின் அருளை நாடி வருவோர்க்கு அருள் நெறிகாட்டி, யாவரும் நல்வழி நடந்து நலமுடன் வாழ வழி காட்டும் வகையில் வீற்றிருக்கும் ஆதிசங்கரரை

வணங்கி வருபவர்கள் ஜகத்குருவின் ஸந்நிதிக்குப் பக்கத்திலுள்ள மண்டபத்தில் ஸ்ரீ ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாற்றை சித்திர ரூபத்தில் காண்கின்றனர். சந்நிதியிலிருந்து வெளியே வந்ததும், ஜயஸ்தம்பத்திற்குப் பக்கத்தில் அமைந்துள்ள வரஸித்தி வினாயகரை தரிசித்து வணங்கிவிட்டு ஆலயத்திலிருந்து வெளிவந்ததும், கீழ்க்கோபுரத்தில் பைரவர், துர்க்கை ஸந்நிதிகளைத் தரிசித்து, ப்ராகார ப்ரதக்ஷிணமாக வருகையில் காசி விஸ்வநாதர் சந்நிதியையும், புஷ்கரணியையும், அதன் கரையிலுள்ள நவராத்திரி மண்டபத்தையும், ஸ்தல வ்ருக்ஷமாகிய காஞ்சி விருக்ஷத்தையும், அம்பிகையின் அபிஷேக தீர்த்தம் குளத்தில் விழும் கருமாரிப் பாய்ச்சல் வழியின் மேல் நின்றான், இருந்தான், கிடந்தான் என்ற பெருமாள் சந்நிதியையும் யாக மண்டபத்தையும், அதன் எதிரில் கீழ்க் கோபுரத்தை ஒட்டியுள்ள யாகசாலையையும், பைரவர் சந்நிதியையும் தரிசிக்கலாம். காஞ்சியில் இருக்கின்ற ஆலயங்கள் அனைத்தும் ஸ்ரீ காமாக்ஷி ஆலயத்திற்கு அபிமுகமாகவே விளங்குவதும், எந்தத் தேவாலயத்தில் உத்ஸவம் நடந்தாலும் அந்தந்த உத்ஸவமூர்த்திகள் ஸ்ரீ காமாக்ஷி ஆலயத்தை ப்ரதக்ஷிணம் வரும்வண்ணம் ஊர்வலமாகவருவது ஸம்ப்ரதாயமாக உள்ளது.

ஸ்ரீ காமாக்ஷிதேவிக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விசேஷ அபிஷேக ஆராதனைகள், இரவு தங்கரத உத்ஸவம் நடைபெற்று வருகின்றன. செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் அன்னை காமாக்ஷியைத் தரிசிக்கும் பக்தர்கள் ஏராளம், ஏராளம். பிரதி பௌர்ணமியின்போதும் நவாவரண பூஜை நடைபெற்று வருகின்றது. மாசிமாதத்தில் ப்ரம்மோத்ஸவமும், புரட்டாசியில் நவராத்ரி உத்ஸவமும் வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றன. நவராத்ரி உத்ஸவ நாட்களில், உத்ஸவ காமாக்ஷி நவராத்ரி மண்டபத்துக்கு எழுந்தருள, அம்பிகையின் முன்பு ஒன்பது நாட்களும் தினந்தோறும் விசேஷ இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அதேபோன்று காஞ்சி ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்திலும், தஞ்சாவூரிலுள்ள ஸ்ரீ பங்காரு காமாக்ஷி திருக்கோயிலிலும் இந்த கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்துவதற்கென்று ஸ்ரீகாஞ்சி காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான சாரத நவராத்ரி கலைநிகழ்ச்சிகள் டிரஸ்ட் அமைக்கப்பட்டு நவராத்ரி ஒன்பது நாட்கள் இசை நிகழ்ச்சிகளும், ஸங்கீத மும்மூர்த்திகள் திரு விழாவும் சிறப்பாக நடத்தப்படுகின்றன. 1985ஆம் ஆண்டு முதல் விஜயதசமியன்று இந்த டிரஸ்ட்

மூலமாக ஸ்ரீ காமாக்ஷி அம்பாளுக்கு தங்க ரதோத்ஸவமும் நடைபெறுகிறது. அதோடு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் அருளாணைப்படி ஆயிரம் செப்புகலசங்களை புதிதாகச் செய்து, தங்கமுலாம் பூசிய கலசங்களில் 1985 முதல் ஸ்ரீ வித்யாபாரமாக ஸ்ரீ காமாக்ஷி தேவிக்கு ஸஹஸ்ர ஸ்வர்ண கலசாபிஷேகமும் நடைபெறுகிறது.

நவராத்திரி நாட்களில் ஸ்ரீ அம்பாளுக்கு நவாவரண பூஜை வெகு விமரிசையாக நடைபெற்றுவருகிறது. தீபாவளி, வருடப்பிறப்பு போன்ற பண்டிகை நாட்களிலும், விஸேஷ அபிஷேக அலங்காரங்களும், உத்ஸவங்களும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன.

தன் அருட்பார்வையினால் பக்தர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்து இகத்தில் இன்பத்தை பெறச்செய்து பக்தியை வலுப்படுத்தி மனதைச் செம்மையாக்கி பக்குவப்படுத்தி, ஞானத்தைத் தந்தருளி அதனால் காமத்தின் எல்லையாகிய முக்தியெனும் பேரின்பத்தை அடையும்படி செய்தருள்கிறாள் ஸ்ரீகாமாக்ஷி என்பதை புராணங்கள் மூலமும் மகான்களின் அருளிச் செயல்கள் மூலமும் நாம் அறிய முடிகிறது. குரு வருளாலே திருவருளைப் பெறவேண்டுமென்பது நம் முன்னோர்கள் வகுத்த வழி. அருள் வடிவமான ஸ்ரீகாமாக்ஷியின் கருணையை நாம் எளிதில் பெறுவதற்கு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் குருவருள் துணைபுரிகிறது.

ஸ்ரீ காஞ்சி ஆசார்யாளின் குருவருளால் பலரும் பல்வேறு சிறப்புகளைப் பெற்று ஸ்ரீ காஞ்சி காமாக்ஷியின் கருணையை அனுபவ பூர்வமாக உணர்ந்து வருகின்றனர். ஸ்ரீ காஞ்சி காமாக்ஷியின் கருணா விலாஸமும், அளவிலா அநுக்ரஹவிசேஷமும் அநுபவபூர்வமாக உணரவேண்டியவை. மாசற்ற மனதுடன், நல்லசிந்தை, சொல், செயல்களில் நாட்டம்கொண்டு தூயபக்தியுடன் வணங்குவோருக்கு அவரவர் நிலைமைக்கும், தகமைக்கும், தேவைக்கும் எண்ணத்திற்கும் ஏற்ப நன்மையே செய்து நாளும் நிலைப்பெறச் செய்யும் செம்மையுடையவள் அன்னை ஸ்ரீகாமாக்ஷிஅம்பாள். மனமே அனைத்துக்கும் ஆதாரம்; மனத்தளவேயாம் நாம் பெறும் சந்மானம். நலமும், வளமும் நிரம்பப்பெற்று நிம்மதியுடன் நிலையாகவாழந்திட நல்ல எண்ணமும், நிஜமான பக்தியுமே அவசியம். நல்லவை நினைப்போம், நன்மையே செய்வோம், நாடு நலம்பெற நற்பணிபுரிவோம் என்ற எண்ணத்துடன் செயல்படும்போது நாமும் நலமுடன் வாழ தெய்வம் நமக்கு துணைபுரியும். அகத்தூய்மையுடன் அன்னை கமாக்ஷியின் அடிபணிந்து வாழ்வதே உய்யும் வழிக்கு உயர்வழி.

ஸ்ரீ காமாக்ஷி ஸுப்ரபாதம்

உத்திஷ்டோத்திஷ்ட வரதே உத்திஷ்ட ஜகதீஸ்வரி
உத்திஷ்ட ஜகதோத்தாரே த்ரைலோக்யம் மங்களம் குரு
மாதர் நாமம இஹ பாக்ய ஜுஷோ பவத்யா :
காதும் சுபோதயமனுன் மிஷிதப்ரபோதா :
யத்ப்ரேரயஸ்யதிசிராய க்ருதாவமுஷ்யாம்
தந்ந : சுபர்ய மஹதே தயதே தயாநிதே (1)

யன்னித்ரிதம் துரபனேய பவப்ரஸங்க :
வ்யாமோஹ மக்னமதிபி: ஸுசிரேண ஜிவை:
த்ததேதே: ஸுசீதகருணாம்ருதாஸகபுத்தை:
உத்காதுமந்த்ர மிலிதம் தவ ஸுப்ரபாதம் (2)

மாத: பயோதிசயனஸ்ய ஜகத்திதாய
நித்யோத்யதஸ்ய நிரபேக்ஷதயார்த்ருத்ருதஸ்ய
உத்போதினீ விஜயஸே மதுகைடபாரே:
கே வா வயம் கலயிதும் தவ ஸுப்ரபாதம் (3)

ப்ரம்ஹ ப்ரஸுப்தமசலம் விததபிரதிஷ்டம்
ஜாகர்த்தி கௌசலயுதம் த்வதனுப்ரவேசாத்
ஸார்த்தம் வீநோதபடு விஸ்த்ருமத்ய லோக்யம்
தஸ்யாணவோ வயமுஸீமஹி ஸுப்ரபாதம் (4)

பாலாநிமான் ம்ருகமரீசிகயா பராச:
காமாக்ஷசாரகுடகான் ப்ரதிசந்த்யமோத்யான்
ஆத்மோன் முகான் கலயஸே தயமானலீலா
காமாக்ஷி தேவி லலிதே தவ ஸுப்ரபாதம் (5)

அத்வைததர்சனமஹாபததீபிகாயா:
ஸ்ரீ காமகோடி குருபீட பரம்பராயா:
ஆத்யஸ்ய சங்கரகுரோ: ஹ்ருதி லப்தநிஷ்டா
வித்யாமயீ விஜயஸே தவ ஸுப்ரபாதம் (6)

காஞ்சிபுரா துபகதா கனகஸ்வரூபா
தஞ்சாபுரம் நிஜபதாச்ரித பக்தவர்கை:
ஸ்ரீராமகிருஷ்ண நிலயாந்தர மத்யதேசே
லப்தாஸ்பதா விஜயஸே தவ ஸுப்ரபாதம். (7)

ஆதிசங்கரபகவத்பாதர் அருளிச்செய்த

ஸ்ரீ காமாக்ஷி ஸ்தோத்திரம்

(பொருட் சுருக்கத்துடன்)

கல்பானோ கஹ புஷ்ப ஜால விலஸன்னீலாலகாம் மாத்ருகாம்
காந்தாம் கஞ்சதலேக்ஷணாம் கலிமல ப்ரத்வம்ஸினீம் காளிகாம்
காஞ்சி நூபராஹார தாம ஸுப கா ம் காஞ்சிபுரீநாயிகாம்
காமாக்ஷீம் கரிகும்ப ஸன்னிப குசாம் வந்தே மகேசப்ரியாம்

அன்னை காமாக்ஷி கற்பகத் தருவின் பூங்கொத்துக்கள் பரிமளிக்கும் கருமையான கூந்தலையுடையவள்; அழகில் மிக்கவள்; தாமரை இதழ்களை ஒத்த கண்களை யுடையவள்; கலியின்மாசு அகற்றுபவள்; உயர்காளியாக உள்ளவள்; மேகலை, சிலம்பு, முத்துமாலை இவைகளை அணிந்து கண்டார்க்கு அழகுக்கோலத்தோடு காட்சி தருபவள்; காஞ்சி நகரின் தலைவி, மகேசப்ரியை அத்தகையவளை வணங்குகிறேன்.

காசாம் பா ஸுகபா ஸுராம் ப்ரவிலஸத்கோ சாதகீ ஸன்னிபா ம்
சந்த் ரார் கானலலோசனாம் ஸுருசிராலங்காரபூ ஷோஜ் ஜ்வலாம்
ப்ரம்ஹ ஸ்ரீபதி வாஸ வாதி முனி பிஸ்ஸம்ஸேவிதாங்க் ரித் வயாம்
காமாக்ஷீம் கஜ ராஜ மந்த க மனாம் வந்தே மகேசப் ரியாம்

அன்னை காமாக்ஷி நாணல் பூப்போன்ற வெள்ளுடை உடுத்தியவள்; பச்சை நிறமேனியள்; சந்திரன், சூர்யன், அக்கினி ஆகியவற்றை முக்கண்களாகப் பெற்றவள்; கவர்ச்சி மிக கலன் பல அணிந்தவள்; பிரம்மன் திருமால் இந்திரன் முதலானோர், முனிவர்கள் அனைவரும் சேவிக்கும் மலரடிகளை உடையவள்; பிடியன்ன நடையுடையவள்; மகேசப்பிரியை! அவளை வணங்குகிறேன்.

ஐம்க்லீம் ஸௌரிதியாம்வ தந்தி முனயஸ் தத்வார்த் தருபாம்பராம்
மாயா மாதிம காரணம் ஹ்ருதிஸதாத்யாயந்தி யாம் யோகின
பாலாம் பால விலோசனாம் நவஜபா வர்ணாம் ஸுஷும் நாஸ்திதாம்
காமாக்ஷீம் கலிதாவ தாரஸுபகாம்வந்தேமஹேச ப்ரியாம்

அன்னை காமாக்ஷி தத்துவக் திருவுருவம். இவளை முனிவர்கள் "ஐம்" "க்லீம்" "ஸௌ" என்னும் திருமந்திரங்களை ஜெபித்துத் துதிப்பர். "எல்லாவற்றுக்கும் மூலகாரணமாயுள்ள மாயை" என இவளைத்தம்

உள்ளத்தமைத்துத் த்யானிப்பர் யோகிகள். அம்மை பாலையாகவும் நெற்றிக்கண் பெற்றவளாகவும் செம்பவளம் போன்ற நிறமுடையவளாகவும் "ஸுஷும்நா" நாடியில் குடிகொண்டவளாகவும் அவதார வெடுத்ததின் விளைவாக அழகுள்ளவளாயும் உள்ளாள். அவள் மகேசப்ரியை. அவளை வணங்குகிறேன்.

யத் பாதாம்புஜ ரேணுவேஸமனிஸம் லப்த்வா விதத்தே விதி
விச்வம் தத்பரிபாதி விஷ்ணுர கிலம் யஸ்யா ப்ரஸாதாச்சிரம்
ருத்ரஸ்ஸம்ஹரதீ க்ஷணா த்ததகிலம் யன்மாயயா மோஹித
காமாக்ஷி மதிசித்ரசாரு சரிதாம் வந்தே மஹே சப்ரியாம்

அன்னையே! உன்பாத துளியால் பிரமன் படைத்தல் நற்பணி யாற்றுகிறான்; உன் அருளால் விஷ்ணுஉலகம் காக்கிறான். உன் திருக்கண் நோக்கின் வழி சிவன் உலகினை அழிக்கிறான். மஹேசப் பிரியையே! உன்னை வணங்குகிறேன்.

சூக்ஷ்மாத் சூக்ஷ்மதராம் ஸுலக்ஷிததனும் க்ஷான் தாக்ஷராலக்ஷிதாம்
வீக்ஷிர லீக்ஷித ராக்ஷஸாம் த்ரிபுவனக்ஷே மங்கரீ மக்ஷராம்
ஸாக்ஷால் லக்ஷண லக்ஷிதா க்ஷரமயீம் தாக்ஷாயணீம் ஸாக்ஷிணீம்
காமாக்ஷீம் ஸுபலக்ஷணைஸ் ஸுலலிதாம் வந்தே மஹேசப்ரியாம்

காமாக்ஷிதேவி நுணுக்கத்திலும் நுணுக்கமானவள்; எனினும் காணக்கூடிய திருஉடல் அமைந்தவள். அ முதல் க்ஷ வரையில் உள்ள மாத்ருகாக்ஷரங்களால் காணக்கூடியவள்; பார்வையாலேயே, ராக்ஷசர்களை அடக்குகின்றவள்; உலகு மூன்றுக்கும் நலன் தருபவள்; அழிவற்றவள்; தக்கனின் திருமகள்; அழியாத சாக்ஷியாக இருந்தருள்பவள்; ஸாமுத்திரிகா லக்ஷணம் ததும்பும் அழகுருவினள்; மஹேசப்பிரியை, அவளை வணங்குகிறேன்.

ஓங்காராங்கண தீபிகா மு பனிஷத் ப்ராஸாத பாராவதீம்
ஆம்னாயாம் புதிசந்த்ரிகா மததம ப்ரத்வம்ஸ ஹம்ஸப்ரபாம்
காஞ்சி பட்டண பஞ்சரான்த ரஸுகீம் காருண்ய கல்லோலினீம்
காமாக்ஷீம் சிவகாமராஜ மகிஷீம் வந்தே மஹேசப்ரியாம்

ஓங்காரம் என்பது ஒரு கூடம்! அக்கூடத்தில் ஒளிக்கும் விளக்கு இவள். உபநிஷத் என்பது ஒரு உப்பரிகை; அதில் தங்கும் ஒரு புறா இவள். வேதங்கள் என்பது ஒரு கடல்; இவள் அக்கடலில் படர்ந்த நிலா; பாபம்

என்பது இருள். இவள் அவ்விருளை நீக்கும் சூரியன்; காஞ்சி நகரம் ஒரு கூடு; இவள் அக் கூட்டில் வாழும் கோகிலம். இவள் கருணை அலைபாயும் நதி. மஹேசப்ரியை. இவளை வணங்குகிறேன்.

ஹ்ரீங்காராத்மகவர்ண மாத்ர படனேஹ்ரீம் ஹ்ரீம் ச்ரியம் தன்வதீம்
சிந்மாத்ராம் புவனேச்வரீ மனுதினம் பிக்ஷா ப்ரதானக்ஷமாம்
விச்வாகௌக நிவாரிணீம் விமலனீம் விஸ்வம்பராம் மாத்ருகாம்
காமாக்ஷீம் பரிபூர்ண சந்த்ரவதனாம் வந்தே மஹேசப்ரியாம்

"ஹ்ரீம்" என ஒருகால் ஒதின் இருகால் ஓதியதற்குண்டான சகல பலன்களும் தருபவள்; அறிவு வடிவினள்; அனைத்தும் நல்க வல்லவள்; பாப மனைத்தும் போக்கும் வன்மை சான்றவள். மாசிலாதவள்; உலகம் காப்பவள்; சந்திர வதனத்தள்; மஹேசப்ரியை அவளை வணங்குகிறேன்.

வாக்தேவீதி கயாம் வதந்தி முனய க்ஷீராப்திகன்யேதிச
க்ஷ்ரோணீப்ருத்த நயேதிச ஸ்ருதிகிரோ, யாமா மனன் திஸ்புடம்
ஏகானேக பல ப்ரதாம் ப்ஹுவி தாகாராம் தனும் தன்வதீம்
காமாக்ஷீமம்ருதான்ன பூர்ண கலசாரம் வந்தே மகேசப்ரியாம்

முனிவர்கள் ஸ்ரீ காமாக்ஷி அன்னையை ஸரஸ்வதி எனவும் லக்ஷ்மி எனவும் உமை எனவும் கூறுகின்றனர். நால் வேதங்களும் தெளிவுறத்துதி செய்கின்றன. ஒன்றென்ன பலன்பல தருபவள், அவதாரம் பல எடுக்க வல்லவள்; அமுதம் நிறைந்த கலசம் கையில் ஏந்தியவள். மஹேசப்ரியை அவளை வணங்குகிறேன்.

காந்தா காமதுதாகரீந்த்ரகமனா காமாரிவாமாங்ககா
கல்யாணீ கலிதா வதார ஸுபகாகஸ்தூரிகார்ச்சிதா
கம்பாதீர ரஸால மூல நிலயா காருண்ய கல்லோலினீ
கல்யாணானி கரோது மே பகவதீ காஞ்சிபுரீதேவதா

அன்னை காமாக்ஷி ஒளிவடிவானவள்; எண்ணிய எல்லாம் தருபவள். இவள் சிவனின் இடத்தொடையில் அமர்ந்துள்ளாள். இவள் கஸ்தூரி பூசி இருப்பவள். கம்பை எனும் நதிக்கரையிலுள்ள மாமரத்தின் கீழ் வீற்றிருப்பவள் இவள் காஞ்சிபுர தேவதை. இத்தகைய ஸ்ரீ காமாக்ஷி எனக்கு நன்மைகள் அனைத்தும் நல்குவளாக.

ஸ்ரீ மூக பஞ்ச சதி ஸ்லோகங்கள்

காரண பரசித்ரூபா காஞ்சிபுரஸீம்னி காமபீட கதா
காசன விஹரதி கருணா காச்மீர ஸ்தபக கோமளாங்கலதா

(ஆர்யாசதகம் - 1)

ஸர்வ காரணங்களுக்கும் அதீதமானதும், குங்குமப்பூவின் கொத்துப்போல் மிருதுவானதுமான கொடி போன்ற மென்மையான திருமேனியுடன், கருணையே வடிவமாய் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் விளங்குகிறாள். ஸ்ரீ காமாக்ஷி விழிப்பு நிலையில் ஸ்தூலம், ஸுக்ஷ்மம் எனும் இரு தேஹங்களும் நன்கு உணரப்படும் என்றும், மூன்றாவதான காரண தேஹம் சற்றே மறைந்து ஊகத்தால் அறியப்படுவது என்றும் பெரியோர் கூறுவர். ஸ்தூல, ஸுக்ஷ்மம் என்ற இரு தேஹங்களும் மறைந்து அஹங்காரம் அல்லது ஆணவம் என்ற மறை நீங்கும்போது ஆனந்த வடிவமான ஆத்மா என்ற காரண சரீரம் உணரப்படுகிறது. அப்படி உணரப்பெறும் ஆத்ம ஸ்வரூபமே தேவி, காரண பரசித்ரூபா என்பது இதை குறிக்கும். கருணையின் வடிவம் ஸ்ரீகாஞ்சி காமாக்ஷி என்பது இதனால் தெளிவு.

தரணிமயீம் தரணிமயீம் பவனமயீம் ககன தஹன ஹோத்ரு மயீம்
அம்புமயீம் இந்துமயீம் அம்பாம் அனுகம்பாம் ஆதிமாம் ஈக்ஷே

(ஆர்யாசதகம் - 18)

ப்ருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் அதாவது நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி என்ற ப்ரக்ருதியின் அடிப்படை தத்துவங்கள், சூரியன், சந்திரன், யாகதீக்ஷை கொண்ட யஜமானன் என்னும் எண்வகை ரூபங்களும் தானேயாகி விளங்கும் அம்பிகை ஸ்ரீ காமாக்ஷியை காஞ்சிபுரத்தில் கம்பா நதிக்கரையில் தரிசிக்கிறேன்.

குண்டலி குமாரி குடிலே
சண்டி சராசர ஸாவித்ரி சாமுண்டே
குணிநி குஹாரணி குஹ்யே
குருமூர்த்தே த்வாம் நாமாமி காமாக்ஷி

(ஆர்யாசதகம் - 46)

குண்டலங்களை அணிந்துள்ள பாலபரமேஸ்வரி, குடிலை குண்டலினி ஸ்வரூபமும், மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹா சரஸ்வதிகளின் ஸமஷ்டி ஸ்வரூபமெனப்படும் சண்டிகா பரமேஸ்வரீயாயும், சாமுண்டீஸ்வரியாகவும் பல வடிவங்களும் தானேயாகி திருவருள் புரிகின்றவளும், அஞ்ஞானத்தைப் போக்கி உய்யும் வழிக்கு வழிகாட்டியருளும் குருமூர்த்தியாயும் திகழ்ந்து காத்தருளும் ஸ்ரீகாஞ்சி காமாக்ஷியை வணங்குகிறேன்.

மூகோபி ஜடில துர்கதி
சோகோபி ஸ்மரதி ய: க்ஷணம் பவதீம்
ஏகோ பவதி ஸ ஜந்து:
லோகோத்தர கீர்த்திரேவ காமாக்ஷி

(ஆர்யாசதகம் – 57)

ஒருவன் ஊமையாக இருப்பினும், முன்வினையின் பயனாக அல்லலுற்று துன்பத்தினால் கலக்கமுற்றிருந்த போதும், ஸ்ரீகாமாக்ஷி தேவியை ஒரு நொடிப்பொழுது நினைந்த மாத்திரத்தினால் உலகத்தில் எல்லா மேன்மைகளையும் அடைந்து பேரும் புகழுடன் திகழ்கின்றன். இடையூறுகளை அகற்றி இனிதே வாழ வகை செய்கிறது ஸ்ரீ காஞ்சி காமாக்ஷியின் கருணை.

ஜயஜய ஜகதம்ப சிவே
ஜயஜய காமாக்ஷி ஜய ஜயாத்ரி ஸுதே
ஜயஜய மஹேசதயிதே
ஜயஜய சித்ககந கௌமுதீ தாரோ

(ஆர்யாசதகம் – 100)

மங்களம் அருள்கின்ற மாதாவே போற்றி
மலைமகளே ஸ்ரீ காமாக்ஷி அன்னையே போற்றி
மகேசன் மனம்மகிழ் மாதரசி போற்றி
மனங்குளிரச் செய்கின்ற நிலவின் பெருக்கே போற்றி போற்றி!

மஹா மந்த்ரம் கிஞ்சித் மணி—கடக நாதை: இவ ஜபந்
க்ஷிபந் திக்ஷுஸ்வச்சம் நகருசி—மயம் பாஸ்ம ந—ரஜ:!
நதாநாம் காமாக்ஷி! ப்ரக்ருதி—படு: உச்சாட்ய மமதா—
பிசாசீம் பாதோயம் ப்ரகடயதி தேமாந்த்ரிக—தசாம்

(பாதாரவிந்தசதகம் :)

ஸ்ரீ காமாக்ஷி தன் திருவடித் தாமரைகளை தஞ்சமெனக் கொண்டுள்ள அடியவர்களின் அஹங்கார மமகாரங்களை விரட்டுகின்ற மந்திரவாதிபோல் திகழ்கிறாள். தேவியின் பாதசிலம்புகள் ஒலிப்பது மந்திரவாதி ஜபிக்கின்ற மந்திரம் போலும் பாதங்களின் நககாந்தி பரவும்போது மந்திரவாதி தூவுகின்ற தூய திருநீரை நினைவூட்டும் வகையிலும் அமைந்துள்ளது. மேதினியில் மனிதர்கள் மமதையிலிருந்து விடுபட்டு மனநிறைவைப் பெற்று மகிழ்வோடு வாழ்வதற்கு ஸ்ரீ காமாக்ஷியின் திருவடிகளில் செய்கின்ற சரணாகதியே சிறந்த வழி.


ததாநோ பாஸ்வத்தாம் அம்ருத—நிலயோ லோஹிதவபு:
விநம்ராணாம் ஸௌம்யோ குரு: அபி கவித்வம் சகலயந்
கதௌ மந்தோ கங்காதரமஹிஷி காமாக்ஷி! பஜதாம்
தம: கேது: மாத: தவ சரண — பத்மோ விஜயதே!!

(பாதாரவிந்தசதகம் : 59)

நவக்ரஹங்களும் ஸ்ரீ காமாக்ஷி தேவியின் திருவடிகளில் அந்தர்கதம் என்று உணர்த்தி ஸ்ரீ காமாக்ஷியின் திருவடிகளை வணங்குவோருக்கு நவக்ரஹங்களும் தரக்கூடிய நற்பயன்களை ஸ்ரீ காமாக்ஷியின் நற்கருணையினால் பெற முடிகிறது. சிலேஷையான சப்தப் பிரயோகத்தினால் நவக்ரஹங்களை தேவியின் பாதங்களில் ஸேவித்து நவக்ரஹங்களின் அநுக்ரஹத்தையும் பெறலாம் என்னும் கருத்தினை இந்த ஸ்லோகம் வெளிப்படுத்துகிறது.

ஒளிமிகுந்த தன்மையினால் சூரியனாகவும், – தேவியின் திருவடிகள் ஒளிமயமானவை. அதனால் சூரியனுடைய தன்மையைப் பெற்றிருக்கின்றன. – அம்ருத மயமாய் இருப்பதினால் சந்திரனாகவும் – அம்ருதத்திற்கு இருப்பிடம் சுதாகரன் சந்திரன்; அம்ருதம் என்னும் மோக்ஷத்திற்கு ஆதாரம் தேவியின் திருவடிகள். சிவந்த வர்ணமுடையதனாலும், மங்களங்களை அருளுவதாலும் சிவந்த வர்ணத்தையுடைய செவ்வாய் போன்றும் வணங்குவோருக்கு ஸௌம்மியமாக, இதமாக அருள்புரிவதினால் ஸௌம்யனான புதன் போலவும், கு – இருளை – ரு – போக்குவது – அண்டியவரின் அஞ்ஞான இருளைப் போக்கி மெய்யறிவைப் புகட்டும் குருவைப்போல் திகழ்வதனால், பணிபவர்களுக்கு பாண்டித்யத்தைத் தந்தருள்வதனால் பிரஹஸ்பதி – ஆசார்யன் குருவாகவும், தன்னைத் துதிக்கவிரும்புவோருக்கு கவன சக்தியை – கவிபாடும் ஆற்றலை தந்தருளுவதனால் கவிஎன போற்றப்பெறும் சுக்ரனாகவும், மந்தகமனம்மெதுவான நடையாலே மந்தனெனும் பெயருடைய சனியின் தன்மையை பெற்றதாகவும், தன்னை பூஜிப்பவர்களின் தமோகுணத்திற்கு விரோதியாகி, – தமஸ்– அஞ்ஞானத்தை கோது – போக்குகின்ற தன்மையினால் தமம் என்னும் ராகுவாகவும், கேதுவாகவும், ஸ்ரீ காமாக்ஷி தேவியின் திருவடிகள் சிறந்து விளங்குகின்றன. அன்னை காமாக்ஷியின் அடிபணிபவர்களுக்கு நவக்ரஹங்களினால் ஏற்படக்கூடிய இன்னல்கள் எல்லாம் விலகி நவக்ரஹங்கள் எல்லாம் சேர்ந்து தரக்கூடிய பலங்கள் அனைத்தையும் தந்தருளும் தகமையுடையவை ஸ்ரீ காமாக்ஷியின் பதகமலங்கள். “நவக்ரஹ நாயகி” ஸ்ரீ காமாக்ஷியின் பாதாரவிந்த ஸேவை நலம்தரும்.

IX



NAVAGRAGHA DEVATHAS

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

அருளிய

ஸ்ரீ துர்க்கா பஞ்சரத்ன ஸ்தோத்ரம்

1. தேத்யானயோகானுகதா அபச்யன்
த்வாமேவ தேவீம் ஸ்வகுணைர் நி கூடாம்
த்வமேவ சக்தி: பரமேஸ்வரஸ்ய
மாம்பாஹி ஸர்வேஸ்வரி மோக்ஷ தாத்ரி ....

2. தேவாத்ம சக்தி: ச்ருதி வாக்ய கீதா
மகர்ஷி லோகஸ்யபுர: ப்ரஸன்னா
குஹாபரம் வ்யோம ஸத: ப்ரதிஷ்டா
மாம்பாஹி ஸர்வேஸ்வரி மோக்ஷ தாத்ரி ....

3. பராஸ்ய ஸக்தி: விவிதைவச்ருயஸே
ச்வேதாச்வ வாக்யோதிததேவி துர்க்கே
ஸ்வாபாவிகீ ஞான பலக்ரியாதே
மாம்பாஹி ஸர்வேஸ்வரி மோக்ஷ தாத்ரி ....

4. தேவாத்ம சப்தேன சிவாத்மபூதா
யத்கூர்மவாயவ்யவசோவிவ்ருத்தா
த்வம் பாசவிச்சேதகரீப்ரஸித்தா
மாம்பாஹி ஸர்வேஸ்வரி மோக்ஷ தாத்ரி ....

5. த்வம் ப்ரும்ம புச்சா விவிதா மயூரீ
ப்ரும்ம ப்ரதிஷ்டாஸ்யுபதிஷ்ட கீதா
க்ஞான ஸ்வரூபாத்மதயாகிலானாம்
மாம்பாஹி ஸர்வேஸ்வரி மோக்ஷ தாத்ரி ....

ஸ்ரீ காமாக்ஷி ஸ்துதி பஞ்சகம்

1. ஜயஜகதீஸ்வரி சங்கரி பாஸ்கரி ஸர்வமனோஹரி மோஹகரே,
பசுபதி ரஞ்சிநி பாபவிமோசிநி பத்மஜகேஹிநி கானரதே,
மதகஜகாமிநி மந்த்ர தாரிணி மஞ்சுளபாஷிணி மஞ்சுகதே,
ஜயஜயஹே ஜயகாஞ்சிபுரேஸ்வரி காமகலேஸ்வரி பாலயமாம்

2. சிவகுரு நந்தன சங்கர பூஜித திவ்ய பதாம்புஜ யுக்மயுதே,
ஜயசசிசேகர தேசிக நிர்மித சக்ரரதோபரி சாருகதே
நதஜநஸஞ்சித பாபவிமோசிநி வாஞ்சித தாயிநி காஞ்சியுதே,
ஜயஜயஹே ஜயகாஞ்சி புரேஸ்வரி காமகலேஸ்வரி பாலயமாம்

3. இக்ஷுசாரஸநபாணிநி மானிநி திக்ஷுஜநார்ச்சித பிக்ஷுயுதே
அமரபுரேச்வரி அகிலகலேஸ்வரி ஆம்ரபதேரிஹ பார்ச்வகதே
கமலதளாயதலோசநி கல்மஷமோசிநி சங்கரதேஹரதே,
ஜயஜயஹே ஜயகாஞ்சி புரேஸ்வரி காமகலேஸ்வரி பாலயமாம்

4. மதுர ஜலாசய மத்யவிஹாரிணி மங்களதாயிநி மாரநுதே
கம்பிகவேணிநி கஞ்சுக தாரிணி கஞ்சவிலோசநி கல்பதரோ
வனகுஹமாலிநி வம்சவிபாத்திநி விச்வவிநோதிநி ஜிச்வநுதே,
ஜயஜயஹே ஜயகாஞ்சி புரேஸ்வரி காமகலேஸ்வரி பாலயமாம்

5. தவகரபங்கஜ பஞ்சரகதசுக கூஜிதமஞ்சுள வாக்யரதே
ஸ்மரஹரமாநஸ திவ்யஸரோவர மத்யவிஹாரிணி பாசதரே
ஜல்ஜல்ஜலஜல ஜஜ்ஜலசப்திக நூபுரகங்கண ஹாரயுதே
ஜயஜயஹே ஜயகாஞ்சிபுரேஸ்வரி காமகலேஸ்வரி பாலயமாம்

ஸ்ரீ காமாக்ஷி ஸ்துதி ரத்தினம்

1. காஞ்சி நூபுர ரத்ன கங்கண லஸத்
கேயூர ஹாரோஜ்வலாம்
காஷ்மீராருண கஞ்சுகாஞ்சிதகுசாம்
கஸ்தூரிகா சாசிதாம்
கல்ஹாராஞ்சித கல்பகோஜ்வலமுகீம்
காருண்ய கல்லோலிநீம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சிபுரீ தேவதாம்

2. காமாராதி மந: ப்ரியாம் கமலபூ
ஸேவ்யம் ரமாராதிதாம்
கந்தர்பாதிக தர்பதான விலஸத்
ஸௌந்தர்ய தீபாங்குராம்.
கீராலாப விநோதினீம் பகவதீம்
காம்ய ப்ரதானவ்ரதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சிபுரீ தேவதாம்

3. காதம்ப ப்ரமதாம் விலாஸ கமனாம்
கல்யாண காஞ்சிரவாம்
கல்யாணாசல பாத பத்ம யுகளாம்
காண்த்யாஸ்மரம் தீம்ஸுபாம்
கல்யாணாசல கார்முக ப்ரியதமாம்
காதம்ப மாலாஸ்ரியாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சிபுரீ தேவதாம்

4. கந்தர்வாமர ஸித்தசாரண வதூம்
த்யாயேபதா நாஞ்சிதாம்
கௌரீம் குங்கும பங்க பங்கித குசாம்
த்வம்த்வாபிராமாம்ஸுபாம்
கம்ப்பீரஸ்மித விப்ரமாங்கித முகீம்
கங்காதரா லிங்கிதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சிபுரீ தேவதாம்

5. விஷ்ணுப்பிரஹ்ம முகாமரேந்த்ர பரிஷத்
கோடீர பீடஸ்த்தலாம்
லாக்ஷா ரஞ்சித பாதபத்ம யுகளாம்
ராகேந்துபிம்பாநநாம்

வேதாந்தாகம வேத்யசிந் த்ய சரிதாம்
வித்வ்ஜ்ஜனை ராவ்ருதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சிபுரீ தேவதாம்

6. மாகந்தத்ரும மூலதேஸ மஹிதே
மாணிக்ய ஸிம்ஹாஸனே
திவ்யாம் தீபித ஹேம காந்தீ நிவாஹா
வஸ்த்ராவ்ருதாம் தாம்ஸுபாம்
திவ்யா கல்பித திவ்யதேஹ பரிதாம்
திருஷ்டி ப்ரமோ தார்பிதாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சிபுரீ தேவதாம்

7. ஆதாராதி ஸமஸ்த சக்ர நிலயா
மாத்யந்த ஸுன்யா முமாம்
ஆகாஸாதி ஸமஸ்தபூத நிவஹா
காராம ஸேஷாத்மிகாம்
யோகீந்த்ரை ரதியோகிநீ ஸதகணை
ராராதிதா மம்பிகாம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சிபுரீ தேவதாம்

8. ஹ்ரீம்கார ப்ரணவாத்மிகாம் ப்ரணமதாம்
ஸ்ரீவித்ய வித்யாமயீம்
ஐம் க்லீம் ஸௌம் ருசி மந்த்ரமூர்திநிவஹா
காராம ஸேஷாத்மிகாம்
ப்ரஹ்மானந்த ரஸானுபூத மஹிதாம்
ப்ரஹ்மப்ரியாம் வாதினீம்
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சிபுரீ தேவதாம்

9. ஸித்தானந்த ஜநஸ்ய சின்மய ஸுகா
காரா மஹா யோகிபி:
மாயாவிஸ்வ விமோஹிநீம் மதுமதீம்
தியாயேச்சுபாம் பிராஹ்மணீம்
தியேயாம்கின்னரஸித்தசாரணவதூ
தியேயம் ஸதா யோகிபி
காமாக்ஷீம் கலயாமி கல்பலதிகாம்
காஞ்சிபுரீ தேவதாம்

க7ாமாரிகாமாம் கமலாஸனஸ்த்தாம்
காம்யப்ரதாம் கங்கண சூடஹஸ்தாம்
காஞ்சி நிவாஸாம் கனகப்ரபாஸாம்
காமாக்ஷீதேவீம் கலயாமி சித்தே

"துக்க நிவாரண அஷ்டகம்"

(அயிகிரி நந்தினி மெட்டில் படிக்கவும்)

1. மங்கள ரூபிணி மதியணி சூலினி
 மன்மத பாணியளே;
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
 சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல்
 கற்பகக் காமினியே;
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
 துக்க துவாரணி காமாக்ஷி!

2. கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக்
 காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி
 தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்
 மாலைகள் சூடிடுவாள்
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
 துக்க நிவாரணி காமாக்ஷி!

3. சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
 சபையினில் வந்தவளே;
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
 பொருந்திட வந்தவளே;
எங்குலந் தழைத்திட எழில்வடி வுடனே
 எழுந்தநல் துர்க்கையளே:
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
 துக்க நிவாரணி காமாக்ஷி!

4. தண தண தந்தண தவிலொலி முழங்கிடத்
 தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
 கண்மணி நீ வருவாய்;

பண பண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்;
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி!

5. பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே;
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக்
கொடுத்தநல் குமரியளே;
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தியெனும் மாயே;
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி!

6. எண்ணிய படி நீ யருளிட வருவாய்
எங்குல தேவியளே;
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்;
கண்ணொளி யதனால் கருணையை காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே!
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி!

7. இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்றுநீ சொல்லிடுவாய்;
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்;
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்;
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி!

8. ஜெயஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி;
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி!

உ

ஓம் சக்தி

காமாட்சியம்மன் விருத்தம்

த்யானம்

காமாரி காமாம் கமலாஸனஸ்தாம்
காம்யப்ரதாம் கங்கண சூடஹஸ்தாம்!
காஞ்சி நிவாஸாம் கனகப்ரபாஸாம்
காமாக்ஷி தேவீம் கலயாமி சித்தே!!

(ஸ்ரீ காமாக்ஷி ஸ்தோத்ரம்)

ஆசிரிய விருத்தம்

சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
சோதியாய் நின்ற உமையே,
சுக்கிர வாரத்திலுனை கண்டு தரிசித்தவர்கள்
துன்பத்தை நீக்கிவிடுவாய்,
சிந்தைதனி லுன்பாதந் தன்னையே தொழுபவர்கள்
துயரத்தை மாற்றி விடுவாய்,
ஜெகமெலா முன்மாய்கை புகழவென்னா லாமோ
சிறியனால் முடிந்திடாது,
சொந்தவுன் மைந்தனா யெந்தனை யிரட்சிக்கச்
சிறிய கடன் உன்னதம்மா,
சிவசிவ மகேஸ்வரி பரமனிடயீஸ்வரி
சிரோன்மணி மனோன் மணியுநீ,
அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரி
யனாத ரட்சகியும் நீயே,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுடையே.

பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாசமது
பாடகந் தண்டை கொலுசும்,
பச்சை வைடூரிய மிச்சையா இழைத்திட்ட
பாதச் சிலம்பினொலியும்,

முத்து மூக்குத்தியும் ரத்தினப் பதக்கமும்
மோகன மாலை யழகும்,
முழுதும் வைடூரியம் புஷ்பரா கத்தினால்
முடிந்திட்ட தாலி யழகும்,
சுத்தமாயிருக்கின்ற காதினிற் கம்மலுஞ்
செங்கையில் பொன்கங்கணம்,
ஜெகமெலாம் விலைபெற்ற முகமெலா மொளியுற்ற
சிறுகாது கொப்பி னழகும்,
அத்திவரதன் தங்கை சக்தி சிவரூபத்தை
யடியனாற் சொல்ல திறமோ
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுடையே. 2

கெதியா வுந்தனைக் கொண்டாடி நினதுமுன்
குறைதனைச் சொல்லி நின்றும்,
கொடுமையா யென்மீதில் வறுமையை வைத்துக்
குழப்பமா யிருப்ப தேனோ,
சதிகாரி யென்று நானறியாம லுந்தனைச்
சதமாக நம்பி னேனே,
சற்றாகிலும் மனது வைத்தென்னை ரட்சிக்க
சாதக முனக் கில்லையோ?
மதிபோல் வொளியுற்ற புகழ்நெடுங் கரமுடைய
மதகஜனை யீன்ற தாயே,
மாயனிட தங்கையே பரமனது மங்கையே
மயானத்தில் நின்ற வுமையே
அதிகாரி யென்றுநா னாசையாய் நம்பினேன்
அன்பு வைத்தென்னை யாள்வாய்,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுடையே. 3

பூமியிற் பிள்ளையாய்ப் பிறந்தும் வளர்ந்துநான்
பேரான ஸ்தலமு மறியேன்,
பெரியோர்கள் தரிசன மொருநாளும் கண்டுநான்
போற்றிக் கொண்டாடியறியேன்

வாமியென் றுன்னைச்சிவகாமி யென்றேசொல்லி,
வாயினாற் பாடியறியேன்,
மாதா பிதாவினது பாதத்தை நானுமே
வணங்கியொரு நாளுமறியேன்,
சாமியென்றே யெண்ணிச் சதுருடன் கைகூப்பிச்
சரணங்கள் செய்து மறியேன்,
சற்குருவின் பாதார விந்தங்களைக் கண்டு
சாஷ்டாங்க தெண்டனிட் டறியேன்,
ஆமிந்த பூமியிலடியனைப் போல்மூடன்
ஆச்சிநீ கண்ட துண்டோ,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுடையே.

பெற்றதா யென்றுன்னை மெத்தவும் நம்பினேன்
பிரியமா யிருந்தே னம்மா
பித்தலாட்டக் காரியென்று நானறியாது உன்
புருஷனை மறந்த னம்மா,
பத்தனாயிருந்து முன் சித்தமு மிரங்காமல்
பாராமுகம் பார்த்திருந்தால்,
பாலன் யானெப்படி விசனமில் லாமலே
பாங்குட னிருப்பதம்மா,
இத்தனை மோசங்க ளாகாது ஆகாது
இது தர்மமல் லவம்மா,
எந்தனை ரக்ஷிக்க சிந்தனை களில்லையோ
யிதுநீதி யல்ல வம்மா,
அத்தி முகனாசையா லிப்புத்திரனை மறந்தையோ
அதை யெனக்கருள் புரிகுவாய்,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே.

மாயவன் தங்கை நீ மரகத வல்லிநீ
மணிமந்தர காரிநீயே,
மாயாசொ ரூபிநீ மகேஸ்வரியு மானநீ
மலையரை யன்மக ளானநீ

தாயே மீனாட்சிநீ சற்குண வல்லிநீ
தயாநிதி விசா லாட்சிநீ,
தரணியில் பெயர் பெற்ற பெரிய நாயகியும்நீ
சரவணனை யீன்ற வளும்நீ,
பேய்களுடனாடிநீ அத்தனிடபாகமதில்
பேறுபெற வளர்ந்த வளும்நீ,
பிரணவசொரூபிநீ பிரசன்ன வல்லிநீ
பிரியவுண் ணாமுலையுநீ,
ஆயிமகமாயிநீ ஆனந்தவல்லிநீ
அகிலாண்ட வல்லி நீயே,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 6

பொல்லாத பிள்ளையாய் இருந்தாலும் பெற்றதாய்
புத்திகளைச் சொல்லவில்லையோ,
பேய்பிள்ளை யானாலும் தான்பெற்ற பிள்ளையை
பிரியமாய் வளர்க்க வில்லையோ,
கல்லாகிலும் மூச்சு நில்லாமல் வாய் விட்டுக்
கதற நானழுத குரலில்,
கடுகதனிலெட்டிலொரு கூறுவதி லாகிலுன்
காதினில் நுழைந்த தில்லையோ,
இல்லாத வன்மெங்களென் மீதிலேனம்மா
இனி விடுவதில்லை சும்மா,
இருவரும் மடிபிடித்துத் தெருதனில் வீழ்வதும்
இதுதரும மல்ல வம்மா,
எல்லாரு முன்னையே சொல்லியே யேசுவார்
அது நீதியல்ல வம்மா,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 7

முன்னையோர் சென்மாந்திர மென்னென்னபாவங்கள்
மூடனான் செய்தே னம்மா,
மெய்யென்று பொய்சொல்லி கைதனிற் பொருள் தட்டி
மோசங்கள் பண்ணினேனோ,

என்னமோ தெரியாது இக்கணந் தன்னிலே
இக்கட்டு வந்த தம்மா,
ஏழைநான் செய்தபிழை தாய்பொறுத்தருள் தந்து
என்கவலை தீரு மம்மா,
சின்னங்களாகுது ஜெயமில்லையோ தாயே
சிறுநாண மாகுதம்மா,
சிந்தனைக ளென்மீதில் வைத்து நற்பாக்கியமருள்
சிவசக்தி காமாட்சி நீ
அன்னவாகனமேறி யானந்தமாக வுன்
அடியன் முன்வந்து நிற்பாய்,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 8

எந்தனை போலவே செனனம் மெடுத்தோர்கள்
இன்பமாய் வாழ்ந் திருக்க,
யான்செய்த பாவமோ யித்தனை வறுமையிலுன்
னடியேன் தவிப்பதம்மா,
உன்னையே துணையென் றுறுதியாய் நம்பினேன்
உன் பாதஞ் சாட்சியாக,
உன்னையன்றி வேறு துணை யினியாரை யுங்காணேன்
உலகந்தனி லெந்தனுக்கு,
பின்னை யொன்றெண்ணி நீ சொல்லாம லென்வறுமை
போக்கடித் தென்னை ரட்சி,
பூலோ மெச்சவே பாலன் மார்க்கண்டன்போல்
பிரியமாய்க் காத்தி டம்மா,
அன்னையே யின்னமுன்ன டியேனை ரட்சிக்க
அட்டி செய்யா தேயம்மா,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 9

பாரதனி லுள்ளளவும் பாக்கியத்தோ டென்னைப்
பாங்குட னிரட்சிக்கவும்,
பக்தியாய் உன்பாதம் நித்தந் தரிசித்த
பாலருக் கருள் புரியவும்,

சீர்பெற்ற தேகத்தில் சிறுபிணிகள்வா ராமல்
செங்கலிய னணு காமலும்,
சேயனிட பாக்கியஞ் செல்வங்களைத் தந்து
ஜெயம் பெற்று வாழ்ந்து வரவும்,
பேர்பெற்ற காலனைப் பின்றொடர வொட்டாமற்
பிரியமாய்க் காத்திடம்மா,
பிரியமாயுன்மீதில் சிறியனான் சொன்னகவி
பிழைகளைப் பொறுத்து ரட்சி,
ஆறதனில் மணல் குவித் தரியபூசை செய்தவென்
னம்மை யேகாம்பரி நீயே,
அழகான காஞ்சியில் புகழா வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுடையே. 10

எத்தனை ஜெனனம் எடுத்தேனோ தெரியாது
இப்பூமி தன்னி லம்மா,
இனியாகிலும் கிருபை வைத்தென்னை ரட்சியும்
இனிஜெனன மெடுத் திடாமல்,
முத்திதர வேணுமென்று உன்னையே தொழுதுநான்
முக்காலும் நம்பி னேனே,
முன்பின்னுந் தோணாத மனிதரைப் போலநீ
முழித்திருக் காதே யம்மா,
வெற்றி பெற வுன்மீதில் பக்தியாய் நான் சொன்ன
விருத்தங்கள் பதி னொன்றையும்,
விருப்பமாய்க் கேட்டுநீ யளித்திடுஞ் செல்வத்தை
விமலனா ரேசப் போறார்,
அத்தனிட பாகமதைவிட்டு வந்தேயென்
அருங்குறை யைத் தீரு மம்மா,
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. 11

வினாயகுனி வலெனு ப்ரோவவே

ஸ்ரீ த்யாகராஜ கீர்த்தனை

ராகம் : மத்யமாவதி. தாளம் : ஆதி களை.

பல்லவி : வினாயகுனி வலெனு ப்ரோவவே நினு
வினா வேல்பு லெவரம்ம

அநுபல்லவி : அனாத ரக்ஷகி ஸ்ரீ காமாக்ஷி ஸுஜனாகமோ
சனி ச'ம்கரி ஜனனீ

சரணம் : 1. கராத முலகுனு வரா லொஸக னுண்
ட ராமுலை பூஸுராதி தேவத
லு ராயடினி ஜெந்தராது தய ஜூ
ட ராதா காஞ்சிபுராதிநாயகி

2. பிதாமஹுடு ஜனஹிதார்த்தமை நின்
னு தா தெலிய வேட தாலிமி கல ய
வதார மெத்தி யிகனு தாமஸமு ஸே
ய தாளஜாலமு நதார்த்தி ஹரிணி

3. பிரான தயசே கிராலு மாகு நி
க ராஜேஸி ப்ரோத்ஸு ராஜதரி தியா
கராஜுனி ஹ்ருதய ஸரோஜ வாஸினி
முராரி ஸோதரி பராச'க்தி நனு

அனாதரக்ஷகியாய் பாவங்களைப் போக்கி, நல்லோர்களுக்கு நற்கதியை நல்கி, மங்களங்களை அருளுகின்ற ஸ்ரீ காமாக்ஷி தேவியை துதித்து அவளன்றி வேறு தெய்வம் இல்லையென்றும், தன்னை வினாயகரைப் போல் ஆதரித்து ஆட்கொள்ளும்படியும் வேண்டுகிறார் ஸ்ரீ தியாகராஜர். ஸ்ரீதேவியின் அருளே வினாயகப் பெருமானின் தோற்றத்திற்குக் காரணம் என்பர். அதுபோலவே ஸ்ரீ காமாக்ஷியின் கருணையினால் வினாயகப் பெருமானின் திருவவதாரமாக துண்டீர மஹாராஜா தோன்றியதாகவும், ஸ்ரீ காமாக்ஷியின் கைங்கர்யத்தில் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட இவர் பெயரால் துண்டீர மண்டலம் என்றும், தொண்டை மண்டலம் என்றும் காஞ்சிபுரம் சேர்ந்த பகுதி விளங்கி வருகிறது. பிரம்மாவின் வேண்டுகோளினால் பூமியில் காட்சி தந்து, காஞ்சியில் எழுந்தருளி, கருணையை பொழிகின்ற ஸ்ரீ காமாக்ஷியை, தன்னை தயவுடன் ஆட்கொள்ளும்படி இந்த கீர்த்தனையில் வேண்டுகிறார் தியாகராஜர்.

கஞ்சதளாயதாக்ஷி காமாக்ஷி
(தீக்ஷிதர் க்ருதி - 7)

ராகம் : மனோஹரி. தாளம் : ஆதி.

பல்லவி

கஞ்ஜதளாயதாக்ஷி காமாக்ஷி
கமலா மனோஹரி த்ரிபுரஸுந்தரி...... (கஞ்ஜ)

அனுபல்லவி

குஞ்ஜர கமனே மணிமண்டித மஞ்ஜுள சரணே
மாமவ சி'வ பஞ்ஜரசு'கி பங்கஜமுகி
குருகுஹ ரஞ்ஜனி துரித பஞ்ஜனி நிரஞ்ஜனி...... (கஞ்ஜ)

சரணம்

ராகா ச'சி'வதனே ஸுரதனே ரக்ஷித மதனே ரத்ன ஸதனே

ஸ்ரீ காஞ்சன வஸனே ஸுரஸனே ஸ்ருங்காராஸ்ரய மந்த ஹஸனே

ஏகானேகாக்ஷரி புவனேஸ்வரி ஏகானந்தாம்ருதஜரி

பாஸ்வரி ஏகாக்ர மனோலயகரி ஸ்ரீ கரி

ஏகாம்ரேச' க்ருஹேஸ்வரி ச'ங்கரி...... (கஞ்ஜ)

தீயவற்றை அகற்றி நன்மைகளைசெய்தருளும் புன்முறுவலை கொண்டு காஞ்சியில் விளங்குகின்ற தாமரை போன்ற கண்களுடைய காமாக்ஷியே! என்னை ஆட்கொண்டு அருள வேண்டும். ஒன்றானவளும், அனேகமான நாமங்களால் போற்றப் பெறுபவளும், பேரின்பத்தை பெறச் செய்கின்றவளும் ஆன ஸ்ரீ காமாக்ஷியின் புன்னகை என்னை காத்தருள வேண்டும்.

ஏகாம்ரேச நாயிகே
(தீக்ஷிதர் க்ருதி 11)

ராகம் : சுத்தஸாவேரி. தாளம் : ஆதி

பல்லவி

ஏகாம்ரேசநாயிகே சி'வே ஸ்ரீ காமாக்ஷி பாஹிமாம் (ஏகாம்ரேசர்)

அனுபல்லவி

ஏகாம்ரேச' க்ருஹேச்'வரி ச'ங்கரி
ச'ரதோதரி ஸதபக்தவசங்கரி (ஏகாம்ரேசர்)

சரணம்

காமஜனக மோஹிதபூர்ணபலே காமகலே
விமலே கரகமலே பாமரஜனபாலினி
குருகுஹஜனனி சு'த்தஸாவேரீ நுதானந்திநி (ஏகாம்ரேசர்)

ஏகாம்ரேஸ்வரரின் துணைவியே! காமாக்ஷி அன்னையே! அபயம். பணிபவரின் பக்திக்கு இரங்குபவளே! தூயவளே! அடியார்களை ஆதரித்தருள்பவளே! ஆறுமுகனின் அன்னையே அபயம்.

காமாக்ஷி

(தீக்ஷிதர் க்ருதி - 13)

ராகம் : ஸுமத்யுதி. தாளம் : ரூபகம்

பல்லவி

காமாக்ஷி காமகோடிபீடவாஸினி மாமவ (காமாக்ஷி)

அனுபல்லவி

கௌமாரி குஸுமத்யுதி ஹேமாபரணபூஷணி
ஸமஸ்த ஸாம்ராஜ்யதாயினி ஸத்குருகுஹஜனனி (காமாக்ஷி)

சரணம்

கமலேச' ஸோதரி கமலாக்ஷி நாராயணி
நாதபிந்து கலாஸ்வரூபிணி காத்யாயனி
காமகலா ப்ரதர்சினி கல்யாணகுண ச'ாலினி (காமாக்ஷி)

ஸ்ரீகாமகோடி பீடத்தில் வசிக்கின்ற காமாக்ஷியே! அருள்புரியவேண்டும். ஐஸ்வர்யங்கள் அனைத்தையும் தந்து அருள்பவளே! திருமாலின் ஸோதரியே! நாதபிந்துகலா ஸ்வரூபிணி! கல்யாண குணங்கள் நிறைந்து விளங்குபவளே! காமாக்ஷியே! காத்தருளவேண்டும்.

159

ஹிமாத்ரி ஸுதே பாஹிமாம்

(ஸ்யாமா சாஸ்திரி ஸாஹித்யம் – 7)

ராகம் : கல்யாணி. தாளம் : ரூபகம்

பல்லவி

ஹிமாத்ரி ஸுதே பாஹி மாம்
வரதே பரதேவதே (ஹி)

அனுபல்லவி

ஸுமேரு மத்ய வாஸினி
ஸ்ரீ காமாக்ஷி

சரணம்

ச்'யாமக்ருஷ்ண ஸோதரி கௌரி
பரமேஸ்வரி கிரிஜா ஆல நீல வேணி
கீரவாணி ஸ்ரீ லலிதே (ஹி)

வரமருளும் மலைமகளே! மஹா மேருவில் வசிப்பவளே! பராம்பிகையே! ஸ்ரீகாமாக்ஷியே! எனக்கபயமளித்தருள வேண்டுகிறேன். ஸ்ரீலலிதா திரிபுரசுந்தரியே! ஸ்யாம க்ருஷ்ணனின் சோதரியே! அபயமளித்தருள வேண்டும்.

கனகசைல விஹாரிணி

(ஸ்யாமா சாஸ்திரி ஸாஹித்யம் – 18)

ராகம் : புன்னாகவராளி. தாளம் : ஆதி

பல்லவி

கனக சை'ல விஹாரிணி அம்ப ஸ்ரீ
காமகோடி பாலே ஸுசீ'லே (க)

அனுபல்லவி

வனஜபவ ஹரினுதே தேவி ஹிமகிரிஜே
லலிதே ஸததம் வினதம் மாம்பரிபாலய
ச'ங்கர வனிதே ஸதி மஹா த்ரிபுரஸுந்தரி (க)

சரணம்

1. சண்ட கண்ட கண்டண பண்டிதேக்ஷு
அண்ட கோதண்ட மண்டித பாணி
புண்டரீக நயனார்ச்சித பத
புரவாஸினி சி'வே ஹர விலாஸினி (க)

2. கம்பு கண்டி கஞ்ஜ ஸத்ருஸ வதனே
கரி ராஜ கமனே மணி ஸதனே
ச'ம்பர விதாரி தோஷி சி'வ ச'ங்கரி
ஸதா மதுர பாஷிணி

3. ச்'யாமலாம்பிகே பவாப்தி தரணே
ச்'யாமக்ருஷ்ண பரிபாலித ஜனனீ
காமிதார்த்த பல தாயகி காமாக்ஷி
ஸகல லோக ஸாக்ஷி (க)

ஸ்ரீகாமகோடி பீடத்தில் பாலா திரிபுரசுந்தரியாய் எழுந்தருளி ஸ்ரீகாஞ்சிபுரத்தில் விளங்கும் தேவியே! ஹரியும் அயனும் போற்றுகின்ற மலைமகளே! லலிதாம்பிகையே! நாளும் உனை துதிக்கின்ற என்னை ஆதரித்து அருளவேண்டும். சண்டன் எனும் அரக்கனை அழித்தவளே! ச்'யாமக்ருஷ்ணனால் துதிக்கப்பெறுபவளே! கரும்பு வில்லை கையிலேந்தியவளே! சிவபெருமானுக்கு ப்ரியமானவளே! மெதுவான அழகிய நடையுடையவளே! பிறவிப் பெருங்கடலை கடப்பதற்குத் தோணிபோன்று துணை புரிந்தருள்பவளே! ச்'யாமக்ருஷ்ணன் பேற்றிடும் தாயே! எண்ணங்களை ஈடேறச் செய்யும் அருள் பார்வையுடைய காமாக்ஷி அன்னையே! காத்தருளவேண்டும்.

பாலின்சு காமாக்ஷி

(ச்'யாம ச'ாஸ்திரி ஸாஹித்யம் - 19)

ராகம் : மத்யமாவதி. தாளம் : ஆதி

பல்லவி

பாலின்த்ஸு காமாக்ஷி பாவனி பாப ச'மனி (பா

அனுபல்லவி

சாலா பஹு விதமுகா நினு ஸதா வேடு கொனெடி
நரி எந்தேல
ஈலாகு சேஸேவு வெத ஹரிஞ்சவே வேகமே நன்னு
கனக கிரி ஸதன லலித நினு பஜன
ஸந்ததமு ஜேய நிஜனுடன்
வினுமு நிகில புவன ஜனனிவி இபுடு
மா துரிதமு தீர்ச்சி வரா லிச்சி (பா

சரணம்

1. ஸ்வாந்தம்புலோன நின்னே தலசே ஸுஜனுல
கெல்ல னே வேள
ஸந்தோஷமு லொஸகேவனி நீவு
மனோரத பல தாயினிவனி
காந்தமகு பேரு பொந்திதிவி காருண்ய
மூர்த்திவை ஜகமு
காபாடின தல்லி கதா நேனு நீது பிட்டனு லாலிஞ்சி (பா

2. ஈ மூர்த்தி இந்த தோஜா மயமை இடுவலெ
கீர்த்தி விஸ்பூர்த்தி விட்லானய
குண மூர்த்தி திரிலோகமுலோ ஜூசின தைன கலதா
ஏமி தொலி நொமு நோசிதினோ நீ பாத பத்ம தர்ச'னமு
வேமாரு லபிஞ்சி க்ருதார்த்துடனைதி
நா மனவி யாலிஞ்சி (பா)

3. ராஜாதிராஜ ராஜன்மகுட தடமணி ராஜ பாஜால
நிஜ ஸன்னிதி தேவி ஸமஸ்த ஜனுல கெல்ல வரதா
ராஜமுகி ச்'யாமக்ருஷ்ணனுத காஞ்சிபுரீஸ்லரி விகச
ராஜீவ தளாக்ஷி ஜகத்ஸாக்ஷி யோப்ரஸன்ன பராச'க்தி (பா)

பாபங்களை போக்கிடும் தூயவளே! காமாக்ஷி தாயே! ஆட்கொண்டு அருளவேண்டும். பலவிதங்களில் பலமுறை பணிந்து வேண்டிய எனது துயரினை துடைத்து தீவினைகளை அகற்றி வேண்டுவனத் தந்தருளி ஆட்கொள்ளவேண்டும். அடியார்களின் எண்ணங்களை ஈடேறச்செய்து இன்பம் தந்து அருளும் தாயென போற்றப் பெறுபவளே! கருணையின் திருவுருவமாய் திகழும் தாயே! தனயனை தயவுடன் காத்தருள வேண்டும். மூவுலகங்களிலும் இணையற்ற ஒளிமயமான அருள் தோய்ந்த நினது திருவடிகளை எனது பூர்வஜென்ம புண்யத்தினால் தரிசித்து சரணடையும் பேற்றினைப் பெற்று தன்யனானேன். என் வேண்டுகோளுக்கு செவிமடுத்து ஆதரித்தருள வேண்டும். லோகஸாக்ஷியாய் விளங்கிடும் தாயே! பேரரசர்களும் வணங்கிடும் தேவியே! ஸ்யாம க்ருஷ்ணன் துதிக்கின்ற ஸ்ரீ காமாக்ஷி அன்னையே! என்னைத் தயவுடன் ஆட்கொண்டருள வேண்டும்.

கருணை புரிந்திடு காமாக்ஷி

கருணை புரிந்திடத் தாமதம் ஏன் – உயர்
கனிமனம் உடைய காஞ்சி காமாக்ஷியே – தாயே

(கருணை)

அருள் சுரந்தோடும்உன் விழிமலர் கண்டேன்
அனுதினம் பணிந்துநான் பரவசம் கொண்டேன்

(கருணை)

ஆதிசங்கரருக்கு அருள்புரிந்தாயே – பின்
மூகசங்கரருக்கு மொழிதந்த தாயே!
காமகோடிபீடக் கற்பகத்தருவே
க்ஷேமமும் செழிப்பும் ஜகமதில் நிலவிட

(கருணை)

-டி.வி.ஆர். சாரி

கருணை உள்ளம் கொண்டவளே

பல்லவி

கருணை உள்ளம் கொண்டவளே காமாக்ஷிதாயே
அருள்வேண்டி நிற்கின்றேன் ஆதரிப்பாய் நீயே


அனுபல்லவி

ஒருமையுடன் உனைப்பணிந்தேன் அருள்வாய் நின்திருவடியை
குருவாய் வந்தெனக்கு தருவாய் நல்லறிவை (கருணை)

சரணம்

ஊமையாய் இருந்த மூகரெனும் மகான்
உன்னருளால் வாய்திறந்து உனையே தினம்பாடி
உலகிற்கு குருவாகி உயர்கவிதை தந்தாற்போல்
உன்னடியார் யாவருமே உயர்கதியை அடைந்திடவே (கருணை)

- T.V.R. சாரி.



அருள் புரிவாயே அன்னை காமாக்ஷி

பல்லவி

அருள்புரிவாயே அன்னை காமாக்ஷியே
அவனியில் உனையன்றி ஆதரிப்பார் யாருமில்லை (அருள்)


அனுபல்லவி

இருள் சூழ்ந்த உலகினில் இன்பம் நிலவிட
கருணையே உருவாக காஞ்சியில் உறைபவளே (அருள்)

சரணம்

ஜகத்தினைக் காத்திட ஜகத்குருவாலே
ஸ்தாபிதம் செய்திட்ட ஸ்ரீசக்ர பீடத்தில்
அழகாகவே அமர்ந்து அருளினைப் பொழிந்திடும்
ஆதியே சக்தியே அன்புடன் என்றுமே (அருள்)

- *T.V.R. சாரி.*


SWARNA VASTHRA KAMAKSHI



ஓங்கி உலகளந்த உத்தமன்

[உலகளந்தப் பெருமாள் திருக்கோயில்]

ஸ்ரீய: பதியாகிய ஸர்வேஸ்வரன் சகல ஸத்குண ஸம்பன்னன் என்றும், சர்வ வல்லமை படைத்தவன் என்றும் ஸர்வக்ஞன் என்றும், செளலப்யன் என்றும், ஸ்த்ய ஸங்கல்பன் என்றும், ஸ்த்யவ்ரதன் என்றும், ஸத்ய ஸ்வரூபி என்றும் சகல வேத சாஸ்த்ர புராணங்களால் போற்றப்பட்டுத் துதிக்கப்படுகின்றான். தன் சரணங்களிலே சரணம் புகுவார்க்கு சரண்யத்தையே பலனாகத் தந்து கடாக்ஷிப்பதனால் கருணைக்கு இருப்பிடமாகத் திகழ்பவன் என்றும், "ஸகல பலப்ரதோஹி விஷ்ணு" என்று அபேக்ஷகள் அனைத்திற்கும் பலப்ரதன் என்றும் பரந்தாமன் போற்றப்படுகிறான். பக்தர்களிடத்தே கொண்ட பரமவாத்ஸல்யத்தினால் அவர்களைச் சோதனைக்குட்படுத்துவது போன்ற ப்ரமையை உண்டுபண்ணி அவர்தம் பெருமையை உலகறிந்து உயர்வடையச் செய்ய, தன்னுடைய உயர்நிலையினையும் பாராமல் பகவான் மனமுவந்து இறங்கி வருவதற்கு அவதாரமென்று பொருள் கூறுவர். ஆண்டவனின் அவதார மஹிமை அடியார்கள் ஏற்றம் பெறுவதிலேயே அடங்கியுள்ளது. அறிய முடியாத் தன்மையுடையவன் என்பதனாலும், அளவிடமுடியாத கல்யாண குணங்களை உடையவன் என்பதனாலும் நாரணன், நீலமேக ச்யாமளனாய்த் திகழ்ந்து நல்லோரின் நலன் காப்பதில் நாட்டம் கொண்டு, நற்கருணையினால் தர்மஸம்ரக்ஷணார்த்தம் அவ்வப்போது அவதரிக்கின்றான். சகலவித பந்துவுமாக இருக்கையாலே பகவானுக்குச் செய்யலாகாதது இல்லையென்ற ஸர்வேஸ்வரனின் சர்வ வல்லமையை வெளிப்படுத்தும் வகையில் ஏற்பட்டது வாமனாவதாரம் அல்லது த்ரிவிக்ரமாவதாரம்.

தூணிலுமிருப்பான், துரும்பிலுமிருப்பான் என்னும் தனது ஸர்வ வ்யாபகத்வத்தை வெளிப்படுத்தவும், பக்தவாத்ஸல்யத்தினால் சரண்புகுந்தோரை ஸம்ரக்ஷிப்பதற்கு சர்வதாசித்தமாக இருப்பதை உறுதி படுத்தவும் பகவான் நரஸிம்ஹாவதாரம் எடுத்து ஹிரண்ய கசிபுவை வதம்செய்தபின் பிரஹலாதனைக் காத்து அருளினான். தன்னைத் தயவுடன் காத்தருளிய ஸ்ரீமந் நாராயணனே ஸர்வலோக சரண்யன் என்று போற்றி வந்த பக்தப் பிரஹ்லாதனின் பௌத்திரன்ய

மஹாபலி. சிறந்தவிஷ்ணு பக்தனாகத் திகழ்ந்து பாரெல்லாம் புகழ்ந்திடும் வண்ணம் தர்மத்தின் வழி ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். பலகாலம் தவமிருந்து ப்ரஹ்மதேவனிடமிருந்து தர்மசிந்தையிலிருந்து எப்போதும் வழுவாதிருக்க வரம் பெற்று, யக்ஞ யாகாதிகளைச் செய்து அறத்தை வளர்த்து வந்தான். பலிசக்கிரவர்த்தி அறிஞனாயிருந்தும் பலரின் தூண்டுதலின் பேரில் தம் முன்னோர் ஆண்டுவந்த ஸ்வர்க்கலோகத்தை இந்திரன் பிடித்துக்கொண்டிருப்பதைக் கண்டித்து, தான் பலசாலியாயிருப்பதால் தன்னுடைய ஆளுகைக்குட்படும்படி கட்டளையிட்டான். இந்திரனிடமிருந்து தக்க பதில் வராததால் சினங்கொண்டு போர் தொடுத்தான். இந்திரனும், மஹாபலியின் வலிமைக்கு அஞ்சி, ஸ்வர்க்த்தை விட்டுச்சென்றான்.

காச்யபரின் குமாரனாகிய இந்திரன், தன் தாய் அதிதியிடம் சென்று முறையிடவே, அவளும் ஆபத்பாந்தவனாகிய அச்யுதனை இந்திரனுக்கு அபயம் அளித்து ஆட்கொண்டு அருளும்படி மனமுருகி வேண்டினள். ஆச்ரித ரக்ஷணமே குணமாகக் கொண்ட கோவிந்தன், அதிதியின் வேண்டுகோளுக்கிணங்கி இந்திரன் இழந்த ராஜ்யத்தை மீட்டுத்தர திருவுள்ளங்கொண்டு, அதிதி கர்ப்பத்தில் வாமனனாகத் திருவவதாரம் செய்கிறார். “தர்மோரக்ஷதி ரக்ஷித” என்றபடி தர்மத்தைக் கடைப்பிடிப்பவன் காப்பாற்றப்படுவான் என்ற தர்ம நியாயத்தின் படி அறத்தின் வழி நடக்கும் அரசனாகிய மாபலியை மாய்ப்பது தர்ம சம்மதமாகாது என்பதனால் மாபலியை வலிமையினால் வெல்ல முடியாது என்பதை உணர்ந்து அன்பினால் அறத்தின்வழி இந்திர பதவியை மீட்டுத்தர உபாயத்தைத் தேடி பகவான் மேற்கொண்ட திருவவதாரமே த்ரிவிக்ரமாவதாரம். மாவலி முறையே இந்திரபதவியைப் பெற்றவனில்லை. நூறு அஸ்வமேத யாகங்களைச் செய்து தூய்மை அடைந்தவனே இந்த்ர பதவிக்கு உரியவன் என்பது நியதி. மாவலியின் இணையற்ற வலிமைச் செருக்கினைக் கண்டு அஞ்சிய இந்திரன் தன் லோகத்தைவிட்டுச்செல்லவே அதிபதியில்லா அந்த லோகத்தை அதிக்ரமமாக ஆக்ரமித்தவன் மாபலி. ஆக, உரிமை பெறாது உரித்தாக்கிக் கொண்ட மாபலி, அந்த செயல் அளவுக்கு அறத்தினின்று வழுவினான் என்று தர்மநிர்ணயம் செய்து அவனை அகற்றுவது அறமே என்ற முறையில் அவன் வழியே அவனிடமிருந்து அதே பொருளை அடைந்து அதற்குரியவனான இந்திரனுக்கு அதை மீட்டுத்தரத் திருவுளங்கொண்டதிருமால் வாமனனாகத் திருவவதாரம் செய்ய நேரிட்டது.

மஹாபலி, நர்மதா நதிக்கரையில் வைஷ்ணவ யாகம் செய்வதை அறிந்த மாயவன் வாமனன், வடுரூபத்தில் வந்து, மூவுலகையும் கட்டியாளும் உரிமையைக் கைக்கொண்டமாபலியிடம் தான் தவம் செய்ய விரும்புவதால் தனக்கெனத் தன் காலால் மூன்றடி இடம் கொடுக்குமாறு கேட்க, வாமன மூர்த்தியின் வடிவழகில் மனதை இழந்த மாபலி கேட்டதை வழங்க முன்வந்தான். இடத்தைக்கொடுத்தவன் மடத்தைப்பிடுங்கிய கதையாகிவிடப் போகிறதே என்றஞ்சிய குலகுருசுக்ராச்சார்யார், வந்த வாமனன் விஷ்ணுதேவனே என்பதை தம் ஞான த்ருஷ்டியினால் அறிந்து, மாதவனின் மாயச்செயலை மாவலிக்கு உணர்த்தி எச்சரித்தார். சர்வ சக்தனும், சர்வலோக ச'ரண்யனும் ஸ்ரீய: பதியுமாகிய ஸ்ரீமந் நாராயணன் அனைத்து ஜீவராசிகளுக்கும் அருள்பவனாக இருக்கையில் அப்படிப்பட்டவன் தன்னிடம் அண்டி யாசகம் ஏற்பதையும், மேலோங்கி இருக்கவேண்டிய அனுக்ரஹஹஸ்தம் தேஹி யென்று கீழேயும் தன் கரம் மேலோங்கியும் இருப்பதைவிடப் பெரும்பேறு வேறேதுமில்லை என்றான். வாமனன் வேண்டியபடி மூன்றடி இடத்தைத் தாரைவார்த்து தத்தம் செய்யபுக கமண்டல நீர் துவாரத்தைவண்டுருவாய்ச் சென்று சுக்ராச்சாரியார் அடைத்து தடுக்க அடைப்பைச் சோதிப்பதைப் போலத் தன்னுடைய திருக்கையில் அணிந்து இருந்த தாப்பைப் பவித்ரத்தின் நுனியால் குத்திக் கிளறச் சுக்கிரனுடைய ஒரு கண் கெட்டது. அடைப்பு நீங்கிட, மாபலியிடம் நீரேற்று தானம் பெற்ற வாமனன் மூவடியைத் தன் சேவடி கொண்டு அளக்கத் திரிவிக்ரமனாய் விண்முட்ட எழுந்தார். பேருருவைக் கண்டு பிரமித்த மாபலியின் முன்னே ஓரடியால் உலகையளந்து மற்றோரடியால் விண்ணையும் அளந்து, இன்னோரடிக்கு இடம் கேட்கச் செய்வதறியா மாவலிதன் சிரஸை மடுத்துக் காட்டத் தம் திருவடியை மாபலியின் சிரத்தில் பதிப்பித்துப் பாதாளத்தில் அழுத்தி, அங்கிருந்த வண்ணம் கீழே மூவுலகங்களையும் ஆண்டுவரும்படி அனுக்ரஹம் செய்தார். தேவர்களும் தொழும் திருவடியைத் தாங்கும் தனிப் பெரும் பேற்றினை அருளிப் பரமபக்தனாகிய மாபலியின் மஹிமையை உலகோங்கச் செய்த உலகளந்தப் பெருமானின் ஒப்பற்ற திருக்கோலத்தில் சேவை சாதித்தருளும்படி ஆதிசேஷன் ப்ரார்த்திக்கவே, ஸத்யவ்ரத க்ஷேத்ரமாகிய காஞ்சிபுரத்தில் ஆதிசேஷனுக்கு ப்ரதயக்ஷமாகியவர் உலகளந்தப் பெருமாள்.

பெரிய காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்கருகாமையிலும், ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் திருக்கோயிலுக்கு சமீபத்திலுமுள்ளது உலகளந்தப்பெருமாள்

திருக்கோயில். பெருமாள் மேற்கே திருமுகமண்டலத்துடன், த்ரிவிக்ரமாவதார ரூபத்தில் நின்ற திருக்கோலத்தில் எழுந்தரளியிருக்கிறார். தம் வலது திருக்கரத்தினை நீட்டி அதில் இரண்டு விரல்களை காட்டித் தான் தனது இரண்டு அடிகளால் மண்ணையும் விண்ணையும் அளந்துவிட்டதனை உணர்த்தி இடது திருக்கரத்தில் மீதமுள்ள ஓரடிக்கு இடமெங்கே என்று கேட்பதுபோல் ஒரு விரலைக் காட்டியும் மஹாபலியின் திருமுடி மீது வலது திருவடியைச் சாத்தியும் இடது திருவடியை ஆகாசத்திற்கும் பூமிக்குமாய் அளந்துவிட்டது போல் உயர்த்தியும், பெருமாள் கம்பீரமாக உலகளந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். தீவட்டியை உயரப் பிடித்துக்கொண்டு, த்ரிவிக்ரமாவதார உலகளந்த பெருமாளின் திருமுக மண்டலம் சேவை செய்விக்கப்படுகிறது. திருமழிசை ஆழ்வாராலும் திருமங்கையாழ்வாராலும் மங்களாசாஸனம் செய்யப்பட்டவர். பேரகத்தான் என்று போற்றப்படும் உலகளந்தப்பெருமாள் விமானம் – ஸார (ஸ்ரீகர) விமானம்; தாயாரின் திருநாமம் அம்ருதவல்லித் தாயார்.

ஆதிசேஷனுக்கு ஸாக்ஷாத்காரம் செய்த திருக்கோலத்தில் பெருமாள் எழுந்தருளி இருப்பதால் இந்த சந்நிதியின் கர்ப்பக்ரஹத்தின் பக்கவறையில் ஊரகம் என்று போற்றப்படும் ஆதிசேஷன் மண்டலாகாரமான திருமேனியுடன் சேவை சாதிக்கிறார். பேரகத்தான், ஊரகத்தனர் சந்நிதிகள் இரண்டும் சேர்ந்து ஒரே திவ்யதேசமாகக்கொண்டு இருவரையும் சேர்த்தே ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர். ஊரகத்தான் சந்நிதி ப்ரார்த்தனை ஸ்தலமாகப் பிரஸித்தி பெற்றது. இங்கு எழுந்தருளியிருக்கும் ஆதிசேஷனுக்கு விசேஷத் திருமஞ்ஜனங்களும் சந்தனக்காப்பும் நடப்பித்துப் பக்தர்கள் ப்ரார்த்தனைகளைச் செலுத்துகின்றனர்.

உலகளந்தப்பெருமாள் சந்நிதியிலேயே நான்கு திவ்ய தேசங்களை சேவிக்கலாம். பேரகம் சேர்ந்த ஊரகம், நீரகம், காரகம், கார்வானம் என்பனவே அவை. இந்த நான்கு சந்நிதிகளும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டவை.

உலகளந்தப்பெருமாள் கோயிலில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளி அக்ரூர மஹரிஷிக்கு ப்ரத்யக்ஷமானவர் நீரகத்தான். இவர் ஜகதீஸ்வரப்பெருமாள் என்றழைக்கப்படுகிறார். விமானத்தின் பெயர் ஜகதீஸ்வர விமானம், தாயார் திருநாமம் நிலமங்கை நாச்சியார்.

நிகேதன ரிஷிக்கு ப்ரத்யக்ஷமாய்த் தெற்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் உலகளந்தப் பெருமாள் சந்நிதியில் ரம்ய விமானத்தில் கருணாகரப் பெருமாள் என்ற திருநாமத்துடன் எழுந்தருளியிருக்கும் காரகத்தானைத் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்திருக்கிறார். தாயாரின் திருநாமம் பத்மாமணி.

உலகளந்தப் பெருமாள் கோயில் ப்ராகாரத்தில் அமைந்த கார்வானப்பெருமாள் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்றவர். புஷ்பக விமானத்தில், மேற்கே திருமுகமண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் கார்வானப்பெருமாள், நவனீதசோரன் என்றும் திருநாமம் கொண்டுள்ளார். பார்வதிக்கும் மஹாபலிக்கும் அஸ்வத்தாமாவுக்கும் ப்ரத்யக்ஷம். தாயாரின் திருநாமம் கமலவல்லித் தாயார்.

உலகளந்தப்பெருமாள் கோயிலில் தை மாதம் புனர்பூசத் திருநக்ஷத்திரம் தீர்த்தவாரியாய்ப் பிரஹ்மோத்ஸவம் நடைபெறுகிறது. திருக்குறளுக்கு சிறந்த உரையாசிரியராக திகழந்த காஞ்சிபுரத்தார் பரிமேலழகரின் திருவம்சத்தார் இத்திருக்கோயிலின் அர்ச்சகர்களாக விளங்கி வருகிறார்கள். வாமனமூர்த்தி தேவஸ்தானம் என்றழைக்கப்பெறும் உலகளந்தபெருமாள் திருக்கோயிலின் எதிரில், சதுர்புஜ ஆஞ்சநேயர் சந்நிதி அமைந்துள்ளது. ஊரகத்து அன்னவன் என்று ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட மூவடிகளில் மூவுலகங்களை அளந்த சேவடியைச் சரணடைந்து ஆச்ரித ஸ்ரீகரனான எம்பெருமான் உலகளந்தப்பெருமாளை சேவித்து, அன்பை வளர்த்து, அறத்தின் வழி நடப்பதே உய்யும் வழிகளுள் உயர்வழியாகும்.

"நீரகத்தாய்! நெடுவரையின் உச்சிமேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகாவுள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகமேத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா!
காமரு பூங்காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராது என் நெஞ்சின் உள்ளாய்!
பெருமான்! உன் திருவடியே பேணினேனே".

— திருமங்கையாழ்வார்

ஸ்ரீ காளிகாம்பாள் திருக்கோயில்

ஸ்ரீ ஆதிபீடாபரமேஸ்வரி காளிகாம்பாள் கோயில் என்று வழங்கப்படுகின் ஸ்ரீகாளிகாம்பாள் கோயில் பெரிய காஞ்சிபுரம் செங்கழுநீரோடைத் தெருவிலிருந்து சென்னை செல்லப் பிரியும் கம்மாளத்தெருவின் தொடக்கத்தில் வலப்பால் சற்று உள்ளடங்கி உள்ளது. குமரகோட்டம் கோயிலை ஒட்டினாற்போல் அமைந்துள்ளது. இது பழமையான கோயில். ராஜகோபுரம் வழியே உள்ளே சென்றால் கம்பிகளிட்ட ஜன்னல் வழியே அம்பாளை தரிசிக்கலாம். உள்ளே செல்ல இடப்புறமாக வழியுள்ளது.

அம்பாள் அழகிய அலங்காரத்துடன் காட்சியளிக்கிறாள். எதிரில் சற்று முன்னால் ஸ்ரீசக்கரம் உள்ளது. பிராகார ப்ரதக்ஷணமாகவரும்போது முன் மண்டபத்தில் சிவலிங்கமூர்த்தமும், ஸ்ரீபோத்தலூர் வீரப்ரஹ்மம், பிரம்மங்கார் சுவாமிகளின் படமும் உள்ளது. வலமாக வரும்போது அரசமரம், அதனடியில் நாகப்பிரதிஷ்டை, பக்கத்துச்சுவரில் அஷ்டபுஜ துர்க்கையை தரிசிக்கலாம்.

ஸ்ரீ காளிகாம்பாள் கோயில் பக்கத்திலும், ஸ்ரீ காமாக்ஷிஅம்பாள் திருக்கோயிலின் மேற்குராஜகோபுரம் அருகிலும் உள்ள பழமையான கோயில் மாகாளேஸ்வரர் திருக்கோயில். மாகாளன் என்னும் பாம்பொன்று இப்பெருமானை வழிபட்டு வீடுபேறுபெற்றதாக புராணம் மாகாளன் வழிபட்ட சிவலிங்கமூர்த்தம் என்பதனால் மாகாளேஸ்வரர் என போற்றப்பெறுகிறார்.

நவக்ரஹங்களில் ராகுகிரஹ ப்ரீதிக்காக சர்பதோஷபரிஹார நிமித்தம் இங்கு வழிபட்டு வருவது வழக்கத்தில் உள்ளது. இது போலவே தாயார் குளம் பக்கத்தில் வேகவதிகரையில் வியாழனும், மகாலக்ஷிமியும் வழிபட்ட காயாரோகணேஸ்வரர் கோயில் மகிவும் ப்ரசித்திபெற்றது. காயாரோஹணேஸ்வர கோயிலில் குருபகவானுக்கு தனிச் சந்நிதி உள்ளது. குருக்கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. வியாழக்கிழமைகளிலும், ஆண்டுக்கு ஒருமுறை நிகழும் குருபெயற்ச்சியின் போதும் இங்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

பச்சை வண்ணரும் - பவழ வண்ணரும்

அனைத்துலகுக்கும் பிராணனாயிருக்கும் பரமபுருஷனான பரந்தாமன் தம் பரமகாருண்யத்தினால் பக்தர்களின் மனத்துயரங்களைத் தீர்த்து அருள் புரியும் திருவுளத்தோடு அர்ச்சாவதார ரூபத்தில் பல திவ்ய தேசங்களில் எழுந்தருளி சேவை சாதிக்கும் திருப்பதிகளுள் பவளவண்ணம் சந்நிதியும் ஒன்று. எம்பெருமான் ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு நிறத்தைக் கொள்வான் என்று புராணங்களில் கூறப்பட்டிருக்கிறது.

கிருத யுகத்தில் வாழந்தவர்கள் சத்வகுணம் நிறைந்தவர்களாய் சுத்தமான நிறத்தை உகக்குமவர்களாக இருந்தமையால் அவர்களுகாக கிருதயுகத்தில் ஸ்வேத வர்ணனாக அதாவது பால்போல் வெளுத்த நிறத்தையுடையவனாகவும், த்ரேதா யுகத்தில் சிவந்த நிறத்தையுடையவனாக ஸ்வர்ண வர்ணனாகவும், பவள வண்ணனாகவும், த்வாபுர யுகத்தில் பசுமை நிறத்துடன் மரகதவர்ணனாகவும், கலியுகத்தில் எந்த நிறங்கொண்டாலும் ஈடுபடுபவர் அரிதாதலால் இயற்கையான நீல நிறத்தோடு ச்'யாமளவர்ணானகவும் பகவானை வருணிப்பது நூற்கொள்கை. அதுபோல் அஸ்வனி தேவதைகளுக்கு சத்யவ்ரத க்ஷேத்ரத்தில் எம்பெருமான் பவள வண்ணனாக சேவை சாதித்தருளியதாக புராணம் கூறுகிறது.

முன்னொரு காலம் நைமிசாரண்யத்தில் வசித்து வந்த மகரிஷிகள் லோக கல்யாணத்திற்காக யாகம் செய்ய உத்தேசித்தபோது நாரதர் அங்கு எழுந்தருளி ரிஷிகளைப் பார்த்து அவர்கள் செய்யவிருக்கும் யாகத்தின் அவிர்பாகத்தை ஹரி, அயன், அரனுள் சத்வகுணம் நிறைந்தவனுக்கு அளிக்கும்படி அறிவுரை கூறவும், மும்மூர்த்திகளில் சத்வகுண சம்பன்னன் யார் என்பதை கண்டறிய ப்ருகுமாமுனிவரை அனுப்பி வைத்தனர். ப்ருகு முனிவர் சத்திய லோகம் வந்தடைந்தபோது ப்ரஹ்மதேவன் அவரைக் கவனியாமல் ஸரஸ்வதியுடன் ஸல்லாபமாகப் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு கோபம் கொண்டு ப்ரஹ்மாவுக்கு பூவுலகில் வழி பாடில்லாமல் போகக் கடவது என்று சபித்தார். அங்கிருந்து ப்ருகு முனிவர் கைலாயம் சென்றார். அங்கு எப்பொழுதும் யோகநிலையில் இருந்துவரும் சிவ பெருமான் அப்பொழுது பார்வதியுடன் ஏகாந்தமாக இருந்து ப்ருகுவின் வருகையைக் கவனியாமல் இருந்தார். ப்ருகு முனிவரும் சினங்கொண்டு சிவ

பெருமானுக்கு உருவவழிபாடில்லாமற் போகும்படி சபித்தார். அங்கிருந்து புறப்பட்ட ப்ருகு முனிவர் வைகுண்டம் வந்தடைந்தார். அங்கு ஆதிஷேசன் மேல் பள்ளிகொண்டு யோக நித்திரையில் ஆழ்ந்திருந்த ஹரியைக் கண்டார். தான் வந்ததை அவரும் கவனியாமல் போகவே ப்ருகு முனிவர் ஆத்திரம் கொண்டு திருமாலின் திருமார்பில் எட்டி உதைத்தார். நாரணனும் நயத்துடன் எழுந்து தன் மார்பில் எட்டி உதைத்த முனிவரின் பாதம் நொந்ததோ என வருந்தி அவரது பாதத்தைப் பற்றி பிடித்துவிடவும், முனிவரும் தம் தவற்றினை உணர்ந்து பரந்தாமனே சத்வகுணம் நிறைந்தவன் என்று உறுதிப்படுத்திக்கொண்டார். ஆத்திரத்தினால் அவசரப்பட்டுத் தாம் செய்த அபசாரத்திற்கு ப்ராயச்சித்தம் பண்ணிக்கொள்ள வேண்டி பரிகாரத்தை அருளிச்செய்து பிழையினைப் பொறுத்து கடாக்ஷித்தருளும்படி ப்ருகு முனிவர் பரந்தாமனைப் பிரார்த்திக்கவும், சத்யவ்ரத க்ஷேத்ரமென்று போற்றப்படும் காஞ்சிபுரத்தில் தவமிருக்கும்படி ப்ருகு முனிவரைப்பார்த்து பகவான் பணித்தார். ப்ருகு முனிவரும் பூவுலகிற்குத் திரும்பி வந்து நைமிசாரண்யத்தில் முனிவர்களிடம் நடந்ததை எடுத்து உரைத்துத் தாம் சங்கல்பித்தயாகத்தைப் பூர்த்தி செய்துப் பின்னர் காஞ்சிபுரம் வந்தடைந்து சக்ரதீர்த்தத்தில் நீராடி, தவமிருந்தார். ப்ருகுவின் தவத்திற்கிணங்கி அனந்தசயனனும் அன்று வைகுண்டத்தில் ப்ருகுவின் நிமித்தம் பாம்பணை மீதிருந்து எழுந்தமர்ந்த திருக்கோலத்தில் பவளவண்ணனாக ப்ரத்யக்ஷமாய் கடாக்ஷித்தருளியதாகப் புராணம் கூறுகிறது.

பூர்வத்தில் க்ஷீரஸாகர மதனத்தின்போது கூர்மரூபியாய் மந்த்ர பர்வதத்தைத் தாக்கியிருந்த ஸ்வேதவர்ணனாகிய திருமால் அதிலிருந்து வெளியான ஹாலாஹல விஷஜ்வாலையினால் பச்சை நிறத்தைப் பெற்றதாகவும், பின்னர் பிரம்ம தேவனிடத்தில் கோபங்கொண்டு அவரது யாகத்திற்கு இடையூறுகள் ஏற்படுத்த எண்ணிய சரஸ்வதியால் தோற்றுவிக்கப்பட்ட அசுரர்களை அழித்து அவர்களது உதிரத்தைப் பானம் செய்தமையால் சிவந்த திருமேனியனாய் பவள வண்ணன் ஆனதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு ப்ரத்யக்ஷமாகிய பவளவண்ணப் பெருமாளைத் திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் "வங்கத்தால் மாமணிவந் பவளவண்ணா" என்னும் பாசுரத்தால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

பெரிய காஞ்சிபுரம் ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் கோயில் சமீபம் காஞ்சிபுரம்

இரயில் நிலையத்திற்கு அருகாமையில் ஸ்ரீபவளவண்ணர் திருக்கோயில் அமைந்துள்ளது. இதைப் ப்ரவாளவர்ணர் சந்நிதி என்றும் அழைக்கின்றனர். ப்ரவாள விமானத்தின்கீழ் பவளவண்ணர் மூலவர் ஐந்துதலை ஆதி சேஷன் மீது ஒரு திருவடியை மடக்கி வீற்றிருந்த திருக்கோலத்தில் திருவாழி திருச்சங்குகளோடு அபய ஹஸ்தத்துடனும் மேற்கே திருமுக மண்டலத்துடனும் எழுந்தருளியுள்ளார். சன்னதிக்குள் ப்ருகு மஹரிஷியும் எழுந்தருளியிருப்பதைத் தரிசிக்கலாம். தாயாரின் திருநாமம் ப்ரவாளவல்லித் தாயார். ப்ரவாளவண்ணர் சந்நிதியின் இடதுபுறம் ஆண்டாள் சந்நிதியும், அதற்கு முன்னால் அழகிய பவித்ரோத்ஸவ மண்டபமும், கண்ணாடி அறையும் நம்மாழ்வார். திருமங்கையாழ்வார், உடையவர் சந்நிதிகளும், யாகசாலையும், அப்படியே ப்ரதக்ஷிணமாக வந்தால் திருமடப்பள்ளியும் ப்ரவாளவண்ணர் சந்நிதிக்கு எதிரில் தாயார் சந்நிதியும் அமைந்துள்ளன. பெருமான் மேற்கே திருமுக மண்டலத்துடன் இருக்க, தாயார் சந்நிதியும், ஆண்டாள் சந்நிதியும் பெருமாள் சந்நிதியை நோக்கியவாறு அமைந்துள்ளன.

புராண ப்ரசித்தி பெற்றவரும் ஆழ்வாரால் மங்களா ஸாசனம் செய்யப்பெற்றவருமான பவளவண்ணப் பெருமாள் இப்பொழுதுள்ள கோயிலுக்குச் சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் பாணப்பட்டரை எனும் இடத்தில் எழுந்தருளி இருந்ததாகவும், அந்த இடம் பழுதடைந்துவிட்டதால் இந்த சந்நிதியை முன்னோர்கள் ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. இத்திருக்கோயிலின் முன்பு அமைந்திருக்கும் புஷ்கரணி "சக்ரதீர்த்தம்" என்று வழங்கப்படுகிறது. பவளவண்ணர் சந்நிதிக்கு வெளியே கோபுர வாயிலுக்குமுன் ஸ்ரீமத் மணவாள மாமுனிகள் சந்நிதியும், வாஹன மண்டபமும் உள்ளன. வாஹனங்கள் மிகவும் அழகானவை.

ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ப்ரம்மோத்ஸவத்தில் ஐந்தாம் திருநாளில் மோஹினி அவதார திருக்கோலத்தில் தங்கப் பல்லக்கில் தேவப் பெருமாள் இச்சந்நிதிக்கு எழுந்தருளுவது விசேஷம். பவளவண்ணருக்கு வைகாசி அனுஷத்தில் தீர்த்த வாரியாக ப்ரம்மோத்ஸவம் நடைபெறுகிறது.

"கண்டறிந்தும் கேட்டறிந்தும் தொட்டறிந்தும் காதலால்
உண்டறிந்தும் மோந்தறிந்து முய்யனே – பண்டைத்
தவளவண்ணா! கார்வண்ணா! சாமவண்ணா! கச்சிப்

பவளவண்ணா! நின்பொற் பதம்"

பெருமாள் நான்கு யுகங்களுக்கு ஏற்ப, வெண்ணிறம், சிவந்தநிறம், பசுமைநிறம், நீலநிறம், ஆகிய நான்கு நிறம் கொண்டவன். "காஞ்சியில் பவழவண்ணப்பதியில் உறைபவனே! உன் திருவடிகளை வணங்கி. ஐம்புல இன்பங்களையும் நீத்து வாழ்வேன்" என்கின்றார். ஆக திவ்யகவி பெருமாள் ஐய்யங்கார் ஸ்வாமியின் நூற்றெட்டுத்திருபதி அந்தாதிபாலில் குறிப்பிட்ட பவளவண்ணம் ஒரு திவ்வியதேசமாக அமைவது தெளிவு.

பவளவண்ணர் கோயிலுக்கு நேர்எதிரில், பவளவண்ணர் சந்நிதித்தெரு முனையில் பச்சைவண்ணர் கோயில் அமைந்துள்ளது. பச்சைவண்ணர், பவளவண்ணர் திருக்கோயில்களுக்கிடையே உள்ள தெரு காலாண்டார் தெரு என்று வழங்கப்படுகிறது. பச்சை நிறத்துடன் எழுந்தருளியிருக்கும் பச்சைவண்ணர் திருநாமத்துடன் விளங்கும் இச்சந்நிதி புராண ப்ரசித்தமானது. இச்சந்நிதித் தாயாரின் திருநாமம் மரகதவல்லித் தாயார். மரகதவல்லித் தாயார் மிகவும் வரப்ரஸாதியானவள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஏராளமான பக்தர்கள் மரகவல்லித் தாயாரையும், எம்பெருமான் பச்சைவண்ணரையும் சேவித்து எல்லா நன்மைகளையும் பெறுகின்றனர்.

ஆழ்வாரால் பாடப்பெற்ற பவளவண்ணப் பெருமாளையும் புராணப் பிரசித்தி பெற்ற பச்சைவண்ணப் பெருமாளையும் சேவித்து வாழ்வில் செம்மை அடைந்து இன்பமாய் வாழ்வோமாக.

"வங்கத்தால் மாமணிவந் துந்து முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சி யூராய்! பேராய்!
கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை யிடப்பால் கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனிவரையி னுச்சியாய்! பவள வண்ணா!
எங்குற்றாய்? எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதர் கேனே!

— திரு மங்கை ஆழ்வார்.

175



பரமேஸ்வர விண்ணகரம்

[வைகுண்டபெருமாள் கோயில்]

ஸ்ரீய: பதியான பகவான் பரமபதநாதன் ஸ்ரீமந்நாராயணன் நிர்ஹேதுகமான காருண்யத்தினால் ஜீவராசிகள் அனைத்தையும் சம்ரக்ஷிப்பதனால் சர்வேஸ்வரன் என்றும், எங்கும் நிறைந்திருந்து, எல்லாமும் தானாகி, எல்லாவற்றையும் காத்து, அனைத்தையும் ஆட்கொள்வதனால் பரவாசுதேவன் என்றும் சர்வக்தனாய் ஸர்வலோக ஸம்ரக்ஷகனாய் ஸர்வலோக சரண்யனாய்த் திகழ்வதனால் ஸர்வேஸ்வரன் என்றும் பரமேஸ்வரன் என்றும் போற்றப்படுகிறான். பகவான் பக்தவத்ஸலன் மரக்கலத்துக்கு ஒரு சலனமும் பிறவாதபடி பாற்கடலை மந்தரத்தை மத்தாக நாட்டி வாசுகியைக் கயிறாகச் சுற்றிக் கடைந்து பிராட்டியைப் பெற்றார் போல் ஸம்சாரமென்கிற கடலைத் தன் ஸங்கல்பமெனும் மத்தை நாட்டி, கிருபை என்கிற கயிற்றால் சுற்றி கடாக்ஷமென்கிற கைகளாலே கடைந்து ஆத்ம வஸ்துவை ஆட்கொள்வதால் ஆண்டவன் என்று அழைக்கப்படுகிறான். இகபர சுகங்களை அளிக்கவல்லவன் இறைவன். யாவருக்கும் நன்மை பயக்கக்கூடியவனாதலால் அனைவராலும் எம்பெருமான் என்று அன்போடு அழைக்கப்படுகிறான். எம்பெருமானின் கல்யாண குணங்களை அநுபவிப்பதே அடியார்கள் பெறும் பேரின்பமாகும். எம்பெருமானின் வைபவத்தை அநுபவித்தல் பலவகைப்பட்டிருக்குமென மஹான்களின் அநுபவம்தோய்ந்த அருளிச் செயல்களிலிருந்து அறியமுடிகிறது.

எம்பெருமானின் திவ்யமங்கள ரூபத்தை மனதில் இருத்தி தியானித்து, பகவானின் திருநாமங்களைச் சொல்லி அனுபவித்தல், திருக்கல்யாண குணங்களைப் போற்றியநுபவித்தல்; அவன் புகழ் பாடிப் பரவி அநுபவித்தல், எம்பெருமானின் அர்ச்சாவதார மூர்த்திகளின் வடிவழகைக் கண்டுகளித்து வருணித்து அநுபவித்தல். அவனுகந்தருளிய திவ்யதேசங்களின் விசேஷங்களையும், அவ்விடத்து மஹான்களின் பெருமையையும் பேசி அநுபவித்தல், போன்று பகவதனுபவம் பலவகைப்பட்டிருக்கு மெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல் ஸ்ரீ வைகுண்டத்தில் இருக்கும் திருக்கோலத்துடன் எம்பெருமானை அர்ச்சாவதார ரூபத்தில் எழுந்தருளப்பண்ணிய பல்லவ மன்னனின் பகவதநுபவத்தின்

அடையாளமாகத் திகழ்வதே காஞ்சியிலுள்ள பரமேஸ்வர விண்ணகரமெனப்படும் ஸ்ரீவைகுண்டப்பெருமாள் திருக்கோயில். பகவான் பரமபதநாதன் முன்னொரு காலம் பல்லவப் பேரரசனுக்கு ப்ரத்யக்ஷமாகி, அவனுக்கு விதிவசத்தால் ஏற்பட்ட சாபத்தின் கடுமையிலிருந்து விடுவித்து, அவனுக்கு புத்திர பாக்கியத்தை அளித்து கடாக்ஷித்து அருளியதாகவும், ஆகவே பகவானுடைய கல்யாண குணங்களைப் பலரும் உணர்ந்து உய்யும் வகையில் இந்த வைகுண்ட நாதப் பெருமாள் திருக்கோயிலைக் கட்டியதாகவும் சொல்லப்படுகிறது. திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட இந்த திவ்யதேசத்தைப் பற்றிய பாசுரங்களில், மல்லையர்கோனையும் புகழ்ந்து பாடியிருப்பதை அறியலாம். இந்தப் பல்லவ பேரரசனிடம் ஒரு போர்ப்பறை இருந்ததாம். இடியோசை போன்று அச்சுறுத்தும் அதன் ஒலியைக் கேட்டு பகைவர்கள் அஞ்சிப் புறமுதுகு காட்டி ஓடுவார்கள் என்றும் இம்மன்னனின் வலிமையை பறைசாற்றும் வகையில் அவனது கடுவாய்ப்பறை அமைந்துள்ளதென்றும் ஆழ்வார் புகழ்ந்து பாடியுள்ளார். கடல்போல் முழங்கும் கடுவாய்ப்பறையையுடைய பல்லவன் பகவான் வைகுண்டநாதனின் அடிபணிந்ததால் பகைவர்கள் அவனை வணங்கி நிற்கிறார்கள் என்று ஆழ்வார் தம் பாசுரத்தில் பல்லவப் பேரரசனுடைய பக்திச்சிறப்பை எடுத்துரைத்துள்ளார்.

திருமங்கையாழ்வார் திருமொழி ஒன்பதாம் பாடலில்,

“கறையுடை வாள்மற மன்னர்கெ டக்கடல்
போல்முழங் கும்குரல் கடுவாய்ப்
பறையுடை பல்லவர் கோன்பணிந்தபர
மேச்சுர விண்ணக ரம்மதுவே” என்று குறிப்பிடுகிறார்.

“விண்ணகரம்” என்பது பல்லவர்களால் கட்டப்பெற்ற திருமால் கோயில்களுக்கு பொதுவாக வழங்கப்படும் பெயராகும். இரண்டாம் நந்திவர்ம பல்லவனால் கட்டப்பெற்றது இத்திருக்கோயில் என்பதற்க்கான கல்வெட்டினை இத்திருக்கோயிலில் காணப்படுகிறது.

திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்டுள்ள பரமபதநாதன் வைகுண்டப் பெருமாள் முகுந்த விமானத்தின் கீழ் மேற்கே திருமுக மண்டலத்துடன் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் இவ்வைகுண்டப் பெருமாள் திருக்கோயில் காஞ்சிபுரம் இரயில் நிலையத்திற்கு சமீபத்திலுள்ளது. இச்சன்னிதித் தாயார் திருநாமம் வைகுண்டவல்லித் தாயார். இக்கோயிலில் மூன்று தளங்கள் உள்ளன. கீழ்தளத்தில் இருந்த

திருக்கோலத்திலும், நடுத்தளத்தில் கிடந்த திருக்கோலத்திலும், மேல் தளத்தில் நின்ற திருக்கோலத்திலும் பெருமாள் எழுந்தருளி சேவை சாதிக்கிறார். ப்ரதான ஸன்னதியை ப்ரதக்ஷிணமாக வரும்போது பூராவும் ஒரே சிற்பக் களஞ்சியக் கூடமாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது. பல்லவ மன்னன் நந்திவர்மனால் நிர்மாணிக்கப்பட்ட இக்கோயிலில் சுதையினாலான ஏராளமான எழில்மிகு சிற்பங்களில் பல்லவ அரசர்களின் வாழ்க்கை வரலாறும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

படிகட்டுகளின் வழியாக நடுத்தளத்திற்குச் சென்றால் ஆதிசேஷன்மீது மேற்கு நோக்கி தெற்கே திருவடிகளுடன் பள்ளிகொண்ட கோலத்தில் பெருமாள் சேவை சாதிக்கிறார். பல்லவ மன்னன் நந்திவர்மன் இத்திருக்கோயிலைக் கட்டியதற்கும், பல்லவ மன்னர்கள் பலர் பல திருப்பணிகள் செய்ததற்கும் இவ்வாலயத்தில் பல கல்வெட்டுகள் உள்ளன. காஞ்சிபுரம் புகைவண்டி நிலையத்திற்கும், பேருந்து நிலையத்தற்கும் இடையில் வடகிழக்காக பெரிய காஞ்சிபுரத்தில் அமைந்திருக்கும் இவ்வைகுண்டப் பெருமாள் திருக்கோயில் அரசாங்கத்தின் தொல்பொருள் இலாகாவினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சன்னதிக்கு எதிரில் கீழண்டை ராஜவீதியில் அமைந்துள்ள இயல்சாற்று மண்டபத்திற்கு ப்ரம்மோத்ஸவ நாட்களில் காஞ்சி வரதராஜப்பெரமாள் எழுந்தருளும்போது நடைபெறும் இயல்சாற்றுமுறை மிகவும் பிரசித்திபெற்றது. வைகுண்டப் பெருமாள் திருக்கோயிலில் சித்திரை புனர்வசு ப்ரம்மோத்ஸவமும், வைகுண்ட ஏகாதசி உத்ஸவமும் கைசிக த்வாதசி உத்ஸவமும் வெகுவிமரிசையாக நடைபெற்று வருகின்றன. பல்லவனுக்குப் ப்ரத்யக்ஷமாகிய பரமேச்சுவர விண்ணகரத்து எம்பெருமான் பரமபத நாதனை பணிந்து வழிபட்டு வளமோடு வாழ்வோமாக !.

"சொல்லுவன் சொல்பொருள்தான் அவையாய்ச்
சுவை ஊறு ஒலிநாற்றமும் தோற்றமுமாய்
நல்அரன் நான்முகன் நாரணனுக் (கு)
இடம்தான் தடம் சூழ்ந்த அழகாய கச்சி
பல்லவன் வில்லவன் என்றுலகில்
பலராய்ப் பலவேந்தர் வணங்குகழல்
பல்லவன் மல்லையர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே".

— திருமங்கையாழ்வார்.

சத்தியக் காஞ்சியில் சித்திரகுப்தர்

[சித்திரகுப்தர் திருக்கோயில்]

அகிலமனைத்தையும் தன் சங்கல்பத்தினால் தோன்றச்செய்து கருணையோடு காத்து, கடைசியில் அவை அனைத்தும் தம்முள் கலந்துவிடும்படி செய்து ஆட்கொள்வது ஆண்டவனின் திருவிளையாடல். ஆயினும் பிராணிகள் தோன்றியதும் தம்மை தோற்றுவிக்கச் செய்த திருவின் தொடர்பினை அறியாமல் இருக்கச் செய்வது மாயையேயாகும். இதையே மமதை என்றும் கூறுவர். பாசவலையில் அகப்பட்டு பசுவாகிய ஆத்மா பதியாகிய பரம்பொருளை உணரமுடியாமல் நேரிடுகிறது. பதியை அடைவதற்கு பசு பக்குவநிலையை அடைதல் அவஸ்யமாகிறது. அதுவரை தொடர்ந்து அநேக பிறவிகள் எடுக்க வேண்டியுள்ளது.

பிறவிப்பிணியிலிருந்து விடுபடும் வரையில் பிராணிகள் தோன்றுவதும், இருப்பதும் பிறகு இறப்பதும் மீண்டும் தோன்றுவதும், சங்கிலித் தொடர்போல் கர்மானுஸாரம்விளையும் ஜனன மரண சம்பவங்களாகும். பிராணிகள் உயிருடன் இருக்கும்போது தாம் செய்வதாகக் கருதி செயல்படும் செயல்களினால் ஏற்படும் பாவ புண்ணியங்களுக்கேற்ப மறு பிறவியில் தாழ்வினையும், உயர்வினையும் பெறுகின்றன.

“பதவி பூர்வ புண்யானாம்” என்று கூறுவர். நற்செயல்களினால் நல்ல பிறவியும் நற்குணங்களும் பிராப்தமாகி பரமனிடத்தில் பக்தி செய்து நற்கதி அடைவதற்கான வழி ஏற்படுகிறதென்றால் பிராணிகளது செயல்களின் தரத்தை நிர்ணயித்து, அவரவர்களின் பாவ, புண்ணியங்களுக்கேற்ப பலன்களைக் கொடுப்பதற்கு செய்கைகளின் கணக்கினைக் கணக்கில் வைப்பதற்கென்று நியமிக்கப்பட்ட தேவதையே சித்திரகுப்தர் எனப்படுபவர். உயிரினங்களின் செயல்களுக்கு சூர்ய, சந்திரர்கள் சாக்ஷிபூதர்களாகத் திகழ்கின்றனர் என்றால் பிராணிகளின் செய்கைகளைக் கணக்கெடுத்து சரி பார்த்து தர்மதேவதை முன்வைத்து அவற்றிற்கேற்ப பலனைத் தரும்படியாகச் செய்வதே சித்திரகுப்தரின் பணியாகும். இவர் எமதர்மராஜனுக்கு உதவியாளராக விளங்குபவர்.

ஒரு சமயம் கைலாயகிரியில் பரமேஸ்வரன் உமாதேவியோடு கொலுவிருந்த சமயம் அண்டசராசரங்களில் வசிக்கும் ஜீவராசிகள் தம் செய்கைகளை செம்மைப்படுத்தி அதனால் தெளிவான சிந்தையும், அகத்தூய்மையும் அதனால் அமைதியும் இன்பமும் பெற்று இனிதே வாழ்வதற்கு அவை தம் செய்கைகளை

மேலோருவன் கவனித்து வருகிறான் என்ற எண்ணம் ஏற்படும்பொழுதே கவனத்துடன் நடந்துகொள்ளும் என்ற எண்ணத்தினால் அதற்கென்று ஒரு பொறுப்பினைப் பெற்று போற்றக்கூடியவரை தோற்றுவிக்கத் திருவுள்ளம் கொண்டார். உடன் பரமேஸ்வரர் தங்கப்பலகை ஒன்றைக்கொண்டுவரச் செய்து அதில் தம் திருக்கரத்தினால் ஒரு உருவத்தை எழுத, அதன் எழிலைக்கண்டு அம்பிகை அகமகிழ்ந்து ஐய்யனைநோக்கி கருவுருவாய் பேசுவதற்குக் கருணை பாலிக்க வேண்டினாள். சிவசக்தி சங்கல்பத்தினால் சித்திரம் ஒரு தேவனாய் உயிர்பெற்றது. எல்லா உலகங்களிலும் வாழ்கின்ற பிராணிகளின் பாவ புண்ய பலன்களைக் கணக்கு பார்க்கும் பொறுப்பு அத்தேவனிடம் தரப்படுகிறது. கணக்குப் பார்ப்பவரை “குப்தர்” என்று அழைப்பதுண்டு. சித்திரமாக இருந்து உயிர் பெற்று கணக்கு பார்க்கும் பணியை மேற்கொண்டமையினால் “சித்ரகுப்தர்” என்று அவர் அழைக்கப்படலானார். கணக்கு எடுப்பது என்றால் உண்மை நிலையினை விளக்குவது என்று பொருள். உண்மையை உணர அதன் தன்மையைத் தெரிந்தவர் இருத்தல் அவசியம். ஆகையினால் எமனுக்கு எமதர்மராஜா என்ற பெயர் ஏற்பட்டது.

உண்மையைக் கடைப்பிடிப்பவர்கள், நேர்மையாக வாழ்பவர்கள், உண்மை பேசுவதையே விரதமாகக் கொண்டவர்கள் வாழும் ஸ்தலமாதலால் முக்திதரும் நகரங்களில் ஒன்றாக ஸத்யவ்ரத க்ஷேத்ரமென்று காஞ்சிபுரம் போற்றப்படுகிறது. அதனுள் இத்திருத்தலத்தில் திருமால், சிவபெருமான், அறம் வளர்த்த அன்னை காமாக்ஷியும் கொலுவிருந்து கருணை மழையினைப் பொழிகின்றனர். உண்மை விளங்கும் க்ஷேத்திரம் என்பதினால் “சித்திரகுப்தர்” இத்திருத்தலத்தில் இறைவனை வழிபட்டு தமக்கு இட்ட கணக்காயர் பணியைக் கச்சிதமாய்ச் செய்து வருவதாகப் புராணம் கூறுகிறது.

காஞ்சியை ஆண்ட சென்னி என்னும் சோழன் சித்ரகுப்தருக்கென காஞ்சியில் ஆலயம் அமைத்திட்டதாகச் சொல்லப்படுகிறது. காஞ்சிபுரத்தில் பேருந்து நிலையத்திற்கு அண்மையில் நெல்லுக்காரத் தெருவில் அமைந்துள்ள இத்திருக்கோயிலில் அமைந்திருக்கும் சித்ரகுப்தரின் ஒரு கையில் ஓலைச் சுவடியும் மற்றொரு கையில் எழுத்தாணியும் இருக்கின்றன.

தென்னகத்தில் வேறு எங்கும் காண முடியாத அபூர்வ ஆலயமாக விளங்குவது காஞ்சியில் உள்ள சித்ரகுப்தரின் திருக்கோயில். நவகிரகங்களில் கேது பகவானுக்கு அதிதேவதையாகத் திகழும் சித்ரகுப்தரை பௌர்ணமியன்று வழிபட்டு தோஷங்கள் நிவர்த்தி அடைந்து நிம்மதியைப் பெறுவதாக நம்பிக்கை நிலவுகிறது. சித்ரா பௌர்ணமியில் கர்ணிகாம்பாளுடன் சித்திரகுப்தர் திருக்கல்யாண உத்ஸவம் நடைபெறுகின்றது. சத்யபுரமாம் காஞ்சியில் கோயில் கொண்டுள்ள சித்ரகுப்தரைச் சிந்தையில் கொண்டு வணங்கி, நல்வழி நடந்து, நிம்மதியைப் பெற்று நலமுடன் வாழ்வோமாக !.

காஞ்சியில் உள்ள திருமடங்கள்

1. ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடம், ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் சாலைத்தெரு, பெரியகாஞ்சிபுரம்.

2. ஸ்ரீசாரதா பீடம், சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் ஸ்ரீமடம், சாலைத்தெரு, (திருமலை திருப்பதி தேவஸ்தானம் தகவல் மையத்தின் அருகில் உள்ளது) பெரியகாஞ்சிபுரம்.

3. தொண்டைமண்டலாதீனம் ஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் மடம் (பெரிய காஞ்சிபுரம்) மிக பழமையான சைவ ஆதீனம். திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டதேவர் சந்தானபீடம். இதன் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ ஞானப்ரகாச தேசிக பரமாசார்ய ஸ்வாமிகள்.

4. திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடம், மண்டபத்தெரு, பிள்ளையார்பாளையம்.

5. ஸ்ரீராமகிருஷ்ண மடம் (காரைப்பேட்டை, காஞ்சிபுரம்). சென்னை – பெங்களூர் நெடுஞ்சாலையில் பக்தவத்ஸலம் பாலிடெக்னிக் சமீபம் உள்ளது.

6. உபநிஷத் மடம் (பெரிய காஞ்சிபுரம்) புத்தேரித்தெருவின் கோடியில் ஸ்ரீகைலாஸநாதர் கோயிலுக்குச் செல்லும் வழியில் தொடக்கத்திலேயே உள்ளது.

7. ஸ்ரீ நாராயண சேவாசிரமம் (ஆழ்வார் பங்களா – பெரியகாஞ்சிபுரம்). இங்கு ஸ்ரீமண்டலேஸ்வரர் ஆலயம் உள்ளது. ஸ்ரீநாராயண குருதேவரின் மந்திரமும் உள்ளது.

8. அப்பர் சுவாமிகள்மடம் –பிள்ளையார்பாளையம்.

9. இராமாநுஜர் மடம் –சின்ன காஞ்சிபுரம்.

10. ஸ்ரீ வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் மடம் (சின்ன காஞ்சிபுரம்). ஸ்ரீவரதராஜப்பெருமாள் கீழ ராஜகோபுரம் அருகில் உள்ளது.

11. வானமாலை ஜீயர் மடம் –சின்ன காஞ்சிபுரம்.

12. பைராகி மடம் –சின்ன காஞ்சிபுரம்.

13. அஹோபில மடம், ஸ்ரீவரதராஜப் பெருமாள் சந்நிதி தெரு, சின்ன காஞ்சிபுரம்.

14. பரகால மடம் –தூப்புல், சின்ன காஞ்சிபுரம்.

15. முதலியாண்டான் திருமாளிகை –சின்ன காஞ்சிபுரம்.

16. நம்பிள்ளைமடம் –சின்ன காஞ்சிபுரம்.

17. பிரதிவாதி பயங்கரம் அண்ணா திருமாளிகை –சின்ன காஞ்சிபுரம்.

18. ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரமம் –சின்ன காஞ்சிபுரம்.

19. ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமி ஆசிரமம் –சின்ன காஞ்சிபுரம்.

20. ஸ்ரீகருடபுரம் ஸ்வாமி ஆசிரமம் –சின்ன காஞ்சிபுரம்.

ஸர்வேஜனா ஸுகினோபவந்து! ஸமஸ்த ஸந்மங்களானி பவந்து!!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


241

